தெய்வ தற்சொரூபன்

செங்கற்பட்டு
ஸ்காத்லாந்து சபை மிஷன் ஹைஸ்கூல் பிரதம ஆசிரியர்
ஜீ. வி. ஜோப், எம். ஏ., எல். டி.,
இயற்றியது

THE VERY IMAGE OF GOD

BY

G. V. JOB, M.A., L.T.

Headmaster, St. Columba's High School, Chingleput

WITH A FOREWORD

BY

DR. A. J. APPASAMY

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD COLOMBO

1934

பொருளடக்கம்

ஆயத்த காண்டம்

ஊழிய காண்டம்

வெற்றி காண்டம்

உபதேச காண்டம்

"ஒருசின் மயசற் குருவாகி யுலகத்துதித்து ஜீவரக்ஷை
தருசன் மார்க்க நெறியிதெனத் தமநல்லொழுக்கஞ் சான்றாகத்
துருசின் மனத்தோ டுபதேசஞ் சொல்லிச் சுகிர்த பலியாய்வெங்
குருசின் மடிந்த குருசிலைக்கை கூப்ப வாரும் ஜெகத்தீரே."

ஆயத்தகாண்டம்

அத்தியாயம் 1

இஸ்ரவேலரின் நம்பிக்கை

மக்கபீய அரசரின் தாழ்வு

மக்கபீயர் என்ற சிறப்புப்பெயர் சூடப்பெற்ற யூதா, யோனத்தான், சிமியோன் என்னும் மூன்று சகோதரர் தமது வீரபராக்கிரமத்தால், கிரேக்கச்சக்ரவர்த்திகளின் கொடுங்கோன்மையினை யொழித்து, சியூசுக்கு பலியிடப்பட்ட பன்றிகளின் உதிரத்தால் கறைப்பட்ட பலிபீடத்தை தகர்த்துப் புதுப்பித்து, எருசலேம் தேவாலயத்தை எகோவாவின் திரு ஆராதனைக்கென்று நவமாகப் பிரதிஷ்டை செய்தனர்.[1] மக்கபீயர் என்ற பதத்திற்கு அஞ்ஞானிகளை நைக்கும் சம்மட்டி என்பது பொருளாம். அந்தியோகஸ் எப்பிவானஸ் என்ற கிரேக்க ராயன் காலத்தில்[2] ஆரம்பித்த சங்காரங்களும் இமிசைகளும் இம் மூன்று தேசபக்தரின் அரும்பிரயாசையால் முடிவடைந்தன. இஸ்ரவேலர் சுயராட்சிய சிலாக்கியம் பெற்று, தமது பாரம்பரிய மத அனுஷ்டானங்களை அல்லலின்றி நிறைவேற்றிக் களிப்புற்றிருந்தனர். கடந்த ஆறு நூற்றாண்டுகளாக இஸ்ரவேலரைச் சூழ்ந்து வருத்திய அன்னிய அரசரின் கொடுங்கோன்மையாகிய காரிருள் மக்கபீய வீரரின் தேசாபிமானமெனும் இளஞ்சுடர் தோன்றவே பறந்தொழிந்தது. ஆயினும் யூத சுயராட்சியமாகிய கதிரவன் விரைவில் மேற்றிசை சென்று மறைந்தனன். மக்கபீயர் தோன்றி நூறு வருடங்கள் பூர்த்தியாகுமுன், அவர் குலத்திலுதித்த கோடரிக்காம்புகளெனத் தகும் ஹிர்க்கானஸ், அரிஸ்தபோலஸ் என்ற சகோதரருக்குள் உண்டான வாக்குவாதத்தால், ரோமச்சக்ரவர்த்தியாகிய பாம்பியஸ் யூதநாட்டைக் கைப்பற்றிக்கொண்டான்.[3] சமேரியா, கலிலேயா, இதுமேய ராஜதானிகளையும், கடற்கரையிலிருந்த பட்டணங்களையும் ரோமருக்குத் தோற்றிழந்துவிட்டு, ஹிர்க்கானஸ் சீரியாவை ஆண்டுவந்த ரோம இராஜபிரதிநிதியின் ஆதீனத்திற்குட்பட்ட பிரதான ஆசாரியனாயினன்.

---

[1] கி. மு. 164–142 [2] கி. மு. 170 [3] கி. மு. 63

பின்னர் ஹிர்க்கானஸ் ரோமராயரின் தயவால் சில முக்கிய சிலாக்கியங்களைப்பெற்று யூதருக்கு அரசனாக முடிசூடப்பட்டான். மகுடமணிந்தவன் இவனேயெனினும், நாட்டை ஆண்டு பரிபாலித்த வன் பிரதான மந்திரியாகிய அந்திப்பேதர் என்ற நாமம்பூனைந்த இது மேயன். அரிஸ்தபோலஸ் ஹிர்க்கானசுக்கு விரோதமாக எழும்பிய போது அந்திப்பேதர் ஹிர்க்கானஸ் பட்சமிருந்து சமர்புரிந்ததாலும், ரோமராயருக்குத் துணைசெய்ததாலும் இக்கௌரவம் பெற்றனன். ஹிர்க்கானஸ் மரித்தபின் அந்திப்பேதரின் குமாரன் ஏரோது ரோமா புரிக்குச்சென்று ரோமராயரின் தயவால் யூதருக்கு அரசனாக நியமிக் கப்பெற்றுத் திரும்பினன். இவனுக்கு இராட்சியத்தைக் கொடுக்க மாட்டேனென்று மூன்று வருடகாலம் வாதாடிவந்த அரிஸ்தபோல சின் புதல்வனாகிய அன்றிகோனசைக் கொன்று இராட்சியத்தை ஏரோது கைப்பற்றிக்கொண்டனன்.[1]

பெரிய ஏரோது ஓர் ஆசாரப்புரட்டன்

இதற்கிடையில், யூதேயா தேசத்தார் ரோமச்சக்ரவர்த்திகளையும், பிரதிநிதிகளையும் சாந்திபண்ணக் கட்டிய கப்பத்தாலும், இலஞ்சத் தாலும் கொடிய வறுமைக்குள்ளானார்கள். ரோமச்சக்ரவர்த்திகளி லொருவன் எருசலேம் தேவாலயத்தின் பொற்பணிகளைக் கொள்ளை கொண்டனன். ஏரோது யூதநாடுகளை வெகு நேர்மையாய்ப் பரிபால னம்பண்ணி அவற்றை மேன்மைப்படுத்தினன். நாட்டில் கொடிய பஞ்சமுண்டானபொழுது, அவன் தன் பானபாத்திரங்களை விற்றுப் பஞ்சத்தில் வருந்தியவர்களுக்கு உணவளித்துதவினன். எருசலேம் கோவிலை வெகு சிங்காரமாகப் புதுப்பிக்கத் தொடங்கினன். என் றாலும் யூதர் அவனைப் பகைத்தனர். அதற்கு காரணங்கள் பல விருந்தன. அவன் குலத்தில் யூதனல்ல; இதுமேயன். வரியை மிதமிஞ்சிப் பெருக்கிவிட்டான். குற்றவாளிகளைச் சிலுவையில் அறைவதும், எரித்துவிடுவதும் அவனுக்கு வெகு சாதாரணமாக விருந் தன. தன் பெருமையாலும் சமுசயத்தாலும், நாட்டில் பெரியோர் பலரைக் கொன்றான். பிரதான ஆசாரியனை, தன் சொந்த மைத்துன னென்றும் பாராது, கொல்வித்தான். தன் மனைவியையும், அவள்

[1] கி. மு. 37

மூதாதையையும், அதன்பின் தனயரிலிருவரையும் பொன்றுவித்தான், மரிப்பதற்கு ஐந்து தினங்களுக்குமுன் தன் புதல்வரில் மற்றொருவனையும் சிரச்சேதம்பண்ணினான். இவையனைத்தினும் பெரியதொரு குற்றமும் இவன்பிணைத்துளான். வெளித்தோற்றத்தில் இவன் யூதமதத்தையே அனுசரிப்பவன்போல் நடித்தானெனினும், கிரேக்க ரோமருடைய விபரீத சடங்காசாரங்களையும், வழக்க பழக்கங்களையும் நாட்டில் புகுத்துவிட்டான். பல பட்டணங்களில் விக்கிரக ஆலயங்களைக் கட்டினான். பிரதான ஆசாரியரைத் தானே ஏற்படுத்திக் கோவிற் றிருக்கருமங்களைத் தன் மனம்போல் நடப்பிக்க முயன்றான். மத அபிமானமற்ற சதுசேயராகிய யூதர் இவற்றைக் குற்றமெனக் கொள்ளாவிடினும் யூதரிற் பெரும்பாலர் இவனிடம் வெறுப்புக்கொண்டனர். ரோமர் தம்மை ஆளுவதைப்பார்க்கிலும், பாதியூதனாகிய ஏரோது தம்மை ஆளுவது மேல் என்று எண்ணியதாலோ, அவனது கொடுமையையும் சாமர்த்தியத்தையும் கண்டு கலங்கியதாலோ, ஜனங்கள் எதிர்த்தெழும்பவில்லை.

ஏரோதின் சந்ததியார்

பெரிய ஏரோது தன் புதல்வரில், அந்திப்பாவை கலிலேயாவுக்கும், பெரேயாவுக்கும், அர்கிலாவுசைச் சமேரியாவுக்கும், யூதேயாவுக்கும், பிலிப்பை இத்தூரியாவுக்கும் அதிகாரிகளாக நியமித்துவிட்டு மரித்தான்.[1] கலிலேயா மாகாணத்தின் தேசாதிபதியாகிய அந்திப்பா டாம்பீகத்திலுங் கொடுமையிலுந் தன் தந்தைக்குக் கீழ்ப்பட்டவனல்ல. தன் மனைவியைத் தள்ளிவிட்டுத் தன் சகோதரரிலொருவனை பிலிப்புவின் மனைவியைச் சேர்த்துக்கொண்டான். இது குற்றமென்றுணர்த்திய விரத்தரைச் சிரச்சேதஞ்செய்தான். "அடா அது செய்பவர் படா அது படுவர்" என்ற முதுமொழி பொய்க்காவண்ணம், தள்ளிவிடப்பட்ட மனைவியின் தந்தை அரிதாஸ் அந்திப்பாவை யுத்தத்தில் தோற்கடித்தான். இவன் மயல்கொண்டு மருவிய ஏரோதியாளே இவனது க்ஷீணதசைக்குக் காரணமாயிருந்தனள். அண்ணன் மகன் அகரிப்பாவிற்கு ரோமர் அரசபட்டம் அளித்தனர். ஏரோதியாளின் தூண்டுதலால், அந்தப் பட்டத்தைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று ரோமராயரைக் கேட்க அந்திப்பா ரோமாபுரிக்குச் சென்ற

---

[1] இ. மு. 4.

பொழுது "வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பும் அவிந்தாற்போல்" கலிலேயா மாகாணத்தின் ஆதீனத்தையும் இழந்து நாடோடியாகத் திரும்பினுன். சக்ரவர்த்தி அந்திப்பாவின் ஆதீனத்தையும் அகரிப் பாவுக்கே கொடுத்துவிட்டு, அந்திப்பாவை நாட்டைவிட்டு ஓட்டிவிட் டான்.[1] யூதேயாவின் அதிபதியாகிய அர்கிலாவுஸ் பெரிய ஏரோ தின் சீர்கெட்ட புத்திரர் யாவரிலும் மிகவும் சீர்கெட்டவனுக விளங் கினுன். அவன் கொடுமையை ஜனங்கள் பொறுக்கக்கூடவில்லை. அதிகாரம் வகித்த பத்தாம் வருஷம் ரோமச்சக்ரவர்த்தி அவனை நாட்டைவிட்டகற்றி, யூதேயாவை ரோமராஜதானியாக்கினுன்.[2] கொடுமையை ஒருக்கால் பொறுத்துக்கொள்ளலாம். தம்மை அவமதிக் கும் அந்நிய அதிகாரியின் அகங்காரத்தைப் பொறுப்பதெங்ஙனம்? யூதேயாவின் அதிபதிகளாக வந்த ரோமத்துரைகள் தம் கர்வத்தை மறைத்துவைக்கவில்லை. இவர்களில் கர்வத்திலும், கொடுமையிலும் துணிவுகொண்டு நின்றவன் பொந்தியுபிலாத்துவாம்.[3]

பிலாத்துவின் கொடுங்கோன்மை

உட்கலகங்கள் உண்டானபொழுது யூதஜனங்களை இவன் இரக்க மின்றிச் சங்கரித்தான். சந்தேகத்திற்குட்பட்ட யூதரை ஓயாது சிரசாக் கினை செய்துவந்தான். யூதருக்கு அருவருப்பான விக்கிரகங்கள் வரையப்பட்ட கொடிகளை எருசலேமுக்குக் கொண்டுபோக இவன் தலைப்பட்டபொழுது, ஜனங்கள் வழிமறித்துத் தம்மைச் சங்கரித்தா லன்றித் திருநகரை அவ்வாறு தீட்டுப்படுத்தவிடோமென்று பிடிவாதம் பண்ணியதால், பிலாத்து தன் கெடுநினைவை விட்டு ஓய்ந்தனன். ஆனுல் யூதமதத்தை அவமதிக்க அவன் கருதிய மற்றொரு துர்ச் செயலைச் செய்துமுடித்தான். விக்கிரகங்களுக்குக் காணிக்கையாகப் படைக்கப்பட்ட கேடகங்களை இவன் ஏரோதின் அரண்மனையில் தொங்கவிட்டான். ஜனங்கள் சக்ரவர்த்தியிடம் முறையிட, அவன் கட்டளையிடும்வரை கேடகங்கள் அங்கு தொங்கிக்கொண்டிருந்தன. பலியாராதனை செய்யத் தேவாலயத்திற்குச் சென்ற கலிலேயரைக் கொன்று அவர்கள் உதிரம் பலியிடப்பட்ட மிருகங்களின் இரத்தத் தோடு கலந்து பிரவாகிக்கச்செய்த வன்செயலும் இவன் செயலே

---

[1]கி. பி. 39 [2]கி. பி. 6 [3]கி. பி. 26–36.

கடைசியாக சமாரியர் இவனுடைய கொடுமையைச் சகியாது முறைப்பாடு செய்யவே சக்ரவர்த்தி இவன் உத்தியோகத்தைப் பிடுங்கிக்கொண்டு இவனை நாட்டினின்றும் அகற்றினன். கிறிஸ்து இயேசு பலஸ்தீனு தேசத்தில் போதித்துவந்த நாட்களில் இவனது கொடுங்கோன்மை யூதர் மனத்தைப் புண்படுத்திக்கொண்டிருந்தது.

இஸ்ரவேலரின் அதிருப்தி

அந்நிய அரசாட்சி எவருக்கும் துக்கத்தையுண்டாக்கும். மத வைராக்கியமும் ஜாதிப்பெருமையும் நிறைந்த மனத்தினராகிய யூதருக்கோ, அது எட்டியிலும் கசப்பாகத் தோன்றிற்றென்பது கூறுதேயமையும். யூதர் தம்மைப்பற்றித் தாமே கொண்டிருந்த பெரும் நினைவைக் கூறுவோம். இம்மரபினர் சொரூப வணக்கக்காரரான கல்தேயரை விட்டுப்பிரிந்து, ஏக வஸ்துவான பரம்பொருளொன்றையே வழிபடத் துணிந்த ஆத்ம ஞானியாகிய ஆபிரகாமின் சந்ததியார். தாம் வழிபடும் கடவுளாகிய யேகோவா மோசேயின்மூலமாய் எகிப்தியரையும், அவர்களைக் காத்துவந்த தெய்வங்களையும் மேற்கொண்டவர்; அவர் ஒருவரே தெய்வம்; அவரது விசேஷ கருணைக்கும் காவலுக்கும் தாமே உரியவர். ஏனைய ஜாதியார் யாவரையும் தவிர்த்து, யாக்கோபுக்குத் தம் வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும், நியாயங்களையும் யேகோவா அறிவித்தார். இவர்கள் சத்துருக்களை இரக்கமின்றி அழித்தார். கடற்கரை மணலினும், வானத்தின் தாரகைக் கணங்களினும் மிகுதியாகப் பெருகுமென்றும், மேதினியின் சாம்ராட்சியத்தைக் கைப்பற்றி நிற்குமென்றும் ஆபிரகாமின் சந்ததியைக்குறித்து உறுதிவாக்கும் பகர்ந்தார். இதற்கிசைய, அரசருள் தாவீதைப்போன்ற பக்தனும், சாலோமோனைப்போன்ற ஞானியும் தோன்றினதில்லை. பல தெய்வவணக்கம், சொரூபவணக்கம், காமக்கோஷ்டிகளோடும் குடிவெறியோடும் கலந்த சடங்காசாரங்கள் முதலிய நெறிகெட்ட மத அநுட்டானங்களால் யேகோவாவின் பரிசுத்த வணக்கம் கறைப்படாது காக்க அவர்கள்பட்ட பிரயாசம் பெரிது. அவர்கள் அயல்நாட்டாரின் பொய் மதங்களைத் தழுவிக்கொண்டு யேகோவாவை மறந்துவிட்டகாலங்களில், அவர் அசீரியர் பாபிலோனியர் முதலான அந்நிய அரசரின் அடிமைத்தனத்திற்குத் தம்மை உட்படுத்தி புத்தி புகட்டியிருக்கின்றார். இத்தகைய சிட்சை

களை ஏற்றுக்கொண்டு, யேகோவாவை விடாப்பிடியாய் பிடித்து நின்ருர்கள். பாலுந்தேனுஞ் சுரக்கும் கானுன் தேசத்தைக் கானுனிய ரிடமிருந்து பிடுங்கித் தமக்குக் கொடுத்ததுமன்றி, அப்புண்ணிய பூமிக்குத் திலகம்போல் இலங்கும் எருசலேம் பட்டணத்தின் பெரிய கோவிலுள் யேகோவா பிரசன்னராகவுந் திருவுளம்கொண்டனர்.

இஸ்ரவேலரின் நம்பிக்கை

சுற்றிப்பார்க்குங்கால் செல்வத்திலும் அறிவிலும் மிகுந்த கிரேக்கர், ரோமர் முதலானேர் மெய்க்கடவுளாகிய யேகோவாவைக் கண்டு கைப்பற்றினரல்லர். அவர்கள் பூஜித்துப்பாராட்டிய தெய்வங்களும், கைக்கொண்டொழுகிய ஆராதனை முறைகளும் மனதுக்கு அருவருப் பைக் கொடுப்பனவாயிருந்தன. தாம் செய்த பெருங்குற்றத்தினுல், யேகோவா தம்மைத் தெய்வ அறிவற்ற அஞ்ஞானிகளாகிய நாய்களுக் குக் கீழ்படுத்தியிருப்பினும், அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்; என்றென்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நொறுக்கிய எலும்பு கள் களிகூறும்படிச் செய்வார். ஈசாயின் வேர் துளிர்க்கும்; யூதாவில் ஒரு சிங்கம் தோன்றும். கர்த்தத்துவம் அவர் தோளிலிருந்து என்றும் விலகாது. இருளிலிருந்து வருந்துபவர் வெளிச்சத்தைக்கண்டால் துள்ளிக் களிப்பதுபோல், அந்நிய அரசாட்சியின் சிறுமையைச் சகிக்க ஒண்ணுது வருந்தும் இவர்கள், முனிவர் மூலமாய் யேகோவா அளித்த வாக்கு வழுவாது, தாவீதின் வம்சத்தில் தோன்றும் ஒரு தெய்வமகனைத் தம் இரட்சகனுக அனுப்பும் நாளில், களிகொண் டெழுந்து, தம்மை ஆட்கொண்டோரை மேற்கொண்டு, காசினி அடங்கலையும் தம் வசப்படுத்தி அரசுபுரிவார்கள் என்று பூரணமாய் நம்பினுர்கள். இத்தகைய மனக்கோட்டைகள் கட்டிக்கொள்வதால் தம் குறைவையும் சிறுமையையும் எண்ணிப் பதைக்கும் மனதைத் தேற்றிக்கொண்டும், இன்றைக்கோ நாளைக்கோ மேசியாவாகிய இரட்சகர் வந்து தம் கலியைத்தீர்த்து மீட்பார் என்றும், யூதர் அனைவ ரும் பேராவலோடு எதிர்பார்த்து நின்றனர்.

ஏகோவா சர்வஜன உபகாரி

இஸ்ரவேலர் எகிப்தியரின் அடிமைகளாயிருந்த காலத்தில் அவர் களை மீட்டுச் சுயாதீனராக்கிய யேகோவா தாமே, பெலிஸ்தியரைக் கப்தோரிலிருந்தும், சீரியரை கீரிலிருந்தும் விடுவித்துக் காப்பாற்றிய

தால், அவர் தமர் பிறர் என்னும் பாகுபாடும் பட்சபாதமுமின்றி மனுக்குலங்களனைத்தையும் கடைக்கணிக்கும் கருணும்பரனென்று ஆமோஸ் முனிவர் அறிவுறுத்தினர். அசீரியரும், எகிப்தியரும்கூட யேகோவாவின் ஊழியர் என்று ஏசாயாத் தீர்க்கதரிசியார் உரைத்தனர். யேகோவா ஆபிரகாமுக்குத் தந்த வாக்கினல், அவர் இஸ்ரவேலர் அனைவரையும் புரக்கக் கடன்பட்டுள்ளார் என்றெண்ணுவது குற்றமென்றும், புறம்பான யூதராட்சியம் அழிக்கப்படுமென்றும் எரேமியாத் தீர்க்கதரிசியார் வற்புறுத்திக் கூறினர். ஆயினும் ஜாதிப்பெருமையும் சுயநீதிப்பெருமையும் கொண்டிருந்த யூதர் இவற்றை மறந்துவிட்டனர். துன்பமும் சிறுமையும் அதிகரிக்க அதிகரிக்க, மேசியா எப்பொழுது வருவார் என்ற சிந்தையே அவர்களுள்ளத்தில் மேலிட்டது. பக்திமிகுந்த வயோதிபர் யூதாவிற்கு இரட்சிப்பு விரைவில் வரவேண்டு மென்று இடையறா வாஞ்சையோடு ஜெபித்துவந்தனர். நூற்று ஐம்பது வருடங்களுக்குமுன் மத்ததியாவின் குமாரராகிய மக்கபீயர் எழும்பியதுபோல், இக்காலத்தும் ரோமரை நைக்கும் சம்மட்டிபோல் ஒரு வீரபுத்திரன் தோன்றித் தம்மை யுத்த சன்னத்தராய் ரோம சைனியங்களைத் தாக்க நடத்திச்செல்லுவான் என்று சிலர் எண்ணியிருந்தார்கள். அந்த வீரபுத்திரன் தாவீதின் சந்ததியில், ஒரு கன்னியின் கருப்பத்தில் தோன்றுவானென்று ஆகமங்கள் கூறியதால், அக்கொற்றவன் குலத்திலுதித்த ஒவ்வொரு பெதும்பையும் அக்குழந்தையைத் தன் மடியில் எந்தி வளர்த்து தன் நாட்டிற்கு ஈந்துதவும் பெருமை தனக்குக் கிட்டாதோவென்ற வாஞ்சைகொண்டிருந்தனள்.

அத்தியாயம் 2.

இயேசுவின் பிறப்பும் வளர்ப்பும்

யூதமரபினரனைவரும் இவ்வாறு அங்கலாய்த்து ஏங்கிநிற்குங்கால், சகரியாவென்ற ஆசாரியனொருவன் ஏதோ தெய்வதரிசனம் கண்டு சிலகாலம் ஊமையனா யிருந்தானென்றும், வெகுநாள் மலடியாயிருந்த அவன் மனையாள் தன் முதிர்வயதில் ஒரு புத்திரனை ஈன்றெடுத்தனள் என்றும் பிரசித்த வதந்தி பிறந்தது. இதைக்கேட்ட யாவரும் தாம் எண்ணியபடி யூதா இரட்சிக்கப்படும் காலம் சமீபமாயிற்றென்று எண்ணி, இனி நடப்பது யாதென்று அறிய ஆத்திரத்துடன் காத்திருந்தனர்.

ஆயர் சேவை

இச்சம்பவம் நேர்ந்த சில மாதங்களுக்குள், காட்டில் மந்தையைக் காத்துக்கொண்டிருந்த மேய்ப்பர்முன் அமரர் தோன்றி, இன்னிசை நாதம் முழக்கி "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்; அவரை கந்தைகளிற் சுற்றி மாட்டுத்தொழுவத்தின் முன்னணையிற் கிடத்தியிருக்கிறது; அதைக் காண்பீர்களாக," என்று கூறி மறைந்தனர். மேய்ப்பர் தாவீதின் ஊராகிய பெத்திலகேமுக்குச் சென்று, யேசுவென்னும் பாலகனைச் சத்திரத்தின் தொழுவத்திற்கண்டு பணிந்துகொண்டனர். பின்னர் இச்செய்தியை எங்கும் பிரசித்தம்பண்ணினர்.

இரு பக்தரின் சாட்சி

கன்னிமரியாளின் வயிற்றிலுதித்த அற்புதப் புதல்வனை ஜாதி ஆச்சாரப்படி பிறந்த எட்டாம்நாள் நாமகரணஞ்சூடுவதற்கென்று பெற்றோர் எருசலேம் தேவாலயத்திற்குக் காணிக்கைகளுடன் கொண்டுபோனார்கள். அச்சமயம் சிமியோன் என்னும்வயோதிகனான பக்தன்பாலகனைக் கையில் ஏந்திக்கொண்டு "புறஜாதியாருக்கு ஒளியையும் இஸ்ரவேலருக்கு மகிமையையும் கொணரும் இரட்சண்ய கிரியையை நான் இச்சணம் கண்ணாரக் கண்டதால் இனிச் சமாதானமாய் மரணமடைய ஆயத்தமாக இருக்கிறேன்" என்றியம்பி யேகோவாவைத் துதித்தான்.

பல்லாண்டுகளாகப் பரமன் நிலயத்திலேயே தங்கியிருந்து, இஸ்ர வேலர் கடைத்தேறும் நன்னாள் கடிதினில் வரவேண்டுமென ஓயா வாஞ்சையாய் மன்றாடிக்கொண்டிருந்த, எண்பத்துநான்கு வயதுள்ள அன்னாள் என்னும் மூதாட்டி இப்பாலகனைக் கண்டு களிப்புற்று, இச் சிசுவே இஸ்ரவேலரை இரட்சித்துப் புரக்கும் மேசியா என்று அறிவித்தாள். எளிய தச்சனாகிய யோசேப்பும், அவன் மனைவியாகிய மரியாளும் இவை யனைத்தையும் எண்ணி எண்ணி ஆச்சரியப்பட்ட னர். மரியாள் தான் நிசமாக மேசியாவின் அன்னையாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட அற்புதக் கிருபையையும், ஒரு கட்கம் உன் நெஞ்சைப் பிளக்கும் என்று சிமியோன் தனக்குச் சொன்ன தெய்வ விதிவசனத் தையும் சிந்தையிற் புதைத்து, திகிலும் வியப்புங்கொண்டிருந்தனள்.

கீழ்த்தேச சாஸ்திரிமார் சேவை

சில மாதங்கள் சென்றபின், கிழக்குத் தேசங்களிலிருந்து எருச லேமுக்கு வந்த சாஸ்திரிகள் பெரிய எரோதுவினிடஞ் சென்று, "யூதகுலக் காவலனாகப் பிறந்திருக்கும் பாலகன் எங்கே? அவருடைய பிறப்பை அறிவிக்கும் நட்சத்திரத்தைக் கண்டு நாங்கள் இவண் வந்தோம்" என்றனர். சமுசயம் நிறைந்த வன்னெஞ்சனாகிய எரோது இச்செய்தியைக் கேட்டுக் கலக்கமும் பொறாமையுங் கொண்டான். உடனே வேத நிபுணராகிய பரிசேயரிற் சிலரை அழைத்து, சாஸ்திரி கள் சொல்லுவது யாதென அவன் வினவ, அது உண்மையென்றும், மேசியா தோன்றுங்காலம் சமீபமாயிற்றென்றும், முனிவர் உரைப்படி அவர் யூதேயாவின் கிராமங்களிலொன்றாகிய பெத்லகேமில் பிறந் திருக்கவேண்டுமென்றும் பரிசேயர் அறைந்தனர்.

எரோதின் கலக்கம்

கீழ்த்தேச சாஸ்திரிமாரின் உத்தேசமும், யூத ஆகமங்களின் முன் அறிவுரையும் ஒத்திருந்தது கண்டு, தான் பாடுபட்டு நிலைநிறுத்திய ராட்சியத்தை யாரோ ஒருவன் பிடுங்கிக்கொள்ளப் பிறந்திருக்கின்றானே என்று எண்ணிக் கடன்பட்டான் உள்ளம்போற் கலங்கினான் யூதர் வேந்தன். ஆயினும் பழிபாவத்திற் கஞ்சாத எரோது உடனே ஒரு கொடிய யுக்திபண்ணிக்கொண்டான். தன் கோபத்தை மறைத்துக் கொண்டு, சாஸ்திரிகளை வழிவிட்டனுப்பி, அப்பாலகனைக் கண்டு பணிந்து திரும்புங்கால், தன்னிடம் வந்து, பாலகன் எங்கு இருக்கின்றா

னென்று அறிவித்திடின், தானும் அச்சிசுவைப் பணிந்துகொள்ள நோக்கங்கொண்டிருப்பதாக அவர்களிடம் பொய்யுரை புகன்றான். சாஸ்திரிமார் பெத்திலகேமிற்குச் சென்று இயேசுவென்னும் பால கனைக்கண்டு பொன்னையும் வெள்ளைப்போளத்தையும் தூபவர்க்கங் களையும் அவர் திருவடிகளிற் படைத்துத் தலைகுனிந்து ஆசையாற வணங்கித்தொழுதனர். ஏரோது அக்குழந்தையைப் போற்றுதற்கல்ல, பொன்றுவிக்கக் கருதியிருக்கின்றானென்று சாஸ்திரிகள் எச்சரிப் படைந்து அவனிடந் திரும்பாது வேறு வழியாய்த் தத்தந் தேசங்களுக் குச் சென்றார்கள். ஏரோதின் சதியாலோசனையை யோசேப்பு கன விற் கண்டுதெளிந்து, பாலகனையும், அன்னையையும் எகிப்து தேசத் திற்குத் துரிதமாகக் கொண்டுபோயினன். சாஸ்திரிமார் தன்னை ஏமாற்றி விட்டதை யுணர்ந்து ஏரோது கடுங்கோபங்கொண்டனன்.

சிசு சங்காரம்

யூத சிம்மாசன உரிமை பெற்றுப் பிறந்த பாலகன் பெத்திலகேமில் தானிருப்பானென்றும், அவன் இப்பொழுது கொஞ்சங்குறைய இரண்டு வயதுள்ளவனாயிருப்பானென்று யெண்ணி, பெத்திலகேம் ஊரிலிருந்த இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகளையெல்லாம் ஏரோது கொல்வித்தான். இந்தச் சர்வசங்காரக் கொள்ளையில் தன் மகுடத்தைப் பிடுங்கக் கைநீட்டிய பாலகன் மாய்ந்தான் என்பதே ஏரோ தின் நம்பிக்கை. இவனொன்று நினைக்க, ஈசனொன்று நினைத்தான். யூதரைமட்டுமல்ல குவலயத்தின் சகல ஜாதியாரையும் பாஷைக்காரரை யும், தெய்வ இராட்சியமென்றழைக்கப்படும் நித்திய ஆன்மீக இராட்சி யத்தின் குடிகளாகக்கொண்டு, அவர்கள் இதயத்தில் வீற்றிருந்து, அவர்கள் பக்தியாகிய பட்டயத்தைக் கரத்திற்பிடித்து, அதரிசனனாக ஆட்சிசெய்யப் பிறந்த திவ்விய புதல்வன், இஸ்ரவேலர் அடிமைகளாய் இருந்து வருந்திய அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்தில் மறைந் துய்ந்தனன்.

குற்றமற்ற பாலகரைக் கொன்று தன் சிம்மாசனத்தை உறுதிப் படுத்த நினைத்த ஏரோது இரண்டு வருஷத்திற்குள் சிம்மாசனத்தை விட்டு நீங்கி செத்த சவமாகக் கல் அறைக்குள் கிடத்தப்பட்டான். இச் செய்தி யோசேப்பின் செவிக்கு எட்டியவுடன், அவன் தன் மனைவி யையும் இயேசுவையும் அழைத்துக்கொண்டு தன் சொந்தக் கிராமமா

கிய நாசரேத்திற்குத் திரும்பினன். ஆங்கோர் சிறு குடிலில் வசித்துக் கொண்டு தச்சுவேலைசெய்து குடும்பத்தைச் சவரட்சணை செய்து வந்தான்.

நாசரேத்தூர்

நாசரேத்தூர் கீழ் கலிலேயாவின் பட்டணங்களிலொன்று. நான்கு திக்கும் மலைசூழ்ந்தது. தென்புறமிருந்த மலைகளின் உச்சியிலிருந்து எஸ்திராலியோன் என்ற வளப்பம் விதும்பிய சமபூமியைக் காணலாம். தாபோருக்கும் சூனேம் மலைகளுக்கும் ஊடேயிருந்த கணவாயின் வழியாய் யோர்தான் நதியையும், அதன் தீரத்திலுள்ள குறிஞ்சி தழுவிய நிலங்களையுங் காணலாம். பலஸ்தின தேசத்தை ஊடுருவிச்சென்ற இரண்டு பெரிய இராஜபாதைகள் நாசரேத்திற்கு நாலைந்து மைல் தூரத்தில் சென்றன. இதற்கு வடமேற்கே நான்கு மைல் தூரத்தில் கலிலேயா நாட்டின் தலைநகராகிய செப்போரிஸ் என்னும் பட்டணம் இருந்தது. வடக்கே ஆறுமைல் தூரத்தில் கான ஊரும், வடகிழக்கே கலிலேயாக் கடலும், துறைமுகப் பட்டணங்களுமிருந்தன. இத்திசையில் ஹெர்மோன் மலையின் பனிமூடிய சிகாமுந் தோன்றும். இன்னும் கர்மேல் பர்வதமும் இதற்குச் சமீபத்திலிருந்தது. கி. மு. 4-ம் வருஷத்திலிருந்து கி. பி. 39-ம் வருடம் வரையில் அந்திப்பாவாகிய ஏரோது கலிலேயா நாட்டில் தேசாதிபத்தியம் வகித்திருந்தான். வனப்பும், செழிப்பும், யூதச்சரித்திர சம்பவங்களால் சிறப்பும் பெற்றிருந்த கீழ் கலிலேயா நாட்டில், நாசரேத்தூரில், இயேசு கிறிஸ்து கொஞ்சங்குறைய முப்பது வருடம் வசித்துவந்தனர்.

மரியம்மாள்

மரியம்மாள் எவர் பெற்ற செல்வப்புதல்வி யென்று அறிகிலோம். ஓர்வித பிரக்கியாதியுமில்லாது, நாசரேத்திலோ, கான ஊரிலோ சிறு குடிலில் வளர்ந்துவந்த கன்னிகை, நினையாப்பிரகாரம் "தெய்வ தயவைப் பெற்றவளே, வாழ்க! இறைவன் உன்பட்சமிருக்கின்றார். நீ அரிவையர் எவருக்கும் கிடையாத அரிய ஆசீர்வாதத்தை அடைந்தவள்" என்று தேவதூதன் சொன்ன புகழுரையைக் கேட்டுத் தெளிவுற்றாள். உயிரினும் அரிய மானத்தைக் குலைக்கும் சம்பவம் நேரிடுமென்று தூதன் சொன்னபொழுது, சொன்னவன் தூதனென்றும் பாராது, புருஷனை அறியாத பெதும்பையாகிய நான் கருத்

தரித்து ஒரு மகவை ஈன்றெடுப்பதெப்படி?" என்று துணிவுடன் கேட்டாள். "இது ஆண்டவன் செயல்" என்று இமையவன் விடை பகர்ந்தான். அதைக் கேட்டபொழுது உலக இரட்சகராக அவதரிக்கும் பாலகனை ஓரணங்கு, ஊர்வசைக்கு அஞ்சாது தனது வயிற்றில் ஏந்திக்கொள்ள இணங்காவிடில், எல்லாம் வல்ல இறைவனும் தமது அனுதி தீர்மானப்படி அவனியோர்க்குச் செய்ய நினைத்திருக்கும் அரியபேருதவியைச் செய்யக்கூடாது நின்றுவிடுவார் என்று எண்ணித் திருவுளச்சித்தத்திற்கு உடன்பட்டுத் தன் மானத்தையும் ஈசனுக்கு அர்ப்பணம் செய்வித்தாள் இந்தப் பக்தசிரோன்மணி. அன்றுதொட்டுத் தன் மானத்தைக் காப்பதும் அழிப்பதும் அவன் செயல் என்று நிர்ணயித்து எதற்கும் அஞ்சாது நின்றனள். இம் மடந்தைக்கு நேர்ந்த சம்பவம் நெஞ்சை யுழக்கத்தக்க பெருஞ் சம்பவமானதால், அது தெய்வச் செயலன்றி வேறல்ல என்று நிரூபணப்படுத்தும் அறிகுறியொன்று தூதன் காட்டிச்சென்றனன். அதன் உண்மையை உணருமாறு மரியாள் துரிதமாய்ப் புறப்பட்டுத் தென்திசையின் மலைகளைத் தாண்டி யூதேயா நாட்டிலிருந்த தன் இனத்தாளாகிய எலிசபேத்தைக் காணச்சென்றாள். மலடியாயிருந்து கருத்தரித்த சகரியாவின் மனைவி இவளே. எலிசபெத் மரியாளைக் கண்டவுடன் அவளை வாழ்த்தி "என் ஆண்டவருடைய தாயாகிய உன்னை நான் காணக்கிடைத்தது என்ன பாக்கியம்!" என்றனள். மரியாளின் கலக்கங்கள் ஒழிந்தன. அவள் களிகொண்டு "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது" என்று தொடங்கும் ஓர் இனிய கீர்த்தனையைப் பாடினாள். உன் உள்ளத்தில் கட்கம் உருவிச்செல்லும் என்று சிமியோன் இயம்பியதையும் கேட்டு, எம்பிரான் சித்தம் என் பாக்கியம் என்றெண்ணி, அவன் தன் தோள்மேல் சுமத்திய பாரத்தைத் தாங்கத்தக்க மனோதிடனும் பெற்றிருந்தாள். யேகோவாவிடம் கொண்டிருந்த அளவற்ற பக்தியும், யூதகுலத்தின் மீட்பை நாடிய நாட்டத்தின் விசேஷமுமே இளங்கன்னிகையாகிய மரியாளுக்கு இப்பெரும் தைரியத்தை ஊட்டின.

அன்னையின் அன்பிற்குக் கங்குகரை யில்லையென்பது உலகறிந்த உண்மை. முதற்பேறான புதல்வனை அன்னை விசேஷித்துப் பாராட்டுவது வழக்கம். மரியம்மாளின் செல்வப் புதல்வன் அற்புதமாய் அவதரித்தவர்; யூதமரபினரால் வெகுகாலமாக ஏக்கத்துடன் எதிர்

நோக்கப்பட்டவர்; இஸ்ரவேல் வம்சத்தில் அநேகர் விழுவதற்கும் எழுவதற்கும் காரணமாயிருக்கப்போகிறவர்; புறஜாதியாருக்கு வெளிச்சத்தையும் யூதருக்கு மகிமையையும் அளிப்பவர். சுருங்கச்சொல்லின் தெய்வசுதனுனவர். பெறற்கரிய பெரும் பேற்றைப் பெற்றெடுத்த மரியம்மாள் தன் புதல்வனை எவ்வாறு பேணிப் பராமரித்து நேசித்தாளோ?

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
> சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்ற மெய்மொழி கூறும் உன்னத சந்தோஷத்தை அடைய விரும்பும் மாதா தன் புதல்வனுக்குப் பட்சம் காட்டுவதுமட்டும் போதாது. அவள் ஜாக்கிரதையோடும் விவேகத்தோடும் புதல்வனை நல்வழியில் நடத்தி புத்தியையும் பக்தியையும் புகட்டவேண்டும். மரியம்மாள் தன் புதல்வனை நல்வழியிலுய்க்க முயன்றாளென்பது திண்ணம். இயேசு எருசலேம் தேவாலயத்தில் தங்கிவிட்டபொழுது, யோசேப்பல்ல, மரியாளே மகனைக் கடிந்துகொண்டனள். அவள் இருதயத்தில் குடிகொண்டிருந்த தேசாபிமானத்தையும் தெய்வ பக்தியையும் இயேசு அவள் ஊட்டிய பாலோடு கலந்து பருகினர். யேகோவாவின் அற்புதச் செயல்களையும் மகிமையையும் அன்னை மகனுக்கு எடுத்துரைத்தாள். யூதச்சரித்திரத்தை ஆதிமுதற்கொண்டு கற்பித்தாள். கிறிஸ்து காட்டிய துரிதமும் ஜாக்கிரதையும், தைரியமும், ஒழுங்கும் மரியம்மாளிடமிருந்து உண்டாகிய லட்சணங்களே யாகும்.

இயேசு பயின்ற நூற்கள்

சுசீலியாகிய மரியம்மையின் செல்வபுத்திரன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் புனைந்து, மனிதர் தயவையுந் தெய்வ கிருபையையும் பெறத்தக்க யோக்கியராக வளர்ந்துவந்தது ஆச்சரியமன்று. அவர் யூதருக்குள் பெயர்பெற்ற கமாலியேல், ஹில்லல் முதலான குருக்களிடமாவது, கிரேக்க சாஸ்திரிகளிடமாவது கல்வி கற்கவில்லை. நாசரேத்தூர் ஜெப ஆலயத்தில் இருந்த கிராமப் பாடசாலையில் ஒருவேளை எழுத வாசிக்கப் படித்திருக்கலாம். அவரது அன்னையும் பிதாவுமே அவருக்கு எழுத்தறிவித்த இறைவர்கள் ஆவர். நாசரேத்தைச் சூழ்ந்திருந்த மலைகள், புனல்கள், புற்பூண்டு விருட்சங்கள், அழகிய மலர்கள், ஆகாயத்துப் பறவைகள் ஆகிய இவைகளே இவருக்கு

அறிவைப் பெருக்கும் இயல்நூற்களாயின. இன்னும் அரிய போதனு சக்தியையுடைய கைத்தொழிலும் இவர் பயின்ருர். இஸ்ரவேலருக்கு அருளப்பட்ட திருமறையொன்றே இவர் வாசித்துச் சிந்தைசெய்த ஏடு. உன்னத நம்பிக்கையும், கொடிய அதைரியமும், சிறந்த வெற்றியும், கசப்பான அடிமைத்தனமும், அரிய மெய்த்தெய்வ பக்தியும், அருவருப்பான களியாட்டும், முனிவரின் அருஞ்செயலும், நெறி கெட்ட அரசரின் ஆரு தூரித்தனமும், அதிசய மீட்பும், அகோர சிட்சையும், உயர்வும், தாழ்வும், இனிப்பும், கசப்பும், ஒளியும் இருளும், மாறிமாறிக் கலந்துகிடக்கும் யூதச்சரித்திரத் திருமறையை விவேகத்தோடு படிப்பவருக்கு ஆழ்ந்த எண்ணங்கள் தோன்ருதிருக்குமோ?

சரித்திர தத்துவ விசாரணை

யூதச் சரித்திரம் இருபெரும் புறிகளைச் சேர்த்துத்திரித்த கயிறு போலிருக்கின்றது. ஆபிரகாமின் சந்ததியின் பெருக்கம், தேர்ச்சி தோல்வி முதலிய சம்பவங்களைக் கூறுவது ஒரு புறி. கல்தேயருடைய சந்திர வணக்கத்தையும் சொரூப வணக்கத்தையும் நிராகரித்து ஏக மெய்க்கடவுளை ஆன்ம சக்தியோடும் உண்மையோடும் வழிபட ஆபிரகாம் அழைக்கப்பட்டதுமுதல் கிறிஸ்து பிறந்தகாலம் வரையில், பக்குவப்படுமட்டுஞ் சிப்பி முத்தைத் தனக்குள் மறைத்துக் காப்பது போல், இஸ்ரவேலர் மெய்மதத்தைத் தமது ஜாதிப்பாங்கில் மறைத்துக் காத்த விந்தையைக் காட்டுவது மற்ெருரு புறி. முதற்புறி யூதரல்லாதவருக்குப் பயன்படாத கேவல உலகச்சரித்திரம்; இரண்டாம்புறியோ, மாந்தரனைவரையும் மெய்வழியிலுய்க்கும் பரமஜோதியை அடக்கிய சரித்திரத் தத்துவ விசாரணை. அந்தியோகஸ் எப்பிவானஸ் என்ற கிரேக்க அதிபதிபடுத்திய இமிசைகளைச் சகிக்க ஒண்ணுது தவித்த இஸ்ரவேலருக்கு ஆறுதலூட்ட எழுதப்பட்ட தானியேலின் புத்தகத்தின் ஆக்கியோன் யூதச்சரிதையின் உட்கருத்தை ஓர்ந்துணர முந்திக்கொண்டான். உலகப்போங்கும், ஒன்றின்பின் ஒன்ருய்த்தோன்றி மறையும் இராட்சியங்களும், யேகோவாவினுல் தெரிந்துகொள்ளப்பட்ட கூட்டத்தார் "தெய்வ இராட்சியம்" என்ற ஆன்மீக அரசியலை மேதினியில் நிலைநாட்டுவதற்கு உதவும் துணைக்கருவிகளேயொழிய வேறில்லை என்ற ஒரு பெரிய நூதனக்கொள்கையை இந்த நூலாசிரியன் போதித்தான். தங்கள் சரித்திர சம்பவங்களின் உட்கருத்தைக்

கவனித்து, அதன்மூலமாய் மானிடர் யாவரையும் இறைவன் எவ்வழி நடத்தச் சித்தங்கொண்டுள்ளான் என்று கண்டுணர முயன்றவர்கள் யூதரைத்தவிர வேறு ஜாதியார் ஒருவருமில்லை. சரித்திர தத்துவ விசாரணையை ஆரம்பித்தவர்களும், சரித்திர சம்பவங்களின் ஆதிகாரணன் ஈசனேயல்லாது அரசரல்ல, என்ற துணிவுகொண்டு நின்றவர்களும் யூதமுனிவரே. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக யூதகுலத்தாரைச் சூழ்ந்திருந்த நானுதேசத்தார் யாவரும் தெய்வங்கள் பல உளவென்ற கொள்கையைச் சாதித்துவந்தனர். மானிடருள்ளத்தை அலக்கழிக்கும் மதம், மோகம், மாற்சரிய மாய மலினங்களுக்கு இத்தெய்வங்கள் தப்பினவையல்ல. இவைகளை வழிபடுவதில், குடிவெறியும், காமக்கோஷ்டமும் கலந்த கொண்டாட்டங்களும் விழாக்களும் ஏற்பட்டிருந்தன. பாபிலோனியர் மத ஆராய்ச்சியில் தேர்ச்சியடைந்த பொழுது தாங்கள் அர்ச்சித்த தேவர்களுந் தேவதைகளும் ஒளியாயிலங்கும் பரஞ்சோதியின் தோற்றங்கள் என்று அபிப்பிராயப்பட்டனர். கிரேக்க, ரோம ஞானிகளும் மெய்யான கடவுள் ஒருவரேயென்று எண்ணினர். என்றாலும் பல தெய்வவணக்கமும் சொரூபவணக்கத்தின் ஆசாபாசங்களும் தினைத்துணையேனும் குன்றினவல்ல யூதரும் மதிமயங்கி இவ்விதக் கேவல மதானுசாரங்களில் பலதரம் உழன்றனர். ஆதலால் யேகோவாவாகிய தேவன் அவர்களைச் சிட்சித்தும், தீர்க்கதரிசிகள் முனிவர்கள் மூலமாய் எச்சரித்தும், மதச்சீர்திருத்தக்காரர் பலரை எழுப்பிவிட்டும், யுத்தம், அடிமைத்தனம், பஞ்சம், கொள்ளைநோய் முதலிய விபத்துக்களால் அவர்கள் கொண்ட சிற்றின்ப வெறியைத் தணித்தும், மெய்வணக்கத்தைக் குன்றவிடாது காத்துவந்தார். சொல்லுக்கடங்காது மனம்போன போக்கெல்லாம் போய்க் கெட்டலையும் மகனோடு வாதாடும் தந்தையையும், சோரம் போன மனைவியைத் தேடிப்பிடித்து அவளோடு வழக்காடும் அன்பு மிகுத்த கணவனையும்போல், யேகோவா யூதருடைய கல்லான நெஞ்சைக் கரைக்கமுயன்ற கோலத்தைத் தீர்க்கதரிசிகள் மிகுந்த உருக்கத்தோடு எடுத்துரைத்தனர். "மாடு தன் சொந்தக்காரனையும் கழுதை தன் எஜமானனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரவேலரோ அறிவுஞ் சிந்தையுமற்றிருக்கின்றனரே!" என்று யேகோவா ஓலமிட்டதாகவும் இவர்கள் கூறினர்.

தேசாபிமானிகள் கட்சி மூன்று

நசரேத்தூர் எருசலேமுக்கு வடக்கே வெகு தூரத்தில் இருந்தபோதிலும், யூதருக்குள் தோன்றிய அதிர்ப்தியும் சுயாதீனநாட்டமும் இங்கிருந்தவர்கள் உள்ளத்தையும் நிரப்பியிருந்தன. இவ்வூர், நாட்டின் தலைநகருக்கு வெகு தூரத்திலிருந்ததே, கலகக்காரருக்கு மிகுந்த அனுகூலம் ஆயிற்று. குடிமதிப்பெடுப்பது யூதருக்கு என்றும் வெறுப்பான செய்கையாம். தம் சொந்த அரசன், தாவீது, குடிமதிப்பெடுத்தபொழுது தீர்க்கதரிசியார் அவனைக் கடிந்துகொண்டார். ரோமத் துரைத்தனத்தார் அடிக்கடி குடிமதிப்பெடுத்து வரி ஏற்படுத்திவந்தார்கள். ஆதலால், யேகோவாவை அல்லாது பிறிதொருவரைத் தமக்கு அரசனாக அங்கீகரித்து வரிப்பணங் கட்டுவது தெய்வத் துரோகமென்று சாதித்த கூட்டத்தார் யூதருக்குட்டோன்றினர். குரினியஸ் என்னும் ரோமச் சக்ரவர்த்தியின் காலத்தில், கி. பி. 6-ம் வருஷத்தில், குடிமதிப்புச் செய்யக் கட்டளை பிறந்தபொழுது, கலிலேயனாகிய யூதாசும், சாதோக் என்ற ஒரு பரிசேயனும் வரிப்பணஞ்செலுத்த மறுத்துக் கலகம் எழுப்பினர். கலிலேயா நாடெங்கும் பெருங்குழப்பம் உண்டாயிற்று. யூதேயாவை ஆண்டுவந்த ரோமராஜப் பிரதிநிதியாகிய கொப்போனியஸ் கலகக்காரரை நசுக்கிக் கலகத்தை அடக்கினான். என்றபோதிலும் கலகத் தலைவனான யூதாஸ் தப்பிக்கொண்டான். அவன் இக்காலத்திலும் கலிலேயாவில் ஒரு கட்சி திரட்டிக்கொண்டிருந்தான். இக்கட்சியாரிலிருந்து சேலத்துக்கள் தோன்றினர். அவனை கிறிஸ்து சந்தித்திருக்கலாம்; இல்லையென்றால் அவன் எழுப்பிய கலகத்தையும், அவன் கொண்டிருந்த தேசாபிமானத்தையும் கிறிஸ்துகேட்டு அறிந்திருக்கலாம். பெரிய ஏரோதின் காலத்தில் ஏரோதியரென்ற மற்றொரு சாரார் தோன்றினர். யூதநாடு பூரண சுயாதீனமடைவது கடினம் என்றும், ஏரோதின் சந்ததியார் அந்நாட்டில் ரோம ஆதீனத்திற்குட்பட்ட சிற்றரசராக இருந்து அரசுபுரிந்தாற் போதுமென்றும் எண்ணி இவர்கள் ஏரோதரசனுக்குத் தம்மால் இயன்ற உதவிபுரிந்தனர். பெரிய ஏரோது மிகச் சமர்த்தனானதால் இம்முயற்சி கைகூடுவதுபோல் தோன்றிற்று. ஆனால் அவனுக்குப்பின் அவன் புத்திரரில் மூவர் நாட்டைப் பகிர்ந்து பரிபாலித்து வந்தனர். அவர்களில் எருசலேமிலிருந்து யூதேயாவை ஆண்டுவந்த அர்கிலாவுஸ் கி. பி. 6-ம் வருஷத்தில் துரைத்தனத்தை

இழந்துவிட்டான். ரோமர் யூதேயாவைத் தமது சொந்த மாகாணமாக்கிக்கொண்டனர். இன்னும் இரண்டு மாகாணங்கள் ஏரோதின் புத்திரர் வசம் இருந்தபோதிலும் யூதேயாவை ஆண்ட பொந்தியுபிலாத்துவின் கொடுங்கோன்மையும், கலிலேயாவின் தேசாதிபதியாகிய ஏரோது அந்திப்பாவின் கொடுங்கோன்மையுங் குடிகளை வருத்துவதில் ஏற்றத்தாழ்வற்றனவாயிருந்தன. ஏரோதியருடைய நம்பிக்கை ஏற்கனவே அவமாகிவந்தது. ஆயினும் ஏரோதியர் நம்பிக்கை இழந்து போகவில்லை. இஸ்ரவேலரின் சுயாதீனம் ஏரோதின் வமிசத்தாராலன்றி வேறுவழி வாராதென்பது அவர்களுடைய கோட்பாடு. யூதர் தமக்கு அரசரை ஏற்படுத்துமுன் இருந்ததுபோல், மீண்டும் ஏகோவாவே தம் அரசனும், அவர் ஊழியராகிய தீர்க்கதரிசியரும் ஆசாரியருமே தம் துரைத்தனக்காரருமாய்க் கொண்டொழுகுவதே நேர்மை என்று பரிசேயர் எண்ணியிருந்தனர். ரோமச்சட்டங்கள், விதிவிலக்குகள், தீர்வைகள், சிட்சைகள் ஒருபக்கமிருக்க, ஆசாரியர் சனஹரிம் சங்கத்தின் மூலமாய்ப் புராதன யூதச் சட்டங்கள், தீர்வைகள் முதலியவற்றை விதித்தும், குற்றவாளிகளைத் தண்டித்தும் வந்தனர். அவர்களுக்குக் காவற்படை ஒன்றும் இருந்தது. இந்தச் சிலாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு பூரண சுயாதீனத்தை நிலைநாட்ட வேண்டுமென்பது பரிசேயரின் கருத்து. ஆகமங்களும், அவற்றைத்தழுவித் தாம் இயற்றிய தர்மசாஸ்திரமும் கற்பித்தபடி இரண்டு ஓய்வுநாட்களையேனும் நெறிவழுவாது யூத மக்களனைவரும் ஆசரிப்பின், உடனே மேசியா வந்துவிடுவாரென்று பரிசேயர் எண்ணியிருந்தனர். சாஸ்திரவிதிப்படி யாவரையும் ஒழுகச்செய்வதே இரட்சண்ய வழியென்று கருதி, அப்படிச் செய்வதில் பரிசேயரும் சதுசேயரும் மிக்கூர்ந்த ஊக்கங் கொண்டிருந்தனர்.

மேசியா அரசனோ அடிமையோ?

யூதச் சரித்திரத்தின் உட்கருத்து பரிசேயரும் செலத்துக்களும் கொண்ட கருத்தேயாயின், தீர்க்கர் உரைப்படி தாவீதின் வம்சத்தில், தாவீதின் ஊரில், ஓர் கன்னியின் வயிற்றில் அவதரித்த இயேசு ஒருவரே அவர்கள் எதிர்நோக்கியிருந்த தலைவர் ஆவர். நாசரேத்தில், தச்சுக்கூடத்திற் கைகாய்க்க வேலைசெய்துகொண்டிருக்கும் நானோ யூதருக்கு அரசனாகப்போகிறவன் என்று இயேசு ஐயங்கொண்டனரோ? தம்மைப் போற்றிப் புகழ்ந்து பின்பற்றும் ஜனத்திரள்முன் வெற்றி

மாலை சூடிப் போர்க்களத்திற்குச் செல்லும் வீரனாக மேசியா தோன்று வாரென்ற சம்பிரதாயந் திருமறையில் ஒரு பக்கமிருக்க, அவர் துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவிப்பவரும், தஞ்சொந்த ஜாதியாராற் புறக் கணிக்கப்படுபவரும், வசீகர ரூபமற்றவரும், கொலைக்களத்திற்குக் கொண்டுபோகும்பொழுது கூச்சலிடாதிருக்கும் மரியைப்போல் தெய் வத்தால் அடித்து நொறுக்கப்படும்பொழுது பொறுமையா யிருப்பவரு மாய்த் தோன்றுவார் என்ற சம்பிரதாயம் மறுபக்கம் இருந்தது. மற்ற வர்களைக் காயப்படுத்துவதால் அல்ல, தெய்வத் திருச்சித்தத்திற்கமைந்து தாமேபடுங் காயங்களின் தழும்புகளால் மேசியா ஜனங்களைக் குண மாக்கி இரட்சிப்பாரென்றும் சுருதி கூறுகின்றது. எதிர்மாறான இந்த இரண்டு வழிகளில் தாம் எதைத் தெரிந்து செல்லுவதென்று கிறிஸ்து தமக்குள் வாதம்பண்ணிக்கொண்டிருந்தார். மேசியா நிலைநிறுத்தப் போகிற இராட்சியம் நிலையற்ற உலகராட்சியங்களைப் போன்ற தொன்றோ? அல்லவெனில் ஆன்மீக இராட்சியமோ? என்றும் இயேசு தமக்குள் சிந்தித்துக்கொண்டிருந்தார். இளமையிலேயே இந்தக் கேள் விகளுஞ் சந்தேகங்களும் அவர் கருத்திற்குத் தோன்றின. ஆதலால் புளிப்பில்லா அப்பப்பண்டிகைக்குக் கிறிஸ்து பெற்றோருடன் எருச லேமுக்குச் சென்றபொழுது, தேவாலயத்தில் மூன்றுநாள் தங்கி முதிர்ந்த வேத நிபுணருடைய போதனையைக் கேட்டார். தமக்குத் தோன்றிய ஐயங்களை அறிவித்துக்கொண்டார். மகனைக் காணாது தவித்துத்தேடிய பெற்றோர், தேவாலயத்திற்கு வந்தபொழுது கிறிஸ்து சாஸ்திரிகளோடு அளவளாவி நிற்றலைக்கண்டு வியப்புற்றனர். "மகனே, நீ இப்படிச் செய்யலாமோ? நானும் உன் தந்தையும் எத் துணை அங்கலாய்ப்புடன் உன்னைத் தேடியலைந்தோம்" என்று மரியம் மாள் சொல்ல, "நான் என் பிதாவாகிய தெய்வத்தின் திருவுளச்சித் தத்தை ஓர்ந்துணரக் கடமைப்பட்டுள்ளேன் என்பதை நீவிர் அறியாது போனதென்ன?" என்று இயேசு விடைபகர்ந்தார். கடந்த மூன்று தினங்களாய் இச்சிறுவர் வேத ஆராய்ச்சியிற் காட்டிய ஊக்கத்தையும், புத்திகூர்மையையும், கண்ட யாவரும் பிரமைகொண்டனர். ஆத லால் மேசியாவைக்குறித்து யூதர் கொண்டிருந்த எண்ணங்கள் ஞாய மானவையென்று கிறிஸ்து அங்கீகரிக்கத் தாமதித்ததாகத் தோன்று கின்றது. இவர் பின்னர் பகிரங்கமாய்ப் போதித்தபொழுது மேற் கூறிய தேசாபிமான வகுப்பினரில் எவரையுஞ் சேரவில்லை.

தெய்வ இராட்சியம் எத்தகையது?

யூதச் சரித்திரத்தையும் தீர்க்கதரிசிகளின் வாக்குகளையுங் கிறிஸ்து கற்றுக் கிரகித்துக்கொண்ட முறை முற்றும் நூதன முறையாயிருந்தது. மேசியாவைக்குறித்த நம்பிக்கைகளைப் புடமிட்டுச் சுத்திகரித்து, அவற்றிலிருந்து, யூதருக்குமட்டுமல்ல, மனுக்குலத்தோர் யாவருக்கும் சமாதானத்தைத் தரத்தக்க நற்செய்தியாகிய பசும்பொன்னைப் பிரித்தெடுத்தார். தானியேலின் புஸ்தகத்தில் வெகு அழகாய் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் தெய்வ இராட்சியத்தை, தாவீதின் அழிந்துபோன சிம்மாசனத்திலல்ல, அழியாத ஆசனங்களாகிய பக்தரிதயங்களில் நிலைநாட்டுவதே ஞாயமென்ற உன்னத அறிவையும் அடைந்தார். இதுவே இவர் செய்த அரிய திருப்பணியின் சிறப்பு. இதற்கென்றே தம் பிராணனையும் மாய்த்தார். இச்சிறந்த எண்ணங்கள் இப்பொழுது பூரண உருக்கொண்டு தோன்றினவென்று சொல்லுவதற்கு இடமில்லை. என்றாலும் அவை இப்பொழுது கிறிஸ்துவின் சிந்தையிற் பிறந்ததே விசேஷம்; அவர் செய்த தெய்வ சகவாசமே அதற்குக் காரணம்.

இயேசுவின் சாயுச்சிய நிலை

வாழையடி வாழையென, ஜெப வாஞ்சையுந் தெய்வக் காதலும் கொண்ட அன்னையின் புதல்வரான கிறிஸ்து ஓய்வுநாட்களிலும், வேலையொழிந்த வேளைகளிலுந் தமது கிராமத்தைச் சூழ்ந்திருந்த மலைகளுக்குச் சென்று தனித்திருந்து ஈசனைச் சிந்தையிலிருத்திப் பூஜித்து வந்தார். வாய்திறந்து பேசத் திராணியற்ற குன்றுகளும், அருவிகளும், மலர்களும், புள்ளினங்களும், அன்னையிலும் மேலான அன்பனின் பெருங் கருணையைத் தியானநிலையில் திறவுண்ட இவர் தம்மனச் செவிகள் கேட்டுக் களிகொள்ளுமாறு பிரஸ்தாபித்தன. அப்பொழுது இவர் தன்னையே மறந்து பரவசப்படுவார். இகத்திற்கும் பரத்திற்கும் இடையிலிருக்கும் அவித்தை யென்னும் திரைச்சீலையைக் கடந்து செல்லுவார். அருள் பெருக்கெடுத்துப் பாயும் ஈசனது உள்ளத்தின் ஆழத்தைக் கண்முன் காண்பதுபோல் உணர்ந்து உன்னத பேரின்பமடைவார். சம்சார சாகரமாகிய உலகத் தொல்லைகளை மேற்கொள்ளத் தக்க துக்கநிவாரண முறையைக் கண்டுகொண்டார். "பார்த்தவிடமெங்கும் பரமேகாண் அம்மானே" என்றவாறு, வளமும் வனப்பும் மிகுந்த கீழ்கலிலேயா நாட்டிலிருந்து தெய்வத்தைச் சிந்தைசெய்த இயேசுபெருமான் அவனை ஸ்தூல விழிகளாற் காணவில்லை; ஆன்ம

விழிகளாற் றெளிவுறக் கண்டுணர்ந்தார். இறைவன் இவருக்குத் தரிசனத்தில் தோன்றவில்லை; இவர் இதயத்தில் தோன்றினர். அகத்திலிருந்து ஆட்சிசெய்யும் பரமன், மோசே முனிவருக்கு முட்செடியிலும், இடிமுழக்கத்திலும், தொண்டன் யோபுக்கு இறைந்தடித்த புயலிலுமிருந்து பேசியதுபோல் இவரிடம் பேச அவசியம் ஏற்படவில்லை. அதிகுணப் பெருங்கருணைத் தடங்கடலோடு இவர் ஐக்கியப்பட்டிருந்ததால் அவனைத் தன் அப்பனென்றும், தன்னை அவன் தனயனென்றும் உணர்ந்தார்.

ஈசன் என் தந்தை

பரம்பொருளைத் தந்தையென்றழைத்த தபோதனர் இவர் ஒருவரே யாகார். பக்தர் தம் கருத்தில் தோன்றிய எல்லைக்கடங்காத சுகுணக் களஞ்சியமாய் விளங்கும் மெய்ப்பொருளை விஸ்தரித்துக் கூற முயன்றவிடத்து, அப்பொருளை, நித்தியவஸ்துவென்றும், மாறுதநிலையென்றும், ஒளியென்றும், சத்தென்றும், சித்தென்றும், ஆனந்தமென்றும், அன்னையென்றும், அப்பனென்றும், துரியமென்றும், தூரமென்றும் கூறினர். உள்ளமுருகிக் கண்ணீர் ஆறுகண்ட புண்ணியனர் ஈசனை நினைத்து அப்பா, பிதாவே எனப் பன்முறை ஓலமிட்டுள்ளார். அறிவுக்கெட்டாத பரம்பொருளாகிய வஸ்துவை புத்தியிற் கிரகித்துக்கொள்வதற்கும் உதவும் உருவகம் என்றேனும், துன்பங்களனைத்தையுந் துடைத்தருளி யாறுதலைத்தருந் திருமந்திரமென்றேனும் எண்ணிக் கடவுளை இவர் தந்தையென் றழைத்தாரில்லை. அல்லது வேளா வேளைகளில், உள்ளம் பரவசநிலையில் நிற்கும்பொழுது பிறந்து பின் மறைந்த ஓர் உணர்ச்சியைக் குறிக்கவும் இப்படிக் கூறவில்லை. தமது புத்தி சித்தம் ஆன்மாவனைத்தையும் தம்மிலும் பெரிய உன்னத வஸ்தொன்று சம்பூரணமாய் நிரப்பிக்கொண்டதாகவும், அது தம்மிலும், தாம் அதனிலும் கலந்துள்ளதாகவும் எம்பிரான் தெளிவுறக் கண்டனர். அந்த உன்னதவஸ்து தமக்குள்ளும் தம்மைச்சூழவும் நின்றது. அது சகல பொருட்களிலும் அந்தரியாமியாய் நின்றது. சகலத்தையும் தாங்கி நடத்திற்று. அது ஓர் நூதன அல்லது அந்நியப் பொருளாகக் காணப்படாமல், தாம் அறிந்ததும், தமக்கு நெருங்கியதுமான பொருளாகக் காணப்பட்டது. இது தத்துவ ஆராய்ச்சியால் விளைந்த அபிப்பிராயமல்ல, அறிவல்ல; ஓர் சிறந்த அனுபவம். இந்த அனுபவம் பக்தரில் மற்றெவருக்குங் கிடைத்ததில்லை.

தெய்வ உணர்வு தோன்றிய வழி

இந்த அனுபவம் இவர் ஒருவருக்கே எவ்வாறு கிட்டியதென விசாரிக்குமிடத்து, தமது அன்னேயின் முன்மாதிரியாலல்ல, ஆழ்ந்த எண்ணங்களை ஊட்டுவிக்கத்தக்க யூதச் சரித்திரத் திருமறையாலல்ல, அரிய கனவுகளைக் கிளப்பிவிடத்தக்க சிறப்புவாய்ந்த கலிலேயா நாட்டின் வனப்பாலல்ல, பின்னர் கிறிஸ்து தெய்வத்தைத் தேடிய ஊக்கத்தாலுமல்ல. அவையனைத்தும் காரணங்களாயினும், போதிய காரணங்களாகா. போதிய காரணங்கள்தான் எவையெனக் கண்டுணரச் சிற்றறிஞராகிய எமக்குத் திறனில்லை. என்ருலும் நாம் ஊகித்துக் கண்டு கொள்ளும்வரையில், இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று, கிறிஸ்துவின் ஆன்மநிலை மனிதர் எட்டியிருக்கும் ஆன்மநிலையினும் உயர்ந்தநிலை. பூச்சி, புழு, ஊர்வன, பறவை, விலங்குகளுக்கு முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு அறிவுகளைத் தந்த சிருஷ்டிகர்த்தன், மனிதனுக்கு ஐந்து அறிவைத் தந்து விலங்கினங்களுக்கு எட்டாத ஆன்மநிலையில் அவனை நிறுத்தி மகிமைப்படுத்தினர். அதுபோல மனிதப்பிறவிக்கு மேம்பட்ட பிறவியின் முதற்கனியாக உதித்த கிறிஸ்துவுக்கு ஓர் உன்னத ஆன்ம புலனைக் கொடுத்தவன் இறைவனே.

> "**கண்ணிரண்டே** யாவர்க்கும் கற்ருேர்க்கு மூன்றுவிழி
> எண்ணுவிழி யேழாகும் ஈவோர்க்கு—நண்ணும்
> அனந்தன் தவத்தால் அருள்ஞானம் பெற்ருேர்க்
> கனந்தம் விழியென் றறி."

இவ்வருள் ஞானம் இவரில் பூரண தீட்சண்யம் அடையவும், அதன்பின் இவர்மூலமாய் மானிடரனைவரும் புதிய ஜீவனையடைந்து, தெய்வப் புதல்வராகவும் வேண்டுமெனக் கருதி, உன்னத நிலையிலிருந்த இவரது ஆன்மாவுக்குத் தம்மைத்தாமே வெளிப்படுத்த ஈசன் திருவுளங்கொண்டார். இது கிறிஸ்துவடைந்த அற்புத அனுபவத்தின் இரண்டாங்காரணம். தெய்வத்தை உண்மையாய்க் கண்டுகொள்ளத் தக்க ஆன்மநுட்பம் கிறிஸ்துவிலிருந்தது. இவருக்குத் தம்மை விசேஷ விதமாய் வெளிப்படுத்த விரும்பிய விருப்பந் தெய்வத்திலிருந்தது. இவ்விரண்டும் ஒன்றை ஒன்று தழுவியபொழுது கிறிஸ்துவில் விளங்கிய சுத்த சுயம்பிரகாச பக்தி உதித்ததென உத்தேசிக்கலாம்.

அத்தியாயம் 3.

துறவியாகிய யோவான்ஸ்நானகன்

இயேசுநாதர் முப்பது வயதுவரையிலும் பகிரங்கமாய் எங்கும் பிரசங்கிக்கவில்லை. வேத ஆராய்ச்சியும் தேசீயக் கிளர்ச்சியும் இக்காலத்தில் எங்கும் பரவியிருந்தது. யூதநாடுகளில் ரபி அல்லது ரபூனி என்றழைக்கப்பட்ட குருக்கள் பெருகியிருந்தனர். ஷாமாய், ஹில்லல், கமாலியேல் என்ற பெயர்பெற்ற ரபூனிகள் சீடர்களைச் சேர்த்துக் கொண்டு தத்தம் போதனைகளைப் புகட்டிவந்தனர். ஆதலால் இயேசுநாதரும் சும்மா இருந்திருக்கமாட்டார். அவரும் தமக்குத் தோன்றிய அரிய பெரிய எண்ணங்களை, தமது நண்பர்சிலருக்குப் புகட்டிவந்தனர். ஊர்ச்சந்தையிலும் ஜெப ஆலயத்திலும் திருவிழாநாட்களிலும் நடந்த வேத சம்பாஷணைகளில் இவரும் ஜனங்களோடு கலந்துபேசினர். பன்னிரண்டாம் ஆண்டில் எருசலேம் தேவாலயத்தில் கேட்டவர் சிந்தையைக் கவரத்தக்கசாதுரியமாய்ப்பேசின எம்வள்ளல், வயதிலும் ஆன்மீக அனுபவத்திலும் முதிர்ந்திருந்த இக்காலம் சொற்சுவையும் பொருட்சுவையும் கலந்து விளங்கும் போதனைகளைப் புகட்டினர் எனக்கொள்வது தவறோ? அவற்றை ஒழுங்காய்க் கேட்டுக் கற்றுக்கொண்டிருந்த சீடர்களின் சிறுகுழாம் ஒன்று நாசரேத்தூரில் இருந்தது. எம்பிரான் தமக்கு விதித்த திருப்பணிவிடையைச் செய்யக் கிறிஸ்து இவ்வாறு தம்மை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்த காலத்தில், யூதேயாவின் பட்டணங்களிலும் கிராமங்களிலுமிருந்து ஜனங்கள் திரள்திரளாய்த் தெற்கே சவக்கடலுக்கருகிலிருந்த வனாந்தரத்திற்குச் சென்றனர் அங்கு ஓர் தீர்க்கதரிசி குரலெடுத்துப் பிரசங்கித்துக்கொண்டிருந்தான் ஜனசஞ்சாரமற்ற கர்மேல் பருவதத்தில் காட்டு மிருகங்களோடு சஞ்சரித்து, திடீரென்று இறங்கிவந்து அரசரைச் சிம்மாசனங்களிலிருந்து தள்ளி, ஜனங்களைக் கலங்கச்செய்த எலியாவைப்போல், இவன் வனசஞ்சாரியாயும் வைராக்கியம் மிகுந்தவனாயும் இருந்தான். பெரியோரென்றும் சிறியோரென்றும் பாராது, யாவர் குற்றங்களையும் கர்ணகடூரமாய்க் கண்டித்தான். பரலோக இராட்சியம் நிலைபெறுங்காலம் சமீபித்ததென்றும், அநியாயங்களையும், கொடுமைகளையும், குற்றங்களையும் விட்டொழித்து மாற்றிப் பிறவாதவன் ஒருவனேனும் வர இருக்கும்

தெய்வ கோபாக்கினைக்குத் தப்பான் என்றும் இவன் இடித்துரைத்தான். கோபாவேசங்கொண்டு, "விரியன் பாம்பின் குட்டிகளே வருங் கோபத்திற்குத் தப்பிக்கொள்ளும் வழியைக்கண்டு செல்லுங்கள்" என்றான். உணவிலும், உடையிலும், தோற்றத்திலும் கடுந்தவசியாக விளங்கினன். தாடியுஞ் சடையும் வளர்த்திருந்தான். வெட்டுக்கிளிகளும், காட்டுத்தேனுமே இவன் உணவு; ஒட்டகமயிராற் பின்னிய கச்சையொன்றே இவன் உடை. இவன் யாரென்றால், சகரியாவின் மனைவி எலிசபேத்து வெகுகாலம் மலடியாயிருந்து பின் தெய்வ கடாட்சத்தால் ஈன்றெடுத்த யோவான். இவனைக் கண்டோரும் கேட்டோருந் திகிலடைந்து, உய்யும் வழியாதென்று இவனைக் கேட்டனர். அதற்கு யோவான், உடையவன் எளியவனுக்கு உதவி உபகாரஞ் செய்யவேண்டுமென்றும், விதிக்கப்பட்டதற்குமேல் சுங்கம் வாங்கப்படாதென்றும், எவருக்குந் தீங்குசெய்யலாகாதென்றும் உபதேசித்தான். அவ்வாறு நேர்மையாய் நடக்க விரும்பினோர்க்கு, யோர்தான் நதியின் கீழ்க்கரையில் பெத்தபாரா என்ற கிராமத்துக் கருகில் ஞான முழுக்காகிய ஞானதீட்சை கொடுத்தான். இது ஒருவன் தெய்வ ராட்சியத்தின் பிரஜையாக விரும்பிய விருப்பின் புறம்பான அடையாளச் சடங்காயிற்று. இயேசுகிறிஸ்துவானவர், தம் தோழரும் சீடருமாகிய சில வாலிபருடன், யோவானைக்காணப் பெத்தபாராவிற்குச் சென்றார்.

யோவானும் இயேசுகிறிஸ்துவும்

யோவானும் இயேசுவும் ஒருவரை ஒருவர் நன்றாய் அறிந்திருந்தனர். இருவரும் பந்துக்கள். வயதிலும் தெய்வபக்தியிலும் ஒத்திருந்தவர்கள். தெய்வராட்சியத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற ஏகநோக்கங்கொண்டவர்கள். என்றாலும் இவரது ஜீவியப்பாங்கிலும் இவர் போதித்த போதனையிலும், கையாடிய முறைகளிலும் பேதமிருந்தது. கிறிஸ்து பிரமச்சாரியாயிருந்தபோதிலும், யோவானைப்போல் உணவையும் உடையையும் சுருக்கி வனசஞ்சாரஞ் செய்யவில்லை. யூதஜன சமூகத்தை யேகோவா விதித்த நீதிநெறியில் நடத்திச்செல்லவிரும்பும் தலைவர் அருந்தவத்தோரா யிருக்கவேண்டுமென்று சாதித்த எஸ்ஸேனருடைய கோட்பாட்டை அங்கீகரித்ததாலோ, தவந் தன்னிற்றான் சிறப்புப் பொருந்தியதென்று எண்ணியதாலோ, யோவான் சன்னியாச

ஆசிரமத்தைக் கடைப்பிடித்தனன். ஆனல் கிறிஸ்து விரத்தராயிருந்த காரணமோவெனில், அவர் உள்ளத்திற் றேவபக்தி மிகுந்திருந்ததால் பெண்ணாசை தோன்றற்கிடமின்றிப் போயிற்று. பாலியப் பருவத்திலேயே ஈசன் தம் பிதாவென்றுணர்ந்து, அவன் திருவுளச்சித்தம் பரத்திற் செய்யப்படுமாறு இகத்திலுஞ் செய்யப்படும்படி, தாம் ஒப்பற்ற திருக்கிரியை யொன்றைச் செய்துமுடிப்பதற்கென்றே அனுப்பப்பட்டவரென்றும் நிச்சயித்திருந்த கிறிஸ்து, தான், தனது என்ற இருபற்றுகளையுங் களைந்தனர். மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவனுந் தனித்தனியே செல்லவேண்டிய வழியை ஈசன் வரையறுத்திருக்கின்றான். ஒவ்வொருவனுக்குந் தெய்வம் விதித்தவிதி யொன்றுளது. அதைக் கண்டறிந்து அதன்படி யொழுகுவதே பக்தியின் விசேஷமாம். கிறிஸ்து நிறைவேற்றவிருந்த விதி தெய்வ எண்ணங்களில் அவருக்கென்று குறிக்கப்பட்ட எண்ணம் மட்டுமல்ல; தெய்வம் மேதினியனைத்தையும் குறித்துக்கொண்டிருந்த சகல எண்ணங்களுமேயாம். கிறிஸ்துவிற்கு பிரத்தியேகமான விதி ஒன்றிருக்கவில்லை. மனுக்குலத்தின் விதியே அவர் விதி. உலகின் விதியைத் தமது விதியாகப் பாவித்து, அதை நிறைவேற்றுவது எவ்வாறெனை இரவும் பகலும், கனவிலும் நனவிலும் சிந்தித்துக்கொண்டிருந்த புருஷசிகாமணிக்குப் பெண்ணாசை எங்கிருந்து வரும்? தவிர இவர் இவ்வாறு சகல பிராணிகளோடுந் தம்மைச் சமப்படுத்திக்கொண்டதால், மனிதர் சாதாரணமாய் ஒரே ஆளிடம் ஊன்றிச்செலுத்தும் பலமான காதல், இவரில் பரந்து வியாபித்தது.

தெய்வந் தன்னுள்ளத்திலிருக்கும் இணைபிரியா காதல்கொண்ட தந்தையென்றுணர்ந்ததால், கிறிஸ்து பரம ஆனந்தங்கொண்டிருந்தார். யோவானும் அவருடைய சீடரும் பன்முறை உபவாசித்துக் கொண்டிருக்க, கிறிஸ்துவும் அவர் சீடரும் உபவாசிக்காது என் அழைத்த விருந்திற்கெல்லாம் அட்டிசொல்லாது போகின்றார்களென்று சிலர் கேட்டபொழுது, மணவாளன்கூட இருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களோ? என்று கிறிஸ்து எதிர்வாது பேசினர். தெய்வ ராட்சியத்தைக்குறித்துப் பேசுங்கால், யோவான் வருங்கோபத்திற்குத் தப்ப வகைபாருங்கள் என்றார்; கிறிஸ்துவோ பரமராட்சியம் சமீபித்திருக்கிறது என்ற நற்செய்தியை அறிவிக்கின்றேன் என்றனர். நிலையற்ற உலக வாழ்க்கையாகிய யாத்திரையைச் செய்கையில்,

யோவான் பல்லைக் கிட்டிக்கொண்டு சென்றார்; கிறிஸ்துவோவெனில் எம்பிரானின் செல்வப் புதல்வனைப்போல் ஆடிப்பாடிக்கொண்டு சென்றார். தானியேலின் புஸ்தகத்தை எழுதிய ஞானியின் கருத்தில் தோன்றிய "தெய்வ ராட்சியம்" என்னும் எண்ணத்தைக் கிறிஸ்து தமது சிந்தையாகிய உலையிலிட்டுப் புடமிட்டு, அது பூரண ஆன்மீக ராட்சியமென்று பொருட்படுத்தினர். யோவான்ஸ்நானகன் போதித்த உபதேசங்கள், அவர் தானியேல் புஸ்தகத்தின் பழைய கருத்தை இவ்வாறு சுத்திகரித்துப் புதுப்பித்ததாகக் காட்டுகின்றனவல்ல.

என்றாலும் பெத்தபாராவில் இவர்கள் ஒருவரையொருவர் சந்தித்தபொழுது ஒருவர்மீதொருவர் மிகுந்த அன்பும் அனுதாபமும் கொண்டனர். செய்யத்தக்கது யாதென்று கிறிஸ்து இன்னும் தெளிவாகக் காணவில்லை; தமது திருப்பணிவிடையைப்பற்றி பூர்த்தியான ஒழுங்கொன்றும் திட்டம் பண்ணிக்கொள்ளவில்லை. யோவான் செய்துவந்த வேலை சிறந்த வேலையென்றுணர்ந்து, அதனில் தாங் கொண்டிருந்த அனுதாபத்தைக் காட்டக் கிறிஸ்து யோவானிடம் தீட்சைபெற்றார். யோர்தான் நதியின் தெளிந்தநீரில் கிறிஸ்து முழுகி எழுந்தவுடன், அற்புத சம்பவம் ஒன்று நேர்ந்தது; பிரகாசமான ஒரு பொருள் புறாப்போல் வானத்திலிருந்து அவர்மேல் இறங்கிற்று. "நீ என் நேசகுமாரன்; உன்னிடம் பிரியங்கொண்டுளேன்" என்ற அசரீரி வாக்கும் பிறந்தது. கிறிஸ்து வியப்படைந்தார். பரமபிதா தமக்கொரு சிரேஷ்ட அலுவல் குறித்திருக்கின்றார் என்ற எண்ணமும் முன்னிலும் அதிகத் தெளிவாய் உறுதிப்பட்டது. யோவானோடு ஒத்துழைப்பதோ, அல்லவென்றால், பிரத்தியேகமான மற்றொரு வழியிற் செல்லுவதோ, ஈசன் கருத்தென்று தோன்றவில்லை. இந்த விஷயத்தில் தெய்வசித்தம் யாதென்று தெளிவுற ஓர்ந்தறியக் கிறிஸ்து உடனே சவக்கடலுக்கருகிலிருந்த கரடுமுரடான மலைகளை நோக்கிச்சென்றார்.

இயேசுவின் முன்தூதன்

இதன்பின் யோவான் ஒருவழியுங் கிறிஸ்து ஒருவழியுஞ் சென்றனர். யோவான் கிறிஸ்துவை மறுமுறை கண்டபோது "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்குந் தேவாட்டுக்குட்டி" என்று அவரைச் சுட்டிக்காட்டி, அவரே மேசியா என்று சாட்சி பகர்ந்தான்

கிறிஸ்து யோவானை வெகுவாய்ப் புகழ்ந்தனர். மனிதராய்ப் பிறந்தவருள் யோவான்ஸ்நானகனிலும் பெரியவன் ஒருவனுமில்லையென்று இயேசு கூறினர். ஏரோது அந்திப்பா என்னும் அரசன் யோவான் ஸ்நானகரைக் காவலிலடைத்தான். பரமராட்சியம் நிலைபெறுங்காலம் வந்துவிட்டதென்ற நம்பிக்கை அவமாய்ப் போயிற்றே என்றும், அந்திப்பாவைப்போன்ற அயோக்கியரிடமிருந்து கிறிஸ்து ஏன் யூத நாடுகளைப் பிடுங்கிக்கொள்ளாதிருக்கின்றார் என்றும் யோவான்ஸ்நானகர் பலவாருகக் கலக்கமும் சந்தேகமுங்கொண்டார். "வரப்போகிற மேசியா நீரோ? அல்லது வேருருவர் வரக் காத்திருக்கவேண்டுமோ?" என்று இயேசுவைக் கேட்டுவர யோவான் தம் சீடரிற் சிலரை அனுப்பினர். இதைக் கேட்டபொழுது, ஸ்நானகர் தெய்வ ராட்சியத்தைக் குறித்து முற்றும் தப்பான எண்ணங்கொண்டிருப்பதைக் கிறிஸ்து அறிந்து துக்கித்தார். கேள்விகேட்டுவந்த சீடரைப் பார்த்து "நீங்கள் கேட்பதையுங் காண்பதையும் யோவானுக்குச் சொல்லுங்கள். குருடர் காண்கின்ருர்கள், முடவர் நடக்கின்ருர்கள், செவிடர் கேட்கின்ருர்கள், குஷ்டரோகிகள் ஆரோக்கியமடைகின்ருர்கள், மரித்தோர் உயிர்த்தெழுகின்ருர்கள், தரித்திரர் தெய்வ ராட்சியம் வந்துவிட்டதென்ற நற்செய்தியைக் கேட்கின்ருர்கள். என்னைக்குறித்து எவ்வித சந்தேகமுங் கொள்ளாதவன் பாக்கியவான்" என்று கிறிஸ்து விடை பகர்ந்தார். யோவான் இதன் கருத்தை அறிந்துகொண்டாரோ, அல்லவோ, அறிகிலோம். அவர் அறிந்துகொண்டிருப்பின், இற்றைக்கு சற்று பொறுத்து அந்திப்பாவின் சேவகர் தம்மைச் சிரச்சேதம் பண்ண வந்தபொழுது, தமது ஊக்கமும் ஊழியமும் வீணுகப்போயிற்று என்ற அங்கலாய்ப்பின்றி ஓங்கிய பட்டயத்திற்குத் தமது கழுத்தைக் கொடுத்திருப்பார். ஏமாந்துபோனேன் என்று துக்கித்து யோவான் தம் பிராணனை விட்டாரோ? அல்லது தாம் தொடங்கிய அரிய திருப்பணியைக் கிறிஸ்து திருத்திமுடிக்க வந்திருக்கின்ருரென்ற சமாதானத்தோடு மரித்தாரோ? நாம் அறியோம். ஆயினும், கிறிஸ்து இவருக்குச் சாற்றிய புகழுரை பொய்க்கவில்லை. நீதிக்கும் நியாயத்திற்கும் பாடுபட்ட வீரரில் யோவான்ஸ்நானகரினும் சிறந்தவர் எவருளார்? கலிலேயா நாட்டின் அதிபதி, ஏரோது அந்திப்பா, அரசகௌரவமற்ற தன் சகோதரனை அவமதித்து இரண்டகம் பண்ணின பாவியை இச்சித்து, தன் மனையாளை ஓட்டிவிட்டு, அவளைச் சேர்த்துக்கொண்டது பெரும்

பாதகமென்று கிஞ்சித்தும் அஞ்சாது யோவான் கடிந்துரைத்தார். இதனால் தன் பிராணனை இழந்தார். இந்த வீரச்செயல் ஸ்நானகரின் சிறந்த ஜீவியத்திற்குப் பொருந்திய முடிவென்றே சொல்லவேண்டும். தவிர, இச்சமயம் யூதருக்குட்டோன்றிய தலைவர்களில், இவர் ஒருவரே கிறிஸ்து தொடங்கிமுடித்த அரும்பணிக்கு எற்ற உதவி ஊழியஞ் செய்யத்தக்க கிருபை வரம்பெற்றிருந்தவர்.

அத்தியாயம் 4.

கிறிஸ்துவின் நோன்பு

யோவான் ஸ்நானகரிடந் தீட்சைபெற்றவுடன், புறம்பான ஓர் சக்தி எம்பெருமானை வனாந்தரத்திற்குத் துரத்தினதென்று ஆகமங்கள் கூறுகின்றன. அது தெய்வ நடத்துதல் என்று கிறிஸ்து உணர்ந்தார். தனித்திருந்து தியானிப்பது மிக்க அவசியமெனக் கண்டார். அன்னம் தண்ணீர் எண்ணமற்று நாற்பது நாள் சிந்தையை ஓர் நிலைப்படுத்தி தியானித்தார். அப்பொழுது கிறிஸ்துவிற்குப் பல எண்ணங்கள் தோன்றின. அவற்றில், தெய்வ சிந்தைக்கு ஒவ்வாதனவற்றை அகற்றினார். பிதாவின் திருவுளச் சித்தத்தையும் ஐயமறக்கண்டு தெளிந்தார். அந்தத் தியான நாட்களில் தாம் செய்ததையுந் தமக்கு நேர்ந்ததையுஞ் சீடருக்குச் சொன்னபொழுது மூன்று விசேஷங்களை உருவகப்படுத்தி விவரித்தார்.

சோதனைகள் மூன்று

உபவாச நாட்களினிறுதியில், பிசாசானவன் அவரைப் பொய் வழிகாட்டி ஏமாற்ற மும்முறை முயன்றான். அது எவ்வாறெனின்: நீர் தெய்வப் புதல்வனென்பது உண்மையாயின்; பசியாயிருப்பதேன்? இக்கற்களை அப்பமாக மாற்றிப் புசியும் என்றும்; தெய்வம் உம்மைச் சகல தீங்கிற்கும் விலக்கிக் காக்கச் சித்தங்கொண்டிருப்பது மெய்யோ வென்று பரிசோதித்தறியத் தேவாலயத்தின் கோபுரத்திலிருந்து தாழக் குதியும் பார்ப்போம் என்றும்; தெய்வ ராட்சியத்தை நிலைநிறுத்த எளிதான முறையொன்று சொல்லுகிறேன்; நீர் என்னைப் பணிந்து கொண்டால் நான் உம்மை உலகம் முழுவதற்கும் ஏகச் சக்ராதிபதியாக்கிவிடுகிறேன் என்றும், பிசாசு துர்ப்புத்தி புகட்ட முயன்றான். மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தெய்வந் திருவாய் மலர்ந்தருளும் வாக்கினாலும் பிழைக்கலாமென்றும்; உன் தேவனாகிய கர்த்தரின் மெய்மையைச் சோதிக்க முயலாதே என்றும்; உன் தெய்வமாகிய கர்த்தனைப் பூஜித்து அவன் ஒருவனுக்கே தொண்டூழியம் புரிவாயாக என்றும், திருமறை போதிக்கின்றதென்பதைக் கிறிஸ்து அவனுக்கு நினைப்பூட்டி அவனை வாய் அடைத்தாராம்.

சோதனைகளின் வியாக்கியானம்

அதாவது, கிறிஸ்து நாற்பதுநாளாய் ஆலோசித்த காரியங்களனைத்தையும் தொகுத்துக் கூறுமிடத்து, அவை மூன்று பிரசினங்கள் அல்லது கேள்விகளும், அப்பிரசினங்களுக்குத் தெய்வங் கொடுத்த சமாதானங்களுமே எனலாம். முதலாவது; இந்த உபவாச நாட்களிலோ அதற்கு முன்னே கிறிஸ்துவிற்கு ஒரு நூதன எண்ணம் உதித்தது. அவ்வெண்ணம் இப்பொழுது தோன்றியதெனக் கொள்வதே ஞாயமெனப் புலப்படும். தெய்வம் அவருக்கு விதித்த அருந்தொழிலைச் செய்து முடிப்பதற்கு மனிதருக்கில்லாத உன்னத சக்தி அவசியம். மானிட சித்தத்தைக் கட்டுக்குள் அடக்கியிருக்கும் இயற்கைப் பிரமாணங்களேயும், பிணி, மூப்பு, சாக்காடு முதலிய தொல்லைகளேயும் அவசியம் நேர்ந்தவிடத்து மேற்கொள்ளத்தக்க சக்தியே அவ்வுன்னத சக்தியாகும். ஒன்றைச் செய்துமுடிக்க ஏவுங் கர்த்தன் அவசியமான சாதனங்களேயும் சக்தியையுங் கொடுப்பது ஞாயமன்றோ? மக்கபீய வீரரும், கலிலேயனாகிய யூதாசும், மற்ற யூத அபிமானிகளான தலைவருந் தோல்வியடைந்ததால், மாமிச பலத்திற் சார்ந்து தெய்வ ராட்சியத்தை நிலைநாட்ட முயலுவது மதியீனமென்றும், இந்த அருஞ்செயலைச் செய்துமுடிக்கத் தெய்வபலம் அத்தியந்த அவசியமானதென்றும் இயேசு உணர்ந்தார்.

மேசியா அரசனல்ல, அடிமை

ஈசன் தமக்குப் போதிய சக்தியைத்தர மனதாயிருந்ததைத் தியானநாட்களிற் கண்டுகொண்டார். தாம் இயற்கைப் பிரமாணங்களினது கட்டுக்குள் அகப்பட்டவரல்லவென்று ஐயமற நம்பினார். பக்தருக்கு ஈசன் அதிசய காவல் ஏற்படுத்தியிருக்கின்றானென்று திருமறையிற் கூறியுள்ள வாக்குகளெல்லாம் தமக்குரியவை எனக்கொண்டார். தம்மைப்பற்றி இத்தனை மேம்பாடான விசுவாசங்கொண்டவருக்கு, உடனே ஒரு பெருஞ்சோதனை நேர்ந்தது விந்தையன்று. அச்சோதனை யாதெனில், தமது அற்புத வல்லமையால் ஜனங்களைத் தம்வசப்படுத்தி, ராட்சியங்களைக் கவிழ்த்து, அரசரை மேற்கொண்டு, உலகமுழுவதையும் கைப்பற்றி, ஒப்பு உயர்வற்ற செங்கோன்மை ஓச்சுவதாற் றெய்வராட்சியத்தை வெகு துரிதமாக உலகில் நிலை

திறுத்திவிட்டாலென்ன என்று இவர் எண்ணியதே அச்சோதனை. மக்கபீய வீரருக்கில்லாத அரிய சக்தி தமக்கு ஈசனளிக்கச் சித்தங் கொண்டிருந்ததாலும், யூதஜாதியார் அவ்வீரர் காலத்திலிருந்ததைவிட அப்பொழுது செல்வத்திலும், நாகரீகத்திலும், தேச வைராக்கியத்திலும், எரோதின் சாமர்த்தியத்தால் செல்வாக்கிலும், ராஜதந்திரத்திலும் பதின்மடங்கு தேர்ச்சியுற்றிருந்ததாலும் பலத்த யூதராட்சியத்தை ஸ்தாபிப்பது எளிதென்று கிறிஸ்து உணர்ந்தார். இந்த நோக்கம் விரும்பத்தக்கதே. கிறிஸ்துவின் மனம் இதிற் செல்ல இருந்ததென்பது மேற்கூறிய மூன்றுஞ் சோதனையின் மூலமாய்த் தெளிவாகின்றது. என்றாலும் இது தெய்வசிந்தையல்ல, அதற்கு நேர் விரோதமான பிசாசின் சிந்தையென்றும், அதற்கு இணங்குவது தமது பரம தந்தைக்குச் செலுத்தவேண்டிய வணக்கத்தைப் பிசாசுக்குச் செலுத்துவதற்கு ஒப்பாகும் என்றும் கிறிஸ்து கண்டுணர்ந்தார். அத்துரோகச் செயலைச் செய்யத் தூண்டிய விருப்பை வேரோடு பிடுங்கி எறிந்தார். அது கிறிஸ்துவிற்கு எளிதாயிருக்கவில்லை என்றும் நாம் அறிவது அவசியம். ஏனெனில் அதைத் தவிர்த்துவிடின், அவர் கையாட வேண்டிய முறை, விலகாது செல்லவேண்டிய வழி, வேறு ஒன்றுதான். ஏசாயத்தீர்க்கர் உரைப்படி மேசியாவாகத் தெரிந்துகொள்ளப்படும் தெய்வத்தொண்டன் வெற்றி வேந்தனாக வாராவிடில், கடுந் துயருற்றுத் தவிக்கும் எளிய தாசனாகத் தோன்றுவது அவசியமென்று கிறிஸ்து ஏற்கனவே அறிந்திருந்தார். தாந்துன்புறும் நீசனாகப் போவதே தெய்வத் திருவுளம் என்றும், அதற்கு அமைந்து தம்மைத் தாழ்த்துவதே தமது கடமையென்றும் இப்பொழுது கிறிஸ்து அறிந்து கொண்டார். தமது கைக்கு எட்டிய இரு பதவிகளில், அரச பதவியைத் தள்ளிவிட்டு, நீசனாக இருப்பதைத்தெரிந்துகொள்ளுவது கடினமன்றோ? கடினமான வழியில் தெய்வந் தம்மை நடத்தச் சித்தங் கொண்டதால், அவ்வழியில் செல்ல மனமுவந்ததைக் காட்டிலும் சிறந்த வைராக்கியம் பிறிதொன்றுளதோ?

> "இன்று மெனக்கை விட்டுப் பொன்று
> நரகிவிட்டு கொன்றாலும் உன்னை நாடுவேன்.
> அங்குமிருந்து மன்றாடி என்றும் பாடுவேன்"

என்பதே பக்தியின் சிறப்பு. தமது பரமதந்தையின் கரத்தைப்பற்றிக் கொண்டு மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பயப்படேன்

என்று கிறிஸ்து நிர்ணயங்கொண்டார். அதனுல் தாம் ஈசனிடங் கொண்ட பக்தியையும் தமது கீழ்ப்படிதலையும் விளக்கினர்.

"தின்மையே செயவரும் திறனுளேன் சிறிய வோர்
நன்மையேனுஞ் செயத் திறனிலே னவையினேன்"

என்று ஓலமிடவேண்டிய பாமரராகிய எம்மை, அன்பாலும் சாந்தத்தாலுஞ் சிந்தை தெளிவுறச் செய்து, நன்மையைக் கடைப்பிடித் தொழுகத் தூண்டிவிடுவது கடினமென, துஷ்டரைச் சீர்ப்படுத்த முயலும் யாவரும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் கண்டறிவார். ஆனுல் அதிசய சக்தியைக் காட்டிப் பயம் உறுத்துவதால், அடங்காப் பிடாரிகளையும் அடக்கி ஆட்டலாம். ஆதலால், அன்பினுலல்ல, பயமென்னும் இருப்புக்கோலால் இவர்களை அடக்கி, தெய்வத்திருச் சித்தத்திற்கு அமைந்துய்யக் கற்பிப்பதே எளிதும் துரிதமுமான முறையென்றுணர்ந்து, அப்படிச் செய்யலாமோ வெனக் கிறிஸ்து எண்ணினுர். இது அவருக்கு நேர்ந்த இரண்டாஞ் சோதனை. பண்டிகை நாட்களில், பலஸ்தினு நாட்டின் சகல பட்டணங்களிலுங் கிராமங் களிலுமிருந்து எருசலேம் தேவாலயத்திற்கு யூதர் திரண்டுவருவார்கள். அச்சமயத்தில் கிறிஸ்து தேவாலயத்தின் உயர்ந்த கோபுரத்தில் நின்று கொண்டிருப்பின், யாவரும் அவரைக் கண்டு அங்கு நிற்பது யாவர் என்றும், அவர் எப்படி அங்குச் சென்ருர் என்றும் எண்ணி வியப்புற்று நிற்கையில், அவர் சட்டென்று குதித்து, யாதொரு சேதமும் அடையாது ஜனங்கள் முன்னின்று, நானே மேசியா என்னைப் பின்பற்றுங்கள் என்றுரைத்தால் அவர்கள் தம் வசப்படுவார்கள். ஆனுல் இந்த எளிதான தந்திரம் தாம் செய்யவேண்டிய அரும்பணிக்குச் சிறிதும் பொருந்தாதெனக் கிறிஸ்து உணர்ந்தார். பலத்தால் அல்ல, அன்பினுல் யாவரையும் பக்தராக்கி முக்தியடையச் செய்ய விரும்பினுர். பயத்தால் விளையும் புறம்பான கட்டாயத்தால் அல்ல, சிந்தை தெளிவுற்றதால் உண்டாகும் பூரணவிருப்பால், ஜனங்களை ஈசனுக்குத் தொண்டராக்குவதே தமக்கு அடுத்த தொழில் என்று கிறிஸ்து தீர்மானித்தார். இது மிகக் கடினமான வழி: ஆனுல் இது ஒன்றே நேரானவழி. தமது போதனையை ஜனங்கள் அங்கீகாரம் பண்ணுவதற்காக அற்புத வல்லமையை உடயோகிக்கக் கூடாதென்று கிறிஸ்து நிர்ணயங்கொண்டார். இங்ஙனம் இரண்டாம் சோதனையை மேற்கொண்டார்.

தெய்வமே துணை

தாம் தெரிந்துகொண்ட கடினமான முறைகளைக் கையாடும் பொழுது தமக்கு மிகுந்த துன்பம் நேரிடலாமென்று கிறிஸ்து நினைத் தார். புறம்பான சடங்காச்சாரங்கள், மாய்மால பக்தி, நியாயப் பிரமாணங்களைக் கைக்கொள்ளுதலாகிய சுயநீதி முதலிய கைங்கரியங் களால் ஈசனைத் திருப்தி செய்து புண்ணியத்தைச் சம்பாதிக்கலாம் என்று எண்ணுவது மதியீன மென்பது கிறிஸ்துவின் போதனைகளி லொன்று. அதை அறிவித்தால் பரிசேயரும் சதுசேயரும் கிறிஸ் துவை விரோதிப்பார்கள். ரோமத் துரைத்தனத்தாருக்கு வரிப்பணத் தைக் கொடுத்துவிடுவது ஞாயமென்று கிறிஸ்து சொன்னபோதிலும் தெய்வ ராட்சியமொன்றே நிலையான ராட்சிய மென்றும், தாம் அந்த ராட்சியத்தை ஸ்தாபிக்க வந்த யூதகுல வேந்தன் என்றும் அவர் போதித் திடின், கலகத்தை எழுப்பிவிடக்கூடிய ராஜதுரோகி யென்று துரைத் தனத்தார் அவரைத் துன்புறுத்தலாம். மேசியா யூதராட்சியத்தைக் கைப்பற்றித் தமது சீடரை ஆசாரியரும் நியாயாதிபதிகளுமாக்கி, இஸ்ரவேலருக்குச் சுயராட்சிய சிலாக்கியத்தைத் தருவதற்குப் பதிலாக, நீசச்சிலுவையில் தொங்கி மரித்துத் தஞ்சீடரைக் கொடிய உபத்திர வத்தில் விட்டுச் செல்லுவாரென்றும்; தாமே அந்த மேசியா என்றுங் கிறிஸ்து சொல்லுங்கால், அவரது அற்புத சிகிச்சையையும் இனிய வாக்கையும் கண்டுங் கேட்டும் அவரைப் பின்பற்றிய யாவரும் அவரைக் கைவிடுவார்கள். யூதஜாதியாரின் குற்றங்களை உணர்த்திப் பக்தியைப் புகட்ட முயன்ற தீர்க்கதரிசிகள் பலரை அவர்கள் கல்லால் அடித்தும் வாளால் அறுத்தும் கொன்றார்கள். அத்தீர்க்கதரிசிகளடைந்த கதியே தமக்குங் கிடைக்குமென்று கிறிஸ்து எண்ணினார். தமது அற்புத சக்தியால் தமக்கு வர இருக்கும் துன்பங்களை மேற்கொள்ளல் ஆகாதோ என்ற எண்ணமே கிறிஸ்துவிற்கு நேர்ந்த மற்றொரு சோதனை. கடவுள் உணவளிக்க உண்டு உணவளியாதபொழுது உண்ணாதிருப்பதே பூரணக் கீழ்ப்படிதலாகும். துன்பத்தையும், துக்கத் தையும், பிராண ஆபத்தையும் ஈசன் அனுப்பச் சித்தங்கொள்வரேல் அவற்றிலும் ஈசனது காருண்யம் விளங்குமென்று நம்பிப் பொறுத் திருப்பதன்றோ மெய் விசுவாசம்? அத்தகைய விசுவாச பக்தி தமக்குட் குடிகொண்டிருக்குமாறு, கிறிஸ்து தமக்கு நேருங்கஷ்டங்களைத் தமது

அற்புத வல்லமையால் தீர்த்துக்கொள்ளாது, அவற்றைச் சகித்து மேற்கொள்ளத் தீர்மானித்தார்.

தமக்கு நேர்ந்த இப்பெருஞ் சோதனைகளைக் கிறிஸ்து மேற்கொள்ளாது, அந்த லௌகீக எண்ணங்களுக்கு இடங்கொடுத்திருப்பின், மக்கபீயராகிய யூதா முதலானோர் நிலைநாட்டிய ராட்சியத்தைப் பார்க்கிலும் பெரியதோர் ராட்சியத்தை நிலைநாட்டியிருக்கலாம், யூதரைப் போருக்கு நடத்திச்சென்று, அவர்களுக்கு சுயராட்சியத்தைக் கொடுத்திருக்கலாம்; தாவீதின் சிம்மாசனத்தில் வீற்றிருந்து செங்கோன்மை ஒச்சியிருக்கலாம்; அயல்நாட்டார் முன் யூதஜாதியாரைக் கௌரவப் படுத்தியிருக்கலாம். இப்பெரும் நன்மைகளைத் தமக்குச் செய்யக் கூடியவர், செய்யாது மறுத்ததே யூதருடைய கோபத்தை எழுப்பிவிட்டுக் கிறிஸ்துவைக் கொலைக்களத்திற்குச் செலுத்தியது. என்றபோதிலும், கிறிஸ்து அப்பொழுது செய்த தீர்மானங்களே மேலான தீர்மானங்களென்று சரித்திரம் நிலையுறுத்துகின்றது. மகா அலக்சந்தர், தன் அளவற்ற வாஞ்சையைத் தீர்த்துக்கொள்ள, மக்கதோனியாவிலிருந்து இந்துநதி தீரம்வரை படையெடுத்துச் சென்று, அநேக நாடுகளை ஜெயித்து மகா சக்ரவர்த்தி என்ற புகழ்நாமம் பெற்றிருந்தான். காலன் அவனையும் வாரிக்கொள்ள வந்தபொழுது, தன் கடைவழிக்கு "காதற்ற ஊசியும் வராதென" உணர்ந்தனன். அந்த உண்மையை யாவரும் அறிந்து சிந்தைசெய்ய, மரித்தபின் தன் கரங்களை விரித்து அவைகள் வெறுமையாயிருப்பதை மனிதர் காணும்படி பாடையின் இருபுறங்களிலும் நீட்டிவைக்கக் கட்டளையிட்டானும். உலகம் முழுவதையுந் தனதாக்கிக்கொண்ட ஒருவன், தன் ஆன்ம வாழ்வைக் கருதாதொழிப்பின் தரித்திரனேயாவன். இது கிறிஸ்துவிற்குமுன் இருந்த ஓர் அரசனின் அனுபவம். அவருக்குப் பின் தோன்றிய மற்றொரு சக்ரவர்த்தியும் இத்தகைய அனுபவமே அடைந்தான். நெப்போலியன் பிரஞ்சுக்காரருக்குத் தலைவனாக எழும்பி, ருஷியரையும் ஜர்மானியரையும் மேற்கொண்டு ஆங்கிலரையுங் கலங்கச்செய்தான். அவன் சொல்லுக்குத் தடைசொல்லாத பல்லாயிரம் போர்வீரர் அவனைப் புடைசூழ்ந்து நின்றுபோற்றினர். தன் கட்டளையை நிறைவேற்றுவதில் தங்கள் பிராணனையுந் தாரைவார்க்கத் துணிந்த தன் சேவகர், தான் கண்மூடியபின் தன்னை மறந்துவிடுவார்கள் என்பதே நெப்போலியன் உணர்ந்த உண்மை. ஆனால், ஈனச்சிலுவையில் அறையுண்டு

மரித்த தச்சராகிய கிறிஸ்து கண்மூடிப் பல்லாண்டுகள் கழிந்துபோயி னும், அன்றைக்கும் அவர்மீதுகொண்ட பக்திவைராக்கியத்தால், தைரிய நெஞ்சரான வீரர்மட்டுமல்ல, சிறுவரும், வயோதிகரும், இள கிய மனத்துடையாராகிய பெண்களும் தம் பிராணனை அர்ப்பணஞ் செய்யத் துணிவுகொண்டு நின்றதைக்கண்டு நெப்போலியன் வியந் தான். அன்பென்னும் அதிசய சக்தியால் கிறிஸ்து தம் அடியாரகங் களில் ஸ்தாபித்த ராட்சியமே நிலையுள்ள ராட்சியமென்றும், ஓங்கிய பட்டயத்தால் தான் நாட்டிய ராட்சியம் நிலையற்றதென்றும் நெப்போ லியன் கண்டு தெளிவுற்றான். ஆதலாற் கிறிஸ்து தமக்கு தோன்றிய பொல்லாத எண்ணங்களுக்கு ஈடுபட்டிருப்பின், மகத்துவ அன்பின் ராட்சியத்தை நிலைநாட்டத் தவறியிருப்பார். சோதனையை மேற் கொண்டு ஈசனுக்கு அளவற்ற திருப்தியையும், மானிடருக்குச் சிறந்த மீட்சியையுங் கிறிஸ்து தந்தது அவரது பக்தி, நுண்ணறிவு, திடசித் தம் முதலிய அருங்குணங்களாகிய வித்தின் கனியாம்.

இவ்வாறு கிறிஸ்து தாஞ்செய்யவேண்டிய நற்காரியம் யாதென் றும் அதை எவ்வாறு செய்யவேண்டுமென்றுந் தெளிவுறக் கண்டு கொண்டபின், அவர் அவ்வாறே அதனைக் கடைப்பிடித்தொழுகினார். யாதுந்தெரியா தெமைமறைத்த வல்லிருளை நீக்கத்தகும் ஞானவிளக் காகிய சுவிசேஷமென்னும் நற்செய்தியைப் பிரகடனம்பண்ணுவதே அவர் திருநோக்கு. அதை நிறைவேற்றத் தலைப்பட்டபொழுது குரு நாதருக்குக் கலக்கங்களும் சந்தேகங்களும் தோன்றாதிருக்கவில்லை. செய்யநினைத்த கருமம் உத்தேசத்தில் ஒருவாறாகவும், படிப்படியாய்ப் பூர்த்தியாகி வரும்பொழுது சற்று மாறாகவுங் காணப்படுவது இயல்பு. எதிர்பாராத அனுகூலங்களும், பிரதிகூலங்களும் ஏற்படலாம். கிறிஸ்து தமது திவ்வியபணியைச் செய்துகொண்டிருக்கையில், எதிர் பாராத சங்கடங்கள் இடையிட்டன. அவ்வப்பொழுது கிறிஸ்து காடுகளுக்கும் மலைகளுக்குஞ் சென்று தனித்திருந்து தியானித்துப் புத் திக்குத் தெளிவுஞ் சித்தத்திற்குத் திடனும் பெற்றார். வெகு ஊக்கமா யும், விடாப்பிடியாயும் அவர் எடுத்த கருமத்தைத் தொடுத்து முடித் தார்.

முதற் சீடர்

ஆயத்தநாட்கள் முடிந்தன. கிறிஸ்து வனாந்தரத்திலிருந்து திரும்பி யோர்தான் நதிக்கரையை அடைந்தபொழுது, யோவான்ஸ்நானகர்

அவரைக் கண்டு, அவரே உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கவந்த தெய்வ ஆட்டுக்குட்டியென்று போற்றினர். பரிசேயரும் சதுசேயரும், நீர்தானே நாங்கள் எதிர்நோக்கியிருக்கும் மேசியா என்று ஸ்நானகரைக் கேட்டபொழுது "என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்; அவர் பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்லேன்" என்று யோவான் பதில் உரைத்தார். அவர் இப்பொழுது கிறிஸ்துவைக் கண்டு புகழுரை சாற்றவே, அவர் சீடரிலிருவர், அந்திரேயா யோவான் என்பவர், கிறிஸ்துவின் சீடராக விரும்பி அவர்பின் சென்றனர். அந்திரேயா தன் சகோதரன் பேதுருவைக் கிறிஸ்துவினிடம் அழைத்துக்கொண்டு வந்தான். இம்மூன்று சீடருடன் கிறிஸ்து கலிலேயாவுக்குத் திரும்பினார். கலிலேயாவை சேர்ந்தவுடன், பேதுருவின் ஊராகிய பிலிப்புவைக் கண்டு "என்னைப் பின்பற்றிவா" என்று கிறிஸ்து அழைக்க அவனுங் கிறிஸ்துவின் தொண்டனானான்.

அன்னையிடம் விடைபெறல்

இதுவரை கைமையாயிருந்த தம் தாயோடிருந்து அவளை ஆதரித்து வந்ததுபோல், இனி இவர் செய்வதற்கு இடமில்லாதுபோயிற்று. இந்தப் பாரத்தைத் தமயன்மார்பேரில் சுமத்திவிட்டார். அன்னைக்குத் தமது கருத்தைத் தெரிவித்து, அன்போடு விடைபெற்றுக் கொண்டனர். மரியம்மாள் இதைக்குறித்துச் சந்தோஷப்படுவதோ, துக்கப்படுவதோவெனத் தோன்றாது திகைத்தனள். யூதமதாபிமானிகளாகிய தீர்க்கதரிசிகள் அடைந்தகதியே தன் செல்வப்புதல்வனும் அடைவாரென எண்ணி, அன்னை உலைமெழுகுபோல உருகினாளோ, அல்லது தன் மகன் தெய்வ சுதனானதால் வெற்றிச் சிறப்புறுவாரென நினைத்துக் களிகொண்டாளோ; அறியோம். இணைபிரியாது சதையும் நகமும்போல் ஒருமித்திருந்த இவர்களுக்கு இப்பிரிவு துக்கத்தையே தந்தது. வேலையின் ஊக்கத்தால் கிறிஸ்து தமது துக்கத்தை மாய்த்துக்கொள்ளலாம். மரியம்மாள் எதை நினைத்து, தன் மகன் பிரிந்த துக்கத்தை மறக்கக்கூடும்? பிரிவாற்றாமையாற் கலங்கிய மனதிற்குச் சிமியோன் சொன்ன எச்சரிப்புத் தோன்றியது. என் நெஞ்சைப்பிளக்கும் கட்கத்தின்கூர் இதோ தைக்கிறது என்று மரியம்மாள் எண்ணி கன்றுபிரி காராவின் துயருற்றாள். என்றாலும் தன்னைத்

தேற்றிக்கொண்டு, "மகனே பன்னிருபருவத்திலேயே நீ என்னைவிட்டுப் பிரிந்து, உன் பிதாவின் காரியத்திற் கருத்துக்கொண்டு, தேவாலயத்திற்றங்கினை. எனைத்தடுத்தாண்ட கருணாநிதி உனக்கு விதித்த அருந்தொழிலை நீ செய்யப்போகும்பொழுது நான் தடைசொல்லல் ஆகுமோ? சந்தோஷமாய்ப் போய்வா, என் செல்வமே! உன் பரம பிதா உன்னோடிருக்கின்றார்" என்று கண்களில் நீர் ததும்ப, மரியன்னை மகனை முத்தமிட்டு வாழ்த்தியனுப்பினாள்.

ஊழியகாண்டம்

அத்தியாயம் 5.

கிறிஸ்து யூதேயா நாட்டிற் செய்த ஊழியம்

கி. பி. 27.

தெய்வத்திருச்சுதனுர் பூரண பரிபக்குவ மடைந்தார். தாம் செய்யக்கிடந்த தெய்வப் பணிவிடை யாதெனத் தெளிந்தார். அவருக்குத் துணை நின்று, அவர் போதனையை தம் மனதென்னும் ஏட்டில் வரைந்து உலகுக்கீயத்தக்க உத்தமச் சீடர் நால்வர் அவரைச் சேர்ந்தனர். இனி தமது அருந்திறனையும் பெருங் கருத்தையும் உலகத்திற்குத் தோற்றுவிக்க தம் திவ்விய பணிவிடையைத் துவங்குவதொன்றே குறையாயிருந்தது. பெத்தபாராவில் தம்மைச் சேர்ந்த சீடர் தத்தம் இல்லங்களுக்கேக விரும்பினர். யோவான் ஒருவன் மட்டும் குருநாதரோடு மரியம்மாள் வீட்டிலிருந்ததாகத் தோன்றுகின்றது.

காஞவூர் கல்யாணம்

அப்பொழுது காஞவூரில் குருநாதரின் இனத்தவளான ஓர் பெதும்பைக்கு விவாக முகூர்த்தம் கூடியது. குருநாதரும் மரியம்மாளும் முகூர்த்தத்திற்கு அழைக்கப்பட்டு வந்திருந்தனர். குருநாதர் கடந்த சில மாதங்களில் அடைந்த அதிசய அனுபவங்களும் அவற்றின் மர்மமும் அவர் சிந்தையிலிருந்து ஆழ்ந்த நினைவுகளை கிளப்பிக்கொண்டிருக்கையில், அவர் கலியாண வீட்டின் களிப்பிற் கலந்து களிகொண்டது அவரது ஆன்ம விராமத்தைக் காட்டுகின்றது. கல்யாண வைபவங்கள் முட்டின்று நிகழ்ந்தன. முகூர்த்தம் முடிந்தபின் அதிதிகள் யாவரும் பந்தியிருந்தனர். குருநாதரும் விருந்தினரோடு உட்கார்ந்து இனிதுரையாடிக்கொண்டு உணவருந்தினுர். அவர் அன்னையாகிய மரியம்மாள் பந்தி விசாரிப்பவருக்கு உதவி செய்து கொண்டு நின்றனர். அப்பொழுது திராட்சரசம் முடிந்துபோய்விட்டது. குருநாதர் நாசரேத்திற்கு வந்த செய்தியைக் கேட்ட கலிலேயர் அநேகர் அவரைக் காஞவூர் கல்யாணத்தில் சந்திக்கலாமென் றெண்ணியதால் அங்கு வந்தனர். விருந்தினர் அத்தனைபேர் வருவார்க

ளென்று மணவீட்டார் எதிர்பார்க்கவில்லை. ஆதலால் அவர்கள் சேக ரித்து வைத்திருந்த திராட்சரசம் போதாமற் போயிற்று. மங்கள காரி யத்தில் இத்தகைய குறை நேரிடின் அது மணமக்கள் ஜீவகாலமெல் லாம் ஏளனத்திற்கு இடமாகுமென்றுணர்ந்த மணவீட்டார் மிகவும் விசனமுற்றனர். அந்த நேரத்தில் எங்குபோய் திராட்சரசம் கொண்டு வருவது? திராட்சரசம் வாங்குதற்கு பணம் யாரிடம் கடன் கேட்பது? என்று அவர்கள் திகைத்தார்கள். மரியம்மாளுக்கு ஓர் எண்ணம் உதித்தது. மகனும் தாமும் செய்த சம்பாஷணைகளின் மூலமாக, மக னுக்கு ஈசன் அரிய அற்புத வல்லமை அளித்திருக்கிறாரென்று மரி யன்னை அறிந்திருந்தார்கள். ஆதலால் அவ்வம்மையார் மணவீட்டா ருக்கு நேர்ந்த கஷ்டத்தை மகனுக்கு அறிவித்தனர். மகன் ஆங்கோர் அற்புதஞ் செய்வரேல் பெரும் பிரக்யாதி பெறுவரென்றெண்ணி அன் னைமகனுக்கு ஆலோசனை சொன்னார்போலும். கிறிஸ்து அப்படிச் செய்யத் தாமதித்தவர்போல், என்வேளை இன்னும் வரவில்லை என்று சொல்லிப்போந்தார். என்றாலும் மரியம்மை நம்பிக்கை யிழந்துவிட் டாரில்லை. சுபகருமத்தில் நேர்ந்த குறைச்சலால் தம்பதிகளும் அவர் தமரும் தீராத வெட்கமடைய விருக்கையில், கிறிஸ்து பார்த்துக் கொண்டு வாளாவிருக்கமாட்டாரென்று மரியம்மாள் எண்ணி, வேலைக் காரரைப்பார்த்து, கிறிஸ்து தமக்கு யாதேனுமோர் ஏவலிடின் அதைச் செய்யவேண்டுமென்று கற்பித்தார். கொடிய பசியால் தாம் வருந்திய விடத்து தமது அற்புத பலத்தால் பசியைத் தீர்த்துக்கொள்ளுவது ஞாயமல்லவென்று சாதித்தவர், இப்பொழுது இக்குடும்பத்திற்கு வர விருந்த மானக்கேட்டைத் தவிர்க்க அற்புத பலத்தை உபயோகிக் கத் தீர்மானித்தார். வீட்டிலிருந்த கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பச் சொன்னார். வேலைக்காரர் ஆறு கற்சாடிகள் நிறைய ஜலம் ஊற்றி னார்கள். அப்பொழுது கிறிஸ்து ஜாடிகளிலிருப்பதை விருந்தின ருக்கு மொண்டு பரிமாருங்களென்றனர். பந்தி விசாரிப்போர் அதைப் பருகியபொழுது, அது முன்னருந்திய ரசத்தினும் அதிக மதுரமா யிருந்தமை கண்டு, மணமகனை நோக்கி நீர் ஏன் நல்ல ரசத்தை பிந்தி பரிமாரவைத்து வைத்தீர் என்று கேட்டு வியப்புற்றனர். நடந்த சம்ப வத்தை அவர்கள் அறிந்திலர். இதுவே கிறிஸ்து செய்த முதலாம் அற்புதம். சுபகாரியத்தில் நேரவிருந்த குறைச்சலை யொழித்து, ஓர் எளிய குடும்பத்தின் மானத்தைக் காப்பதற்காக, பெருமான் உடுக்கை

யிழந்தவன் கைபோல் உதவினரேயல்லாது, தம் பெருமையைக் காட்ட இதைச் செய்தனரல்லர். இதனல் அவரது பரோபகார சிந்தையும், அவர் இல்லற வாழ்க்கையைப் பற்றிக்கொண்டிருந்த மதிப்பும் தெற்றெனத் தோன்றுகின்றன. கானவூர் கல்யாணத்தில் விஜயஞ் செய்து அதைச் சிறப்பித்தவர் பக்தரில்லங்களில் அதரிசனராய் இருந்து அவற்றை ஆசீர்வதிக்கச் சித்தங்கொண்டுள்ளார் எனக் கிறிஸ்துவின் அடியார் எண்ணி தைரியமும் சந்தோஷமும் அடைகின்றார்கள்.

எருசலேம் தேவாலயத்தைச் சுத்திகரித்தல்

கலிலேயாவில் கிறிஸ்து வேறு அற்புதங்கள் இச்சமயம் செய்ததாகத் தோன்றவில்லை. பஸ்காப் பண்டிகை காலம் சமீபித்தபடியால், எம்பெருமான் கானவிலிருந்து கப்பர்நகூமென்ற பட்டணத்திற்குச் சென்று, அங்கிருந்து புறப்படும் யாத்திரிகர் கூட்டத்தோடு சேர்ந்து எருசலேமுக்குப் போக நினைத்தார். அவர் அன்னையும் சகோதரரும் கப்பர்நகூம் வரையில் அவருடன் சென்றார்கள். கப்பர்நகூமில் தமது சீடர் நால்வருடைய வீடுகளிருந்தன. அவற்றைச் சந்தித்து, தமது சீடருடன் இரண்டொரு தினங்களைக் கழித்துப் பின் எருசலே நகருக்குக் கிறிஸ்து சென்றனர். திருவிழாவிற்கு வந்த ஜனங்கள் தேவாலயத்தின் சகல பிராகாரங்களிலும் திருப்பதிகையின் தெருக்களிலும் வீதிகளிலும் நெருங்கியிருந்தனர். பவுஞ் பவுஞ்சாக ஜனங்கள் உட்பிராகாரத்திற்குள் புகுந்து பலிசெலுத்தி யேகோவாவைப் போற்றுதற்கண், பக்தர் திரள்கூட்டமாய் வெளிப் பிராகாரங்களில் காத்துநின்றனர். தவிர, உட்பிராகாரத்திற்குள் செல்லக்கூடாத புறஜாதியார் இங்கு நின்றே யேகோவாவைப் பணிந்துகொள்ளவேண்டும். தெய்வத்தைக் காண வந்து நிற்கும் ஜனங்களுக்கு இடைஞ்சலுண்டாக்குமாறு, இவ்வெளிப் பிராகாரத்தில் ஆடு மாடு புரு முதலிய பலிக்குதவும் பிராணிகளை விற்கும் கடைகளும், ரோம நாணயங்களை யூத நாணயங்களாக மாற்றும் காசுக்காரர் கடைகளும்* நிரம்பவிருந்தன. ஊதியங்கொள்ள விரும்பி ஆசாரியர் தேவாலயத்தின் ஒரு பெரும்பாகத்தை கடைகளாக மாற்றி பக்தருக்குப் பெருத்த இடைஞ்சலை யுண்டுபண்ணிவிட்டனர். ஆசாரியருடைய பண

---

*ரோம நாணயங்களில் ராயனுடைய சொரூப மிருப்பதால் அவற்றை காணிக்கையாகக் கொடுக்கப்படாதென்ற சட்டமிருந்தது.

ஆசையையும் அதனுல் ஜனங்களுக்கு உண்டான கஷ்டத்தையும் கண்டு குருநாதர் விசனமுற்ருர். சவுக்காக முறுக்கிய கயிற்றைக் கையில் பிடித்துக்கொண்டு "ஜெபவீடு என்றழைக்கப்படும் என் தந்தையின் திருக்கோவிலை வியாபாரஸ்தலமும், கள்ளர் குகையுமாக்கின மதியீனரே, ஓடிப்போங்கள்" என்று கண்டித்துரைத்தார். அவர் கண்களிலெரிந்த கோபத் தணலாலும், குற்றமுள்ள தங்கள் நெஞ்சத்தாலும் பயமுறுத்தப்பட்டு, வியாபாரிகள் ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு பறந்தோடினர்; காசுக்காரர் பலகைகள் கவிழ்ந்துபோயின. கண்ணிமைப்பொழுதில் கடைகள் மறைந்தன. தேவாலயம் அப்பொழுதுதான் தேவாலயம்போற் காணப்பட்டது. சீடரும் வேறு சில உத்தமரும் கிறிஸ்து தேவாலயத்தைக்குறித்து மெய்யான வைராக்கியம் கொண்டுள்ளாரென்று கண்டு வியந்தனர். "நீங்கள் எதிர் நோக்கியிருக்கும் கர்த்தன், விரும்பிப் போற்றும் தெய்வ தூதுவன், வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரிப்பவர்போல், சுத்திகரிப்பவராக திடீரென்று தேவாலயத்தில் தோன்றுவார்," என்று தீர்க்கதரிசிகளிலொருவர் யூதருக்குக் கூறியிருந்தார். அதன் பிரகாரம் கிறிஸ்து தேவாலயத்தில் தோன்றி, அதைச் சுத்திகரித்து தீர்க்கதரிசன வாக்கை நிறைவேற்றினுர்.

குருக்களின் கோபம்

யூத ஜனத்தின் தலைவர்களோவென்ருல், கிறிஸ்து செய்த சீர்திருத்தத்தை எண்ணி மகிழ்ச்சிகொள்ளாது, சினங்கொண்டனர். "இப்படிச்செய்ய அதிகாரம் எங்கிருந்து பெற்றீர்? நீர் தெய்வம் தேர்ந்தனுப்பிய தீர்க்கதரிசி யென்பதற்கு அடையாளம் என்ன?" என்று ஆசாரியர்கள் கிறிஸ்துவுடன் வாதாடினுர்கள். தேவாலயத்தைக் கள்ளர் குகையாக்கியது குற்றமென்றுணராத மதியீனர் அற்புத அடையாளத்தால் நற்புத்தியடையாரென்றறிந்து, கிறிஸ்து அவர்களுக்கு அடையாளம் காட்டாதொழித்தார். பண்டிகைக்கு வந்த ஜனங்களிலநேகர் கிறிஸ்து மெய்யான தீர்க்கதரிசியென்றெண்ணி அவர் உபதேசத்தை ஏற்றுக்கொண்டனர்; தேவாலயத்திலிருந்து இடைஞ்சல் பண்ணிக்கொண்டிருந்த வியாபாரிகளை காற்று சருகைப் பறக்கடிப்பதுபோல் துரத்தி, பரிசேயரை வாயடைத்த தைரியச் செயலை மெச்சிக்கொண்டனர். ஆதலால் ஆசாரியர் கிறிஸ்துநாதர் மீது கைவைக்கத் துணிந்தாரில்லை.

தைரியமற்ற நிக்கோதேம்

ஆசாரியக்குழுவினரும் சிலர் கிறிஸ்து செய்தது ஞாயமென்றே எண்ணினார்கள். அவர்களிலொருவன், எவரும் காணுதபடி இரவில் கிறிஸ்துநாதரைச் சந்தித்து "குருவே! நீர் தெய்வ அதிகாரம்பெற்றுத் தோன்றிய தேசிகர். நீர் செய்யும் அற்புதச் செயல்களைத் தெய்வ துணை பெற்றோர்தவிர மற்றொருவரும் செய்யார்" என்று இன்னுரை உரைத்து, தெய்வ ராட்சியத்தைக்குறித்துச் சம்பாஷித்தான். அவன் யூதமரபினர் யாவருக்கும் அதிகாரிகளாக விருந்த நால்வரிலொருவனும், நிக்கோதேமெனும் நாமம் புனைந்தோனுமாய பெரியோன். குருநாதர் அவனுடைய நயவசனிப்பால் மகிழ்ச்சியுற்று, "வேத நிபுணராய பரிசேயரில் நீவிர் ஒருவரே புத்திமான்" என்று ஏற்றிப் பேசவில்லை. நிக்கோதேமைப்போல் செல்வாக்குடைய ஒருவனது துணை தமக்குக் கிடைப்பது பெரிதெனப்பாராட்டி, எவ்வகையாலும் அவன் சிநேகத்தைச் சம்பாதிக்கவேண்டுமென்று ஆத்திரமுறவுமில்லை. தம்மைப்பற்றி அவன் கொண்டிருக்கும் நல்ல எண்ணத்தை அவன் பகிரங்கமாகத் தன் குழுவினராய ஆசாரியருக்கு அறிவிக்க அஞ்சிய கோழைத்தனத்தையும், அதனுல் அவன் ஆன்மாவுக்கு உண்டாகும் நஷ்டத்தையும் எம்பெருமான் எண்ணி விசனமுற்றார்.

மாற்றிப் பிறத்தல்

தவிர, தெய்வ ராட்சியம் லௌகீக மேரையான ராட்சியமென்பது அவன் கருத்தாயிருந்ததால், அது பொய்க்கருத்தென்றுணர்த்த கிறிஸ்து துரிதங்கொண்டு, "மாற்றிப் பிறக்க வகையறியாத எவனும் தெய்வ ராட்சியத்தைக் காணவுமாட்டான்" என்று கூறினர். நிக்கோதேமின் பெருமை பங்கப்பட்டது. அவன் வெறுப்புற்று "வளர்ந்து பெரியவனானபின், ஒருவன் திரும்பத் தன் தாயின் வயிற்றினுள் பிரவேசித்து சிசுவாகப் பிறக்கவும் கூடுமோ?" என்று பரிகாசம்பண்ணினுன். நானென்ற ஆணவமற்ற நெஞ்சத்தினராய எம்பெருமான் நிக்கோதேமின் பரிகாச வார்த்தையைப் பொருள்பண்ணுது, மாற்றிப் பிறத்தல் ஆன்மாவையடுத்த தெய்வ சங்கல்பமென்றும், அது ஆன்ம வாழ்விற்கு அத்தியந்த அவசியமான முதற்படியென்

றும் ஊக்கத்துடன் அவனுக்கு உபதேசித்தார். பின்னும் நிக்கோதேம் "அது சம்பவிப்பது எங்ஙனம்?" என்றனன். "யூதமதப் போதகுசிரியரிலொருவராகிய நீர் இந்த ஆத்ம மர்மத்தை அறிந்துகொள்ளக்கூடாதிருத்தல் ஆச்சரியமே! தெய்வ ஆன்மாவின் அனுக்கிரகமில்லாது ஒருவன் பக்தனுவது கூடாதென்ற மூல சத்தியத்தை நீர் கிரகித்துக்கொள்ளக்கூடாதிருக்க, தெய்வ ராட்சியத்தின் ஆழ்ந்த இரகசியங்களை நான் போதித்தால், அறிந்துகொள்வீரோ? நீர் கற்றறிந்துகொள்ளவேண்டியவை பலவுள" என்று கிறிஸ்து வெகு துக்கத்தோடுரைத்தனர். இந்தச் சம்பாஷணை எப்படி முடிந்ததென்று சொல்லப்படவில்லை. நிக்கோதேம் அன்றிரவு தன் வீட்டிற்குத் திரும்பிப் போனபொழுது கிறிஸ்துவைக்குறித்து என்னவென்ன எண்ணிஞனே? அறியோம். வேறு இரண்டு சமயங்களில் அவன் கிறிஸ்துவின் சரித்திரத்தில் சம்பந்தப்பட்டு வருகிறுன். அவ்விரு முறையும் அவன் குருநாதரிடம் பட்சமே கொண்டிருந்ததாகத் தோன்றுகின்றது. யூத அதிகாரிகள் குருநாதரை அடித்துத் துன்புறுத்த நினைத்தபொழுது, விசாரணையில்லாமல் ஒருவனைத் தண்டிப்பது சட்டவிரோதமென்று நிக்கோதேம் அவையிலெழுந்து கூறிஞன். கிறிஸ்து மரித்தபின், அவர் திருவுடலுக்குப் போடக் கந்தவர்க்கத்தை இரகசியமாகக் கொண்டுவந்து கொடுத்தவனும் அவனேயாவன்.

யூதேயாவில் உபதேசித்தல்

அதன்பின் கிறிஸ்துநாதர் தமது சீடருடன் யூதேயாவின் மலைப்பிரதேசங்களில் சுற்றித்திரிந்து ஜனங்களுக்கு தெய்வ ராட்சிய மகத்துவ விசேஷத்தைக் கூறிக்கொண்டும், தம்மிடம் வந்த நோயாளிகளுக்கு ஆரோக்கியமளித் துதவிக்கொண்டும் வந்தனர். மாரிகாலத் துவக்கத்தில் யோவான்ஸ்நானகரை எரோது பிடித்து மக்கீரஸ் என்ற கோட்டையின் ஓர் இருண்ட அறையில் அடைத்துவைத்தான். இச்சம்பவம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது குருநாதர் யூதேயாவைவிட்டு கலிலேயாவுக்குப் போகப் புறப்பட்டார்.

சமாரிய மங்கைக்கு ஜீவ தண்ணீரளித்தல்

இவ்விரண்டு மாகாணங்களுக்கும் இடைபடா நின்ற சமேரியா நாட்டைக் கடந்து செல்லுகையில், சிக்கார் என்ற கிராமத்தை அண்

மினர். அப்பொழுது கிறிஸ்துநாதருக்குக் கடும்பசி யுண்டாயிற்று. சீடரை உணவு தேடிவர கிராமத்திற்கு அனுப்பிவிட்டு, பாதையோரத்திலிருந்த ஓர் கிணற்றங்கரையில், மரநிழலில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார். அப்பொழுது கிராமத்திலிருந்து ஓர் நங்கை தண்ணீர் மொள்ளக் கிணற்றிற்கு வந்தாள். உச்சிப்பொழுதின் உஷ்ணத்தில், அவள் தன்னந்தனியே தண்ணீர் மொள்ள வந்ததைக் கண்டு கிறிஸ்து வியப்புற்ருர். அவளுக்கு ஞானுபதேசம் புகட்டுவது அவசியமென்றுணர்ந்து, "தாகத்திற்குத் தண்ணீர் தா" என்று கேட்டு அவளுடன் உரையாடத் தொடங்கினுர். கிறிஸ்து யூதனென்று உத்தேசித்துக்கொண்ட அந்தச் சமாரியப் பெண் "யூதராகிய நீர், சமாரிய மாதாகிய என்னிடம் தண்ணீர் வாங்கிக் குடிப்பது உங்கள் ஜாதி ஆசாரத்திற்கு அடாததன்ருே?" என்றனள். "தெய்வபரன் மாந்தருக்களிக்கக் காத்திருக்கும் உயர்ந்த வரம் யாதென்றும்; உன்னிடம் தண்ணீர் கேட்கும் நான் யாரென்றும் அறிவையேல், நீ என்னிடம் கேட்டிருப்பாய்; நான் உனக்கு ஜீவதண்ணீரைக் கொடுத்திருப்பேன்" என்று கிறிஸ்துநாதர் விடை பகர்ந்தார். ஜாதி ஆசாரத்திற்கு மாருகத் தன்னிடம் தண்ணீர் கேட்டதை நினைத்து இவள் உற்ற வியப்பினும் பதின்மடங்கு வியப்புற்று, "ஐயா, உம்மிடம் கயிறும் வாளியுமில்லை; கிணறும் ஆழமாயிருக்கிறது. அப்படியிருக்க நீர் எனக்கு எங்கிருந்து தண்ணீர் கொணர்ந்து கொடுப்பீர். இந்தக் கிணற்றைத் தோண்டிக் கொடுத்தவர் நம்மூதாதையாகிய யாக்கோபு. நீர் அவரினும்பெரியரோ?" என்று கேட்டனள். எம்பிரான் உருவகப்படுத்திப் பேசிய ஜீவ தண்ணீர், ஆன்ம தாகங்களைத் தீர்த்து உள்ளத்தில் என்றும் ஓயாது சுரக்கும் பேரின்பமென்று அவள் விளங்கிக்கொண்டாளில்லை. ஒருவன் பின் ஒருவனுக ஐவர் அவளை மனைவியாகக் கொண்டிருந்தும் ஐந்தாவது கணவன் இறந்த பின்னர் அவள் பதிவிரதையான விதவையாயிருக்க மனமற்று, ஒருவனைத் தன் சோரநாயகனுகக் கொண்டிருந்தாள். அதனுல் உண்டான வெட்கத்துக்கஞ்சியே அவள் நடுப்பொழுதில் தன்னந்தனியே கிணற்றிற்கு வந்தாள். சிற்றின்பத் தாக மிகுத்த இன்னவள் ஆன்மாவிற்குத் திருப்தி தரக்கூடிய ஜீவதண்ணீரே; யாக்கோபின் கிணற்றுத் தண்ணீரைக் காட்டிலும், இவளுக்கு அதிக அவசியமாயிருந்ததைக் கிறிஸ்து உணர்த்தக் கருதினுர். "நான் மறுபடியும் இக்கிணற்றிற்கு வராதிருக்கும்வண்ணம், ஒருதரம் பருகி

ஞல் பின் தாகமுண்டாகாதிருக்கச் செய்யும் ஜீவதண்ணீரை எனக்குத் தந்துதவும்" என்று அவ்வணங்கு கேட்டபொழுது, குருநாதர் அவளைப் பார்த்து "உன் கணவனை இங்கு அழைத்து வா" என்றனர். "எனக்கு கணவனில்லை" என்று அவள் சொல்ல, "நீ இயம்புவது மெய்யே" எனக் குருநாதர் கூறினர். அவள் ஆடவர் ஐவரை மணந்திருந்ததையும் அப்பொழுது அவளிருந்த நிலையையும் குருநாதர் வெகு அநுதாபத்தோடு எடுத்துக்காட்டி அவளுக்குப் புத்தி புகட்டினர். யூதருக்கொரு கோவிலென்றும், சமாரியருக்கொரு கோவிலென்றும் வகுத்த ஜாதிப் பிரிவினையைச்சார்ந்த பாரம்பரியத்தை ஒழிக்கவும், சர்வ வியாபியாங் கடவுளை இந்த மலையில், அந்த மலையில், கண்டு பூஜிக்க வேண்டுமென்னும் அவித்தையை அகற்றி, தெளிந்த புத்தியோடும் மெய் பக்தியோடும் யாவரும் எங்கிருந்தும் பூஜிக்கக் கற்பிக்கவும் ஒரு நவமதம் தோன்றப்போகின்றதெனக் கிறிஸ்து புகன்றனர். "ஆம், ஆம்! அந்த நவமதத்தைப் போதிக்கவே மேசியா வருவாரென யான் கேள்வியுற்றிருக்கின்றனன்" என அம்மடந்தை இயம்பியபொழுது, "உன்னோடு பேசிக்கொண்டிருக்கும் நானே அந்த மேசியா" வென்றறைந்து கிறிஸ்து தமது நிசரூபத்தை அவளுக்குக் காட்டினர். உடனே அவள் ஊருக்குத் திரும்பிச் சென்று, ஜனங்களைப் பார்த்து, "என் காரியங்களையெல்லாம், கிணற்றருகிலிருக்கும் ஒருவர் எப்படியோ அறிந்து சொல்லிவிட்டார். அவர் மேசியாதானோ? வந்து பாருங்கள்" என்று சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டு வந்தாள். இதற்கிடையில் உணவுத் தேடச்சென்ற சீடர் திரும்பிவந்து, பசியை மறந்து, சந்தேகப் பேர்வழிபோற் றோன்றிய சமாரியா மாதுடன் கிறிஸ்துநாதர் உரையாடுவதைக் கண்டு பிரமித்தனர். உணவருந்தக் கோரிய சீடரைப் பார்த்து, "அரிய வின்னடிசில் எனக்குக் கிடைத்தது. நான் பசியாறியிருக்கிறேன்" என்று கிறிஸ்து சொன்னர். இவருக்கு ஆகாரம் எவர்தான் கொடுத்தாரோவென்று சீடர் ஒருவரையொருவர் வினவினர்கள். "என்னை அனுப்பிய பரமபிதாவின் சித்தத்தையும், அவர் தந்த அலுவலையும் நிறைவேற்றுவதே என் உணவு" என்று கிறிஸ்து சொன்னர். இப்பொழுது சிக்காரென்ற கிராமத்திலிருந்து சமாரியப்பாவை அழைத்துவந்த மாந்தர் கிணற்றை யடைந்தனர். கிறிஸ்து அவர்களுக்கும் தெய்வ ராட்சியத்தின் சிறப்பைச் சாற்றினர். அவர்கள் அவ்வரிவையைப் பார்த்து, "இவரே கிறிஸ்துவாகிய

உலகரட்சகரென்று நாங்கள் இப்பொழுது அறிந்தோம். உன் இரகசியங்களை இவர் கண்டறிவித்தாரென்று நீ சொன்னதாலல்ல; நாங்களே அவரது தேஜோமயத்தைக் கண்டோம்; அவரது சிதமார்ந்த மொழிகளைக் கேட்டோம்" என்றனர்.

அத்தியாயம் 6.

கிறிஸ்து கலிலேயா நாட்டிற் செய்த ஊழியம்

கி.பி. 28–29.

சீடர் பிரிதல்

சமாரியர் கிறிஸ்துநாதரை இரட்சகரென்றறிந்து எற்றுக்கொள்ளச் சித்தமாயினரெனினும், அவர் அந்நாட்டில் தங்காது, கலிலேய நாட்டையே நோக்கிச் சென்றனர். அந்நாட்டின் எல்லையையடைந்தவுடன், சீடரைத் தங்கள் சொந்த ஊராகிய கப்பர்நகூமிற்கு அனுப்பிவிட்டு குருநாதர் மேற்குத் திசையே சென்ருர். இது மீன் பிடிக்கும் காலமானதால், சீடர்கள் தங்கள் சொந்த ஊருக்குத் துரிதமாகச் சென்றனர். இயேசுநாதரோடு அவர்கள் கழித்த எட்டு மாதங்களில், அவர்செய்த அற்புதங்களும், போதித்த போதனைகளும், விசேஷமாக அவர் காட்டிய அன்பும் அவர்கள் ஞாபகத்திலிருந்தன. இவற்றையெல்லாம் தங்கள் இனஜன பந்துக்களுக்கும் மித்திரருக்கும் சொல்ல ஆத்திரப்பட்டார்கள். உயிருக்குயிரான தம் நண்பரையும் நாதரையும் விட்டுப்பிரிவது அவர்களுக்கு விசனத்தைத் தந்தபோதிலும், அவர் சீக்கிரம் கப்பர்நகூமிற்கு வருவேனென்றும், எற்றகாலத்தில் அவர்கள் தம்மோடிருந்து உதவி ஊழியம்புரிய அவர்களைத் திரும்பவும் அழைத்துக்கொள்ளுவேனென்றும் வாக்களித்ததால், அவர்கள் அவரை அப்பொழுது விட்டுப்பிரிய மனமொத்தார்கள். இச்சீடர்கள் தம்மைவிட்டுச் சிலகாலம் பிரிந்திருந்து, தம்மைப் பின்பற்றுவதால் விளையும் லாப நஷ்டங்களை சாவதானமாய்ச் சீர்தூக்கிப் பார்த்தபின்னர் பூரண தொண்டராகத் தீர்மானிப்பது அவசியமென்று இயேசுநாதர் நினைத்து அவர்களை அனுப்பிவிட்டாரென உத்தேசிக்கலாம். அதன்பின் கிறிஸ்துநாதர் எங்கு சென்ருரென்றும் என்னசெய்தாரென்றும் சொல்லப்படவில்லை. அவர் நாசரேத்திற்குப் போயிருக்கலாம். தன் அன்னையுடன் பலதரம் ஆழ்ந்த சம்பாஷணை செய்திருக்கலாம்; பாலிய பருவத்தின் தோழர் பலரைச் சந்தித்து வினவியிருக்கலாம்; முன்போல் கிராமத்தருகிலிருந்த மலைகளுக்குச் சென்று தியானித்து ஜெபித்திருக்கலாம். எழிய தச்சனுகை இந்த ஊரைவிட்டுச் சென்றவர் இப்பொழுது

பெருங்கீர்த்தி பெற்றவரர்கவும், பலரால் மேசியாவென்று எண்ணப் பட்டவராகவும் திரும்பி வந்தபொழுது, அந்த ஊரார் அவரைக்கண்டு என்ன நினைத்தார்களென்றும் அவருக்கு என்னென்ன சிறப்பு செய்தார்களென்றும் சொல்லப்படவில்லை. அவருடைய சகோதரர் சகோதரிமாரும், தாயாரும் அவரைக்கண்டு என்னவிதமாகத் தங்கள் அன்பையும் பெருமையையும் காட்டினர்களென்றும் அறியோம். ஒரு நாள் அவர் கானவூருக்குச் சென்ருர். சில மாதங்களுக்குமுன், தங்கள் கல்யாணத்தில் நேரிடவிருந்த அவமானத்தை நீக்கிய புண்ணிய புருஷன் தங்கள் ஊரிலிருப்பதைக் கேட்டவுடன், அந்த மாப்பிள்ளையும் பெண்ணும் விரைந்துசென்று தங்கள் நன்றியை அறிவித்துக் கொண்டிருக்கலாம். "களங்கமற்ற உத்தம இஸ்ரவேலனே வாரும், வாரும், நீர் அத்திமரத்தடியிலிருந்து ஈசனைச் சிந்தைசெய்து அவனையே சேவிக்கத் தீர்மானம்பண்ணியது எனக்குத் தெரியும்" என்று சொல்லி, கிறிஸ்துநாதர் நாத்தான்வேலை அழைத்துத் தமது சீடனுக்கிக் கொண்டார். நாத்தான்வேல் கானவூரான். அவன் கிறிஸ்துநாதரைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, தெய்வம் தனக்கு ஞானதரிசனமளித்த இடத்தைக் காட்டியிருக்கலாம்.

பிரபுவின் மகனைக் காத்தல்

இவ்வாறு அமரிக்கையாகக் காலங்கழித்து வருகையில், கப்பர்நகூமிலிருந்து ஒரு பிரபு அவசரமாகக் கிறிஸ்துவிடம் வந்து, "ஐயா, என் மகன் கொடிய வியாதிப்பட்டு மரணத்தறுவாயிலிருக்கிருன். அவனைக் கூற்றுவன் கொள்ளுமுன் நீர் வந்து காப்பாற்றக்கடவீர்" என்று அபயமிட்டனன். இவன் ஏரோதரசனின் பிரதானிகளிலொருவன், சதுசேய வகுப்பினன். குருநாதர் இன்னும் கப்பர்நகூமிற்குப் போக ஆயத்தமாயிராததால், அந்த பிரபுவோடு போகாமல், "இப்பொழுதே உன் மகன் சுகமாகிவிட்டான்; நீ போகலாம்" என்று நல்வாக்களித்தார். சீமோன் குருநாதர் கூறிய சுபமொழியைப் பூரணமாய் நம்பி உடனே தன் ஊருக்குத் திரும்பினுன். அவன் போகும்வழியில், பிள்ளை பிணி தீர்ந்து பூரண சுகமடைந்தானென்ற நற்செய்தி கொண்டுவந்த வேலைக்காரர் அவனைச் சந்தித்தார்கள். அவர்களை விசாரித்தபொழுது, இயேசுநாதர் நல்வாக்குரைத்த அந்நேரமே தன் பிள்ளை பிணி நீங்கி சுகமடைந்தானென அறிந்து, ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தான்.

இதன்பின் குருநாதர் கப்பர்நகூமிற்குச் சென்றார். தன் மகனைக் காலன் கையினின்று பிடுங்கி கொடுத்து தன் துயரைத் தவிர்த்த புண்ணியனார் ஊரிலிருப்பதைக் கேள்வியுற்ற பிரபுவின் தலைவி அவரைத் தேடிக்கண்டு அவரைத் தன் வீட்டிற்கு வரவேண்டி யழைத்துச் சென்று அவரைக் கனிவாய் உபசரித்தாள். தாயும் சுதனும் அவர் திருவடிகளைத் தொட்டு நமஸ்கரித்துப் போற்றினார்கள். ஏரோதரசனின் உக்கிராணக்காரனான பிரபுவின் மனைவியான யோவன்னாள் என்பவள் குருநாதருக்கு பண உதவிசெய்து பரிபாலித்ததாகவும், அவர் மரித்த மூன்றாந்தினத்தில் கல்லறையினருகி லுட்கார்ந்து கிறிஸ்துவை நினைத்து அழுதுகொண்டிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த யோவன்னாள் கிறிஸ்துநாதர் சுகப்படுத்திய சிறுவனின் தாயாயிருப்பின், அவள் குருநாதரிடம் காட்டிய பட்சத்திற்குக் காரணமென்னவென்று நாம் உடனே அறிந்துகொள்வோம். கப்பர்நகூமில் இயேசுநாதரை நல்வரவு சொல்லி ஏற்றுக்கொண்டு அவருக்கு தொண்டராயினவர்களுள் இந்த பிரபுவின் வீட்டாரே முந்தினவர்கள். தமது சீடர் நால்வரின் சொந்த ஊரும் கப்பர்நகூமே. இதையே தமக்கு மூலஸ்தானமாக்கிக்கொண்டு இங்கும் இதைச் சுற்றியிருந்த பட்டணங்களிலுமே குருநாதர் திருத்தொண்டு புரிந்தார். ஆதலால், கப்பர்நகூமைப்பற்றியும், கலிலேயா நாட்டைப்பற்றியும் நாம் சில விசேஷங்களைத் தெரிந்துகொள்ளுவது அவசியம்.

கலிலேயா நாடு

கலிலேயா நாடு நீர்வளம் நிலவளம் பொருந்தியதும், பார்ப்போர் மனத்தைக் கவரத்தக்க வனப்புடையதாயும் இருந்தது. ரோம இராட்சியத்தை ஊடுருவிச்சென்ற பெரிய ராஜபாதைகள் கலிலேயாவின் சமநிலங்களின் வழியாய்ச் சென்றன. வடமேற்கிலிருந்து நானா தேச வர்த்தகரும் பிரயாணிகளும் இந்தப் பாதைகளில் சென்றுகொண்டிருப்பார்கள். கலிலேயா நாட்டிலிருந்த சத்திரங்களிலும் சாவடிகளிலும் புறநாட்டார் பலர் தங்கியிருப்பார்கள். யூதேயா நாட்டைப் பார்க்குங்கால், அதன் மலைகளில் கற்கள்மட்டுமே முளைத்துச் செழிக்குமென்ற எண்ணமே தோன்றும். ஆனால் கலிலேயா நாட்டின் மலைகளோ, திராட்சத் தோட்டங்களாலும், ஒலிவத் தோப்புகளாலும் மூடப்பட்டிருந்தன. இந்நாட்டின் சமவெளிகளில் கோதுமையும்

வாற்கோதுமையும் விளைந்தன. ஆட்டு மந்தைகளுக்கும் மாட்டு மந்தைகளுக்கும் இங்கு போதிய மேய்ச்சலிருந்தது. வர்த்தகத்திலும் இந்நாடு சிறந்திருந்தது. நாடோ செழித்த நாடு. ஜனங்களும் வறுமையின்றி சுகமே காலங்கழித்தனர்.

கலிலேயர்

கலிலேயர் தைரிய நெஞ்சரான தேசாபிமானிகள். அவர்கள் பணத்தையல்ல, மானத்தையே பெரிதாகப் பாராட்டிவந்தார்கள். யூதேயாவின் குடிகளைப்போல் அந்நிய அரசாட்சிக்குப் பயந்து அடங்கிப்போகாமல், அடிக்கடி எதிர்த்தெழும்பிக் கலகங்கள் செய்திருந்தார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்தாறு வருஷங்களுக்குமுன் கலிலேயனாகிய யூதாஸ் கலகமெழுப்பினானென்று மேலே கூறப்பட்டது. செலத்துக்களென்ற தேசபக்தக் கூட்டத்தாரின் உறைவிடமும் கலிலேயாவே.

இதுநிற்க, கலிலேயரான யூதர் புறதேசத்தாருடன் நெருங்கிப் பழகிவந்ததால் தங்கள் பிடிவாதமும் குருட்டுத்தனமுமான மதவைராக்கியத்தை விட்டொழித்து, நூதனக்கல்வி நாகரிகத்தையும், நூதன உபதேசங்களையும் அநுதாபத்துடன் சீர்தூக்கி விசாரிக்கும் இயல்புடையோராயிருந்தனர். அவர்கள் யூத ஆசாரியரின் கெடிஸ்தலமாகிய எருசலேமிற்கு வெகு தூரத்திலிருந்ததால், சடங்காசாரமும் புறம்பான ஒழுக்கங்களுமல்ல, உள்ளான தெய்வபக்தியே விசேஷமெனக் கருதினார்கள். அவர்கள் தம் புத்தியையும், மனச்சாட்சியையும் ஆசாரியருக்கு அடிமைப்படுத்தினார்களன்று.

யூதேயாவிலோ, கலிலேயாவிலோ தமது நூதன உபதேசத்தைப் போதிப்பது உசிதமென்று இயேசுநாதர் சிந்தனைசெய்தார். யூதேயாவில் கடந்த எட்டு மாதம் அவர் சுற்றித்திரிந்தார். ஜனங்கள் அவரை விரும்பி ஏற்றுக்கொண்டார்களெனினும், அவர்கள் குருக்களின் அதிகாரத்துக்குள் சிக்கியிருந்ததைக் கண்டார். குருக்களோ தம்மை முழுப் பகையாய் பகைத்ததையும் கண்டார். ஆனால் கலிலேயர் சித்த சுயாதீனராயும் துரபிமானமற்றவர்களாயும், நூதன உபதேசங்களை அநுதாபத்துடன் சீர்தூக்கக்கூடியவர்களாயு மிருந்தனர். அதுநிற்க, கலிலேயாவில் நடக்கும் சம்பவங்கள் அங்கு வந்து செல்லும் புறநாட்டு வர்த்தகர் மூலமாய் நான்கு திக்கும் எளிதில் பிரசித்தியாகக்கூடும்.

கலிலேயா நாட்டின் மலைகளும் அருவிகளும் இயேசுநாதரின் ஜீவியத்தோடு கடந்த முப்பது வருஷங்களாய்ச் சம்பந்தப்பட்டு நின்றன. கிறிஸ்துநாதர் தாம் வளர்ந்த நாடாகிய கலிலேயாவை நேசித்தார். இது காரணங்கள்பற்றி, அவர் யூதேயாவிலல்ல, கலிலேயாவிலே தமது திருப்பணியை நிறைவேற்றி தெய்வ ராட்சியத்தை நிலைநிறுத்தத் தீர்மானித்தார். அதில் தமது ஆதிச்சீடருடைய சொந்த ஊராகிய கப்பர்நகூமையே தமது சொந்த ஊராகப் பாவித்து, தமது மூலஸ்தலமாக்கிக்கொண்டார்.

கலிலேயாக் கடல்

பலஸ்தீனு தேசத்தை இரண்டாகப் பிளந்துவிடும் ஆழ்ந்த யோர்தான் நதித்தீரமாகிய பள்ளத்தாக்கின் வடகோடியில், சமுத்திர மட்டத்திற்குக்கீழ் 650 அடி ஆழத்தில் கலிலேயாக் கடலென்ற பரந்த தடாகமிருக்கின்றது. அதன் நீளம் சுமார் பன்னிரண்டு மைல்; அகலம் ஆறு மைல். இதன் மீன்கள் அருஞ்சுவைபொருந்தியனவாயிருந்ததால் சீரியா, எருசலேம், ரோமாபுரி முதலிய விடங்களுக்கு ஏற்றுமதியாக்கப்பட்டுவந்ததாலும், ஏரியைச் சூழ மலைகள் அடுக்கடுக்காய் எழும்பி கண்ணுக்குக் குளிர்ச்சியையும் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் தந்ததாலும், ஆங்கு பல சிறு பட்டணங்களும் கிராமங்களும் எழும்பியிருந்தன. அவைகளில் கோராசின், பெத்சாயிதா, திபேரியா, மகதலா, கெர்கீசா, கப்பர்நகூம் என்னும் பட்டணங்கள் முக்கியமானவை. கப்பர்நகூம் ஏரியின் வடகிழக்கு மூலையில் ஏரி மிகவும் அகன்றிருக்குமிடத்திலிருந்த குன்றுகளின்மேல் கட்டப்பட்டிருந்தது. அடுக்கடுக்காக வீடுகளும் மாளிகைகளும் குன்றின் சரிவில் கட்டப்பட்டிருந்தன. பணக்காரர் காற்றோட்டமுள்ள மேற்பாகங்களில் தங்கள் மச்சுவீடுகளைக் கட்டியிருந்தனர். எல்லாவற்றிற்கும் மேல் ரோமப்பட்டாளமும் கோட்டையுமிருந்தன. இதற்குக் கொஞ்சதூரத்தில் சீமான்கள் சுகத்திற்காக வந்து தங்கும் எம்மாவு என்ற பட்டணமும் இருந்தது. அதற்கருகில் ஏரோதுராயன் வசித்துவந்ததும் கலிலேயா நாட்டிற்குத் தலைநகருமாகிய திபேரியா என்ற பட்டணம் இருந்தது. ரோமர், கிரேக்கர் முதலான பற்பல ஜாதியார் ஆங்கு வசித்துவந்தனர். தமஸ்கூவிலிருந்து மத்தியதரைக் கடலிலிருக்கும் துறைமுகப்பட்டணங்களுக்குப்போகும் பெரிய ராஜபாதை ஏரியின் வடகரையோரமாகச் சென்

றது. அந்தப் பாதை கப்பர்நகூமிற்குள் செல்லுமிடத்தில் அதன் வழியாய்ப் போகும் அயல்நாட்டு வர்த்தகரிடம் வரிப்பணம் வசூலிப்பதற்காக ரோம அரசாங்கத்தார் சுங்கச் சாவடியொன்று கட்டியிருந்தார்கள். இங்கு பணமும் நாகரிகமும் வியாபாரமும் பெருத்திருந்ததால், நாகரிகத்தின் நலங்கள்மட்டுமல்ல, தீமைகளும் காணப்பட்டன. ஏரிக்கரையில், கப்பல்கள் வந்து சேரும் துறையருகில் பேதுருவின் வீடு இருந்தது. அந்த வீட்டின் ஓர் அறை கிறிஸ்துநாதர் தங்குமிடமாயிருந்தது.

செம்படவர் மச்சத்தைப் பிடிப்பதை விட்டு மனிதரைப் பிடிக்க துவங்கினர்

இயேசுகிறிஸ்து கப்பர்நகூமிற்கு வந்தபொழுது, தமது தோழரும் சீடருமாகிய பேதுரு முதலானோரைத் தேடி கடற்கரைக்குச் சென்றார். ஏற்கனவே ஜனங்கள் இவரைக் காண விரும்பித் திரள் திரளாய் அவர்பின் சென்றார்கள். பேதுருவும் அவன் சகோதரனும் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் குருநாதரைக் கண்டவுடன் எழுந்து எதிர்கொண்டு அவரை வாழ்த்தினார்கள். கிறிஸ்து பேதுருவின் படவில் ஏறி, ஜனங்கள் தம்மை நெருக்காதபடி கடலுக்குள் சில அடித்தூரம் படவைத் தள்ளச் சொன்னார். அங்கிருந்து வெகுநேரம் ஜனங்களுக்கு உபதேசித்தார். அதன்பின் தமது தோழரிடம் அளவளாவிப் பேசிக்கொண்டிருக்கையில், அவர்கள் சென்ற இரவெல்லாம் வலை வீசிப்பார்த்தும் மீன் அகப்படவில்லையென்று சொன்னார்கள். கடலின் ஆழமான இடத்திற்குப் படவைச் செலுத்தி மறுபடியும் வலை வீசுங்களென்று கிறிஸ்து கற்பித்தார். அவர்கள் அச்சொல்லுக்கிணங்கி வலை வீசினபொழுது, அவர்கள் எதிர்பாராதபிரகாரம் வலை கிழிந்துபோகத்தக்கதாக அநேக மீன்கள் அகப்பட்டன. பக்கத்துப் படவுக்காரர் துணைசெய்ய அவர்கள் மீன் நிறைந்த வலையைப் படவில் ஏற்றிக்கொண்டு கரையை யடுத்தவுடன், பேதுரு ஜலத்தில் குதித்து நின்று, "ஆண்டவரே! நீர் என்னைவிட்டுப் போய்விடும், நான் பாவியான மனிதன்" என உள்ளங்குழைந்துரைத்தனன். "அப்படியல்ல, பயப்படாதே! இதுமுதற்கொண்டு நீ மனிதரைப் பிடிக்கிறவனாவாய்" என்று குருநாதர் தைரியஞ் சொன்னார். மீன்களை கூடைகளிலடுக்கி வியாபாரிகளிடம் ஒப்பு

வித்தவுடன் வேலே முடிந்தது. அப்பொழுது இயேசுநாதர் பேதுரு வையும், அவன் சகோதரன் அந்திரேயாவையும், மற்ருெரு படவில் வேலே செய்துகொண்டிருந்த யாக்கோபையும் அவன் சகோதரன் யோவானேயும், தங்கள் தொழிலே விட்டுவிட்டுத் தம்மோடு சுற்றித் திரிந்து தெய்வ ராட்சியத்தை நிலேநிறுத்தும் அரிய திருப்பணியைச் செய்ய அழைத்தார். அவர்கள் தங்கள் படவுகளேயும் வலேகளேயும் விட்டுவிட்டு, மனிதரைத் தெய்வ ராட்சியத்தின் நற்குடிகளாக்கும் அருந்தொழிலேச் செய்ய குருநாதருடன் புறப்பட்டார்கள். கலிலேயா நாட்டின் எல்கையில் கிறிஸ்து இவர்களேவிட்டுப் பிரிந்தபொழுது கொடுத்த வாக்கை இப்பொழுது நிறைவேற்றினுர். யோர்தான் நதிக் கரையில், பெத்தபாராவென்ற விடத்தில், அவர்கள் கிறிஸ்துநாத ரிடம் கொண்ட மதிப்பும் அன்பும் அவரைவிட்டுப் பிரிந்து தங்கள் ஆதி அலுவல்களேச் செய்துகொண்டிருந்தபொழுது குன்றிப்போகாது பெருகிவந்தது. ஆதலால் அவர்கள் குருநாதரின் உத்தம சீடரும் உதவி ஊழியருமாக அருகரானுர்கள்.

ஜெப ஆலயத்திற்கு குருநாதர் தொழச் சென்ருர்

சனிக்கிழமை காலே ஒன்பது மணிபோல் யூதர் தங்கள் ஜெப ஆலயத்தில் கூடி தேவனே ஆராதிப்பது வழக்கம். கிறிஸ்து கப்பர் நகூமிற்கு வந்த முதலாம் சனிக்கிழமை காலே ஆராதனேக்குப் பலர் ஆவலுடன் சென்றனர். தங்கள் ஊரில் வந்திருக்கும் கிறிஸ்துவாகிய அரிய போதக சிரோமணி ஆராதனேக்கு வருவாரென்றும், ஒருவேளே திருமறையை வாசித்து வியாக்கியானப்படுத்துவாரென்றும் அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அப்படியே எம்பெருமான் தம் சீடருடன் ஜெப ஆலயத்திற்குச் சென்றனர். அது புதிய வெண்மையான ஆலயம். கப்பர் நகூமின் பட்டாளத் தலேவனுன ரோம நூற்றுக்கதிபதி, யூதமதத்தில் தான் பாராட்டிய வாஞ்சையைத் தெரிவிக்க அவ்வாலயத்தைக் கட்டி ஞன். அன்று அந்த ஆலயம் நிறைந்திருந்தது. ஸ்தோத்திர கீதம் பாடினுர்கள். பின்பு ஆச்சாரியர் பிரார்த்தனேசெய்தார்; நியாயப்பிரமா ணப் புஸ்தகத்திலிருந்து சில சூத்திரங்களேயும், அதன்பின் தீர்க்கதரிச னர் உரைத்த சுருதியிலிருந்து சில வாக்கியங்களேயும் வாசித்தார். பெரி யோர் எவரேனும் ஆலயத்திலிருந்தால் அவரை ஜனங்களுக்குச் சில நன்மொழி சாற்றக் கேட்பது வழக்கம். அன்று காலே, ஆச்சாரியர்

சுருதிச்சுருளை வைத்துவிட்டு, கிறிஸ்துவை உற்றுப் பார்த்து, "ஐயா, நீர் ஏதாவது போதிக்க விரும்புவீராகில், இப்பொழுது எழுந்து பேசுவீராக" என்றார்.

நூதன அதிகாரத்துடன் உபதேசித்தார்

கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்க வாஞ்சைகொண்டிருந்த ஜனங்கள், குருநாதர் எழுந்து மேடைக்குச் செல்லுவதை ஆத்திரத்தோடு கவனித்தார்கள். கிறிஸ்து அவர்களைப் பார்த்து என்ன போதித்தாரென்று சொல்லப்படவில்லை. யூதருக்கு ஞான உபதேசம் புகட்டும் வேதபாரகர் திருமறை வாக்கியங்களையும், ஞானிகளியற்றிய வியாக்கியானங்களையும் மேற்கோளாகக் காட்டியே போதிப்பது வழக்கம். ஆனால் அன்று அந்த வாலிபப் போதகாசிரியர் தமது சொந்த வார்த்தையையே தமது போதனைக்கு ஆதாரமாகக்கொண்டு பேசினதைக்கண்டு ஜனங்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய ஆச்சரியத்தை உண்டாக்கத்தக்க பிரசங்கமொன்று மலைப்பிரசங்கமெனும் போதகத்திரட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், கிறிஸ்துநாதர் பின்வருமாறு அங்கு பிரசங்கித்திருக்கவேண்டுமென்று உத்தேசிக்கலாம். "நியாயப்பிரமாணத்தையாவது, தீர்க்கதரிசன வசனங்களையாவது அழித்து அவமாக்க நான் வந்தேன் என்று எண்ணாதேயுங்கள். அவைகளை அழிக்கவல்ல, நிறைவேற்றி முடிக்கவே வந்திருக்கிறேன். என்றாலும், கொலை செய்யாதிருங்களென்று நியாயப்பிரமாணம் நமது முன்னோருக்கு கற்பித்ததை நீங்கள் யாவரும் அறிவீர்கள். இப்பொழுது நான் உங்களுக்குக் கற்பிப்பது யாதெனில், காரணமின்றித் தன் சகோதரனைப் பகைப்பவன் குற்றவாளியாவான். ஒருவனை மூடனென்று தூஷிப்பவன் எரி நரகத் தண்டனைக்குப் பாத்திரனாவான். விபசாரம் செய்யாதிருப்பாயாகவென்பது பூர்வத்தாருக்கு விதிக்கப்பட்ட பிரமாணமென்பதை நீங்கள் அறிவீர்கள். நான் உங்களுக்குப் போதிப்பதோவெனில், ஒரு பெண்ணை நினைவிலும் மோகித்துப் பார்ப்பவன் அவளோடு விபசாரம் செய்தவனாவான். உனக்கு அடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகையென்பது பழைய பிரமாணம். நான் கொடுக்கும் நவப்பிரமாண மென்னவெனில், உன் சத்துருவை சிநேகி, உனக்குத் தீங்கிழைத்தோனுக்கு நன்மை செய்." இவ்வாறு, இஸ்ரவேல் வம்சத்

திற் றேன்றிய மகான்களில் முதன்மையான மோசே முனிவர் கொடுத்த பிரமாணங்களைச் சீர்தூக்கி, அவற்றிலும் உன்னத பிரமாணங்களை இத்துணை துணிகரமாய் ஏற்படுத்திய இந்தப் பாலியப் போதகரின் வார்த்தைகளைக் கேட்டு ஜனங்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டது விந்தையன்று.

ஜெப ஆலயத்தில் பேய் பிடித்தவனைக் குணமாக்கல்.

கிறிஸ்து இங்ஙனம் மதுரமொழி மாரி சொரிந்துகொண்டிருக்கையில், தேவாலயத்தில் ஒரு பெருங்கூச்சல் எழும்பிற்று. அது என்னவென்றுலோ அங்கிருந்த ஒருவன் ஆவேசங்கொண்டு "ஓகோ! நாசரேத்தூராகிய இயேசுவே, உமக்கும் எங்களுக்கும் என்ன சங்காத்தம்! நான் உம்மை அறிவேன். நீர் தேவனுடைய பரிசுத்த தொண்டன்" என்று கூச்சலிட்டான். கிறிஸ்து பிரசங்கத்தை உடனே நிறுத்திவிட்டு, அவனை அதட்டி அவனைக்கொண்டிருந்த பேயை ஓட்டினுர். அவன் குதித்துக் கூக்குரலிட்டு ஸ்மரணையற்றுக் கீழே விழுந்து, பின் தெளிந்தெழுந்து சொஸ்த புத்தியடைந்தான். பாரம்பரியப் பிரமாணங்களைக் கூச்சமின்றித் திருத்தி நூதனப்பிரமாணங்களைக் கூறிய அதிகாரத்திலும், பேய்களை அடக்கியாளும் இந்த அதிகாரம் பெரிதாயிருந்ததென்று ஜனங்கள் நினைத்தார்கள். அன்று தேவாலயத்தில் கிறிஸ்துசெய்த பிரசங்கமும், அவர் பேயை ஒரு சொல்லால் அதட்டியோட்டிய தீரமுமே ஊரெங்கும் பேச்சாயிருந்தது.

பேதுருவின் மாமி பிணியுற்றுள்

ஜெப ஆலயத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பிப் போனபொழுது, ஆண்டவர் பேதுருவின் மாமியார் ஜுரமாயிருப்பதைக் கண்டு அவளைத் தொட்டுச் சுகமாக்கினுர். அந்தநாள் யூதருக்குப் பரிசுத்தமான ஓய்வுநாளாய் இருந்ததால் ஊரில் அரவமில்லாதிருந்தது. பொழுது விழுந்தவுடன் ஓய்வுநாள் முடிவடைந்தது. ஏனெனில் யூதர் ஒரு அஸ்தமனத்திலிருந்து மறு அஸ்தமனம்வரைக்கும் ஒருநாள் எனக் கணித்துவந்தார்கள். பொழுது எப்பொழுது விழுமென்று காத்துக்கொண்டிருந்த பிணியாளிகளும் அவர்களுடைய நண்பரும் கிறிஸ்து நாதரைத் தேடிப் பேதுருவின் வீட்டிற்கு வந்தார்கள். சிறிதுநேரத்திற்கெல்லாம் அங்கு பெருங்கூட்டம் கூடிற்று. குருநாதர் வெளி

யே வந்து சகல பிணியாளிகளையும் கனிவுடன் தொட்டு ஆசீர்வதித்து சுகமளித்தார். அன்றிரவு ஆண்டவர் அதிகக் களைப்புற்றவராய் படுக்கைக்குச் சென்றார்.

காலை தியானம்

பிணியாளிகளைக் கண்டபொழுதெல்லாம் குருநாதரின் உள்ளம் உருகிற்று. அவர்களைக் குணமாக்குவதில் தம்முடைய ஆன்மசரீர பலத்தைச் செலவழித்தார். ஆதலால் அன்றிரவு அவர் உடல் நொந்து தளர்ந்துவிட்டது. என்றாலும் சூரியன் உதிப்பதற்கு வெகுநேரத்திற்கு முன் குருநாதர் மெதுவாய் எழுந்து புறப்பட்டு மலையடிவாரத்திற்குச் சென்று ஈசனைச் சிந்தையி லிருத்தித் தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். விடியற்காலம் பேதுரு அவரைத் தேடியடைந்து அவரோடு சற்று உட்கார்ந்து பேசுவானாயினன். கதிரவன் சிவந்த சுடர்களை வீசியெழுந்தான். அச்சுடர்கள் பட்டணத்தின் உச்சியிலிருந்த மாளிகைகளில் பட்டு பிரதிபிம்பித்தன. எதிரே கலிலேயாக் கடலின்ஜலம் நித்திரை செய்பவரின் நெஞ்சைப்போல் மெதுவாய் எழும்பி விழுந்துகொண்டிருந்தது. குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. அப்பொழுது குருநாதரும் பேதுருவாகிய சீடனும் கலிலேயா நாட்டின் பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும்போய் சுவிசேஷ நற்செய்தியை அறிவிப்ப தெப்படியென்று பேசி ஒழுங்கு செய்துகொண்டார்கள். அப்படியே கிறிஸ்துநாதர் தமது சீடருடன் புறப்பட்டு ஊர் ஊராய்ச் சுற்றியலைந்து தெய்வ ராட்சியத்தின் மகிமையையும் ஈசனின் பெருங்கருணையையும் அறிவித்தும், சகலவிதப் பிணிகளைத் தீர்த்தும் வந்தார்.

குஷ்டரோகி குணமடைந்தான்

இந்தப் பயணத்தில் நேர்ந்த ஒரே சம்பவந்தான் சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. குஷ்டரோகி யொருவன் குருநாதரைக் கண்டு, "ஆண்டவரே, உமக்கு மனமானால் என்னை சுகப்படுத்த உம்மால் ஆகும். எளியன்மீதிறங்குவீர் ஐயா!" என்று அபயமிட்டழுதான். ஆண்டவர் அவனுக்கிரங்கி, அவனைத் தன் வல்ல கரத்தால் தொட்டு "எனக்குச் சித்தமே! நீ சொஸ்தமாகு" என இன்னுரை யுரைத்தார். உடனே அவனுடைய ரோகம் ஒழிந்தது. மோசேயின் பிரமாணப்படி செலுத்தவேண்டிய ஸ்தோத்திரக் காணிக்கையை ஆலயத்தில்

செலுத்தவும், ஆசாரியருக்குத் தன்னைக் காண்பித்து தான் சுகதேகி யாகிவிட்டதால் வீட்டோடிருந்து வாழ உத்தரவுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும், ஆண்டவர் அவனுக்குக் கற்பித்தார்.

நாசரேத்தூரில் பிரசங்கித்தல்

கிறிஸ்துநாதர் தம் சொந்த ஊராகிய நாசரேத்திற்குச் சென்றார். ஓய்வுநாள்காலை ஜெப ஆலயத்திற்குப் போய், அங்கு முன் தச்சனு யிருந்தபொழுது ஆராதனையில் வேதவாக்கியங்களை வாசிக்கும் சிலாக் கியம் பெற்றிருந்ததால் வழக்கம்போல் குறிக்கப்பட்ட வேதவசனங் களை வாசித்தார். அவ்வசனங்கள் ஏசாயா தீர்க்கதரிசனர் வரப்போ கிற மேசியாவைப்பற்றிக் கூறிய வசனங்களாம். அவையாவன, ''என் இதயத்தில் பரம ஆத்மன் குடிகொண்டிருக்கின்றார். சிறுமைப்பட் டோருக்கு மீட்பின் நற்செய்தியைக் கூறி அறிவிக்கவும், பாவக்கடி சிறையிலிருப்போரை விடுதலைசெய்யவும், துயரப்படு வோருக்கு ஆறுதல் தரவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்திற்குப் பதிலாக ஆனந்தத் தைலத்தைக் கொடுக்கவும், கண்ணில்லாதவருக்குக் கண்ணளிக்கவும், கர்த்தர் நீதி செய்ய எழுந்தருளும் நாள் வந்ததென்று பிரசித்தி செய்யவுமே அவர் என்னை அனுப்பினார்.'' இவ்வசனங்கள் மேசியாவைக் குறிக்கும் வசனங்களென்றும், தங்கள் ஊரானாகிய இயேசுகிறிஸ்துவே அந்த மேசியாவென்று வெகுபேர் எண்ணிக்கொண்டிருப்பதையும், ஆரா தனைக்கு வந்திருந்த ஜனங்கள் நன்கு அறிவார்கள். அவ்வசனங்களை கிறிஸ்து அப்பொழுது வாசித்ததே விந்தைக்குரியவோர் சம்பவமா யிருந்தது. ஆதலால் அவர் என்ன சொல்லப்போகிறார் என்று ஜனங் கள் சிந்தித்துக் காத்துக்கொண்டிருந்தார்கள். குருநாதர் திருமறைச் சுருளை வைத்துவிட்டு உட்கார்ந்தார். காந்த ஊசி வடதிசையை வில காது நோக்குவதுபோல், கண்கள் யாவும் எம்பெருமானின் திரு முகத்தை நோக்கின. அம்முகம் அவர்கள் பார்த்த முகமேயென்று லும், அன்று அதன்கண் முன்னில்லாத உன்னத வசீகரம் விளங் கிற்று. எவருக்குந் தீங்குசெய்யாத உத்தம மனத்தினராகிய தம் ஊரார் மேசியாவாகும் உன்னதபதவியை வகிக்கத்தக்கவராகத் தோன் றினார். இப்படி நினைத்துக்கொண்டிருந்த ஜனங்களைப் பார்த்து எம் பெருமான் சொன்னதாவது, ''இன்றைக்கு இந்த வேதவசனங்கள்

உங்கள் செவிகளறிய நிறைவேறின" என்பதே. இன்னும் என்னென்ன சொன்னாரோ நாம் அறியோம். அவர் திருவாய்மலர்ந்தருளிய அருள்மொழிகளைக் கேட்டு ஜனங்கள் ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

நாசரேத்தூராரின் வெகுளி

என்றபோதிலும் அங்கு பற்பல ஜனங்களிருந்தார்கள். ஜனக்கும்புகளின் எண்ணம் திடீரென்று மாறிவிடுவதும் இயல்பே. ஆதலால் அங்கிருந்த பரிசேயரில் சிலரோ, அல்லவென்றால் பெரிய மனுஷரெனத் தம்மை எண்ணிக்கொண்டவர்களோ; இந்த வாலிபன் தன்னை மேசியாவென்று சொல்லிக்கொள்ளுவதைக் கண்டு எரிச்சலடைந்து, "இவன் நம்மூர் தச்சன் மகனன்றோ? இவன் சகோதர சகோதரிகளை நாம் அறியோமோ? இவனுக்கு ஞானம் எங்கிருந்து வந்தது? இவன் மேசியா ஆவானோ?" என்று பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். கிறிஸ்து அதற்குப் பிரதியுத்தாமாக "நீங்கள் இவ்வாறு பேசுவது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. எந்தத் தீர்க்கதரிசியையேனும் அவன் சொந்த ஜனத்தார் கனப்படுத்தியிருக்கிறார்களோ? எலியா தீர்க்கதரிசனரின் வல்லமையை அறிந்து அவர் மூலமாய் பஞ்சத்திற்குத் தப்பின விதவையும், எலிசாத் தீர்க்கதரிசியால் குணமாக்கப்பட்ட குஷ்டரோகியும் அன்னவர் சொந்த ஜாதியாரல்ல, அந்நியர். கப்பர்நகூமில் நீ செய்ததாகச் சொல்லப்படும் அற்புதக் கிரியைகளை எங்களிடம் செய்துகாண்பியும் என்றும் நீங்கள் என்னைக் கேட்கின்றீர்கள். நீங்கள் சந்தேகம் நிறைந்தவர்களா யிருப்பதால் நான் உங்களிடம் என் அற்புத வல்லமையைக் காட்டக்கூடாதவனாயிருக்கிறேன்" என்றார். அந்தச்சணமே அவர்கள் கடுஞ்சினங்கொண்டு, பட்டணம் கட்டப்பட்டிருந்த குன்றின் ஓரத்திற்கு அவரைப் பலவந்தமாய் இழுத்துச்சென்று, அங்கிருந்து கீழே தள்ளிக் கொல்ல நினைத்தார்கள். கோபவெறிகொண்ட ஜனத்திரள் தம்மைச் சூழ்ந்து வழிமறித்து நிற்க, நீரில் தைத்த அம்புபோல், கிறிஸ்து நாதர் அவர்களை ஊடுருவிச்சென்று தப்பினார். அதனால் தச்சன் மகனென அவர்கள் அவமதித்த கிறிஸ்து அன்னோர் யாவரிலும் தாம் சமர்த்தனென்பதை நிலைநிறுத்தினார். அதைக்கண்டு ஜனங்கள் வெட்கத்துடன் தத்தம் வீடுகளுக்குச் சென்றார்கள். அன்றிரவு குருநாதர்

மரியம்மாளோடு தங்கியிருந்தாரோ அல்லவோ? பெற்ற தாயின் மனம் மகனுக்கு நேர்ந்த கஷ்டத்தையறிந்து என்னவிதமாய்க் கலங்கிற்ருே?

"உன் பாவங்களை மன்னித்தேன்"

இதன்பின் கிறிஸ்துநாதர் கப்பர்நகூமுக்கு வந்தார். அவர் வீட்டிலிருப்பதை ஜனங்கள் அறிந்து அவரைக் காணவந்தார்கள். பேதுருவின் வீட்டின் உள்முற்றம் நிறைய ஜனங்கள் கூடினூர்கள். அப்பொழுது குருநாதர் உபதேசித்தார். உபதேசித்துக்கொண்டிருக்கையில், திமிர்வாதக்காரனொருவனை அவரிடம் கொண்டுவந்த நண்பர், ஜனநெருக்கத்தைக்கண்டு, மேல்மாடியில் ஏறி முற்றத்திற்குள் பிணியாளியைக் கட்டிலோடு இறக்கினூர்கள். கிறிஸ்துநாதர் அவர்கள் விசுவாசத்தைக் கண்டு வியந்து, பிணியாளியின்மீது பரிதாபங்கொண்டு, "நீ செய்த பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்ருர். அவன் விரும்பி வந்தது தேகசுகமே யொழிய ஆத்ம சுகமன்று. என்ருலும் அவனை வருத்திய நோய், அவனுடைய துர்த்தனக்கிரியையால் வந்ததென்று அவன் அறிந்து தன்னையே நொந்துகொண்டிருந்தான். குருநாதர் இதை அறிந்து "உன் அக்கிரமத்தைப் பொறுத்தேன்" என்று சொன்னது அவனுக்கு வியப்பாயிருந்தது. அங்கு கூடியிருந்தவர்களிற் சிலர் எருசலேமிலிருந்துவந்த ஆசாரியக் கட்சியை சேர்ந்தவர்கள். அவர்கள், குருநாதர் பிணியைக் குணமாக்குவதற்குப் பதிலாக, "உன் பாவங்களை மன்னித்தேன்" என்றதைக் கேட்டு, "தெய்வம் ஒருவர் தவிர மற்றெவரும் ஒருவன்செய்த பாவங்களை மன்னிக்க யோக்கியரோ? என்ன, இவர் தேவ தூஷணமன்ருே புகலுகின்ருர்!" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். உடனே கிறிஸ்து அவர்களைப் பார்த்து "பாவங்களை மன்னிப்பதோ, திமிர்வாதக்காரனை எழுந்து நடக்கச்செய்வதோ, எது எளிது?" என்று கேட்க, மாறுத்தரம் சொல்லமுடியாது அன்னூர் திகைத்தார்கள். "இப்பொழுது நான் நிலைநிறுத்திவரும் தெய்வ ராட்சியத்தின் சிறப்புகளில், மனுஷகுமாரனுகிய எனக்குப் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதும் ஒன்றென நீங்கள் அறிந்துகொள்ளுமாறு, இதோ திமிர்வாதக்காரன் எழுந்து நடப்பதைக் காண்பீர்கள்" என்ருர். பின்பு பிணியாளியை நோக்கி "உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று கட்டளையிட்டார். உடனே அவன் குதித்

தெழுந்து நின்று தன் படுக்கையைச் சுருட்டிக்கொண்டு நடந்தான். அவரைக் குற்றஞ்சாட்டினோர் திகிலும் வெட்கமுமடைந்தனர். ஏனையர் யாவரும் அந்த அற்புத வல்லமையைக்கண்டு ஈசனைப் போற்றினர்.

லேவி சீடனானான்

கிறிஸ்து கடற்கரைக்குச் சென்றபொழுது முன்னே கூறிய ஆயத்துறையில் உட்கார்ந்து சுங்கம் வாங்கிக்கொண்டிருந்த லேவியென்ற பெயர்கொண்ட வோர் யூதனைக்கண்டு "நீ என் தொண்டனாகவேண்டும்" என்றார். அவன் அக்கணமே அருள்நாதரைப் பின்பற்றிச் சென்றான். அவன் அல்பேயுவின் குமாரன். கிறிஸ்துவின் சீடரில் வேறு மூவர் அல்பேயுவின் குமாரரென்றும் காண்கிறோம். அல்பேயு என்ற பெயர்கொண்டவர் இருவர் இருந்தனரோ, அல்லது ஒருவர்தானோ? ஒருவரேயாயின், லேவி அம்மூன்று சீடருக்கும் சகோதரனாவான். என்றாலும், யூத தேசாபிமானிகளால் அருவருக்கப்பட்ட சுங்கப்பணம் வசூலிக்கும் தொழிலை அவன் பணத்திற்கு ஆசைப்பட்டு செய்யப் புகுந்ததால், அவன் சகோதரரும் அவனைக் குடும்பத்தினின்றும் விலக்கி விட்டிருக்கவேண்டும். தம்மை அடிமைப்படுத்தி ஆட்சி செய்துவந்த ரோமத்துரைத்தனத்தாருக்கு எவ்வித உதவியும் செய்யப்படாதென்றும், அவர்களிடம் எவ்வித உத்தியோகமும் பெறக்கூடாதென்றும் தேசாபிமானிகளாகிய கலிலேயர் தீர்மானித்திருந்தனர். ஆதலால் ஆயக்காரனான லேவி யாவராலும் ஈனனென்று அவமதித்துத் தள்ளப்பட்டவன். இது அவனுக்கு மிகுந்த வெட்கத்தையும் மனவருத்தத்தையும் உண்டுபண்ணியபோதிலும், அவன் தனக்குக் கிடைக்கும் ஆதாயத்தை இழந்துவிட மனமற்றவனாய் ஆயத்துறையிலேயே காலங் கழித்துவந்தான். எம் அருள்வள்ளல் அவன் தன் பரிதாப நிலைமையைக்கண்டு அவனை இரட்சித்து, மேன்மைப்படுத்த விரும்பினார். இதற்குமுன் கிறிஸ்துநாதர் அவனைத் தனித்து சந்தித்து அவனோடு பேசியிருந்தார். அவனுடன் அனுதாபங் காட்டியிருந்தார். ஆதலால் இப்பொழுது அவர் தன்னையும் சீடனாகத் தெரிந்துகொள்ளச் சித்தமாயிருந்ததைக் கண்டு லேவி களிப்புற்று, அவர் அழைப்பைச் சிரமேற்கொண்டு சுங்கச் சாவடியை விட்டகன்று குருநாதருக்குத் தொண்டனாயினன்.

"ஆயக்காரரின் நண்பன்"

லேவிக்கு இது அளவற்ற சந்தோஷத்தைக் கொடுத்தது. அவன் கிறிஸ்துநாதரைத் தன் வீட்டில் விருந்துண்ண அழைத்தான். அவன் சிநேகிதரான பல ஆயக்காரரும் விருந்திற்கு வந்திருந்தார்கள். "யூதரனைவரும் ஆயக்காரராகிய எம்மை இகழ்ந்து அகற்றியிருக்க புண்ணிய புருஷனான கிறிஸ்தரசன் எம்மீதும் காருண்ணிய கடாட்சம் வைத்தார். அவரை வந்துபாருங்கள்!" என்று சொல்லி லேவி தன் தோழரை இவ்விருந்திற்கு அழைத்திருந்தான். ஆதலால் அவர்கள் வெட்கமின்றி சந்தோஷமாய் அங்கு வந்து, குருநாதரின் குளிர்ந்த பார்வையையும், மலர்ந்த முகத்தையும், இனிய வார்த்தைகளையும் பார்த்தும் கேட்டும் களிகொண்டிருக்கையில், வீட்டுவாசலில் சிறு அமளியுண்டாயிற்று. யாவராலும் சண்டாளரென்று தள்ளப்பட்ட ஆயக்காரரிலொருவனைத் தம் சீடனாகத் தெரிந்துகொண்டு, அவனோடும் அவனைப்போன்ற மற்ற ஆயக்காரரோடும் கிறிஸ்துநாதர் அளவளாவி விருந்துண்ணத் துணிந்ததைக் கண்டபொழுது பரிசேயரும் வேதபாரகரும் கோபங்கொண்டனர். அவர்கள் லேவியின் வீட்டிற்கு விரைந்துவந்து கிறிஸ்துநாதரின் சீடரை அழைத்து, இயேசு பெருமான் ஜாதிக்கட்டை மீறி இந்த அநியாயஞ் செய்யலாமோ? வென்று வாதாடினார்கள். அதைக்கேட்டு குருநாதர் வெளியே வந்து, "சுகதேகிகளுக்கல்ல, பிணியாளிகளுக்கே வைத்தியனின் உதவி தேவை. நான் நீதிமான்களையல்ல, பாவிகளையே தேடி இரட்சிக்கவந்தேன்" என்று வெகு சாந்தமாய்ப் பேசினார். அதனால் பரிசேயரும் வேதபாரகரும் சமாதானமடையவில்லை. கிறிஸ்து சொன்ன வார்த்தையின் உட்கருத்து இன்னதென்று அவர்கள் எளிதில் அறிந்துகொண்டார்கள். தாம் பக்திமிகுந்த மேன்மக்களென்றும் ஆயக்காரர்போன்ற மற்றவர்கள் யாவரும் மதவைராக்கியமற்ற பாவிகளென்றும் எண்ணிப் பெருமைகொண்டிருப்பது தெய்வத்துக்கு அடாத அகங்காரமென்று கிறிஸ்துநாதர் தமக்கு அச்சமயம் இடித்துரைத்தாரென்று அவர்கள் அறிந்தார்கள். "நாம் அவனைக் குற்றப்படுத்த முயன்றால், அவனல்லவோ நம்மைக் குற்றப்படுத்தி வெட்கமடையச் செய்கிறான். ஆனாலும் பார்ப்போம்!" என்று சபதம் பண்ணிக்கொண்டார்கள்.

குருக்களின் வர்மம்

நாசரேத்தூரில் நடந்த அமளிக்குப்பின், கப்பர்நகூமிலும் சிலர் குருநாதருக்கு இடைஞ்சல் உண்டுபண்ண முயன்றனர். ஹிந்து சமுதாயத்தில் பார்ப்பனர் வகித்திருக்கும் தலைமைக்கொத்த தலைமை பரிசேயர், வேதபாரகராகிய ஆசாரியக்கூட்டத்தார் யூதநாட்டிற் பெற்றிருந்தனர். கிறிஸ்து போதித்த நூதன மதக் கோட்பாட்டை ஜனங்கள் அங்கீகரித்தொழுகின், வேதபாரகர் பரிசேயருடைய மேன்மையும் செல்வாக்கும் ஊதியமும் குன்றிப்போகுமென்பது திண்ணம். மேலும் கிறிஸ்துநாதர் அவர்கள் செய்துவந்த குற்றங்களையும் போதித்துவந்த குருட்டு உபதேசங்களையும் கண்டிக்க அஞ்சவில்லை. ஆதலால் இக்கூட்டத்தார் குருநாதரை எப்படியாவது வெட்கப்படுத்தி வாயடைத்து, ஜனங்கள் அவரை நிந்தித்துத் தள்ள வகைதேட வேண்டுமென்று விரும்பினர். எப்பொழுது அவர் அடிசருக்கும், நாம் பாய்ந்து அவரை அமுக்கி மேற்கொள்ளலாம் என்று கச்சைக் கட்டிக்கொண்டு, அவர் போனவிடமெங்கும் பதுங்கி கவனித்துக்கொண்டிருக்க தம்மிற் சிலரை ஏற்படுத்தியிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் சதிநினைவு பூர்த்தியாவது கடினமாயிருந்தது. சாதாரண ஜனங்கள் யாதொரு துர் அபிமானமுமில்லாத களங்கமற்ற மனத்தால் அவரையும் அவர் செய்கையையும் சீர்தூக்கி, அவர் சிறந்த உத்தம போதகரென்றே மதித்துவந்தார்கள்.

ஓய்வுநாளில் கதிர் கொய்து தின்றது குற்றம்

குருநாதர் தம் சீடருடன் வயல்வழியே போய்க்கொண்டிருக்கையில், பசியாயிருந்த சீடர் சிலர் கதிர்களைக் கொய்து தின்றுகொண்டு போனார்கள். அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது. இதைக் கண்டவுடன் ஆசாரியக் கூட்டத்தாரான விரோதிகளிற் சிலர் "உமது சீடர் ஓய்வுநாளில் செய்யத்தகாத காரியத்தைச் செய்யப் பார்த்துக்கொண்டு நீர் சும்மாவிருக்கின்றீரே!" என்று குருநாதரைக் குற்றஞ்சாட்டினார்கள். அவர் அவர்களுடைய வன்னெஞ்சத்தையும் குருட்டுத்தனத்தையும் பார்த்து மனம் நொந்தார். "ஓய்வுநாளின் பெருமையை நிலைநாட்ட மனிதர் படைக்கப்படவில்லை. மனிதருடைய நன்மைக்கென்றே

ஓய்வுநாளென்று ஏற்பட்டது. அதுநிற்க, தாவீதரசனும் அவன் கூட்டாளிகளும் பசியால் வருந்தியபொழுது ஆசாரியர் தவிர மற்றெவரும் சாப்பிடக்கூடாத தெய்வசமுகத்து அப்பங்களை எடுத்துத் தின்றூர்கள் என்று நீங்கள் அறியீர்களோ? மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறுரென்பதை நீங்கள் அறியக்கடவீர்கள்" என்று கிறிஸ்துநாதர் தகுந்த மறுமொழி கொடுத்தார். ஓய்வுநாளை ஆசரிப்பதைப்பற்றி பரிசேயருக்கும் கிறிஸ்துநாதருக்கும் ஓயாத வாக்குவாதம் உண்டாகிக்கொண்டிருந்தது. ஓய்வுநாளில் யாதொரு வேலையும் செய்யப்படாதென்று மோசேயின் தர்மசாஸ்திரம் வகுத்திருந்தது உண்மையே. அந்தப் பிரமாணத்தை வியாக்கியானப்படுத்தி, வேலையாவது என்னென்னவென்று யூத ரபிமார் குதர்க்கம்பண்ணி, அற்பசொற்பக் காரியங்களையெல்லாம் வேலையாகப் பாவித்து, ஜனங்கள்மீது குற்றஞ் சுமத்தி நிர்ப்பந்தம் பண்ணிவந்தார்கள். தையற்காரன் ஓய்வுநாளில் தரித்திருந்த தன் உடுப்பில் ஞாபகப்பிசகாய் ஒரு ஊசியைக் குத்தி வைத்திருந்தாலும் இம்மேதாவிகள் அது குற்றமென்று தீர்த்துவிடுவார்கள். ஓய்வுநாளில் சீடர் கதிரைக் கொய்துதின்றது, அறுப்பறுத்துப் போரடித்துத் தானியத்தைச் சேகரித்ததற்கு சமமாகுமென்று இப்புத்திமான்கள் சொல்லுவார்கள். இப்படி நியாயப்பிரமாணங்களைக் குருட்டுத்தனமாய் அர்த்தம்பண்ணிக்கொண்டு அவற்றின் உட்பொருளைக் கவனியாமற்போனூர்கள். தங்களுக்கு லாபமுண்டாகக்கூடுமானுல், நியாயப்பிரமாணத்தைப் புரட்டியும் விடுவார்கள். மோசேயின் பிரமாணம், உன் தாயையும் தந்தையையும் கனம்பண்ணுவாயாகவென்று கற்பிக்க, முதிர்வயதில் பெற்றோரை ஆதரிப்பது கடினமென்றெண்ணுபவர், ஒரு சிறு தொகையைக் காணிக்கையாகச் செலுத்திவிட்டால், (அக்காணிக்கைக்கு கோர்பான் என்று பெயர்), பெற்றோரை ஆதரிக்கும் கடமை அதோடொழிந்ததென்றும் இப்போலிக் குருக்கள் கதைகட்டி வைத்திருந்தார்கள். கிறிஸ்துநாதர் இது சுத்த மதியீனமென்றே கூறினூர். ஆதலால் ஆசாரியக் கூட்டத்தாரைக் குருடருக்கு வழிகாட்டுகிற குருடரென்றும், கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கும் உன்மத்தரென்றும் சொன்னூர். இதை யெல்லாம் கேட்டு பரிசேயர் கோபங்கொண்டிருந்தார்கள்.

ஓய்வுநாளில் பிணியை நீக்கியது குற்றம்

குருநாதர் ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திற்குப் போயிருந்தபொழுது, அவர்களும் அங்கு போனார்கள். அவர்கள் நினைவுக்கேற்க, அங்கு ஒரு சூம்பின கையுடையவனுமிருந்தான். "ஆகா! இது நல்லசமயம், இவன் இந்த சூம்பின கையினைச் சுகப்படுத்துவானாகில், ஓய்வுநாளை அலட்சியம்பண்ணினானென்று குற்றப்படுத்தலாம்" என்று எண்ணிக் காத்திருந்தார்கள். கிறிஸ்து அவர்கள் உள்ளக்கருத்தை அறிந்தார். அன்று அந்த வியாதியஸ்தனைக் குணமாக்காது அடுத்தநாள் வாவென்றவனுக்குச் சொல்லிவிட்டால், பரிசேயர் அவரைக் குற்றப்படுத்த இடமேற்படாது. அப்படிச் செய்திருப்பின், பரிசேயருடைய பிடிவாதமான குருட்டு ஏற்பாடுகள் ஞாயமென்று கிறிஸ்து ஒப்புக்கொள்வதாகும். அல்லவென்றால், அவர் பரிசேயருக்குப் பயந்து ஒய்வுநாளில் அவனைச் சுகப்படுத்தா தொழித்தாரென்று எண்ண இடமுண்டாகும். ஓய்வுநாளை ஆசரிப்பதைக்குறித்து தாம் சாதிப்பதே ஞாயமென்றும் பரிசேயருடைய நிர்ப்பந்த நிபந்தனைகள் அநியாயமானவையென்றும் கிறிஸ்துநாதர் அன்றைக்கும் எடுத்துக்காட்டத் தீர்மானித்தார். ஆதலால், சபையைப் பார்த்து, "ஓய்வுநாளில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ; ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம்?" என்று கேட்டார். இக்கேள்விக்கு, "நன்மைசெய்வதும், ஜீவனைக் காப்பதுமே நியாயம்" என்ற விடையொன்றைத்தான் சரியான விடையென எவரும் ஒப்புக்கொள்வார்கள். அந்தப்படி மறுமொழி கூறினால், தம் சொந்த வாயாலேயே கிறிஸ்துவை நிரபராதியென்று தீர்த்துவிடுவோமென் றுணர்ந்த போலிக் குருக்களாகிய பரிசேயர் வாய்திறவாது மௌனஞ் சாதித்தனர். அதனால் அவர்கள் நியாயமாயும் நேர்நேராயும் வாதுபண்ண மனமற்றிருந்தது தெளிவாயிற்று. அவர்களுடைய கபடத்தைக் கண்டு குருநாதர் வெறுப்புற்றார். சூம்பின கையுடையவனைக் கூப்பிட்டு சபைநடுவே நிற்கச்சொன்னார். ஜனங்களைச் சுற்றிப்பார்த்தார். அவர்கள் இன்னும் வாய்திறவாதிருந்தார்கள். பிணியாளியைப் பார்த்து "உன் கையை நீட்டு" என்று கட்டளையிட்டார். அவன் தன் சூம்பின கையை நீட்டினான். அது மற்றக் கையைப்போல் நல்ல கையாகிவிட்டது. ஜனங்கள் குதூகலித்து குருநாதரைக் கொண்டாடினார்கள். பரிசேயரோ உடனே அவரைக்

கொல்வதற்கான ஏற்பாடுகள் செய்யும்படி ஏரோதியருடன் ஆலோசனைசெய்யச் சென்றார்கள். இதன்பின் கிறிஸ்துநாதர் ஜெப ஆலயத்திற்குள் பிரவேசிக்கவில்லை. தமது சத்துருக்கள் தம்மை கொன்று ஒழிக்கத் துவஜங்கட்டி நின்றார்கள் என்பதும் துலாம்பரமாயிற்று.

இராத் தியானம்

குருநாதர் அன்றிரவெல்லாம் தனித்திருந்து தியானித்து ஜெபித்தார். அவர் கருத்திற்றோன்றிய எண்ணங்களும், அவர் உள்ளத்தை உழக்கச்செய்த நினைவுகளும், நாட்டில் பலத்த செல்வாக்குடையவர்கள் தம்மைக் கொடும் பகையாய்ப் பகைக்கையில், ஈசன் தமக்கு விதித்த அரும்பணியைச் செய்துமுடிப்ப தெங்ஙனமென்று அவர் சிந்தித்த சிந்தனைகளும் என்னவென்று சொல்லப்படவில்லை. ரத கஜ துரக பதாதிகளின் துணையைக்காட்டிலும் தெய்வதுணையே சிறந்த துணையென்றும், அதனில் சார்ந்திருப்போர் பலத்தின்மேல் பலனடைவார்கள் என்றும், அவர்கள் நடந்தாலும் களைப்படையார்கள், ஓடினாலும் இடறமாட்டார்கள் என்றும், சிங்கத்தையும் பாலசிங்கத்தையும் தோற்கடித்து, வலுசர்ப்பத்தையும் நசுக்கிப் போடுவார்களென்றும், திருமறை கூறிய வாக்கு அவர் ஞாபகத்திற்கு வந்திருக்கலாம். ஆதலால் அவர் திடன்குன்றாது அபூர்வ ஊக்கத்துடன் தம் திருத்தொண்டைத் தொடர்ந்துசெய்ய தீர்மானித்தார். சத்துருக்கள் தம்மை வெகுநாள் ஜீவனோடிருந்து போதிக்க விடமாட்டார்களென்று இப்பொழுதே குருநாதர் எண்ணினார்போலும்.

மலைப் பிரசங்கம்

அதிகாலையில் சீடரும் மற்றவர்களும் குருநாதரைத் தேடிவந்தார்கள். அவர் ஒரு குன்றின்மேல் உலாவிக்கொண்டிருந்தார். ஜனங்கள் அவரை அண்மினார்கள். குருநாதர் ஒரு பாறையின்மேல் உட்கார்ந்து கொண்டு, தம் சீடரைப் பேர்சொல்லி யழைத்து அவர்களை தமக்கு முன் அமரச்சொன்னார். அவர்களுக்குப்பின் ஜனங்கள் அமர்ந்தார்கள். சீடரோடு அந்த நாள்முழுதும் சம்பாஷணை செய்தார். அவர்களுக்குப் புகட்டவேண்டிய சில முக்கிய சத்தியங்களைப் புகட்டி, பின் அவர்கள் தம்மோடிருக்கவும், தம்மைப்போல் தெய்வ ராட்சியத்தின் விசேஷ மகிமையை பிரஸ்தாபிக்கவும், தமது அரிய போதனைகளை

உபதேசிக்கவும், பிணியாளிகளை சுகப்படுத்தவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து அபிஷேகம்பண்ணினார். அதேனென்றால், கல்விப் பெருமையும் சுயநீதியும் குடிகொண்ட மனத்தினராகிய ஆசாரியக் கட்சியார் தமது போதகத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்றும், அப்பொழுது தம்மிடம் நன்மைபெற்றவர்களும் மற்ற ஜனங்களும் துன்பகாலத்தில் தமது அரிய உபதேசத்தைக் கடைப்பிடித்துக் காக்கத் துணியாரென்றும் குருநாதர் கண்டார். யூத ஜாதியாருக்கு மட்டுமல்ல, மனுக்குலத்தார் யாவருக்கும் உதவும் தமது அரிய உபதேசமாகிய வித்தை, தம்மை உள்ளக்கனிவுடன் சிநேகித்துப் பாராட்டும் சீடரின் இதயங்களாகிய நன்னிலத்தில் நாட்டுவதே உசிதமென்று கிறிஸ்துநாதர் ஓர்ந்தறிந்தார். அதுமுதற்கொண்டு சீடரைப் பக்குவப்படுத்தி அவர்களை தெய்வ ராட்சியத்தின் தூண்களாக்கிவிடுவதைத் தமது ஜீவியத்தின் முக்கிய நோக்கங்களிலொன்றாகக் கொண்டார். தெய்வ ராட்சியத்தை நிலைநாட்டவென்று அப்பொழுது அபிஷேகம் பண்ணப்பட்ட சீடர்களுக்கு அந்த ராட்சியத்தின் குடிகளின் ஒழுக்கம் யாதென்று கற்பிக்கக் குருநாதர் மலைப்பிரசங்கமென்று உலகெங்கும் பிரசித்திபெற்ற அரிய உபதேச வசனங்களிற் சிலவற்றை அப்பொழுது உரைத்தார். மேற்கண்ட பிரகாரம் பரலோக ராட்சியமென்பது, தமக்கு சுயாதீன சிலாக்கியத்தையும் பெருமையையும் கொடுக்கும் உலக ராட்சியமென்றும், அந்த ராட்சியம் எழும்பும் நன்னாளில் தங்கள் கலிதீர்ந்துபோமென்றும், அந்நிய ஜாதியின் பிரஜைகளாயிருப்பதுபோய், பற்பல ஜாதியாரையும் பாவைத்துக் காரரையும் தம் பிரஜைகளாக்கிக்கொண்டு அதிகாரம் செலுத்துவோமென்றும் யூத ஜனங்கள் எண்ணி ஏங்கியிருந்தார்கள். கிறிஸ்துநாதர் ஸ்தாபிக்கவந்த ராட்சியம் அதற்கு நேர்விரோதமானதும், உலகப் பிரகாரமாக தரித்திரரும், எளியவர்களுமே சுதந்தரிக்கத்தக்க ஆன்ம இராட்சியமென்றும் சீடர் அறிந்துகொள்வது முக்கிய அவசரமாயிருந்தது. ஆதலால் குருநாதர் பின்வருமாறு அவர்களுக்குப் போதித்தார். "எளியவரே பாக்கியர்; பரலோக இராட்சியம் அவர்களுக்கே உரியது. துயருற்றுத் தவிப்போர் பாக்கியர்; அவர்கள் ஆறுதலடைவார்கள். சாந்தகுணமுள்ளோர் பாக்கியர்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். நீதியின்மேல் பசியும் தாகமுங்கொண்டுள்ளோர் பாக்கியர்; அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்ககுணமுள்ளோர்

பாக்கியர்; அவர்கள் இரக்கம்பெறுவார்கள். இருதய சுத்தமுள்ளோர் பாக்கியர்; அவர்கள் தெய்வத்தைக் காண்பார்கள். சமாதானம் பண்ணுகின்றோர் பாக்கியர்; அவர்கள் தெய்வத்தின் புதல்வரெனப்படுவார்கள். நீதியின் நிமித்தம் துன்புறுவோர் பாக்கியர்; பரலோக ராட்சியம் அவர்களுடையதாகும்." பரலோக ராட்சியத்தை நிலைநாட்ட விரும்புவோருக்கும், அதன் குடிகளாக விரும்புவோருக்கும் இருக்கவேண்டிய லக்ஷணங்கள் செல்வம், பெருமை, அதிகாரம் முதலியவையல்ல, எளிமை, சாந்தகுணம், தர்மநாட்டம், இரக்கம், சமாதானம் முதலிய ஆன்ம சீலங்களும், சத்தியத்தைக் கடைபிடித்தொழுகுங்கால் உண்டாகும் துன்பங்களைச் சகிக்கும் மனோதிடனுமேயாகும் என்று குருநாதர் கற்பித்தார். மேலும் தமது சீடர் உலகிற்கு ஒளியைப்போலவும், பண்டங்கள் அழுகிப்போகாது காக்கும் உப்பைப்போலவும் இருக்க வேண்டுமாம்; அவர் தம் ஒளியாகிய நற்கிரியைக்கண்டு மனிதர் பரலோகநாதனைத் துதிக்கத்தக்கவாறு அவர்கள் என்றும் நன்னெறியிலுய்யவேண்டுமாம். அல்லாவிடில் சாரமற்ற உப்பு தெருவில் கொட்டிவிடப்பட்டு, போவோர் வருவோர் கால்களால் மிதிக்கப்பட்டுப் போவதுபோல், தாமெடுத்த மானிடஜென்மம் பயன்படாத வீண் ஜென்மமாகி விடுமென்றும் குருநாதர் தம் சீடரை எச்சரித்தார்.

"அன்பின் வழிய துயிர்நிலை—அஃதில்லார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு."

நாயினூர் விதவைக்கிரங்கினூர்

ஒருநாள் நாயீன் என்ற ஊருக்கு குருநாதர் சீடருடன் செல்லுகையில், ஒரு பிரேதத்தை ஜனங்கள் தூக்கிக்கொண்டு எதிரே வந்தார்கள். தன் ஒரே மகனும் சவரட்சண கர்த்தனுமாயிருந்தவனை இழந்த விதவை, பாடையின் பின்னால் அழுது புலம்பிக்கொண்டு வந்தாள். குருநாதர் அவள்மீது கருணைகூர்ந்தார். பாடையைத்தொட்டு நிறுத்தி, மரித்துப்போன வாலிபனை உயிரோடெழுப்பி அன்னைக்குப் புத்திரதானமளித்தார்.

ஓர் வேசையின் பக்தி

சீமோன் என்ற பரிசேயன் கிறிஸ்துநாதரை விருந்துக் கழைத்திருந்தான். கிறிஸ்துவை நன்குமதித்த பரிசேயர் வெகு சிலரே

அவர்களில் தனவந்தனான இந்த சீமோன் ஒருவன். கிறிஸ்துநாதர் பேதுருவின் வீட்டிலிருந்து, கப்பர்நகூமின் உயர்ந்த இடங்களி லிருந்த சீமோனின் மாளிகைக்கு சென்றார். அங்கு விருந்துண் ணும்பொழுது, ஊரறிந்த வேசை யொருத்தி துணிந்து வீட்டிற்குள் சென்று கிறிஸ்துவின் பாதங்களை தன் கண்ணீரால் கழுவி, கூந்த லால் துடைத்து, திருவடிகளை முத்தஞ்செய்தாள். பின் விலைபெற்ற நளதத்தைலம் நிறைந்த குப்பியை உடைத்து அத்தைலத்தை குருநாத ரின் பாதங்களில் ஊற்றினாள். சீமோன் பிரமித்து "இவள் யாரெனக் கிறிஸ்து அறிந்தாரில்லையோ? இவர் தீர்க்கதரிசியென்பது உண்மை யென்றால் இவள் தன் பாதத்தைத் தொடப் பார்த்துக்கொண்டு பேசாதிருப்பாரோ?" என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டான். கிறிஸ்துநாதர் இவ்வெண்ணத்தை அறிந்து, சீமோனைப் பார்த்து "கடன் வாங்கிய இருவருடைய கடன்களையும், கடன்கொடுத்தவன் மன்னித்துவிட்டான். ஒருவன் வாங்கின கடன் அதிகம். மற்றவன் வாங்கியிருந்த கடன் கொஞ்சம். இவ்விருவரில், எவன் கடனை மன்னித்தவனிடம் மிகுந்த விசுவாசங் காட்டுவான்? சொல்லும் பார்ப் போம்" என்று கேட்டார். "அதிகக் கடன் பெற்றிருந்தவனாய்த்தா னிருக்கவேண்டும்" என்று சீமோன் சற்று சலிப்பாகச் சொன்னான். அப்பொழுது கிறிஸ்து சீமோனுக்குச் சொன்னதாவது "நீ, சரியாய்ச் சொன்னாய். நான் இங்கு வந்தபொழுது சாதாரணமாகச் செய்ய வேண்டிய மரியாதையையும் நீ எனக்குச் செய்ய மறந்துபோனாய். இந்த ஏழைப்பெண், என் கால்களை கழுவ தண்ணீருக்குப் பதிலாகத் தன் கண்ணீரைத் தந்தாள், தன் கூந்தலால் என் பாதங்களைத் துடைத்து முத்தமிட்டாள். அதேனென்றால் அவள் செய்த பாதகம் பெரிது; அதை நான் மன்னித்தேன்." பின், அப்பெண்ணைப் பார்த்து "மகளே, உன் பக்தி பெரிது; உன் பாவங்களையெல்லாம் மன்னித் தேன்; நீ இனி சமாதானமாய் வாழ்ந்திருப்பாயாக!" என்று நல்வாக் களித்து அனுப்பினார். இவள் வேசித்தனத்தில் பிரியங்கொண்டிருந்த பெண்ணல்ல. ஏதோ மதிமயங்கி ஒருமுறை பாவச்சேற்றில் விழுந்து, கைகொடுத்துத் தூக்கி விடுவாரில்லாததால் அந்த மானக்கேடான ஜீவியத்தைச் செய்துகொண்டிருந்தாள். உத்தமராயிருக்கும் தொண் ணூற்றொன்பது பேரைக்குறித்து சந்தோஷப்படுவதைப் பார்க்கிலும், மனந்திரும்பும் ஒரு பாவியைக்குறித்து விண்ணுலகோர் மிகுந்த சந்

தோஷங் கொள்ளுகிறார்களென்றும்; வருத்தப்பட்டுப் பாவமென்னும் பாரத்தைச் சுமந்து தவிப்பவர்களே, என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றும்; நான் இழந்து கைவிடப்பட்ட ஆன்மாக்களைத் தேடி இரட்சிக்க வந்தேனென்றும் கருணாநிதி, கப்பர்நகூமின் கடற்கரையிற் கூறிய வார்த்தைகளைக் கேட்டு இவள் தைரியமடைந்து சீர்ப்பட்டவள். ஒருவேளை குருநாதரை நேரில் கண்டு தன் பரிதாப நிலையைச் சொல்லி அபயமிட்டிருக்கலாம். கிறிஸ்து அவளுக்கு தைரியங் கூறி தன் தாய் வீட்டிற்குப்போய் கிரமமாய் பிழைக்கக் கற்பித்திருக்கலாம். மரணத்திலும் கொடிதான மானக்கேட்டிலிருந்து தப்பிக்கொள்ள வழிகாட்டிய புண்ணிய புருஷனுக்கு பகிரங்கமாகத் தன் நன்றியைக் காட்ட அவள் அவர் பாதங்களைக் கண்ணீராற் கழுவிக் கூந்தலால் துடைத்து முத்தமிட்டாள்.

பாவரோக மருந்து

இதைப்போன்ற மற்றொரு சம்பவமும் கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தில் காணப்படுகிறது. அச்சம்பவம் இதற்குப் பதினைந்து மாதங்களுக்குப்பின் எருசலேமில் நேர்ந்தது. அதை இங்கு கவனிப்பதால் கிறிஸ்துநாதர் கையாடிய இரட்சண்ய முறையின் ஓர் விசேஷத்தைக் காணலாம். கிறிஸ்து மோசேயின் பிரமாணங்களை அவமாக்குகின்றாரென்று ரூபித்துக்காட்ட விரும்பிய மாற்றலர், விபசாரத்தில் கையும் களவுமாயகப்பட்ட நிர்ப்பந்த மனுஷி ஒருவளை அவரிடம் இழுத்துக்கொண்டு வந்து "இவள் செய்த குற்றத்திற்கு மோசேயின் பிரமாணம் விதிக்கும் தண்டனை யாதெனில் கல்லால் அடித்துக் கொல்லப்படுவதே. இவளை என்ன செய்யலாம்?" என்று கேட்டார்கள். "உங்களில் இவ்விதக் குற்றம் செய்யாதவன் எவனோ அவன் இவள்மேல் முந்தி கல் எறியட்டும்" என்று கிறிஸ்து சொன்னார். வெட்கமும் திகிலும் அடைந்து நடுங்கிநின்ற அவ்வணங்கின் பரிதாப நிலையைப் பார்க்க மனமொண்ணாது அவர் தலை கவிழ்ந்து விரலால் மண்ணில் ஏதோ எழுதுவதுபோல் பாவித்தார். சில விநாடிகள் பொறுத்து அவர் ஏறிட்டுப் பார்க்கையில், அந்தப் பெண்ணைத் தவிர வேறொருவரும் அங்கில்லை. அந்தப் பொல்லாத மனிதருடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்திற்று. மானைத் தப்பவிட்ட

வேட்டை நாய்களைப்போல், அவர்கள் தலைகவிழ்ந்து வந்தவழியே மீண்டு சென்றுர்கள். எம்பெருமான் அவளைப் பார்த்து "உன்னைக் குற்றப்படுத்தித் தண்டிக்க வந்தவர்கள் எங்கே?" என்றுர். அவள்; "ஆண்டவரே, அவர்கள் யாவரும் போய்விட்டார்கள்" என்றுள். "நானும் உன்னைக் குற்றப்படுத்தித் தண்டியேன். நீ இனி இத்தீச் செயலைச் செய்யாது ஒழி!" என்று கிறிஸ்து அவளுக்கு அஞ்சல் கூறி மன்னிப்பும் புனித சிந்தையும் அளித்தனுப்பினுர். இவ்விரண்டு சம்பவங்களும் பாவிகளென்று உலகம் இகழ்ந்து தள்ளியவர்கள்மீது எம்பெருமான் கொண்ட கருணையையும், அக்கருணை தீயோரைப் புனிதராக்கும் ஆன்ம சக்தியாய் விளங்கியதையும் காட்டுகின்றன. பாவப்பிணிக்கு உலகத்தார் கையாடும் மருந்து அவதூறும், நிந்தையும், தண்டனையுமே. ஆன்மப்பிணி தீர்க்கும் அரிய பண்டிதராகிய கிறிஸ்துபிரான் கையாடிய மருந்தோ கங்கு கறையற்ற காருண்ய சிநேகமாம். முந்தின் சிகிச்சை துன்புறுத்தி அழிக்கும் இயல்புடையது; பிந்தினதோவெனில், அஞ்சல் கூறி அரவணைத்துக் காக்கும் இயல்புடையது. ஈசனது நிகரற்ற பாசத்திற்கொத்த சுத்த பரிபூரண வன்புகொண்ட மனத்தினரே அம்முறையைக் கையாடி, பாவப்பிணி கொண்டோரை சிட்சிப்பதற்குப் பதிலாக இரட்சிக்கும் ஆற்றலுடையவராவார். எம்பெருமான் அத்தகைய அன்புகொண்டவர். அவர் கடாட்சித்து மன்னிப்பளிக்க, பாவப் படுகடன் நீங்கியதென்ற அக மகிழ்ச்சியுடன், பாவ சோதனையை மேற்கொள்ளும் பரம சக்தியையும் மனிதர் பெற்றுக்கொண்டனர். இத்தராதலத்தில் குருநாதரைப் போன்ற காருண்ய வள்ளல்கள் பலர் தோன்றுததால், அரிதும் தவறுததுமான இச் சித்திவழி மெய்வழியென்று மானிடர் பூரண நம்பிக்கைகொண்டு கடைப்பிடியாது, அன்பற்ற கொடிய சிட்சைகளையே இன்னும் கையாடி வருகின்றனர்.

குருநாதர் ஓர் பித்தனும்

கிறிஸ்துநாதர் கப்பர்நகூமில் பேதுருவின் வீட்டில் உபதேசித்துக் கொண்டிருக்கையில், எருசலேமிலிருந்து வந்த சில வேதபாரகர் அவரைத் தூஷித்தார்கள். குருநாதர் பித்தனென்றும், அவர் பிணிகளைத் தீர்ப்பதும், பேய்களை துரத்துவதும் தெய்வ பலத்தாலல்லாது, பேய்க்கணத்தின் தலைவனுகிய பெயல்செபூல் என்ற பெரிய பேயின்

துணையாலென்றும் அவதூறுபண்ணினார்கள். எம்பெருமான் மனம் பதறாது, அவர்கள் சொல்வது புத்திக்கொவ்வாத வாதென்று பின் வருமாறு தெளியக் காட்டினார். "தனக்குத்தானே விரோதித்தெழும் பும் குடி வாழாதன்றோ? ஆதலால் பேய்க்கணத்தின் தலைவனே பேய்களைத் துரத்தத் துணைசெய்வானாகில், பேய்களின் கதி என்ன வாகும்? அது நம்பக்கூடாத விபரீதக்கொள்கை. தவிர உங்களிலும் சிலர் பேய்களை ஓட்டுகின்றார்களே, அது பேய்களின் உதவியால்தா னே? தெய்வ பரிசுத்த ஆன்மன் கிருபையால் நிகழும் நற்கிரியை பேயினாலானதென்று கூறுவதிலும் கொடிய தேவதூஷணம் பிறி தொன்றில்லை. அக்குற்றத்தைக் கருணாம்பரக் கடவுள்தானும் பொறுக்க வொண்ணார்" என்று கிறிஸ்து பதிலுரைத்தார்.

எம்பிரானை உன்மத்தனெனத் தீர்த்தவர்கள் பரிசேயரும் வேத பாரகர்மட்டுமன்று. அவர் சகோதரரும் தாயாரும் அவர் மதவெறி கொண்டு நிலைதடுமாறி நின்றாரெனக் கருதினர். நாசரேத்தூரிலிருந்து கப்பர்நகூமிற்கு அவரைத் தேடிவந்து, அவரை வீட்டிற்கு அழைத் துச் செல்ல நினைத்தனர். இயேசுநாதர் தாமே மேசியாவென்று நிச்ச யித்து கிரியைசெய்யத் தலைப்பட்டபொழுது, அவர் ரோம அரசாங்கத் தைக் குலைத்து, யூதநாட்டைக் கைப்பற்றி ஆளுவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்வாரென்று அவர்கள் எண்ணியிருந்தனர். அவர் கலிலேயாவில் சுற்றித்திரிந்தபொழுது, அவர் சகோதரர் அவரை எருசலேமிற்குப் போகவேண்டுமென்று ஏவினார்கள். "என் வேளை இன்னும் வரவில்லை" என்று குருநாதர் அப்பொழுது சொல்லிவிட் டார். இன்னும் அவர் அரசாங்கத்தைக் கவர்ந்துகொள்வதற்குரிய முயற்சி யொன்றும் செய்தாரில்லை. கலிலேயாவில் சுற்றியலைந்து வலையர், ஆயக்காரர்போன்ற நீசரைத் தம் தொண்டராகத் தெரிந்து கொண்டு, கடைப்பிடிப்பதற்கரிய உபதேசங்களைப் பிதற்றிக்கொண்டு, நாட்டில் செல்வாக்குடைய பரிசேயர், ஏரோதியரை விரோதித்துக் கொண்டு வீண்பொழுது போக்குகின்றார். அவர் அரச விமரிசை யடைய முயன்றது போதும்; தம்பி தன் உயிரையும் காப்பாற்றிக் கொள்ளமாட்டார் போலிருக்கிறது. வீட்டிலிருந்து முன்போலத் தச்சுவேலை செய்தாலும் ஏதோ லாபமுண்டு என்று அவர்கள் நினைத் தார்கள்.

"என் அன்னை யார்?"

அவர்கள் கப்பர்நகூமிற்கு வந்தபொழுது, குருநாதர் தம்மைச் சூழ்ந்து நெருங்கி நின்ற நண்பருக்கு உபதேசம் அருளிக்கொண்டிருந்தார். தாயாரும் சகோதரரும் அக்கூட்டத்திற்குப் புறம்பே தம்மைத் தேடி நிற்பதைக் கேள்வியுற்றபொழுது, அவர்கள் வந்த நோக்கத்தை அறிந்து, "எனதன்னை யார்? என் சகோதரர் யார்? தெய்வ சித்தத்தைக்கண்டு கைப்பற்றியொழுக முயலும் நீங்களே என் தாயும், சகோதரனும், சகோதரியுமாவீர்கள்" என்றும் தமது சீடரைச் சுட்டிக் காட்டி, "இதோ, என் தாயும் சகோதரரும் இவர்களே!" என்றும் கிறிஸ்து பேசினர். தன் சகோதரரையும், தன்னைப் பெற்று வளர்த்த தாயையும்கூட கிறிஸ்துநாதர் இச்சமயம் விரோதித்து மறுதலித்ததாகத் தோன்றுகின்றது. தமது தொண்டருக்கு வரும் சங்கடங்களைப்பற்றி சீடருடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, தம்மைப் பின்பற்ற விரும்புவோரை அவர்கள் சொந்த வீட்டாரே விரோதிப்பார்களென்றும், அதற்கஞ்சி பின்வாங்கப்படாதென்றும் குருநாதர் சொன்னர். என்னைச் சிநேகிப்பதைவிட தன் தாயையாவது, தந்தையையாவது அதிகமாகச் சிநேகிப்பவன் என் தொண்டனுக அருகனல்லன் என்னைச் சிநேகிப்பதைக்காட்டிலும் தன் மகனையாவது மகளையாவது அதிகமாய்ச் சிநேகிப்பவன் என் தொண்டனுக அருகனல்லன்; லௌகீக எண்ணமுற்றவர் இழைக்கும் துன்பமாகிய பாரச் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்பற்ற மனமற்றவன் என் தொண்டனுக அருகனல்லன்" என்று கிறிஸ்துநாதர் மும்முறை வற்புறுத்திக் கூறினர். ஈசனது திருவடிக் கமலமொன்றையே பற்றிக்கொள்ள விரும்புபவர் உலகப்பற்றுகளனைத்தையும் அறுத்து களைவது அத்தியாவசியமென்று போதித்த நாதர், தமது அன்பிற்குறிய தாயும் சகோதரரும் ஈசன் தமக்கு விதித்த கடினமான பாதையினின்று தம்மைத் திருப்ப முயன்றபொழுது, அவர்கள் பற்றைக் களைந்தெரியத் தாமதிக்கலாமோ? அவர்களும் தமக்கு உரிய தொண்டராகி யிருப்பரேல் குருநாதர் கண்கள் ஆனந்த பாஷ்பம் சொரிந்திராதோ? இப்பொழுது தெய்வ கற்பனையைச் சிர மேற்கொண்டு, தம்மைச் சோதிக்க வந்த சகோதரரையும், தாயாரையும் பாராமல், அவர்களை மனமுடைந்துபோக விட்டது, எம்பெருமானின் அன்பார்ந்த உள்ளத்தைப் பிளக்கவில்லையோ?

பெரும்புயல்

நாளெல்லாம் மாந்தருக்குப் போதித்து, பிணியாளிகளைச் சுகப் படுத்தி அலுத்துப்போனதால் கிறிஸ்துநாதர் சற்று இளைப்பாற விரும்பி, படவில் ஏறி கப்பர்நகூமிற்கு எதிர் கரைக்குப் போகப் புறப்பட்டார். அன்று அவர் பிரசங்கிக்கக் கேட்ட மனிதரிற் சிலரும் படவுகளில் அவரோடுகூடச் சென்றூர்கள். புறப்படும்பொழுதே கடல் சற்று கொந்தளிப்பாய் இருந்தது. படவுகள் நடுக்கடலிற்கு வந்தபொழுது காற்று பலங்கொண்டு வீசிற்று. படவுகள் புயலில் த்த்தளித்தன; தேர்ந்த மாலுமிகளின் நெஞ்சமும் திகில்கொண்டயர்ந் தது. அக்கணம் கிறிஸ்துநாதர் படவின் அடித்தட்டில் அயர்ந்து துயில்கொள்வாராயினர். சீடர் அவரை எழுப்பி, "ஆண்டவரே! புயல் பலமாயடிக்கிறது; படவுகள் கவிழ்ந்துபோமெனப் பயப்படுகின் ரேும்" என்றூர்கள். அவர்களிலொருவன், "ஆண்டவரே! நாங்கள் யாவரும் கடலிலாழ்ந்து மாண்டுபோகிரேும். உமக்கு கவையில்லை யோ?" என்று பதறிப் பேசினன். குருநாதர் எழுந்தார்; கொந்தளித் துப் பொங்கிய கடலைக் கண்டார். சிறிதும் கலங்காது, காற்றையும் கடலையும் பார்த்து "சாந்தம்! அமர்ந்திரு!" என்று ஆக்ஞாபித்தார். உடனே காற்றடங்கிற்று. கடல் கொந்தளிப்பின்றி அமர்ந்தது. யாவ ரும் பிரமிப்படைந்தார்கள். சீஷரல்லாத மற்றவர்கள் "இவர் மானிடப் பிறவிதானே? காற்றுங்கடலும் இவர் சொல்லுக்கடங்கு கின்றனவே!" என்று ஒருவர்க்கொருவர் சொல்லி வியந்தார்கள்.

கதரேனருக்கு ஞான உபதேசத்தினும் விழுது பன்றிகள்

கதிரவன் செவ்வானமிட் டெழும்பியபொழுது, படவுகள் கலிலே யாக் கடலின் தென்மேற்குக் கரையைச் சேர்ந்தன. எதிரே இருந்த கிராமம் புறமதத்தரான கதரேனர் என்னும் ஜாதியாரின் கிராமம். யாவரும் அக்கிராமத்திற்குச் சென்றூர்கள். வழியில் ஓர் மயான நிலத்தைக் கடக்க நேர்ந்தது. அதை அண்மியபொழுது, பாதாள லோகப் படுகணங்களின் அமளிக்கொத்த பேரமளி அவர்கள் செவி களைத் தாக்கிற்று. ஆவேசங்கொண்ட பித்தனெருவன், நிர்வாணனய், குதித்துக் கொக்கரித்துக்கொண்டு நின்றூன். அவன் கால் கரங்களில் இருப்புச் சங்கிலித் துண்டுகள் தொங்கின. இவன்தான் அத்திசை யெங்கும் ஜனங்களைக் கலங்கச்செய்துவந்த லேகியோன் என்ற

பேயன். அவனைப் பலதரம் சங்கிலிகளால் பிணைத்துக் கட்டியும் அடக்கக்கூடாதிருந்தது. இவர்களைக் கண்டவுடன், அவன் தலைவிரி கோலமாய் இவர்கள்மேற் பாய்ந்துவந்தான். யாவரும் நடுநடுங்கிச் செய்வதின்னதெனத் தெரியாது திகைத்து நின்றார்கள். எம்பெருமான் வாயுவேகமாய்ப் பறந்துவந்து பித்தனுக்கு எதிர்கொண்டு சென்றார். இருவரும் நெருங்கியபொழுது ஓடிவந்த பித்தன் திடீரென்று நின்று, குருநாதரைக் கண்கொண்டு பார்த்தான். முகங்குப்புற அவர் பாதத்தில் விழுந்தான். பின் எழுந்து நின்று, "இயேசுநாதா! பராபரனின் சுதனே! உமக்கும் எனக்கும் என்ன தொந்தம்? ஈசனை முன்னிட்டுக் கெஞ்சுகிறேன்; என்னை உபாதிக்கவேண்டாம்!" என்றான். குருநாதர் வெகு சாந்தமாக "உன் பேர் என்ன?" என்றார். "என் பேர் லேகியோன், ஏனென்றால் நாங்கள் அநேகர்," என்று பித்தன் சொன்னான். "அசுத்த ஆவியே! இவனைவிட்டு வெளிப்படு," என்று கிறிஸ்துநாதர் ஆக்ஞாபித்தார். அவன் பித்தம் தெளிந்து அமர்ந்தான். குருநாதரோடு வந்தவர்கள் அவனுக்கு ஆடையளிக்க அதைக் கையேந்திப் பெற்று அணிந்துகொண்டான். இதற்கிடையில், அங்கு மேய்ந்துகொண்டிருந்த பன்றிகள், இவனிட்ட கூச்சலைக்கேட்டு பயந்ததாலோ, மற்றெக்காரணத்தாலோ, ஒருங்கே சட்டெனக் கடலில் பாய்ந்து ஆழ்ந்துபோயின. பன்றிகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்கள் ஊருக்கு ஓடி, நடந்த யாவையும் ஊராருக்குச் சொன்னார்கள். அந்த ஊரார் அங்கு வந்தபொழுது தங்களைப் பயமுறுத்திவந்த பித்தன் உடையணிந்து சொஸ்த புத்தியுடையவனாய் குருநாதரின் பாதப்படியிலுட்கார்ந்திருப்பதைக் கண்டு பிரமிப்பும் பயமுமடைந்தார்கள்; குருநாதர் அவர்கள் எல்லையைவிட்டுப் போய்விடவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டார்கள். இவர் தங்கள் ஊரில் அடி வைக்குமுன்னரே தங்கள் பன்றிகளெல்லாம் நாசமாயின; இவர் ஊருக்குள் வந்தால் என்னென்ன நஷ்டங்கள் விளையுமோவெனப் பயந்து, அருள்நாதரைத் தங்கள் ஊரைவிட்டுத் துரத்திவிட்டார்கள். அவர்கள் மதியீனத்தை அறிந்து துக்கித்தவராய், குருநாதர் சீடருடன் கப்பர்நகூமிற்குத் திரும்பினார்.

"என்னைத் தொட்டது யார்?"

கப்பர்நகூமின் இறங்கு துறையில் குருநாதர் கால் வைத்தவுடன், சென்ற இரவில் அவர் காற்றையும் கடலையும் அதட்டி அமர்த்திய

செய்தியையும், கடலின் கொந்தளிப்பைக்காட்டினும் மும்முரமாய்க் கொந்தளித்தலட்டிய பேயைத் துரத்திய செய்தியையும் கேள்வியுற்ற கப்பர்நகூம் வாசிகள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். சென்ற இரவெல்லாம் வீட்டிற்கும் கடற்கரைக்கும் திரும்பத்திரும்ப வந்து ஆண்டவர் எப்பொழுது வருவாரோவென அங்கலாய்த்துத் தவித்த ஜெபாலயத் தலைவனும் அக்கும்பலிலிருந்தான். அவன் மகள் அன்றிரவெல்லாம் பாம்பின் வாய்த் தவளைபோல் மரணவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தாள். அவன் ஜனங்களை இடித்துத் தள்ளிக் கொண்டு ஆண்டவரின்முன் வந்து நின்று "நாதா! ஆபத்பாந்தவா! என் மகள் மரித்துப்போகின்றாள். தேவரீர் தம் திருக்கரங்களால் அவளைத் தொடுவீராகில், அவள் பிழைப்பாள்" என்று ஏங்கி இரந்து நின்றான். அருள்நாதர் உடனே அவன் வீட்டைநோக்கிச் சென்றார். ஜனங்களும் பின்தொடர்ந்தனர். போகும் வழியில் பன்னீராண்டு களாய்ப் பெரும்பாடென்னும் கொடிய நோயால் நைந்து வருந்தி, வைத்தியருக்குப் பணத்தை இறைத்தும் சுகமடையாது துன்புற்றிருந்த பெண் ஒருத்தி வந்தாள். குருநாதர் முன்னின்று தன் குறையைச் சொல்லிக்கொள்ள நாணமுற்று, எவரும் அறியாவண்ணம், அக்கும் பலில் நுழைந்து, எம்பெருமான் வஸ்திரத் தொங்கலை விசுவாச பக்தி யோடு தொட்டனள். உடனே அவள் குணமடைந்தாள். தம்மிலிருந்து வல்லமை சென்றதைக் குருநாதர் அறிந்தார். அவர் பிணியை நீக்கிய பொழுதெல்லாம் ஏதோ வோர் அரிய தேக மனோசத்துவம் அவரி லிருந்து பிணியாளிக்குள் பாய்ந்து சுகமளித்ததாகத் தோன்றுகின்றது. இப்பொழுது அச்சக்தி சொரிந்ததை யுணர்ந்ததால் "என்னைத் தொட் டது யார்?" என்று கிறிஸ்துநாதர் கேட்டார். "உம்மை நெருங்கியிருக் கும் இப்பெருங்கூட்டத்தில் உம்மைத் தொட்டது யாரென அறிவதெங் ஙனம்?" எனச் சீடர் பகர்ந்து புன்னகை நகைத்தனர். என்றபோதிலும் குருநாதர் சுற்றிப்பார்த்தார். அப்பொழுது நகைத்த சீடரை வெட்க முறுத்திய வோர் சம்பவம் நேர்ந்தது. வஸ்திரத் தொங்கலைத் தொட்ட மடந்தை பயத்தோடும் நடுக்கத்தோடும் எம்பிரான்முன் வந்து அவர் திருக்கால்களை இருகரங்களாலும்தொட்டு நமஸ்கரித்து தனக்குக் கிடை த்த அற்புத சுகத்தை அறிக்கையிட்டாள். "மகளே! உன் பக்தி விசு வாசமே உனக்குக் குணமளித்தது. சமாதானமாய் போய்வா. இனி அப்பிணி யுன்னை வருத்தாது" என்று எம்பெருமான் ஆசிகூறினர்.

"தலித்தாகூமி"

இதனால் குருநாதர் தாமதித்தது இரண்டொரு நாழிகையேயாயி னும், மகளை நினைத்து மனம்பதறிய ஜெபாலயத் தலைவனுக்கு அது ஒரு யுகம்போல் தோன்றிற்று. ஐயோ! இதற்குள் மகள் எக்கதியானு ளோவென்று அவன் எண்ணிக்கொண்டிருக்கையில் வேலைக்கார னோடி வந்து "ஐயா, ஆண்டவரை இனித் தொந்தரவுசெய்யவேண் டாம். பிள்ளை பரலோகம் சென்றுவிட்டாள்" என்று சொன்னான். "ஐயோ! என் செய்வேன்! குருநாதர் வந்துவிட்டார்; என் கலி தீர்ந்த தென வெண்ணி இழந்த நம்பிக்கையைத் திரும்பவடைந்த எனக்கு கைக்கெட்டினது வாய்க்கெட்டாது போயிற்றே!" என்று தந்தை மனம் பதைக்க கண்ணீர் ததும்ப வாய்குழறி யோலமிட்டான். "அஞ்சேல்! ஐயமுறேல்!" எனக் குருநாதர் அவனைத் தேற்றினர். யாவரும் விரைந்து சென்றனர். பேதுரு, யோவான், யாக்கோபு என்னும்மூன்று சீடரையும், அன்னை தந்தையரையும்மட்டும் குருநாதர் வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்த வர்களை நோக்கி "கூக்குரல் என்னத்திற்கு? சிறுமி மரித்துப்போக வில்லை. நித்திரைசெய்கிறாள். அழாதேயுங்கள்," என்று குருநாதர் சொன்னார். கூலிக்கு ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தவர்கள் நகைத் துப் பகடிபண்ணினார்கள். அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, பிரேதத்தின் கரத்தைப் பிடித்து "தலித்தாகூமி" (பிள்ளாய்! எழுந் திரு) என்று கனிவுடனுரைத்தார். உடனே குழந்தை எழுந்து உட்கார்ந்தாள். அவளுக்கு கொஞ்சம் அமுதளிக்கச் சொல்லிவிட்டு, பெற்றோர் உவந்துரைத்த நன்றி மொழிகளையும் நின்று கேட்காது எம்பிரான் சரேலென்று வீட்டைவிட்டு வெளியே சென்றார்.

இரண்டு குருடர்

வெளியே வந்தவுடன் "தாவீதரசன் மைந்தா! எம்மீதிரங்குவீர் ஐயா!" என்ற தொனி குருநாதர் செவிக்கெட்டிற்று. இரண்டு குருடர் வாசற்படியில் நின்றுகொண்டிருந்தார்கள். "நான் உங்களுக்கு பார்வையளிக்கக் கூடுமென்று நம்புகின்றீர்களா?" என்று குருநாதர் அவர்களைக் கேட்டார். "ஆமாம்! ஆண்டவரே, நம்புகிறோம்," என் றார்கள். கிறிஸ்துநாதர் அவர்கள் கண்களைத தொட்டு, "நீங்கள் நம்பியபடி பார்வையடைவீர்களாக" என்று நல்வாக்களித்தார். குருடர் பார்வையடைந்தனர்.

அத்தியாயம் 7.

தொண்டர் பயிற்சி

கி. பி. 29.

சீடரைப் பரிபக்குவப்படுத்தல்

கிறிஸ்துநாதர் தெய்வ ராட்சியத்தை மேதினியில் நிலைநாட்ட முயன்றதில் பற்பல எத்தனங்களையும், முறைகளையும் கையாடினர், முதற்கண் யூத மார்க்கத்தின் புண்ணிய க்ஷேத்திரமாகிய எருசலேம் நகரையும், யூதேயா நாட்டையும் தாக்கினர். பின்னர் கலிலேயா நாட்டின் கிராமங்களிலும் பட்டணங்களிலும் தமக்குத் தொண்டரை சம்பாதிக்க முயன்றனர். ஆசாரியக்குழுவினர் இங்கும் அவரை விரோதித்து அவதூறுபண்ணுவாராயினர். சாதாரண மாந்தர் அவர் கண் பற்றுற்றோராயினும், அவர் தம் உன்னத உபதேசத்தைச் செவ்வனே விளங்கிக்கொள்ளப் போந்த விவேகமுமுள்ளவரல்லர். ஆதலின், குருநாதர் தம்மோடிணைபிரியாது பழகிவரும் தம் சீடரகத்தே தெய்வராட்சியத்தை ஊன்றிவிடக் கருதினரென மேலே யுரைத்தது காண்க. அக்கருத்திற்கிசைய, சீடரைப் பல்வேறு முறையே பயிற்றுவிப்பாராயினர்.

சீடரைப் போதிக்க அனுப்புதல்

இப்பொழுது அவர்களடைந்துள்ள தேர்ச்சியைப் பரிசோதிக்குமாறு, அவர்களை இருவர் இருவராகத் தொகுத்து, தெய்வ ராட்சிய பிரகடனம் பண்ணிவர கலிலேயாவின் நான்கு திக்குகளுக்கும் செல்லவிட்டார். தாமடைந்த நவபோதகத்தை பிறருக்குப் புகட்டவும், தெய்வ ராட்சியத்தின் சிறப்பை விளங்கத்தோற்றுவிக்கும் அற்புத ஆரோக்கிய வரத்தை உபயோகிக்கவும் அவர்களுக்குக் கற்பித்தார். குருநாதர் சென்றவிடமெல்லாம் ஜனங்கள் அளவற்ற வாஞ்சையோடு அவர் கூறிய நற்செய்தியைக் கேட்டதைக் கவனித்தபொழுது, மேய்ப்பனில்லாத ஆடுகள் சிதறுண்டலையும் வண்ணம் இஸ்ரவேலராகிய ஜனங்கள் தம்மை மெய்வழி யுய்க்கத்

தக்க போதகுசிரியரில்லாது போயினதால் திசைகெட்டுத் தடுமாறி நிற்கின்றுரென அவர் ஓர்ந்து பரிதபித்தனர். ஈசன் அவர்களைத் தடுத் தாட்கொள்ளக் காத்து நிற்பதை அறிவிக்க மெய்த்தொண்டர் சிலர் எழும்புவரேல், முதிர்ந்த பயிரை யறுத்துக் களஞ்சியத்தில் சேர்க்கு மாப்போல், இஸ்ரவேல்புத்திரரைத் தெய்வ ராட்சியத்தில் சேர்த்துவிட லாகுமெனக் குருநாதர் நம்பினர். ஆதலால், தம் சீடரைப் பார்த்து "அறுப்பு மிகுதி; பயிரை அறுத்துக் களஞ்சியத்திற் சேர்க்க வேலை யாட்கள் இல்லாதிருப்பதொன்றே குறை; ஆண்டவர் போதிய அறுப் பாளரை ஆயத்தப்படுத்தி யனுப்பவேணுமாய் அவரை வேண்டிக்கொள் வீர்களாக" என்று முன்னர் கூறினர். இப்பொழுது தம் சீடரையே அவ்வேலையைச் செய்யக் குறித்தனுப்பச் சித்தங்கொண்டார். இந்தப் பிரயாணத்திற்கென்று, தடியும் பாதரட்சையும் தவிர, பணம் மாற் றுடை முதலியதொன்றையும் அவர்கள் கொண்டுபோகக்கூடாதென் றும், போகுமிடங்களில் அவர்களை உபசரித்து சாப்பாடு வழங்கின் உண்டு, வழங்காவிடின் வேறு இடங்களுக்குப்போய் உபசரிப்பு கிடைத்தவிடம் சிலநாட் தங்கி, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டு மென்றும் அவர்களுக்குக் கட்டளையிட்டார். கௌதம புத்தர் தமது ஞான உபதேசத்தைக் கற்பிக்க அனுப்பிய பிக்ஷுக்களைப்போல், இவர் கள் ஓடும் கையுமாய்ச் சென்று கிறிஸ்துநாதர் தகைமையையும், அவர் போதக மகத்துவத்தையும் ஊர்ஊராய்ப் பறை சாற்றினர்.

ஸ்நானகர் கொலையுண்டு மரித்தார்

குருநாதர் கப்பர்நகூமில் சிலநாட் தங்கி இளைப்பாறினர். தியான நிஷ்டையும் செய்தனர். ஏரோது அந்திப்பா யோவான் ஸ்நானகரைக் கொன்ற கொடுஞ்செயல் அப்பொழுது அவர் செவிக்கு எட்டியது. தாம் நிலைநிறுத்த வந்த தெய்வ ராட்சியம் ஓங்கித் தழைக்க முதற்பலி யாக தமது நண்பன் ஸ்நானகன் மரித்தானெனக் குருநாதர் எண்ணி விசனமுற்றுர். யோவான் ஸ்நானகர் தன் குற்றத்தைக் கண்டித்த தால், பாம்பு கீரியைப் பகைப்பதுபோல் ஏரோதியாள் ஸ்நானகரை தீராப்பகையாய் பகைத்தாள். தக்க சமயம் வாய்த்தபொழுது, அவர் சிரத்தைச் சேதித்து தனக்கு நன்கொடையாகக் கொடுக்க ஏரோது ராயனைக் கேட்கவேண்டுமென்று அந்த வன்நெஞ்சத்தினள்

தன் மகளுக்குத் துர்ப்புத்தி புகட்டினள். அவ்வாறே அவள் கேட்க, ராயனும் தன் ஆணையை மறுக்கத் துணியாது சம்மதித்தான். இஃதோர் தலைக்கிடக்க, ஸ்நானகருடைய சீடர்கள் தொகையில் அதிகரித்து வந்தது தன் அரசாட்சிக்குப் பெருத்த இடைஞ்சலுண்டாக்குமென்றும் ஏரோது பயந்தான். தன் முதல் மனையாளின் தகப்பன் அரிதாஸ் என்பவன்மீது படையெடுத்துச் சென்ற தன் சைனியம் தோல்வியடைந்ததற்கு ஓர் காரணம் அச்சைனியத்தின் போர்வீரரிற் பலர் ஸ்நானகர்தம் உபதேசத்தைக் கேட்டு அப்போரில் பொருதாது திரும்பினதே. அதுகாரணம்பற்றியும் ஸ்நானகரை அப்புறப்படுத்துவது உசிதமென ஏரோதரசன் எண்ணியிருக்கலாம். என்றாலும், அப்பொழுது தான் மதியிழந்து கூறிய வாக்கினிமித்தம் ஏரோதியாளின் வர்மத்தைத் தீர்க்க ஸ்நானகரைக் கொல்விக்க நேர்ந்தது ஏரோதரசனுக்கு மனக்கசப்பாக விருந்தது. தவிர ஆசாரியக் கூட்டத்தாரல்லாத ஏனைய யூதரனைவரும் ஸ்நானகரை அரிய தபோதனரென்றும் சத்புருஷரென்றும் பெரிதும் பாராட்டினர். அவரைச் சிறையிலிருத்தியதே ஜனங்களுக்குத் துக்கத்தை விளைத்தது. குலமகளிர்க்குரிய நாணத்தை யொழித்து, விலைமகள் போல் சபைமுன் நடனமாடிய ஏரோதியாளின் மகளுக்கு ஸ்நானகரின் தலையைத் தாம்பாளத்தில் வைத்துப் பரிசாகவளிக்க ஏரோது சம்மதித்த மதியீனச் செயலைக் கேள்வியுற்றபொழுது, யூத ஜனங்களினுள்ளம் கொதித்தது. ஆதலால் ஏரோதின் நெஞ்சங் கலங்கிற்று.

கிறிஸ்துநாதரின் சீடர்கள் இச்சமயம் பற்பல கிராமங்களையும் நகரங்களையும் சந்தித்துப் பிரசங்கித்துவந்தது ஏரோது ராயன் மனத்தில் சந்தேகத்தை யெழுப்பிற்று. கிறிஸ்து ஜனங்களைக் கலகஞ்செய்ய தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றாரோவென்றும் ஏரோது எண்ணினன். கிறிஸ்துநாதர் செய்த அற்புதக் கிரியைகளைக் கேள்வியுற்று, தான் கொன்றுவித்த யோவான் ஸ்நானகரே கிறிஸ்துவாக மறுமுறை உதித்தனரோவென்றும் எண்ணிக் கலங்குவானாயினன். நிகழ்ந்த சம்பவங்க ளிவ்வாறிருத்தலின், ஏரோது கிறிஸ்துநாதரைக் காண வாஞ்சிப்பதாகவும், அவர் தன் அரண்மனைக்கு வருவது பேருபகாரமாகுமெனவும் சொல்லி, அவரைத் தன்னிடம் அழைத்துவரச் சில பெரியோரை அனுப்பினன். அவன் உள்ளக்கருத்துதான் யாதென எவரும் அறிந்தாரில்லை. குருநாதர் தூதுகொணர்ந்த பெரியோரைப்

பார்த்து "நான் இன்றைக்கும் நாளைக்கும், என் பரம தந்தை விதித்த ஆக்ஞையை நிறைவேற்றுவது ஆவசியமாயிருத்தலின், ஏரோதை வந்து காண எனக்குச் சமயமில்லையென்று அந்த நரிக்குச் சொல்லுங்கள்" எனப் பெருந்துணிவுடன் பதிலுரைத்தார். அதைக் கேட்டுத் திடுக்கிட்டு வியப்புற்றோராய் அப்பெரியோர் திபேரியாவுக்குத் திரும்பிப் போந்தனர்.

சீடர் திரும்பினர்

இச்சம்பவங்களனைத்தும் கலிலேயா நாடெங்கும் அதிர்ச்சியையும் அமரிக்கையின்மையையும் வளர்ப்பனவாயின. அச்சமயம், பற்பல திசையிற் சென்று குருநாதர் இட்ட கருமத்தை நடாத்திமுடித்து சீடர் கப்பர்நகூமிற்குத் திரும்பினர். கடந்த இரண்டொரு வாரங்களில் அவர்கள் அடைந்த அனுபவம் அவர்களுக்கே பிரமிப்பையும் பெருமையையும் தந்தது. "பிசாசுகளும் உமது திருநாமமந்திரத்தை ஓதியவுடன் ஓட்டம் பிடித்தன" என்று சீடர் தம் வியப்பையும் களிப்பையும் அடக்கிக்கொள்ளக்கூடாது குருநாதருக்கு அறிவித்தார்கள். குருநாதர் முதற்கண் பரம பிதாவாகிய தெய்வத்திற்கு தம் நன்றியை அறிவித்து, பின்னர் சீடரை நோக்கி "இதனிலும் பெரிய அதிசய நன்மைகளை ஈசன் உங்கள் மூலமாய் உலகுக்கு வந்தீவதை நீங்கள் கண்டு மகிழ்ச்சிகொள்வீர்கள்" என்று பிற்றைநாள் நிகழும் சம்பவங்களை முன்னோர்ந்து கூறினர். அவர்களை இன்னும் பூரண பக்குவராக்குமாறு, குருநாதர் ஏகாந்தமான ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்லத் தீர்மானித்தார். பன்னிரு சீடரோடு கப்பர்நகூமிலிருந்து கலிலேயாக் கடல்மார்க்கமாக கிறிஸ்துநாதர் பயணப்பட்டார். ஜனங்கள் அவர் படவில் ஏறிச்சென்றதைக் கண்டு, கரையோரம் நடந்துசென்று, அக்கரையில் பெத்சாயிதா என்ற ஊருக்கெதிரில் காத்துநின்றார்கள். அங்ஙனம் நின்றோர் ஐயாயிரம்பேரின் மிக்காராவர். சீடருடன் தனித்திருக்கக் கொண்டிருந்த கருத்தை தாம் நிறைவேற்றக்கூடாது தடுத்த அந்த ஜனங்களைச் சினந்துகொள்ளாது, குருநாதர் பகல்முழுவதும் அவர்களுக்கு உபதேசித்துக்கொண்டும், அவருள் நோயடைந்த மாந்தரைக் குணமாக்கிக்கொண்டு மிருந்தார். சாயங்கால வேளையானபொழுது, ஜனங்கள் இருள் கப்பிக்கொள்ளுமுன் அருகிலிருந்த கிராமங்களுக்குச் சென்று உணவுக்கானவை ஏதும் தேடிக்கொள்ளும்படி

அவர்களை அனுப்பிவிடுவது நலமல்லவோவெனச் சீடர் கிறிஸ்துநாத ருக்கு ஆலோசனை சொன்னார்கள். ஜனங்கள் பகல்முழுவதும் சாப் பிடாதிருந்ததால் கிராமங்களைக் கிட்டுமுன் களைப்புற்றுத் தளர்ந்து விடுவார்களென்றும், கிராமங்களுக்குச் சென்றிடினும் அவர்களனை வருக்கும் போதிய ஆகாரம் கிடைப்பது அரிதென்றும் எம்பெருமான் உணர்ந்து, தாமே அவர்களுக்குப் பேரமுது வழங்க விரும்பினார். சீடர்கள் வைத்திருந்த போஜனபதார்த்தங்களைக் கொண்டுவரச் சொன் னார். ஐந்து அடைகளும் இரண்டு மீன்களுமட்டுமே யிருந்தன. குருநாதர் ஜனங்கள் யாவரையும் ஒழுங்காய்ப் பசும் புற்றரையில் அமர்த்தச் சீடருக்குக் கற்பித்தார். யாவரும் வரிசை வரிசையாய் உட்கார்ந்தபின், அடைகளையும் மீன்களையும் செங்கரங்களில் ஏந்திக் கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்து அவற்றை ஆசீர்வதித்தார். பின்பு அவைகளைப் பிட்டுப்பிட்டு சீடரிடம் கொடுத்து ஜனங்களுக்குப் பரிமாறச்சொன்னார். அவை பிடப்பிடப் பெருகிக்கொண்டே யிருந்தன. ஜனங்கள் எல்லோரும் வயிறூரப் புசித்தார்கள். எஞ்சிய துணிக்கைகளைப் பொறுக்கிச் சேர்த்தபொழுது, அவை பன்னிரண்டு கூடைநிறையவிருந்தன. குருநாதரின் அனுதாபத்தையும் அரிய வல் லமையையும் இந்த அற்புதச்செயல் ஜனங்கள் சிந்தைக்கு மற்றொரு முறை தெளிவுறத் தோன்றச்செய்தது.

மகுடம்பெற மறுத்தார்

அதனால் அவர்கள் சிந்தையிற்றோன்றி மறைந்து பின்னும் தோன் றியவோரெண்ணம் இத்தருணம் வலியுற்றெழுந்தது. "என்ன! கிறிஸ்துநாதர் தனக்குவமையில்லாத போதனசிரியன்; அருந்தவத் தோன்; திரைகடலையும் பெரும்புயலையும் அதட்டி அடக்கும் சமர்த் தன்; பிணியையும் பேயையும் கண்ணிமைப்பொழுதில் ஒட்டி விடும் அரிய பண்டிதன்; எதற்குமஞ்சாத யமனையும் மேற்கொள்ளும் அற்புத பலத்தோன்; பொறுமை, சாந்தம், அன்பு முதலிய சகல நற் குணங்களும் பொருந்திய சுகுணசம்பன்னன்; பாலெனத் தூய்மை யாய மனத்தோன். தாமே தீர்க்கதரிசனரால் முன்னறிவிக்கப்பட்ட மேசியாவென்றும்அவர்கூறியுள்ளார். ஆதலால்யோவான்ஸ்நானகரைக் கொன்ற தீச்செயலை பொறுக்கவொண்ணாது துடித்துநிற்கும் கலிலேய ராகிய தேசாபிமானிகளை வெற்றிபெற போருக்கு நடாத்தவல்ல தலை

வர் இவரே. ஏகாந்தவெளியில் ஐயாயிரம்பேருக் கதிகமான ஜனங்களுக்கு வானமிர்தம்போன்ற உணவளித்த பெருங் கொடையாளனையே நம் வேந்தனகத் தெரிந்துகொள்வது சரி" என்று ஒருவன் குரலெடுத்துக்கூற, அக்குழுவினரனைவரும் கரகோஷம்பண்ணி "கிறிஸ்துநாதரே எம் வேந்தன்" என்று ஆர்ப்பரித்தனர். குருநாதருக்கு நேர்ந்த சோதனைகளொன்றின் உட்கருத்து இதைப்போன்ற ஆபத்தென மேற்கூறியுள்ளோம். கொடிய மாற்றலராய் பரிசேயரும் தமது அரும்பணியைக் குலைத்து அவமாக்கத்தக்க பிறிதொரு முயற்சியைக் கண்டு கையாடுவது கடினமாம். தேசியக் கலகமெழும்பி ஏரோதரசனின் சிம்மாசனத்தைக் கவர்ந்துகொள்வது அப்பொழுது செயற்கரிய கருமமாயதன்று. எனினும் குருநாதர் ஜனங்களின் கருத்திற்கிசைந்து அவ்வாறு செய்ய முயன்றிருப்பரேல், தாம் ஆகாதென்றோர்ந்து விலக்கிய லௌகீகமுறையைத் தழுவுவாராவர். அழியாத ஆன்மார்த்தமாய ராட்சியத்தை சாம, பேத, தான தண்டமெனும் அரசதந்திரங்களாலல்ல, பரஸ்பர சிநேகமெனும் ஒப்புயர்வற்ற ஏக தெய்வ தந்திரத்தால் அவர் நிலைநாட்டுவதுபோய், கேவலம் அநித்திய அரசகௌரவத்தைப் போர்க்களத்திற் சிந்து முதிரத்தின் பயனகப் பெறுவாராவர்; அது தெய்வ சித்தத்திற்கும் தாம்கொண்ட திருநோக்கத்திற்கும் சிறிதும் ஒவ்வாததேயாகும். ஜனங்கள் அவர் திருநோக்கை அறியார்கள். சீடரும் அதன் சிறப்பை உணராதவர்போல், குருநாதரும் தாமும் மகிமையடைவதற்கு அதுவே ஏற்ற சமயமெனக் கருதினர். அப்பெரும் விபத்தினின்றும் தப்பிக்கொள்ள கிறிஸ்துநாதர் சீடரை உடனே புறப்பட்டுக் கப்பர்நகூமிற்குப் போகச்சொன்னர்; பின் ஜனங்களையும் சாந்திபண்ணி யனுப்பிவிட்டார். குருநாதரின் சிந்தை சிதைந்தது. அரசகெம்பீரத்தையோ, நீசமரணத்தையோ, பொன்முடியையோ, பாரச்சிலுவையையோ, எதைத் தெரிந்துகொள்ளுவதெனத் தோன்றது திகைத்தார்.

> "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தா லல்லால்
> மனக்கவலை மாற்ற லரிது"

என்ற உண்மைக் குருநாதர் நன்கு அறிவாராதலால், அன்றிரவு தனித்திருந்து ஜெபித்து, ஈசனிடம் அபயமிட்டார்; அவன் பாதாரவிந்தம் தருவதே நற்கெதியெனத் தெளிவுற்றுக் கவலை விடுத்தார்.

இடரலான உபதேசம்

மறுநாள் சாயங்காலவேளையில் கிறிஸ்துநாதர் கப்பர்நகூமின் கடற் கரைக்குப் போனபொழுது ஜனங்கள் அங்கு கூடினார்கள். அவர் களிலநேகர் சென்றதினம் திபேரியா ஊரருகே கிறிஸ்துநாதர் அற்புத மாய்ப் பெருக்கிக் கொடுத்த அடைகளையும் மீன்களையும் புசித்த வர்கள். அச்சம்பவத்தையே அவர்கள் எல்லோரும் நினைத்து உரை யாடுவாராயினர். சிலர் குருநாதர் திபேரியாவிலிருந்து எப்படி, எப் போது கப்பர்நகூமிற்கு வந்தாரென அவரை வினவியபொழுது, அவர் பின்வருமாறு அவர்களுக்கு மாறுத்தரமளித்தார். "நீங்கள் என் போதனையின் சிறப்பையும், ஈசனது அனுக்கிரக வல்லமையையும் கண்டுணர்ந்ததனாலல்ல, நேற்று நான் கொடுத்த உணவையருந்தித் திருப்தியடைந்ததனால் என்னைத் தேடிவந்தீர்கள். இது நிசம். அழிந்து போகும் அப்பத்திற்காக பாடுபடவேண்டாம். நித்திய ஜீவனாகிய நிலை யான போஜனத்தையே தேடுங்கள். அப்போஜனத்தை மாந்தருக்குத் தந்துதவ ஈசன் என்னை அனுப்பியிருக்கின்றார்."

ஜனங்கள்:—"அதைப் பெற்றுச் சுகிக்க நாங்கள் செய்யவேண்டுவது யாது?"

கிறிஸ்து:—"ஈசன் அதற்கென்று அபிஷேகித்தனுப்பியவரிடம் விசு வாசபக்தி கொள்ளுவதே."

ஜனங்கள்:—"நீரே அந்தப் புண்ணியபுருஷரென நாங்கள் பரிசோ தித்தறியத்தக்க அடையாளம் என்ன? மோசே முனிவர் எம் மூதாதையருக்கு வான ஆகாரம் ஈந்துதவினரன்றோ?"

கிறிஸ்து:—"மோசே முனிவர் தந்தது வானாகாரமன்று. என் தந்தை யொருவரே மெய்யான வானாகாரம் தரத்தக்கவர். அது விண் ணுலகினின்றிறங்கி மண்ணுலகிற்கு ஜீவனை அளிக்கற்பாலது."

ஜனங்கள்:—"ஐயா! அப்படியானால் அந்த அப்பத்தை என்றும் எங்க ளுக்குத் தருவீராக."

கிறிஸ்து:—"அந்த ஜீவப்பம் நானே; என்னை பற்றிக்கொள்வோன் ஒருபோதும் பசியடையான்; என்னிடம் பக்திகொள்வோன் ஒரு போதும் தாகமடையான்............நானே வானலோகத்தி லிருந்துவந்த ஜீவ அப்பம். அதைப் புசிப்பவன் நித்திய ஜீவ

னடைவான்; தவிர, நான் கொடுக்கும் ஜீவ அப்பம் யாதெனில், என் மாமிசமே. மேதினி ஜீவனடைவதற்காக நான் என் மாமிசத்தைக் கொடுக்கின்றேன்."

ஜனங்கள்:—"இதென்ன அசம்பாவிதம்! தம் மாமிசத்தை நாம் சாப்பிடக் கொடுப்பது எப்படியாகும்?"

கிறிஸ்து:—"மனிதகுமாரனின் மாமிசத்தைப் புசித்து, அவர் உதிரத்தைப் பருகாவிடில் நீங்கள் ஜீவனற்றோராகவே இருந்து வீயுவீர்கள். அப்படிச் செய்வீர்களேயாகில் நித்தியஜீவனைப் பெறுவீர்கள். ஏனெனில் என் மாமிசமே மெய்யான அப்பம், என் இரத்தமே மெய்யான பானம்; இது உண்மை."

இந்தப் பரிபாஷையை ஜனங்கள் அறிந்து கொள்ளவில்லை. ஆதலால் அநேகர் கிறிஸ்துநாதர் தம்மைக்குறித்து வீண்மமதைகொண்டு பிதற்றுகின்றாரென்று சொல்லி கோபங்கொண்டனர். சீடரிலும் பலர் அது நம்புதற்கரிய கடினமான உபதேசமென்றும், அது எவருக்கும் உடன்பாடாகாதென்றும் பேசிக்கொண்டனர். அன்று உட்குழுவினரல்லாத சீடரிலநேகர் குருநாதரை மறுதலித்து அவர் கூட்டுறவை யொழித்தார்கள். மிகுந்த சஞ்சலமுற்றோராய்க் கிறிஸ்துநாதர் உட்குழுவினராய பன்னிரு சீடரைப் பார்த்து நீங்களும் மற்ற சீடரைப்போல் என்னை விட்டுப்போக மனதாயிருக்கின்றீர்களோ வென்றார். அன்று அவர்களும் போய்விடுவதே உசிதமென்றெண்ண இடமுண்டாயிற்று. அரசுரிமை பெறத்தக்க ஏற்ற சமயத்தைக் கைநெகிழ விட்டுவிட்டு, அவர் யாதுசெய்யலாமென் றிருக்கின்றார் என்பது அவர்களுக்குப் புலப்படவில்லை. மேலும், தமது சரீரத்தையும் இரத்தத்தையும் உலக இரட்சிப்புக்கென்று தியாகம்பண்ணப் போவதாகவும் சொன்னார். அவர் அக்கதியடைந்தால், சீடர்கதி யென்னவாகும்? அவர்கள் இவ்வாறு சிந்தித்து திகைத்துநின்றார்கள். என்றபோதிலும் பரிதாப குரலோடும் குராவிய முகத்தோடும் குருநாதர் அக்கேள்வியைக் கேட்டபொழுது, மனத்திற்றோன்றும் கருத்தை சிந்திக்காது பேசிவிடும் ஆத்திரக்காரனை பேதுரு உடனே பின்வருமாறு பதிலுரைத்தான். "ஆண்டவரே! நாங்கள் யாரிடம் போவோம்? நித்திய ஜீவவாக்கியம் உம்மிடத்திலன்றோ இருக்கின்றது! தெய்வத்தால் தெரிந்துகொள்ளப்பட்ட புனிதாத்துமன் நீரேயென்று நாங்கள் நம்புகிறோம். அது நிசம்!" பன்

னிருவரும் கிறிஸ்துநாதரை அங்ஙனம் மதித்தனரோ அல்லரோ, அறி கிலோம். சிலர் பேதுருவின் சாற்றுரையை மனதார ஒப்பாதிருந் தார்கள் எனக் கருத இடமுண்டு.

சீடருடன் சிலகாலம் தனித்திருந்து அவர்களைப் பூரண பரிபக்கு வப்படுத்தக் குருநாதர் விருப்பங்கொண்டிருந்தாரெனக் கண்டோம். அவ்விருப்பத்தை நிறைவேற்ற முயன்றபொழுது ஊரார் அவரை வளைந்துகொண்டு தடுத்துச்செல்ல விட்டாரில்லை. அதன்பின் நடந்த சம்பவங்களால், மாற்றலர் மட்டுமல்ல நண்பரும் அவர் போதனை யையும் நடபடிக்கையையும் உணர்ந்துகொள்ளக்கூடாது வெறுப்புற்ற னர் என்பது விளங்கிற்று. இணைபிரியாத தோழரும் உரித்தான தொண்டருமாகிய பன்னிருவரும் குருநாதரைப் பின்பற்றுவதில் பெருத்த நஷ்டமேயல்லாது சிறிது லாபமும்பெறல் அரிதெனை எண் ணித் துறைதெரியாத கப்பற் பிரயாணிகளைப்போல் திகைக்கலாயினர். இதன்பின் தாமதிப்பது உசிதமன்றெனக் கண்டு, குருநாதர் கலிலேயா விற்கு வடக்கே நாற்பதுமைல் தூரத்திலிருந்த தீருசீதோன் பட்டணங் களின் எல்லைக்கு சீடரை அழைத்துச் சென்றார்.

பிள்ளைகளின் அப்பமும், நாய்க்குட்டிகளும்

சீடருள்ளத்தை உழக்கச்செய்த சந்தேகங்களையும் அஞ்ஞானங் களையும் அகற்றி, தெய்வராட்சியத்தின் உண்மையை அவர்களுக்குக் கசடறக் கற்பிப்பதையே கிறிஸ்துநாதர் நடுநோக்காகக் கொண்டிருந்த தால், அவர் ஜனங்களைச் சந்திக்கவாவது உபதேசிக்கவாவது பிணி களைத் தீர்க்கவாவது அப்பொழுது விரும்பினாரன்று. என்றாலும், அவர் ஓர் வீட்டில் தங்கியிருப்பதைக் கேள்விப்பட்ட சிரோப்பெனிக் கேயா நாட்டாளாகிய ஒரு தாய் அவரைத் தேடிச்சென்று, தன் மகளைப் பிடித்தலட்டும் பேயைத் துரத்தி சுகமளிக்க அவர் தாளில் வீழ்ந்து கெஞ்சினள். குருநாதர் வெகுநேரம் வாய்திறவாதிருந்தும், அவள் கெஞ்சிக்கொண்டே யிருந்தாள். சீடர் அத்தொந்தரவைச் சகிக்கவொண்ணாது, "ஆண்டவரே, அவள் அலட்டிக்கொண்டிருப் பது வெகு அழகாயிருக்கின்றதோ? அவளைப் போகச் சொல்லக் கூடாதோ?" என வெகுண்டுரைத்தனர். குருநாதர் அப்பொழுது அந்நிய குலத்தினளாய அவ்வணங்கை நோக்கி:—"நான் தவறிப் போன ஆடுகளையொத்த இஸ்ரவேலரையே, தேடி இரட்சிக்க

வந்தேன். அதை நீ அறியாயோ?" என்றனர். பெண்:—"இருக்கலாம், ஆண்டவரே! என்றாலும் எனதேங்கலைக் கண்டு இரங்கலாகாதோ?" கிறிஸ்துநாதர்:—"பிள்ளைகளின் உணவையெடுத்து நாய்களுக்குப் போடுவது ஞாயமாகுமோ?" பெண்:—"ஐயா! அப்படியல்ல. பிள்ளைகள் இரைத்துவிடும் உச்சிட்டங்கள் நாய்குட்டிகளின் பாகமல்லவோ?" கிறிஸ்து புன்னகைகொண்டு "சமயோசிதமும், விசுவாச பக்தியும் நிறைந்த உன் வாதத்திற்கிணங்கினேன். நீ போ. உன் மகளைப் பீடித்திருந்த பேய் இச்சணமே பறந்தோடிற்று" என்றனர். அந்தப் பெண் குருநாதர் கூறிய நல்வாக்கு தவறாதென்று மனமார நம்பி அவருக்கு நன்றிசெலுத்தி விடைபெற்றுச் சென்றாள்.

யூத ஜாதியாருக்கே முதற்கண் தமது அரிய உபதேசத்தையும் புகட்டக் கடமைப்பட்டிருந்ததாக கிறிஸ்து எண்ணியதின் காரணம் யாதென முற்கூறியுள்ளோம். இம்மாதையும், அவள் குலத்தினரையும் குருநாதர் நாய்களுக்கொப்பிட்டுப் பேசியதால், அவர் ஜாதிப்பெருமை கொண்டிருந்தாரெனக் கொள்ள இடமுண்டாகலாம். சமாரியப்பெண் ஒருவளிடம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டபொழுது கிறிஸ்துநாதர் ஜாதிப்பிரிவினையை மறுத்துப் பேசினதைக் கேட்டோம். யூதருக்கொரு கோவில், சமாரியருக்கொரு கோவிலென்றிருப்பதுபோய், சகல ஜாதியாரும் கடவுள் தம்மவர் எவருக்கும் தந்தையெனக் கொண்டு, ஏகசிந்தையோடு அவரை வழிபடுவதே சன்மார்க்கமென்றறிவுறுத்தவே நான் வந்தேன் என்று குருநாதர் அத்தருணம் கூறியதை யறிவோம். ஆதலால் கிரேக்க ஜாதியாரை நாய்களுக்கொப்பிட்டுப் பேசியது கிறிஸ்துவின் ஜாதிப்பெருமையைக் காட்டுகின்றதெனக் கொள்வது சமாரியாவில் நடந்த சம்பவத்திற்கு ஒவ்வாததாகும். யூதஜாதியார் புறஜாதியார் யாவரையும் நாய்களெனப் பழித்தனர். அது யாவரும் அறிந்த காரியம். சிரோப்பெனிக்கேயப் பெண்ணிற்கும் அது தெரிந்த காரியமே. என்றாலும் அவள் கிறிஸ்துநாதரைத் தேடிச் சென்று அவர் தனக்குக் கிருபைபுரிய வேண்டுமென்று கேட்டது ஏனென்றால், அவர் மற்ற யூதரைப்போல் தன்னைப் பழிக்காது தன் அங்கலாய்ப்பிற் கிரங்குவாரென்று அவள் எண்ணியதே. அவர் யூதருடைய அகந்தையையும் ஜாதி வேற்றுமையையும் கடந்து, துன்புற்றவரெவருக்குந் துணைபுரியும் காருண்ய வள்ளலென்பது அவள் துணிவு. அவர் சீடரும் அக்காருண்ணியத்தின் சிறப்பைக் கண்டன

ரன்று. அவர்களுள்ளங்களில் ஜாதிப்பெருமை இன்னும் உறங்கொண் டிருந்தது. குருநாதர் சமாரிய மாதுடன் வார்த்தையாடுவதைக் கண்டு வியப்புற்றூர்கள்; அது குற்றமெனக் கொண்டார்கள். இந்தச் சமயத்தி லும், அவர்கள் உலையிலிட்ட மெழுகுபோல் கரைந்து வருந்திய தாயின் பரிதாபநிலையைக் கண்டு, அவளுக்காக கிறிஸ்துவிடம் பரிந்து பேசுவதற்குப் பதிலாக, அவள் கெஞ்சிக்கொண்டிருந்தது தங்களுக்குத் தொந்தரவை விளைத்ததால், அவளை போகச்சொல்ல வேண்டுமென்றே கிறிஸ்துநாதரைக் கேட்டுக்கொண்டார்கள். சீடரின் இரக்கமின்மையை வெட்கப்படுத்தவும், சஞ்சலமுற்ற தாயின் விசுவாச பக்தியை உறுதிப் படுத்தி பகிரங்கமாக்கவுமே குருநாதர் அவ்வாறு பேசினர். வாய்ச் சொல்லிலல்ல, முகக்குறியில் அவள் குருநாதரின் அனுதாபத்தைக் கண்டாள். தன்னை நாயென்று சொன்னது வசைச்சொல்லல்ல, நளி னச் சொல்லென்றும், அது தன்னையல்ல, ஜாதிப் பெருமைகொண்ட யூதரை வெட்கப்படுத்தக் கூறப்பட்டதென்றும் அவள் உணர்ந்து கிறிஸ்துநாதரின் மனப்போங்கிற் கேற்க யுக்தியாய் எதிர்வாது கூறி ளுள். பிள்ளைகளின் உணவை நாய்களுக்குப் போட்டுவிடுவது ஞாய மல்லவென்று கிறிஸ்துநாதர் சொன்னபொழுது, அவர் அவளுக்கு நன்மைசெய்ய மறுத்துவிட்டாரென்று சீடர் நினைத்தார்கள். அவர் அவள் பக்தி நம்பிக்கையை உவந்து நல்வாக் குரைத்தபொழுதோ ஏமாந்து வெட்கமுற்றூர்கள். அவர் செய்வதும் பேசுவதும், சீடருக்கு வரவர விபரீதமாகத் தோன்றின. அச்சம்பவத்தைப் பொருட்பாடமாக வைத்துக்கொண்டு குருநாதர் சீடருக்குப் புகட்டக்கருதிய விசேஷித்த பாடமொன்றை அன்றிரவு அவர்களுக்குப் போதித்தாரென்பதற்கு ஐயமில்லை. சில வாரங்களுக்குமுன் அவர்களைச் சுவிசேஷப் பிர கடனம் செய்ய அனுப்பியபொழுது காணுமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேலருக்கே சுவிசேஷத்தைக்கூறக் கற்பித்தவர், இறுதியில் உலகமெங்குஞ் சென்று நானு ஜாதியாரையும் பாஷைக்காரரையும் தமக்குத் தொண்டராக்க வேண்டுமெனச் சீடருக்கு ஆக்ஞையிடப் போகின்றூர். முற்கூறிய கற்பனையை இப்பொழுது சீடருக்கு நினைப் பூட்டியதின் காரணம், அது அச்சமயத்திற்கு மாத்திரம் விதித்த கற் பனையென்றும், அதை விலக்கி பிறிதோர் நிலையான கற்பனையை விதிக்கப்போவதையும் உணர்த்துவதேயாகும்.

தெக்கப்போலி; தல்மனூதா

சிரோப்பெனிக்கேயப் பாவையின் குமாரத்தியை குணமாக்கிய செய்தி ஊரெங்கும் பரவவே, ஜனங்கள் இங்கும் தம்மைச் சூழ்ந்து கொள்ளுவார்களென் றுணர்ந்து, குருநாதர் தீரு சீதோன் பிரதேசங்களைவிட்டு, அடர்ந்த கானகங்களின் வழியாய் கீழ்த்திசை சென்று, தெக்கப்போலியென்ற நாட்டை அடைந்தார். அங்கு செவிடும் ஊமையுமான ஒருவனைத் தன் சிநேகிதர் கொணர்ந்து, அவனுக்குச் சுகமளிக்கக் குருநாதரை வேண்டிக்கொண்டார்கள். அவன் பரிதாப நிலையைக் கண்டு எம்பெருமான் துக்கித்தார்; அவன் செவிகளையும் நாவையும் தொட்டு, தன் கண்களை வானத்திற்கு நேராக உயர்த்தி, பெருமூச்சுடன் "எப்பத்தா" என்றார். எப்பத்சா என்றால் திற என்று அர்த்தமாம். உடனே அவன் செவிகள் திறவுண்டன. நாவின் கட்டு அவிழ்ந்தது. அதைக் கண்டவர்கள் ஆச்சரியமுற்று, இவர் செய்வதெல்லாம் வெகு நேர்த்தியென்று உவகைகொண்டார்கள்.

புறஜாதியாரின் நாடுகளில் கிறிஸ்துநாதர் சிலநாட்களைக் கழித்துப் பின் கலிலேயாக் கடலின் தென்மேற்குக் கரையிலிருந்த தல்மனூதா என்ற நகரையடைந்தார். பகைஞர் அவரை வளைந்துகொண்டு, "நீவிர் தெய்வ அதிகாரம்பெற்ற தீர்க்கதரிசி யென்பது உண்மையெனின் வானத்தில் ஓர் அற்புத அடையாளம் தோன்றச் செய்யும் பார்ப்போம்" என்றனர். மந்திரவல்லமையின் மயக்கத்தாலல்லாது, புத்தியையும் மனச்சாட்சியையும் கூர்மைப்படுத்திப் பரவசப்படுத்தும் சத்திய உபதேசத்தால் தமக்குத் தொண்டரைச் சம்பாதிப்பதே தெய்வ சித்தமென உபவாச நாட்களில் குருநாதர் ஐயமுறத் தெளிந்தனர். அதற்கு எதிர் மாறாக நடக்கத் தம்மைப் பகைஞர் தூண்டியது எம்பெருமானின் மனத்தைப் புண்படுத்திற்று. தமது போதனையையும் சாதனையையும், தெய்வபலத்தால் பிணிகொண்டு குறுகியவருக்குத் தாம் செய்த அற்புத சிகிச்சையையும் சிந்தித்துத் தெளிவடையாத வஞ்சக நெஞ்சத்தினர், வானத்தில் தோன்றும் அற்புத அடையாளத்தால் தெளிவடையாரெனக் குருநாதர் உணர்ந்து, "இவர்கள் அடையாளம் காட்ட வேண்டுமென்று கேட்பதேனோ? இவர்களுக்கு ஒரு அடையாளமும் காட்டப்படமாட்டாது. இது நிசம்" என்றார்.

தல்மனூதாவை விட்டு கலிலேயாக் கடலின் வடகிழக்குக் கரையிலிருந்த பெத்சாயிதா என்ற கிராமத்திலிறங்கி வடக்கே காடடர்ந்த

மலைகளுக்குச் செல்ல குருநாதர் விரும்பினார். அப்படியே அவர் பெத்சாயிதாவைச் சேர்ந்தபொழுது அந்தகனொருவன் அவரைப் பின் தொடர்ந்து கண்ணளித்துதவக் கெஞ்சினான். அவனைக் கிராமத்திற்குப் புறம்பே அழைத்துச்சென்று பார்வையளித்தார். கிறிஸ்துநாதர் அங்கிருப்பதை கிராமத்தில் ஒருவரும் அறியாதபடி அவன் நேரே தன் வீட்டிற்குப்போய் மறைந்துகொள்ள வேண்டுமென அவனுக்குக் கற்பித்தார். இரகசியமாய் அவ்வூரைவிட்டுப் போய்விட குருநாதர் விரும்பியதின் காரணம் என்னவென்று நாம் அறிவோம். அவர் சிந்திக்க வேண்டியவையும், சீடருக்கு உபதேசிக்க வேண்டியவையுமான பல காரியங்களிருந்தன. ஆதலால் தம்மை அறியாத புறஜாதியாரின் பட்டணங்கள் வழியாய் குருநாதர் சீடருடன் வெகுதூரம் பயணஞ்செய்தார். அவர் சிந்தித்தவையும், சீடருக்குப் போதித்தவையும் தெளிவாய்க் கூறப்பட்டில்லை.

"நான் யார்?"

இப்பிரயாணத்தில் நடந்த இரண்டு சம்பவங்களே வரையப்பட்டுள்ளன. அவையிரண்டும் எம்பெருமான் கொண்டவோர் நிர்ணயத்தை வெளிப்படுத்துகின்றன. செசரியா பிலிப்பையென்ற பட்டணத்துக்கருகில், கிறிஸ்துநாதர் இரவெல்லாம் தனித்திருந்து ஜெபித்தார். மறுநாள்காலையில் சீடரோடு பேசிக்கொண்டிருக்கையில், ஜனங்கள் தம்மைக்குறித்து என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கின்றார்களெனச் சீடரை வினவினர். சிலர் அவர் யோவான்ஸ்நானகரென்றும், சிலர் எலியாத் தீர்க்கதரிசனர் என்றும், மற்றும் சிலர் ஓர் பெரிய தீர்க்கதரிசனரென்றும் எண்ணுவதாகச் சீடர் விடைபகர்ந்தனர். பின்பு கிறிஸ்துநாதர் அவர்களைப்பார்த்து "நான் யார் என்பதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்றார். பேச்சில் முந்திக்கொள்ளுபவனாகிய பேதுரு "நீர் ஜீவனுள்ள தேவனது குமாரராகிய கிறிஸ்து" என்று மறுமொழி பகர்ந்தான். "யோனாவின் குமாரனே, நீ சொன்னது நிசம். நான் தெய்வ சுதனென்பதை உன் சொந்த புத்தியாலல்ல, தெய்வ கிருபையால் அறிந்துகொண்டாய்" என்று கிறிஸ்து சொன்னார். பின்னர், தாம் ஒன்னார் கையில் அகப்பட்டு, பொறுக்கவொண்ணாத சித்திரவதையடைந்து, பழிப்புக்கிடமான நீசச்சிலுவையில் அறையுண்டு மரிப்பது ஈசன் விதித்த விதி

யென்றும், அதற்குத் தாம் மனங்கோணுது உடன்பட்டாரென்றும் குருநாதர் சீடருக்கறிவித்தார். தம்மைத் தெய்வ சுதனென்று பேதுரு சொன்னது உண்மையென்று அங்கீகரித்தவுடன், அவர் இவ்வாறு பேசியது சீடருக்கு மயக்கத்தையும் ஆருத் துயரத்தையும் கொடுத்தது இப்படி ஒரு முறையல்ல பன்முறை குருநாதர் பகர்ந்தார். சீடர் இனித் தாம் செய்வது யாதென்று சிந்தித்து, தங்கள் கருத்தை நிறைவேற்ற பேதுருவை குருநாதருடன் பேசும்படி தெரிந்தனுப் பினுர்கள். அவன் சமயம் கிடைத்தவுடன் கிறிஸ்துநாதரைத் தனியே அழைத்துச்சென்று, அவர் பகைஞர்கையி லகப்பட்டுக்கொள்ளக் கூடாதென்று இடித்துரைத்தான். குருநாதர் பரிசேயருடைய வர்மத் தின் கொடுமையைக் கண்டு துளக்கமுற்று தைரியமிழந்தார். மாற்றல ரவரைக் கொன்றழிக்க கச்சைகட்டி நிற்பது உண்மையெனின், கலிலேயரனைவரும் அவரைப் பெரிதும் பாராட்டித் தமது அரசனுக நியமிக்கக் காத்திருப்பதும் உண்மையன்ருே? யூத ராட்சியத்தைக் கைப்பற்றி, நீதிவழுவாச் செங்கோன்மை ஒச்சுவதற்கு அவர் இனி செய்யவேண்டிய பிரயத்தனம் பெரியதன்று. யூதகுலச் செங்கோன் மன்னன் நானெனக் கழன்று வாளுருவிக் கலகமெழுப்பி விடுவ தொன்றே குறை. காரியம் அவ்வாறிருக்க, குருநாதர் மனுேதிட னிழந்துவிட்டது மதியீனமன்ருே? இனி அவர் பகைவர் கையிலகப் பட்டு மரித்தால் சீடர்கள் கதிதான் என்னவாகும்? பேதுரு இவை போன்ற ஞாயங்களைக் குருதேசிகருக்குக் கூறி அவரைத் தைரியப் படுத்த முயன்ருன். அவர் உறுதிவிட் டயராது தெய்வ ராட்சியத்தை உடனே நிலைநாட்டி விடுவதே புத்தியென்றறைந்தான். என்ன பரிதாபம்! எத்தனை விதங்கள்தான் குருநாதர் பரம ராட்சியத்தின் தன்மையைச் சீடருக்கு எடுத்துக்காட்டினும், அவர்கள் லௌகீக சிந்தை சிறிதும் மாறவில்லையே! இரண்டு வருடங்களுக்குமுன், வனுந் தரத்தில் நாற்பதுநாள் உபவாசித்துத் தியானித்தபொழுது தமக்கு நேர்ந்த லௌகீக நோக்கத்தை இப்பொழுது தம் சீடரில் பெரியவன் தூண்டிவிடத் துணிந்தான். சீடர் மந்தபுத்தியுள்ளோரும், மண் பொன்னுசைகள் நிறைந்த மனத்தினருமாயிருந்தது கண்டு குருநாதர் பரிதபித்தார். பேதுருவை நோக்கி, "நீ, போ! என்னைச் சோதிக்கும் சாத்தாஞகிவிட்டாயே. நீ எண்ணும் எண்ணங்கள் ஈசனுக்கல்ல, பற்றறுத்துக் களையாத பாமரருக்கே பொருந்தும்" என்ருர்.

தேஜோமயம்

குருநாதரும் சீடரும் இன்னும் வடதிசைநோக்கியே சென்றார்கள். மேற்கண்ட சம்பவம் நிகழ்ந்து ஆறு தினங்களாயின. அவர்கள் பனி மூடிய எர்மோன் மலையை யண்மினார்கள். தபனன் அடிவானத்தைக் கடந்து மறைந்தான். அவனது சிவந்த தண்சுடர் கருமுகில்களின் ஓரத்தை இரத்தினக் கல்போலிலங்கச் செய்தது. அப்பொழுது பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூன்று சீடர்களைமட்டும் தம் மோடு அழைத்துக்கொண்டு குருநாதர் மலையின் உச்சிக்குச் சென்றார். சீடர் மூவரையும் ஜெபிக்கக் கட்டளையிட்டார். பின் தாம் தியான நிஷ்டையிலமர்ந்தார். ஊதாத உலைபோல் செவ்வானம் சிறிது சிறிதாக மங்கித் தேய்ந்தது. கங்குல் சூழ்ந்தது. காடும் அமர்ந்தது. இன்னும் குருநாதர் ஜெபித்துக்கொண்டே யிருந்தார். சீடர் தூங்கிவிட்டனர். நடுச்சாமம்வந்து கழிந்ததையும் அறிந்திலர். அவர்களிலொருவன் விழித்தபொழுது பெரிய வெளிச்சத்தைக் கண்டான். அத்திகழினுள் மூன்று உருவங்கள் தோன்றின. தன் இருதோழரையும் எழுப்பினான். மூவரும் அந்த அற்புத வொளியையும் அதனுள் தோன்றிய உருவங்களையும் கண்டு பிரமித்தார்கள். உற்றுப் பார்த்தபொழுது, நடு உரு தங்கள் குருநாதரின் சாயலாயிருந்தது. அவர் அணிந்திருந்த உடை பாலினும் பதின்மடங்கு வெண்மையாக விளங்கிற்று. அதன் பிரகாசம் கண்களைக் கூசச்செய்தது. குருநாதர் ஸ்தூலத்தைக் களைந்து சூக்குமசரீரத்தை பெற்று நின்றார். அவரோடு நின்ற இரு உருக்களும் அமரர்போல் தோன்றினர். அவர்கள் குருநாதருடன் உரையாடிக் கொண்டிருந்தனர். பிரமிப்பு சற்று குன்றிச் சித்தசுயாதீனம் சிறிது பெற்றவுடன், வழக்கம்போல் பேதுரு வாய்திறந்து, "ஆண்டவரே, நாம் இவ்வற்புத நிலத்திற்றானே குடியிருப்பது நல்லது. உமக்கொரு கூடாரமும், உம்மோடு நிற்கும் மகான்களாகிய மோசே முனிவருக்கும் எலியாத் தீர்க்கதரிசனருக்கும் வேறு இரண்டு கூடாரங்களும் எழுப்புவோம்" என்று தான் சொல்லுவது இன்னதென்றறியாது குழறினன். அவன் பேசிமுடிக்குமுன் வெண்முகில் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. "இவர் என் நேசகுமாரன்; இவருக்குச் செவிகொடுங்கள்" என்ற அசரீரி வாக்கும் ஒலித்தது. சீடர் பயந்து தரையில் வீழ்ந்தனர். கண்ணிமைப்பொழுதில், முகில் பறந்துபோயிற்று. மோசேயும் எலியாவும் மறைந்தனர். அதிசய வெளிச்சமும், குருநாதர் கொண்

டிருந்த திருமேனியும் நீங்கின. யாவும் முன்போல் சலனமற்று நிசி யென்னும் பெருந்தேவியின் மடியில் துயில்வனவாயின. கிறிஸ்து நாதர் மறுபடியும் ஆழ்ந்த சிந்தனை செய்வாராயினர். அவர் சீடரைத் தட்டி யெழுப்பியபொழுது, கீழ்வானத்தில் உஷை தன் தண் எழில் வதனத்தைக் காட்டினள். குருநாதர் மலையிலடைந்த சாரூபமகிமையை எவருக்கும் சொல்லக்கூடாதென்று சீடருக்குக் கட்டளையிட்டார். கிறிஸ்துநாதர் சீடரைப் பரிபூரண பக்குவப்படுத்திய வாரத்தின் ஆதியில் ஒன்றும் அந்தத்திலொன்றுமாக இருபெருஞ் சம்பவங்கள் நிகழ்ந்தன. முந்தினது, குருநாதர் நிச்சயமாகவே முத்தொழிலில் நடுத் தொழில்கர்த்தாவாகதெய்வஞ் தேர்ந்தனுப்பிய இரட்சகனென்னப்பேதுரு செய்த அறிக்கை. பிந்தினது, குருநாதரடைந்த திருமேனியும் அதனை யொட்டிய அற்புதகாட்சியுமாகும். இந்நிகழ்ச்சிகளால் சீடர் மட்டுமல்ல குருநாதரும் முன்னடைந்திராத சிந்தைப் பிரகாசமும் மனோதிடனும் பெற்றனரென்பது திண்ணம்.

இரண்டொரு தினங்களுக்குமுன் தம் தலைவர் மரித்துப்போகச் சித்தங்கொண்டதைக் கேள்வியுற்றுத் துளங்கி, அது மதியீனமென்று வலியுறுத்தச் சீடர் முயன்றனரெனக் கண்டோம். கிறிஸ்துநாதர் புனர்ச்சடலம் பெற்றிலங்கியதையும், காலஞ்சென்ற தபோதனரிருவர் அவருடன்கலந் துசாவியதையும், ஈசன் தாமே முகில்வாகனத்தி னின்று சாற்றுரை இயம்பியதையும் கண்ணாரக்கண்டு காதாரக் கேட்டபின், சீடர் எம்பெருமானின் நிச நிலைமையைக் கண்டு தேர்ந்தனர். மனிதரோடு மனிதனாக இதுகாறும் தம்முடன் உறவாடி வந்த மரியன்னை மகனார் ஆத்மநிலையில் தமக்கெட்டாத் தூரத்தில் நிற்பதைச் சீடர் கண்டனர். அற்புத புருஷராகிய தம் குருநாதருக் குப் புல்லறிஞராகிய தாம் புத்திபுகட்டச் சிறிதும் யோக்கியரல்ல ரெனத் தெரிந்துகொண்டனர். அவர் மரணமடைவதின் காரணத் தைத் தெளிவுறக் காணவிடினும், அதில் சிறந்த தெய்வரகசியமிருக் கின்றதென எண்ணி, தெய்வ நடாத்தலுக்கிணங்கிப் பொறுத்திருத் தலே தம் கடனெனக் கருதினர். அவரோடு எதிர்வாதாடுவதை யொழித்து, அவர் சொல்லுக்கடங்கி, அவர் பின்னே காலனின் அகண்ட வாயினுட் செல்லவும் துணிந்துநின்றனர்.

மாற்றலர் சீற்றத்திற்குத் தாம் இரையாவதே பரம தந்தையின் திருவுளமெனக் கிறிஸ்துநாதர் கண்டுணர்ந்ததுமுதல், அவர் கலக்க

முற்றிருந்தார். பன்முறை காடுகளுக்கும் மலைகளுக்குஞ் சென்று இரவெல்லாம் கண்வளராது கடவுளை நோக்கிக் கருத்துடன் ஜெபித்தார். கடந்த ஐந்தாறுநாட்களாக குருநாதர்தம் உள்ளம் உழக்கவும், அறிவு மங்கவும், சித்தம் சிதையவும் செய்த கவலைகளை ஒழிக்கவே இமையவரிறையோன் அன்றிரவு அவ்வற்புத காட்சியளித்தனன். மோசேயும் எலியாவும் கிறிஸ்துநாதரின் மரணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்களென்று திருமறை கூறுகின்றது. என்ன பேசினார்களென்று சொல்லப்படவில்லை. தாம் மரித்துப்போவதே தெய்வசித்தமெனக் கிறிஸ்துநாதர் தியானநிலையில் கண்டுகொண்டது சரியென்றும், அவர் அதற்கஞ்சிப் பின்வாங்கப்பட்டாதென்றும், அம்மரணத்தின் வாயிலாய் தெய்வம் தம் பெருங்கருணையைக் காட்டவும், அம்மரணத்தையே அவருக்கு வெற்றிமாலையாகப் பூணவும் சித்தங்கொண்டாரென்று உறுதிமொழி கூறவுமே முனிவர் விண்ணுலகினின்றிழிந்து எர்மோன் மலையுச்சியிற் றோன்றினர். திண்மை பயப்பது முப்புரிநூலாதலால், தயங்கிநின்ற தனயனைத்தேற்ற முனிவர் தூதொன்றே போதாதெனக் கண்டு, ஈசன் மேகத்தையும் தூதுவிடுத்தார். பின்னர், மேகத்தினின்று தொனித்த தம் திருவசனத்தையும் தந்துதவினர். ஆதலால் பகைவர் பற்றி நசிக்கவிருக்கும் தமது யாக்கை, வரையோட்டுக்குமாகாத புன்புலாலன்று, அது கைநொடிப்பொழுதில் அழியாத சூக்கும சடலமாக மாறக்கூடிய திருமேனியென்று குருநாதர் கண்டார். "பக்தபராதீனனும் கடவுள் தம் தொண்டரை அழிவைக் காணவிடார்" எனச் சுருதியறைந்த திருவாக்குத் தமக்குரியதென்றும் உணர்ந்தார். அவர் மரித்து அழிந்துபோகாது மூன்று தினங்களுக்குள் வெற்றி வேந்தனாக உயிர்த்தெழுவாரென ஐயந்திரிபு நீங்கவறிந்து மகிழ்ந்தார். அன்று தாம்பெற்ற இலங்கும் திருமேனியே உயிர்த்தெழுதலின் முன்னடையாளமாயிற்று. ஆதலால் குருநாதர் தாம் மரிக்கப்போவதைச் சொன்னபொழுதெல்லாம், மரணத்தை மேற்கொண் டெழுவேனென்றும் சொன்னர்.

சீடரின் அபசித்தி

குன்றின் சிகரத்தில் சாரூப மகிமை; அடிவாரத்தில் சீடரின் விசுவாசப் பரீட்சை. பேய்பிடித்த ஊமையனான தன் மகனை குருநாதரிடம் கொணர்ந்த தந்தை, அவரில்லாதது கண்டு, அவர் சீடரை

மகனுக்குச் சுகமளிக்க விறைஞ்சினன். சீடரோ சிறுவனைக் கொண்டிருந்த பேயை ஓட்டக்கூடாது மலைத்து நின்றனர். ஜனங்கள் அவர்களை எளனம்பண்ணிக்கொண்டிருந்தனர். அப்பொழுது குருதேவர் மலையினின் றிறங்கிவரக் கண்டு, ஜனங்கள் பிரமையுற்று அவரை வரவேற்க விரைந்தோடினூர்கள். எம்பெருமான் நிகழ்ந்தது யாதென விசாரித்தறிந்து, சிறுவனைத் தம்மிடம் கொண்டுவரக் கட்டளையிட்டார். இயேசுநாதரைக் கண்டவுடன் சிறுவன் வாயில் நுரைதள்ள துள்ளித் துடித்துக் கீழே விழுந்தான். "குழந்தைப் பருவமுதல் இப்பிணி இவனை உபாதித்து, நெருப்பிலும் நீரிலும் தள்ளிச் சேதமிழைத்து வருகின்றது. நீர் ஏதேனும் பரிகாரம் செய்யக்கூடுமாகில், எங்களுக்கு உதவி செய்யுமையா, எங்களுக்கு இரங்கும்" எனத் தகப்பன் பரிந்து கெஞ்சினன். "கூடுமாகில் என்று ஐயமுறுவதேன்? விசுவாசிப்பவனுக்கு எத்தகைய உதவியும் புரியலாம்" என்று குருநாதர் உரைத்தபொழுது, தகப்பன் "நான் விசுவாசிக்கிறேன்! அவிசுவாசத்தை விட்டொழிக்க எனக்குத் துணைபுரிவீர்" எனக் கதறி அபயமிட்டான். அருள்நாதர் சிறுவனைப் பீடித்திருந்த மருளை அதட்டியோட்டினர்.

ஞான விளக்கு

எர்மோன் மலையினின்று புறப்பட்ட எம்பெருமானும் சீடரும் கப்பர்நகூமிற்கு வந்தார்கள். அங்கு சிலநாட் தங்கியிருந்து, எருசலேம் திருநகரில் கூடாரப்பண்டிகை துவங்கினபின் அவண் போந்தனர். தேவாலயத்தில் அவர் உபதேசித்துக்கொண்டிருந்தனர். "நானே மேதினியின் ஞான விளக்கு; என்னைப் பின்பற்றுபவன் இருளில் நடவான்; ஜீவ ஒளியைத் தன்னுள் பெற்றுக் களிகொள்ளுவான்" என்று குருநாதர் உரைத்தார். "உம்மைப்பற்றி நீரே சாட்சி பகர்ந்துகொள்ளுகின்றீர். ஆதலால் உமது சாட்சி ஒவ்வாத சாட்சியேயாகும்" என்று பரிசேயர் அவருடன் வாதுபண்ணவே, குருநாதர் பிரதியுத்தரமாக "அப்படியல்ல, என் சாட்சி பலமான சாட்சியே. அதேனெனில், நான் தனித்து நிற்கவில்லை; நானும் என்னை அனுப்பின பிதாவுமாகக் கூடியிருக்கின்றோம். இரண்டு மனிதரது சாட்சியம் பெறுமதியாயிருக்கிறதென்று உங்கள் நியாயப்பிரமாணங்களிற்றானே எழுதப்பட்டிருக்கின்றது. என்னைக்குறித்து நான்மட்டுமல்ல, என்

பிதாவும் சாட்சி பகருகின்றார்" என்றார். "உன் பிதா எங்கே?" என்று பரிசேயர் வினவ, எம்பெருமான் மீண்டும் "என்னையேனும் என் பிதாவையேனும் நீங்கள் அறியீர்கள். நீங்கள் என்னை அறிந்து கொண்டிருப்பின், என் பிதாவையும் அறிந்துகொண்டிருப்பீர்கள்" என்றார். அதுநிற்க, "நீங்கள் மனித சுதனை சிலுவையில் அறைந்து உயர்த்தியபின், நான் யாரென்றும், என் சுயேச்சையாய் யாதொன்றும் செய்யாது, பிதா கற்பித்தபடியே நான் நடக்கின்றேன் என்றும் கண்டுகொள்வீர்கள். என்னை அனுப்பியவர் என் பக்கத்திலிருக்கின்றார், என்னைத் தன்னந்தனியே விடவில்லை; ஏனென்றால், நான் அவர் விருப்புக்குரிய கிரியைகளையே எப்பொழுதும் செய்கின்றேன்" என்றார். இந்த வசனங்களைக் கேட்ட யூதரிற் சிலர் அவர் தொண்டராயினர். அத்தொண்டரை நோக்கி குருநாதர் உரைத்த ஆசிடை வர்க்கு யாதெனில் "நீங்கள் என் உபதேசத்தில் நிலைகொண்டிருப்பின், எனக்கு மெய்யான சீடராவீர்கள். சத்தியத்தையும் அறிந்துகொள்வீர்கள். சத்தியம் உங்களைச் சுயாதீனர்களாக்கும்" என்பதாம். இவ்வாறு குருநாதர் உபதேசித்துக்கொண்டிருக்கையில், அவரோடு வாதந்தொடுத்துத் தோல்வியடைந்த பரிசேயர் அவரை அடித்துக் கொல்ல கற்களை எடுத்துக்கொண்டார்கள். சாந்தப்பிரபு வெகு சாமர்த்தியமாய் அவர்கள் கண்களுக்கு மறைந்து தேவாலயத்தினின்றும் வெளியே சென்றனர். பின்னர் கலிலேயா நாட்டிற்குத் திரும்பினர். அப்பொழுது கி. பி. 29-ம் ஆண்டின் இளவேனிற்காலமாயிருந்தது. கலிலேயா நாட்டில் குருநாதர் செய்த திருப்பணி இத்துடன் முடிவடைந்தது.

அத்தியாயம் 8.

பேராயா நாட்டில் கிறிஸ்து செய்த ஊழியம்

கோடை 29 முதல், கோடை 30 வரை.

மனுஷகுமாரனுக்குத் தலைசாய்க்க இடமில்லை

பரமபிதா தமக்கு விதித்த விதிப்படி பிராணத்தியாகம் பண்ணும் காலம் நெருங்கியதை யுணர்ந்து, எம்பெருமான் தீர்க்கதரிசிகளின் கொலைக்களமென்ற துர்க்கீர்த்திக்கிடமான எருசலேம் நகரை நோக்கிச் சென்றார். பரத கண்டத்தின் பொங்கல் பண்டிகைக்குச் சமமான அறுப்பின் பண்டிகை காலம் நெருங்கிற்று. யூதரனைவரும் அத்திரு விழாவைக் கொண்டாடத் தங்கள் திவ்விய க்ஷேத்திரமாகிய எருசலேம் நகருக்குச் செல்ல முஸ்திப்பு செய்துகொண்டிருந்தனர். குருநாதரும் கொண்டாடவேண்டிய பெருவிழா வொன்றிருந்தது. உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் பலியாகத் தம் திருவுடலைத் தியாகிப்பதே அவ்விழாவாம். கலிலேயாவிலிருந்து சமாரியா நாட்டைக் கடந்து செல்லுகையில், குருநாதர் தங்க வொரு வீடு தேடிவரச் சீடரை எதிரிவிருந்த கிராமத்திற்கு அனுப்பினார். கிராமத்தார் இடம்கொடோமென்று சொல்லி, சீடரை அவமதித்து அனுப்பிவிட்டார்கள். சமாரியருடனிருந்து உபதேசிக்காது இயேசுநாதர் எருசலேமிற்குப் போக விரும்பியதால் அவர்கள் பொறாமையும் எரிச்சலுமடைந்து இந்த அபசாரஞ்செய்தனர். நாளெல்லாம் நடந்து தொய்ந்துபோன சீடர் தங்கி முசிப்பாற இடங்கொடாத சமாரியர்மீது கடுஞ்சினங்கொண்டனர். யாக்கோபும், யோவானும் குருதேவரைப் பார்த்து "ஆண்டவரே! இவர்களைப் பட்சித்துப்போட வானத்திலிருந்து அக்கினியை வரச் செய்வோமா?" என்று கேட்டார்கள். எம்பெருமானோ "உங்களைக் கொண்டிருக்கும் ஆவி எத்தகையதென்று அறியாதிருக்கின்றீர்கள்" என்றுரைத்து, எவரையும் நொந்துகொள்ளாது, சீடரை அழைத்துக் கொண்டு அடுத்த கிராமத்திற்குச் சென்றார். இப்படி அவர்கள் பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கையில் ஒருவன் எம்பெருமானிடம் வந்து, "ஐயா, நீர் செல்லுமிடமெங்கும் உம்மைப் பின்பற்றிச் செல்லச் சித்த

மாயிருக்கின்றேன்" என்று பகர்ந்தான். "நரிகளுக்குக் குகைகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு, மனித சுதனுக்கோ தலைசாய்க்கவும் இடமில்லை" என்று இயேசுகிறிஸ்து பதிலுரைத்தார். ஆம்! ஆம்! அண்டபிண்ட சராசரமனைத்தையும் படைத்த பரம்பொருளின் ஏக திருப்புதல்வன் தலைசாய்க்க இடங்கேட்டபொழுது சமாரியர் மறுத்து விட்டனரன்றோ? அவன் நிர்ணயம் அழிந்தது. தலைசாய்க்க இடமில்லாத பரதேசியைப் பின்பற்றத் துணிந்தானில்லை. காற்றில் இங்கும் அங்கும் அசையும் நாணலைப்போன்ற சித்த திடனற்ற மற்றொரு பேதையனைப் பார்த்து எம்பிரான், "என்னைப் பின்பற்றிவா" வென்றழைக்க, அவன் "அப்படியே செய்கிறேன். ஆனால், என் தந்தையின் பிரேதத்தை அடக்கம்பண்ணிவிட்டு வருகின்றேன்" என்றான். அதற்கு குருதேவர் "மரிப்போர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும். நீ தெய்வராச்சியம் நிலைபெற்று வருகிறதென்ற நற்செய்தியைப் பிரகடனஞ் செய்யப் போ" என்று பதிலுரைத்தார். இன்னும் ஒருவன் "ஆண்டவரே, நான் உம்மைப் பின்பற்றுகிறேன். அதன்முன் நான் போய் என் வீட்டாரை வினவி விடைபெற்று வருகின்றேன்" என்றான். குருநாதர் அவனுக்குக் கூறிய மாறுத்தரம் யாதெனில், "கலப்பையில் கையை வைத்துக்கொண்டு பின்னால் திரும்பிப்பார்ப்பவன் தெய்வராச்சியத்தில் ஒன்றுக்கும் உதவாத அதமாதவனாவான்" என்பதே. இம்மூன்று பதடிகளும் கிறிஸ்து எம்பிரான்பால் அபிமானமுற்றவர்கள்; அவர் சீடராக மிகவும் வாஞ்சைகொண்டவர்கள். எனினும், உலகப்பற்றுகளைக் களைந்து, வாழ்விலும் தாழ்விலும் அவர் அடிச்சுவடுகளைப்பற்றிச் சென்று சாதிக்கத்தக்க வைராக்கியம் அவர்களுக்கில்லாமற்போயிற்று. ஏக நிர்ணயமற்ற அரை குறை விசுவாசத்தால் யாதும் பயனில்லையென்று வற்புறுத்தவே குருநாதர் அவர்களிடம் மேற்கூறியவாறு பேசினார். அன்று அவர் உரைத்த வாக்கு இன்னும் பொய்யா வாக்காகவே விளங்குகின்றது.

எழுபது சீடரைத் தூதுவிடுத்தல்

சமாரியாவைக் கடந்து, யோர்தான் நதியின் கீழ்க்கரையிலுள்ள பெரேயா நாட்டிற்குள் பிரவேசித்தவுடன், குருநாதர் தம்மைப் பின்தொடர்ந்து வந்தவர்களில் எழுபது தொண்டரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை இரண்டு இரண்டு பேராக தாம் சந்திக்க விரும்பிய கிராமங்

களுக்குத் தூதுவிடுத்தார். முன்பு பன்னிருவர் சென்றதுபோல், இவர்களும் ஒடும் கையுமாய்ச் செல்லவேண்டுமென்று கற்பித்தார். "ஆட்டுக்குட்டிகளை கோநாய்களுக்குள் அனுப்புவதுபோல் உங்களை அனுப்புகின்றேன். என்றாலும் நீங்கள் செல்லும் கிராமங்களில் உங்களை உபசரித்து ஏற்றுக்கொள்ள, இல்லறம் வழுவாத குடிமக்கள் சிலர் இருப்பார்கள். உங்களை ஏற்றுக்கொள்பவர்கள் என்னை ஏற்றுக் கொள்பவர்கள் ஆவர்; உங்களை அவமதித்து தள்ளுவோர் என்னை அவ மதித்துத் தள்ளுவோர் ஆவர்; என்னைப் புறக்கணிப்போர் என்னை அனுப்பிய பராபரனைப் புறக்கணிப்போர் ஆவர்" என்று குருநாதர் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்தி யனுப்பினர்.

"கோராசீனே! உனக்கு ஐயோ"

இத்தருணம் எம்பெருமான் கடந்த ஒரு வருஷகாலம் கலிலேய ரைத் தெய்வ ராச்சியத்தின் உத்தம குடிகளாக்கத் தாம் எடுத்த முயற் சியையும் அதன் பயனையும் சீர்தூக்கிப் பார்த்து பின்வருமாறு தமது சித்திக்குறைவை அறிவித்ததாகத் தோன்றுகின்றது. "கோராசீனே உனக்கு ஐயோ! பெத்சாயிதாவே உனக்கு ஐயோ! உங்கள் முன் நான் இயற்றிய அருஞ் செயல்களை யூதரல்லாத புறஜாதியாரின் பட்டணங்க ளாகிய தீருவிலும் சீதோனிலும் செய்திருப்பேனாகில், அப்பட்டண வாசிகள் இரட்டுடுத்து, சாம்பலிலுட்கார்ந்து தங்கள் பாவங்களை நினைத்து மனமுடைந்து கண்ணீராறு பெருக்கி ஈசனைப் பற்றிக்கொண் டிருப்பார்கள். தெய்வராச்சியம் நிலைபெறும் காலம் வருகின்றது. அப் பொழுது தீருசீதோன் பட்டணங்களுக்கு விதிக்கப்படும் தண்டனை யைப்பார்க்கிலும் உங்களுக்கு விதிக்கப்படும் தண்டனை அதிகக் கொடி தாயிருக்கும். கப்பர்நகூமே! நான் உன்னில் தங்கியிருந்ததால் நீ வானத் தை யளாவ உயர்ந்து போனாயென்றெண்ணிப் பெருமைகொள் வாயோ? வேண்டாம்: பாதாளமட்டும் தாழ்த்தப்படுவாய்!"

வெற்றி மதுப்பருகி உள்ளங் குழைய நகைக்கத்தக்க சமயத்திலல்ல தோல்வியடைந்து துளக்கமுறத்தக்க வேளையில் ஒருவனது ஆண்மைத் தன்மையும் வீர தைரியமும் செவ்வனே விளங்கும். பெரேயா நாட்டில் குருநாதர் சுற்றித்திரிந்த காலமெல்லாம் சிலுவையின் கரிய நிழல் அவரை மூடிக்கொண்டிருந்தது. என்றாலும், அவர் எருசலேமில் இன் னும் ஓர் முறை தமது நவஉபதேசத்தைப் பிரசங்கித்து யூத மதத்தின்

கடி ஸ்தலத்தை தம்வசப்படுத்த தளரா வாஞ்சைகொண்டார். அதை நிறைவேற்றும்படி பண்டிகை நாட்களில் இருமுறை எருசலேமின் தேவாலயத்தில் பிரவேசித்து உபதேசித்தார். அவ்விருமுறையும் அவர் துரத்தப்பட்டார். அவர் மறுமுறை அங்கே சென்றது கடைசிமுறையாக முடிந்தது. அப்பொழுது அவர் கொலையுண்டு மரித்தார். தாம் அகால மரணமடையப்போவதும் தமது உபதேசத்தை எருசலேமின் அதிகாரிகள் தள்ளிவிடப்போவதும் குருநாதருக்கு இப்பொழுதே தெரியும். முன்னுற்று நோக்குங்கால் அபஜெயமும் தோல்வியுமே தோன்றின. பின்னுற்றுப்பார்த்தாலோ சென்ற பதினெட்டு மாதங்களாகத் தாம் எடுத்த அரும்பிரயத்தனங்களனைத்தும் அவமாய்ப் போனதாகவே காணப்பட்டது. துவக்கத்தில் யூதேயா நாட்டில் போதிய சித்தி பெறாது போனமையால் கிறிஸ்துநாதர் குருக்கள் ஆதீனத்திற்குச் சற்றே தப்பிய விசால நோக்கமுடைய தம் சொந்த நாட்டாராகிய கலிலேயரைத் தொண்டராக்க முயன்றார். கடைசிபரியந்தம் கலிலேயர் குருநாதரை நன்குமதித்து அவரைப் பெரிதும் பாராட்டினர். அவர் உபதேசத்தையும் ஏற்றுக்கொண்டவர்போல் காணப்பட்டனர். யூத சிம்மாசனத்தைக் கவர்ந்து, அரசுபுரிய அவர் மறுத்துவிட்ட பொழுதோ கலிலேயர் அவரைப் புறக்கணித்தனர். அவர் போதித்த உபதேசம் அவர்களுக்குக் கடினமாகத் தோன்றிற்று. என்றாலும் இயேசுநாதர் முன்வைத்த காலை பின்னெடுக்கவில்லை. தெய்வ ராட்சியம் நிலைபெறும் என்ற நம்பிக்கையையும் இழந்துவிடவில்லை. தமது சீடரைப் பயிற்சித்து பரிபக்குவப்படுத்துவதில் ஊக்கங்குன்றவுமில்லை. கலிலேயாவிலிருந்தபொழுது தமது நவ உபதேசத்தைப் போதிக்க பன்னிருவரை அனுப்பினார். அவர்கள் தெய்வ ராச்சியம் வந்ததென்ற நற்செய்தியை அறிவித்து திரும்பிவந்து, "ஆண்டவரே, பிசாசுகளும் உமது திருநாம மந்திரத்திற்கு அஞ்சியோடுகின்றன" வென்று கூறியபொழுது, குருநாதர் பரமானந்தவாரிதியிலாழ்ந்து, கவலையையொழித்துக் குதூகலித்தார். "ஆம்! ஆம்! மின்னலைப்போல் சாத்தான் விண்ணின்று வீழ்ந்ததைக் கண்டேன். தேளையும் சர்ப்பத்தையும் மிதிக்கவும், பிசாசாகிய சத்துருவின் சகல வலிமையையும் அழிக்கவும் நான் உங்களுக்கு அதிகாரம் கொடுத்தேன். என் தந்தை சகலத்தையும் என் கைவசப்படுத்திவிட்டார். பிதா தவிர மற்றெவரும் குமாரனின் நிசசொரூபத்தை யறியார்; குமாரனும், குமாரன் பிதாவை எவ்வெவ

ருக்கு வெளிப்படுத்தச் சித்தங்கொள்வாரோ அவ்வவருமே தவிர, மற்றெவரும் பிதாவின் சுகுண சம்பத்தையறியார். நீங்கள் காணும் தெய்வ மகத்துவங்களைக் காணும் கண்கள் பாக்கியம்பெற்றவை. பக்தர் பலர் அம்மகத்துவங்களைக் காணவும் கேட்கவும் அவாவுற்றிருந்தும் காணுமலும் கேளாமலும் போயினர்," என்று குருநாதர் கூறி அகமகிழ்ந்தார். தோல்வியடைந்தவர் இவ்வாறு எண்ணுதலும் பேசுதலும் அரிதன்றே? எம்பெருமான் நிகழும் சம்பவங்களையும் அவற்றைக்கொண்டு சமீபத்தில் நிகழவிருக்கும் சம்பவங்களையும்மட்டுமே கண்டு கணித்திருப்பின், இத்தகைய நம்பிக்கை கொண்டிரார். அவர் யுகாயுகங்களாய் நிறைவேறிவரும் தெய்வ அருட்கிரியை யனைத்தினையும் அப்பொழுதே நிகழ்வதாகக் கண்டு களியுறும் தூரதிருஷ்டிகராக விருந்தாரென்பது இதனுல் விளங்குகின்றது.

ஓய்வுநாளை மீறியதான குற்றம்

யூதரின் பரிசுத்த நாளாகிய சனிக்கிழமையன்று யேசு தேசிகர் உபதேசித்து முடிந்தபின் பதினெண்ணுண்டுகளாய் முதுகெலும்பு வளைந்து கூனியாயிருந்த வோரணங்கைக் கடாட்சித்து அவளை அழைத்து, "மாதே, உன்னை வருத்திய பிணியினின்று விடுதலைபெற்ருய்," எனச் சுபமொழி பகர்ந்து அவளைத் தொட்டார். கண்ணிமைப்பொழுதில் அவள் நிமிர்ந்து நின்று நிமலனை வந்தித்து மகிழ்ந்தாள். ஜெப ஆலயத்தலைவன் இதைக் கண்டு, அவ்வரிவையடைந்த சுகத்தைக் கருதி களிகொள்ளாது, குருநாதர் ஓய்வுநாளில் வேலை செய்யப்படாதென்ற பிரமாணத்தை மீறியதை யெண்ணி வெகுண்டான். தைரியம் போதாததால் குருநாதரை எதிர்த்து வாதாடாது கூடியிருந்த ஜனங்களைப் பார்த்து "வேலை செய்யத்தக்க தினங்கள் வாரத்தில் ஆறன்ருே? நீவிர் பிணிநீங்கிச் சுகிக்க விரும்பின், அந்த ஆறுதினங்களி லொன்றில் வரக்கூடாதோ? ஓய்வுநாளில் என் வரவேண்டும்?" என்று கடிந்துரைத்தான். குருநாதர் அதைக் கேட்டு "ஓய்வுநாளில் நீங்கள் உங்கள் எருதுகளையும் கழுதைகளையும் தண்ணீர் காட்ட தொழுவத்தினின்று அவிழ்த்துக்கொண்டு போகிறதில்லையோ? பதினெண் ஆண்டுகளாய்ப் பிணியால் நைந்து வதைந்த ஆபிரகாமின் புத்திரியாகிய ஓரரிவையை ஓய்வுநாளில் கட்டவிழ்த்துவிட்டது குற்றமாகுமோ?" என்று எதிர்வாது பேசினர். ஜெபஆலயத் தலைவனும்

அவனைச் சேர்ந்தோரும் வெட்கமுற்று முகங்கவிழ்ந்தனர். மற்ற மாந்தரனைவரும் குருநாதரின் அருஞ்செயலையும் பெருஞ்சிந்தையையும் எண்ணி மகிழ்வுற்று ஆர்ப்பரித்தனர். இதற்கு சற்றுமுன் ஊமையன் ஒருவனை குருநாதர் கடைக்கணித்து அவன் நாவின் கட்டுகளை அவிழ்த்துவிட்ட நற்செயலைப் பெரேயா வூரார் கண்டு போற்றியபொழுதும் பரிசேயர் தம் வழக்கம்போல் அவர்கள் கொண்ட அபிமானத்தைக் குலைக்க முயன்றனர். இதமும் சொற்சாதுரியமும் மிகுந்த எம் குருநாதர் பரிசேயரை வெட்கப்படுத்தி விரட்டினர். அதனால் ஜனங்கள் அவரை முன்னிலும் அதிகமாகக் கண்ணியப்படுத்தினார்கள். ஆங்கிருந்த வோர் நங்கை "உம்மை ஈன்ற கர்ப்பமும், உமக்குப் பாலூட்டிய தனங்களும் என்ன பாக்கியம் பெற்றனவோ?" என உரத்துக்கூவி குருநா'தரை வாழ்த்தினள்.

சதியாலோசனை

யேசுபெருமான் பெரேயா நாட்டிலும் கீர்த்தியடைந்ததைக் கண்டு, பரிசேயர் கலக்கமுற்றனர். அவர்கள் சாதித்த வர்மம் அதிகரித்தது. யேசுநாதரை நசுக்கியழிக்க சமயம் என்று வாய்க்குமோவென ஏங்கித் தயங்கிய ஒன்னார், பெரேயா நாட்டில் குருநாதருக்கு இன்னலிழைப்பது கடினமென்றுணர்ந்தனர். பெரேயாவிலிருக்கையில் குருநாதர் மீது கைவைக்க அவர்கள் யத்தனித்தால், அவ்வூரார் அவர்களைத் தடுப்பது திண்ணம். தவிர பெரேயா நாடு ஏரோது அகரிப்பாவின் ஆதீனத்திலிருந்தது. ஆங்கு பரிசேயரின் சனகரீம் சங்கத்தாருக்கு அதிகாரமில்லை. யோர்தான் நதியைக்கடந்து, யூதேயா நாட்டிற்குள் குருநாதர் புகுந்தால், சனகரீம் சங்கத்தின் ஆதீனத்திற்குட்படுவார். அங்கு வந்தபின் அவர்மீது குற்றஞ்சுமத்தி சனகரீம் சங்கத்தின்முன் அவரை நிறுத்தி விசாரித்து சிட்சிப்பது எளிதாகும். பரிசேயர் இதையெல்லாம் சிந்தித்து, குருநாதரை பெரேயாவினின்று பெயர்த்துவிட முயன்றனர். அவர்கள் குருநாதரிடம் வந்து, "ஏரோது உம்மைக் கொல்ல நினைத்திருக்கிறான்; நீர் பெரேயாவைவிட்டுப் போய்விடும்" என்று மாய நட்புக்காட்டி அவருக்கு ஆலோசனை சொன்னார்கள். குருநாதர் எளிதில் ஏமாறவில்லை. அவர்கள் தந்திரத்தையும் சதியாலோசனையையும் தெற்றென வோர்ந்து, "இன்னும் சிலநாள் நான் பேய்களைத்துரத்தி, பிணியாளிகளைக் குணமாக்கிவரவேண்டும். சீக்கிரம்

அலுவல் முடியும், அப்பொழுது நான் எருசலேமிற்குப் போவேன். ஏனெனில் எருசலேமிற்கு வெளியே தீர்க்கதரிசியொருவன் கொலை யுண்டு மரிப்பது வழக்கத்திற்குப் பொருந்தாததாகும்" என்று எம் பெருமான் உரைத்தனர். பரிசேயர் சற்று பொறுமையைக் கையாடின் குருநாதர் தாமே தெய்வ விதிப்படி எருசலே நகருக்குச் சென்று சத்துருக்கள் கைக்குத் தம்மை யீடுபடுத்தி மரிக்கத் தயாரா யிருந்ததும், ஏரோதிற்கேனும், மற்ற விரோதிகளுக்கேனும் அவர் கிஞ்சித்தும் அஞ்சாததும் அதனால் விளங்குகின்றன. பிறிதொரு சமயம் அவர் மொழிந்தவாறு, அவரது பிராணனைக் காப்பதும் அழிப் பதும் மனிதரால் ஆகும் செயலல்ல. எல்லாம் வல்ல இறைவன் வகுத்த வரம்பு தவறுதொழுகும் எம்பெருமான், தன் பிராணனை விடுக்கவும், எடுக்கவும் சுயாதீனம்பெற்ற சுந்தரக் குமாரனென்பதே இதன் கருத்து.

பெத்தானி—ஓர் ஒதுக்கம்

இந்தப் பயணத்தில் இயேசுநாதர் சந்தித்த கிராமங்களிலொன்று, எருசலே நகருக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்திலிருந்த பெத்தானி யென்ற கிராமம். அவரை வரவேற்றுக்கொள்ளுவா ரெவரேனும் அங்கிருப்பாரோவென்று கண்டுவரச்சென்ற சீடர் மூன்றுபேரடங்கிய வோர் சிறு குடும்பத்தைக் கண்டனர். லாசரு என்ற வாலிபனும் அவனுடன் பிறந்த மார்த்தாள், மரியாளென்ற பெயர்கள் புனைந்த பெண்களுமே அக்குடும்பத்தின் அங்கத்தினர்களாம். அன்னோரைப் பெற்றோர் அங்கு இல்லாத காரணம் தோன்றவில்லை. ஒரு புராணக் கதையில் கண்டது உண்மையெனின், அம்மனைக்கு விளக்கமாய மடவாள் இறந்து, அகமுடையான் குஷ்டரோகியாகக் காடுசென்ற பின், அநாதையராய் விடப்பட்ட பிள்ளைகள் மூவர் தமக்கு நேர்ந்த துக்கத்தை மாய்க்க ஒருவருக்கொருவர் துணையாயிருக்கத் தீர்மானித்து இணைபிரியாது வாழ்ந்துவந்தனர். கப்பர்நகூமில் சீமோன் வீட்டில் குருநாதர் விருந்துண்ணுகையில், அவர் திருக்கழலை முத்தமிட்டு, தன் குற்றமுணர்ந்து கண்ணீர் சொரிந்த மகதலேனா மரியாளே லாசரு வின் சகோதரியாகிய மரியாளா யிருக்கலாம். அப்படியாயின், குரு நாதர் லாசருவின் வீட்டிற்கு ஓர் அறிமுகமற்ற அந்நியனாகவல்ல, அளிப்பதற்கரிய ஆன்மசுகமீந்த ஆப்தபாந்தனாகச் சென்றிருப்பார்.

முன்னொருகால், தனவந்தனான பாலிய அதிகாரியொருவன் தெய்வ ராச்சியத்தைச் சுதந்தரிக்க தான் யாது செய்வதென்று வினவ, குரு நாதர் அவன் தன் சொத்து முழுவதையும் விற்று தரித்திருக்களித்து விட்டு, தம்மைப் பின்பற்றி வரவேண்டுமென்று சொன்னபொழுது சம்மதியாது போய்விட்டான். அவனைக் குருநாதர் கண்டவுடன் அவனிடம் அன்புகொண்டாரென்றும் கூறப்பட்டுள்ளது. அவன் பெத்தானியாவூர் லாசருவென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். உண்மை எதுவாயிருப்பினும், குருநாதர் லாசருவின் வீட்டிற்குச் சென்றபொழுது, வீட்டார் மூவரும் அவரை அன்புகொண்டு வினவி உபசரித்தனர். மாற்றலர் தம்மைச் சூழ்ந்து நின்ற இச்சமயம் குரு நாதர் இங்கு மனமொத்த நண்பரின் அன்பை ருசித்து பாலைவனத்தில் பசுமையான பூஞ்சோலையைக் கண்ட பிரயாணியைப்போல் களித்துச் சுகித்தார்.

ஒன்றே தேவை

இங்கு ஒருநாள், குருநாதர் தோட்டத்தில் உட்கார்ந்து இளைப் பாறிக்கொண்டிருந்தபொழுது மரியாள் அவரை அண்மி, அவர் நவின்ற திவ்விய உபதேசமொழிகளைக் காதாரக்கேட்டு களிகொண் டிருந்தாள். ஆத்மார்த்த சத்தியங்களில் அவள் இதயமும் புத்தியும் ஈடுபட்டுநின்றன. தம் வீட்டுக்குட்சென்று அதைச் சிறப்பிக்க மனமுவந்த சீரிலங்கும் அதிதிக்கு அறுசுவை அமுதளித்து தன் நன்றியைக்காட்ட மார்த்தாள் கிணற்றிற்கும் சமையலறைக்கும் அலைந்து வேலை செய்துகொண்டிருந்தாள். மரியாள் அவளுக்கு உதவி செய்யாமல் உட்கார்ந்து கதை கேட்டுக்கொண்டிருந்தது மார்த் தாளின் மனதிற்குச் சஞ்சலத்தை யூட்டிற்று. அவள் குருநாதரை நோக்கி "ஆண்டவரே, என் தங்கை என்னைத் தனிமையாகப் பாடு பட்டு வேலைசெய்ய விட்டுவிட்டாளே, பாரும்! அவளை எனக்குக் கொஞ்சம் உதவி செய்யச் சொல்லக்கூடாதோ?" என்றாள். அப் பொழுது குருநாதரின் வாய் சொரிந்த போதன முத்துக்களிற் சிறந்த முத்தொன்று பிறந்தது. அவர் சொல்லுகின்றார்: "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக பதார்த்தங்கள் வேண்டுமென்று அநாவசியமான கஷ்டம் எடுத்துக்கொண்டாய். தேவையான பதார்த்தம் ஒன்று தானே. மரியாள் என்றுமழியாத நல்ல பதார்த்தமாகிய ஆன்ம

உணவைத் தெரிந்துகொண்டாள். அவள் அதை மனதார அருந்தா தொழியாள்."

"செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றிற்கு மீயப் படும்."

"எனக்கு ஒன்று தெரியும்"

பெத்தானியாவிலிருந்து இயேசுநாதர் எருசலேமிற்குச் சென்ற பொழுது குருடனொருவன் வழியோர முட்கார்ந்து யாசித்துக்கொண் டிருந்தான். சீடர் அவனைக் கண்டபொழுது "ஆண்டவரே, இவன் அந்தகனாகப் பிறந்தது இவனிழைத்த தீவினைப்பயனோ, இவன் பெற்றோரின் ஊழ்வினைப் பயனோ?" என்று குருதேசிகரைக் கேட் டார்கள். "இவன் கண்ணை யவித்தது ஊழ்வினையன்று. தெய்வ கிருபையின் மேன்மை இவனில் விளங்கவே இவன் அந்தகனாகப் பிறந்தனன்" என்றியம்பி, குருடனின் ஒளியற்ற கண்களில் சேற்றைப் பூசி சீலோவாம் என்னும் குளத்தில் அவன் கண்களைக் கழுவ குருநாதர் அவனுக்குக் கற்பித்துச் சென்றார். அந்தகன் அப்படிச் செய்து பார்வையடைந்து நகரத்திற்குள் சென்றபொழுது, அவனைக் கண்ட மாந்தர் அவன் பார்வையடைந்தது எங்ஙனமென வினாவினர். அவன் நடந்ததைச் சொன்னான். காணாதவனுக்குக் கண்ணருளிய கண்ணேயாகிய அப்பெருமான் யாவரென்று அவன் அறிந்திலன். ஜனங்கள் அவனைப் பரிசேயராகிய குருக்களிடம் செலுத்தி நிறுத்தினார்கள். அவர்கள் கண்ணளித்தது அரிய செய லெனினும், ஓய்வுநாளில் சேறுண்டாக்கி கண்களில் பூசிய பெரிய அபராதத்தையும் குருநாதர் செய்ததால், அவர் அவபக்தனென்று சொன்னார்கள். இந்த அநியாயத்தீர்ப்பு ஜனங்களுக்குள்ளே வாக்கு வாதத்தை யுண்டாக்கிற்று. சிலர் பரிசேயர் சொல்லுவது நியாயமென் றும் வேறு சிலர் அநியாயமென்றுஞ் சாதித்தனர். அந்தகன் அபிப்பிராய மென்னவென்றறிய விரும்பிச்சிலர் அவனைக் கேட்டபொழுது, "அவர் ஓர் சிறந்த தீர்க்கதரிசியென்றே நான் சொல்லுகிறேன்" என்றான் இதன் மத்தியில் அவன் பெற்றோர் வந்துசேர்ந்தனர். அவன் அவர்கள் புதல்வனோ, அவன் குருடனாகப் பிறந்தது நிசமோவென்று பரிசேயர் கேட்க; அவர்கள் "ஆம்" என்று பதிலுரைத்தார்கள். அவன் பார்வை யடைந்தது எவ்விதமென்றும், பார்வையளித்தவர் யாரென்றும் பகா

மறுத்தார்கள். அதைச்சொல்லப்புகின் பரிசேயர் தம்மீது சினங்கொள்ளுவர் என்று பயந்து, பாலியனைக் கேளுங்களென்று சொன்னார்கள். பரிசேயர் அவனைப் பார்த்து "கருணாம்பரக் கடவுளை நீ போற்றிசெய். உன் கண்களைத் திறந்த அந்த மனுஷன் அவபக்தனென்று நாங்கள் அறிவோம்" என்றார்கள். அந்தகன்:—"அவர் பக்தரோ, அவபக்தரோ நான் அறியேன்! நான் குருடனாக விருந்தேன், இப்பொழுது காண்கின்றேன். இது ஒன்றே தெரியும்." பரிசேயர்:—"அவன் என்ன செய்தான்? உன் கண்களை எப்படித் திறந்தான்?" என, அந்தகன்:—"எத்தனைதரம் சொல்லுவேன்! நான் சொல்லுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையே! திரும்பத் திரும்பக் கேட்பதேன்? நீங்கள் அவர் சீடராக விரும்புகிறீர்களோ?" என்றனன். பரிசேயர்:—"என்னடா! நீ தான் அவன் சீடன். நாங்கள் மோசே முனிவரின் சீடராயிற்றே. கடவுள் அம்முனிவருடன் பேசினாரென்று நாங்கள் அறிவோம். இந்தப் பயல் எங்கிருந்து வந்தானென்றும் எங்களுக்குத் தெரியாது." அந்தகன்:—"அப்படியா? நீங்கள் சொல்லுவது விநோதமாயிருக்கின்றது. குருடனாகப் பிறந்தவன் பார்வையடைந்ததை இதன்முன் நீங்கள் கண்டதுண்டோ? கேட்டதுண்டோ? அவரை நீங்கள் அவபக்த னென்று தீர்க்கின்றீர்கள். ஆனால் அவர் என் கண்களைத் திறந்தது பிரத்தியட்சமான உண்மை! ஈசன் பாவிகளுக்கு அருட் பலன் தருவரோ? பக்தருக்கும், அவர் திருவுள விருப்பிற்கு அமைந்து ஒழுகுகின்றவர்களுக்கும் மட்டுமெல்லோ கடவுள் கிருபை வரங்களைத் தருகின்றார்" என மொழிந்தான். "போதும், போதும்! முழுவதும் அக்கிரமத்தில் பிறந்த நீயா எங்களுக்கு புத்திபுகட்ட வந்துவிட்டாய்?" என்றிவ்வாறு பரிசேயர் குருநாதர் கண்களைத் திறந்தது உண்மையல்லவென்றேனும், அது தவறின், அவர் தெய்வகிருபையைப் பெறக்கூடாத அவபக்தனென்றேனும் ருஜுப்படுத்த முயன்றனர். அவர்கள் முயற்சி வாய்க்காததுகண்டு அந்தகனைப் பழித்துப் பரிகசித்து குலத்தைவிட்டுத் தள்ளிவிட்டார்கள். இவ்வநீதக்கிருத்தியம் இயேசுநாதர் காதுக்கெட்டினது. அவர் அந்தகனைச் சந்தித்தபொழுது; "மனிதகுமாரர் மீது விசுவாச பக்திகொண்டிருக்கின்றனையோ?" என்று அவனைக் கேட்டார். "அவர் யார் ஐயா? சொல்லும். நான் அவரிடம் பக்திகொள்ளுவேன்" என்று அந்தகன் விடைபகர்ந்தான். குருநாதர்:—"நீ அவரைப் பார்த்திருக்கின்றாய்; உன்னுடன் பேசிக்

கொண்டிருப்பவரே அவர்.'' "நிச்சயமாக நான் உம்மிடம் பக்தி விசுவாசம் கொண்டேன் ஆண்டவரே!" என்று அந்தகனறைந்து குரு தேசிகரைப் பூஜித்துப் போற்றினன். அப்பொழுது குருநாதர் மொழிந்ததாவது, காணுதவர் காணவும், காண்பவர் காணுதிருக்கச் செய்யவும், நேரிலங்கும் ஆன்மீகத்தீர்ப்புச் செய்யவுமே நான் தராதலத்தி லெழுந்தருளியிருக்கின்றேன்'' என்பதே. பரிசேயர் அதைக் கேட்டுச் சினங்கொண்டு, "அப்படியானல், நாங்கள் குருடரோ?" என்றனர். குருநாதர், "நீங்கள் குருடராயிருப்பின், தெரியாத்தனத்தால் அநியாயத் தீர்ப்புகள் செய்கிறீர்களென் றுணர்ந்து ஈசன் உங்கள் குற்றத்தைப் பொறுத்தருளுவார். நீங்களோ தெளிந்த பார்வையுள்ளவர்களென்று சாதிப்பதால், உங்கள் குற்றம் உங்கள் தலைமீதே சுமருகிறது'' எனப் புகன்ருர். இந்த விவாதத்தைக் கேட்டவருக்குள் குருநாதரைப்பற்றி அபிமான வேற்றுமை யேற்பட்டது. சிலர் "இவன் பித்தன். இவன் பிதற்றலைக் கேட்பதில் என்ன பயன்?" என்ருர்கள். வேறு சிலர் "அப்படியன்று. அவர் பேச்சு உன்மத்தர் பேச்சாகாது. பித்தங்கொண்டவனெவனேனும் குருடருக்குப் பார்வை அளிப்பானே?" எனக் கழன்றனர்.

பிதாவும் குமாரனும் ஒன்று

பரிசேயருக்கும் இயேசு எம்பிரானுக்கும் உண்டான வாக்குவாதம் இந்த கடைசி நாட்களில் மும்முரப்பட்டது. யூதஜன சமுதாயத்தை மெய்வழியிலுய்க்கும் சிலாக்கியம் தமதென பரிசேயர் சாதித்து வந்தனர். குருநாதரோ அவர்கள் குருடருக்கு வழிகாட்ட முயலும் குருடர்களைப் போன்ற பொய்க் குருக்களெனப் பன்முறை இடித்துரைத்தார்.

"பொய் மதங்கள் போதனைசெய் பொய்க் குருக்களை
புத்திசொல்லி நன்னெறியில் போகவிடுக்கும்
மெய்மதந்தா னின்னதென்று மேவவிளம்பும்
மெய்க்குருவின் பாதம் போற்றியாடாய் பாம்பே."

எனத் தமிழ்நாட்டுச் சித்தர் பாடியதுபோல், பலஸ்தீன தேசத்திலும் யூதமத அனுசாரிகளுக்கு மெய்வழிகாட்டும் சற்குரு அப்பொழுது அவசியமாயிருந்தது. ஏனெனில் தொன்றுதொட்டுக் குருக்களாயிருந்த பரிசேயர், வேதப்புரட்டராகிவிட்டனர். யூத ஜனத்திரளுள் பலர்

இயேசு எம்பிரானொருவரே மெய்யான போதகரெனக் கருதியது கண்டு, பரிசேயர் அந்த எண்ணத்தை யொழிக்க தம்மாலியன்றமட்டும் பிரயத்தினப்பட்டார்களென்பது இந்த வாக்குவாதங்களில் காணக்கிடக்கின்றது. குருநாதர் இவ்விவாதத்தில் தமது ஞாயங்களை எடுத்துச் சாற்றச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்.

எருசலே நகரில் பிரதிஷ்டை பண்டிகை துவங்கிற்று. கி. மு 165-ம் ஆண்டில் மக்கபீயரால் தெய்வாலயம் புதுப்பிக்கப்பட்டதென்று முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டது. அச்சுப சம்பவத்தை நினைத்து, தாம் எதிர்பாராத அரிய மார்க்க சுயாதீனத்தை ஈசன் அப்பொழுது அளித்துதவிய பெருங்கருணைக்கு நன்றிசெலுத்தி அவரைத் துதிப்பதற்கென்றே யூதர் எட்டுநாள் பண்டிகை கொண்டாடினார்கள். மக்கபீயர் மூலமாகக் கடவுள் தமக்கருளிய கிருபை பெரிதென்றுணர்ந்து, பிரதிஷ்டைப் பண்டிகையைத் தீபாவளியென்றும் புனர்நாமஞ் சூடிப் பாராட்டினர். அப்பெருவிழாவிற்கு யூதநாட்டின் நான்கு திக்குகளிலுமிருந்துவந்த பக்தகோடிகள் திருநகரிற் செறிந்துநின்றன. அப்பொழுது குருதேசிகர் அவர்கள்முன் தோன்றினார். “நீர் கிறிஸ்துவாகிய மேசியாதானோ அல்லவோ? தீர்மானமான ஓர் உத்தாரம் தாரும்” என்று பரிசேயர் அவரைக் கேட்டனர். அந்தக் கேள்விக்கு தாம் கொடுக்கக்கூடிய விடையைக் கேட்டமாத்திரத்தில், பரிசேயர் அவரை மெய்குருவென்று அங்கீகரிக்கமாட்டார்களென்றும், தெளிந்த சிந்தையும் களங்கமற்ற மனமும் நுண்ணிய ஆன்மப் பகுத்தறிவுமுள்ளோர், ஆடு மேய்ப்பவனின் குரலை அறிந்துகொள்ளுவதுபோல், அவர் மெய்க்குருவென்பதை ஓர்ந்துகொள்ளுவாரென்றும் குருநாதர் பகர்ந்தார். அவ்வாறு அவரது நிச சொரூபத்தைக் கண்டுணர்ந்து அவரை வழிபட்டு வரும் பக்தர் பலருளரென்றும், பரிசேயர் எத்தனை வஞ்சகந்தான் பேசினாலும், அன்னோர் குருநாதரிடம்கொண்ட பக்தி குன்றாதொழுகுவாரென்றும் அவர் இடித்துரைத்தார். “நானே நல்ல மேய்ப்பன். நான் என் ஆடுகளை யறிவேன், என் ஆடுகள் என்னை அறியும். அவற்றிற்காக என் பிராணனையும் கொடுக்கத் தாமதியேன். யூதரல்லாத புறஜாதியாரிலும் என் மந்தையைச் சேர்ந்த பலரிருக்கின்றனர்; அவர்களை நான் கொண்டுவருவேன். அப்பொழுது மந்தையுமொன்று, மேய்ப்பனுமொருன்றாக விருக்கும். இந்த நற்கருமத்தை செய்துமுடிக்க நான் சித்தங் கொண்டதால் என் தந்தையாகிய தெய்வம் என்னை நேசிக்கிறார். நானும்

என் தந்தையும் ஒன்று" என்று குருநாதர் தமது உன்னத நோக்கத்தை விளங்கச் சொன்னார். அவர் பேசி முடிக்குமுன், பரிசேயக் குழுவினர் குருநாதரை அடிக்க கற்களை எடுத்தனர். குருநாதர் சிறிதும் அஞ்சாது வெகு சாந்தமாய் அவர்களைப் பார்த்து "தெய்வ கிருபையால் நான் அநேக நற்கருமங்களை உங்கள் கண்முன் நடத்தினேன். அவற்றில் எந்த நற்கருமத்திற்காக நீங்கள் என்னைக் கல்லாலடிப்பது நீதியென்றெண்ணி இப்படிச் செய்கின்றீர்கள்?" என்று கேட்டார். பரிசேயர் "நீ செய்த நன்மைக்குக் கைமாறாகவல்ல; கேவல மனுஷனாகிய நீ, நானும் தெய்வமும் ஒன்று என்று தெய்வ தூஷணமான பேச்சைப் பேச மமதைகொண்டாயன்றோ? அந்த கர்வத்தை அடக்கவே நாங்கள் உன்னைக் கல்லெறிந்து கொல்வது சரியென எண்ணுகின்றோம்" என்றனர். இயேசுகிறிஸ்து:— "தெய்வ அருள்வாக்கை யுணர்ந்து உபதேசித்த தேசிகரை 'நீங்கள் தெய்வங்கள்' என்று உங்கள் சுருதி சிலாகித்துப் பேசுகின்றதே. அப்படியிருக்கப் பரமபிதாவினால் அபிஷேகம் பண்ணப்பட்ட நான் என்னை தெய்வசுதன் என்று அழைப்பது தெய்வதூஷணமாகுமோ? கருணாம்பரனின் திருவுளம் உவக்கத்தக்க நற்கிரியைகளை நான் செய்யாதிருப்பின் என்னைக்குறித்து நானே மேம்பாடாகப் பேசுவது புத்திக்கு ஒவ்வாததாகும். நன்றன்றித் தீதொன்றும் செய்தறியேன். நீவிர் என் சாதனையின் சாட்சியை ஏற்றுக்கொள்ளுமிடத்து என் பிதா என்னிலும் நான் அவரிலும் சாயுச்சிய ஒற்றுமையாயிருப்பதை ஓர்ந்துணர்வீர்" என்றார். ஆதித்தனின் காந்தியால் மெழுகுதான் உருகுமே யொழிய களிமண் உருகுமோ? உருகாது, கடினப்படும். அவ்வாறே மாச்சரியம் துன்னிய மனத்தினரான பரிசேயர் சத்தியத்தைக் கேட்கக் கேட்கக் கடினப்பட்டாரேயொழிய கனிவுற்றாரில்லை. அவர்கள் சாந்தமூர்த்தியைப் பிடித்து கைதிசெய்ய முயன்றார்கள். அவர் அவர்கள் கொடுங்கரத்திற்குத் தப்பி யோர்தான் நதியின் எதிர்கரைக்குச் சென்றார்.

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்

யோவான்ஸ்நானகர் வசித்திருந்து பிரசங்கம் பண்ணியதால் பிரசித்திபெற்ற பெத்தபாரா என்ற சிறு கிராமத்தில் குருநாதர் தங்கியிருந்தார். அங்கு தம் சீடருக்கும், தம்மைத் தேடிச்சென்ற நண்பருக்கும்

ஞானரசம் நிறைந்த கதைகளைச் சொல்லி உபதேசித்துக்கொண்டிருந்தார். அமரிக்கையாய்ச் சிலநாட்கள் கழிந்தன. பின்னர், குருநாதரின் நண்பன் லாசரு கொடிய வியாதிப்பட்டு மரணத்தறுவாயிலிருக்கிறனென்று பெத்தானியிலிருந்து லாசருவின் சகோதரிமார் செய்தியனுப்பினர்கள். செய்திவந்த மூன்றும்நாள், குருநாதர் சீடரைப் பார்த்து, "நமது நேயன் லாசரு மரணநித்திரை கொண்டான். அவனை எழுப்பிவிடப் போவோம். நீவிர் வருக" என்றனர். சிலநாட்களுக்கு முன் குருநாதரை எருசலேமிலிருக்கும் யூதர் கொல்ல முயன்றதை சீடர் நினைத்து, அவர் பெத்தானிக்குப் போவது உசிதமல்லவென்றனர். தாம் மரிக்கும்நாள் இதற்குள் வருவதில்லையென்று குருநாதர் உணர்ந்து பெத்தானிக்குப் போகத் தீர்மானித்தார். சீடர் கம்பலை கொண்டு மௌனமாயிருந்தனர். "நாமும் போவோம். குருநாதரோடு மரிப்போம் வாருங்கள்" என்று தோமா தன் உடன்சீடருக் குரைத்தான். அவர்கள் பெத்தானியென்னும் கிராமத்தைச் சமீபித்த பொழுது, குருநாதர் வருவதை கேள்விப்பட்ட மார்த்தாள் பறந்து சென்று "ஆண்டவரே, நீர் எங்களோடிருந்திருப்பின், என் சகோதரன் மரித்திரான்" என்று சொல்லி யழுதாள். குருநாதர் "பயப்படாதே. உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" எனப் பகர்ந்தார். மார்த்தாள்:—"ஆம், யுகாந்தத்தில் அவன் உயிர்த்தெழுவான் என்று நான் நம்புகிறேன்."

குருநாதர்:—"அப்படியல்ல, நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னில் விசுவாசப் பற்றுக்கொண்டோர் மரித்தாலும் உயிர்த்தெழுவார்கள். நீ அதை நம்புகிறாயா?"

மார்த்தாள்:—"ஈசனின் நித்திய தீர்மானப்படி மேதினியைப் புரக்கவந்த தெய்வ சுதனாகிய கிறிஸ்து நீரே என்பது என் நம்பிக்கை." இப்படி இவ்விருவரும் பேசிக்கொண்டிருக்கையில் மரியாளும் ஓடி வந்தாள். அவளோடு எருசலேமிலிருந்து துக்கம் விசாரிக்கவந்த சில யூதரும் வந்தார்கள். "ஆண்டவரே, நீர் எங்களோடிருந்திருப்பின் என் சகோதரன் மரித்திரான்" என்று மரியாள் சொல்லிப் புலம்பி குருநாதரின் பாதத்தில் விழுந்தாள். அவள் பரிதாப நிலையைக்கண்டு யாவரும் ஓலமிட்டனர். குருநாதரின் திடநெஞ்சு முடைந்தது. இயேசுநாதர் கண்ணீர்சொரிந்தார். யாவரும் புலம்பிக்கொண்டே லாசருவைச் சேமித்த கல்லறைக்குச் சென்றனர். குருநாதர் கல்லறையின் வாயை

மூடியிருந்த கல்லைப் புரட்டச் சொன்னபொழுது, அவர் செய்யப் புகுந்த அற்புத அருட்செயல் யாதென்றறியாததால், "அவனை அடக்கஞ்செய்து நான்கு தினங்களாயிற்று. இப்பொழுது நாற்ற மல்லோ வீசும்" என்று மார்த்தாள் சொன்னாள். "நீ நம்புவாயாகில், தெய்வத்தின் மகத்துவச்செயலைக் காண்பாய் என்று நான் சொல்ல வில்லையா?" என்று குருநாதர் அவளுக்குச் சமாதானங்கூறி, விண்ணை நோக்கி "பிதாவே, நீர் என் விருப்புக்கிணங்கியதால் உம்மைத் துதிக் கின்றேன்" என்றார். பின்பு "லாசருவே, வெளியே வா" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். நித்திரையினின்று எழுந்தவன்போல் மரித்தவன் எழுந்துவந்தான்.

செய்நன்றி மறவாத ஒருவன்

எருசலேமிலிருந்து வந்திருந்த யூதரில் அநேகர் இயேசுகிறிஸ் துவே மேசியாவென்ற திடநம்பிக்கை கொண்டனர். சிலர் எருச லேமிற்குத் திரும்பியவுடன் பெத்தானியில் நடந்த அற்புதச் செயலைப் பரிசேயருக்கு அறிவித்தனர். பரிசேயர் கலக்கமுற்றனர். சங்கங் கூடி குருநாதரை கொன்றழிக்கும் வழி யாதெனச் சிந்தித்தனர். பிர தான ஆசாரியனாகிய காய்பா என்பவன், உள்நாட்டுக் கலகத்தால் பலபேர் சாவதினும் ஒருவன் சாவது நல்லது என்றும், இயேசு கிறிஸ்துவைக் கொல்வதே உசிதமென்றும் வற்புறுத்தினான். குருநாதர் பரிசேயரின் சதியாலோசனையை யறிந்து, எருசலேமிற்கு வடக்கே எட்டு மைல் தூரத்தில் ஆரண்யத்தைச்சார்ந்த எப்பிராயீம் என்னும் பட்டணத்திற்குத் தொண்டருடன் சென்று மறைந்துய்ந்தனர். பின்பு வடமேற்கே பிரயாணம்பண்ணினர். ஓர் கிராமத்தை நெருங்கிய பொழுது, குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்ட பத்து தௌர்பாக்கியர் குருநாதரைக் கண்டு, "எஜமானே, எங்கள்மீது இரக்கங்கொள்ளும் ஐயா!" என்று அபயமிட்டனர். காருண்யமூர்த்தி அவர்களுக்கிரங்கி, அவர்களை ஆசீர்வதித்து, குருக்களிடம் தங்களைக் காண்பித்துக்கொள்ள ஆக்ஞாபித்தார். அவர்கள் குருநாதரின் வாக்குத் தவறாதெனக்கருதி, குருக்களைத் தேடி எருசலேமிற்குச் செல்லும் வழியில் தங்கள் உடல் கறைதிறை நீங்கி ஆரோக்கியமடைவதைக் கண்டனர். அவர்களில் ஒருவன் உரத்த சத்தமாய்க் கடவுளைப் போற்றிக்கொண்டு திரும் பினான். குருநாதரிடம் வந்து அவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம்

சமர்ப்பித்தான். அவன் சமாரியன். செய்நன்றி மறவாத சமாரியனை குருநாதர் மெச்சிக்கொண்டார். அவனைப் பார்த்து "குணமடைந்தவர்கள் பதின்மரன்றோ? மற்ற ஒன்பது பேர் எங்கே? நன்றிசெலுத்துவது கடமையென்றுணர்ந்தவன் புறஜாதியனான நீ ஒருவன்தானோ? நல்லது நீ எழுந்து போ. உன் விசுவாசமே உன்னைக் குணமாக்கிற்று" என்று கூறினர்.

"நீவிர் கேட்பது இன்னதென் றறிகிலீர்"

இதன்பின் இயேசுநாதர் தென்திசை நோக்கி பெத்தானிக்கு வந்துகொண்டிருக்கையில் சீடரிலிருவரான யாக்கோபு, யோவான் என்னும் வாலிபரும் அவர்கள் அன்னையும் தமக்கோர் உபகாரம் பண்ணவேண்டுமென்று குருநாதரை மன்றாடினார்கள். அந்த உபகாரம் யாதெனக் குருநாதர் வினவியபொழுது, அவர் யூதருக்கரசராய் வீற்றிருக்கும் நாளில் தன் மக்களிலொருவன் அவர் வலபுறமும், மற்றவன் இடபுறமும், பீடங்களில் கெம்பீரமாக அமர்ந்திருக்கும் சிலாக்கியம் பெற ஒழுங்குசெய்ய வேண்டுமென்று அந்தப் பேராசைக்காரியாகிய தாய் கூறினள். குருநாதர் அவர்களுடைய லௌகீக சிந்தையையும் சுயநலப் பிரியத்தையும் கண்டு விசனமுற்றாரேயன்றி கோபங் கொண்டாரில்லை. அவர்களை நோக்கி "நீவிர் கேட்பது இன்னதென் றறிகிலீர். நான் பருகப்போகும் பாத்திரத்தை (அதாவது சிலுவையிலறையுண்டு மரிக்கும் துன்பமாகிய பானத்தைப்) பருக உங்களாலாகுமோ?" என்றார். அவர் கருத்தை அறிந்துகொள்ளாத அந்த வாலிபர், குருநாதர் அரசனுவாரென்றும், அப்பொழுது அவர் பானமருந்தும் பொற்பாத்திரத்தில் தாமும் பானமருந்துவது பெருஞ்சிலாக்கியமென்று மெண்ணி, தாங்கள் அப்படிச் செய்யக்கூடுமென்று வெகு துரிதமாய் விடைபகர்ந்தனர். "அப்படியென்றால், நான் பருகும் பாத்திரத்தில் நீங்களும் பருகுவீர்கள். ஆனால் என் வல இடபாகம் வீற்றிருக்கும் பெருமை எவர்க்கு ஈசனருளத் தீர்மானித்திருக்கின்றாரோ அவருக்கே கிடைக்கும்" என்று குருநாதர் வாக்களித்தார். அப்பேதையர் தமக்கோர் உன்னதபதவி கிடைக்குமெனக் கனவுகாணத் துவங்கிவிட்டனர். அவர்கள் உடன்சீடரும் அவ்வாறே நினைத்து அவ்விருவரைக்குறித்துப் பொறாமைகொண்டார்கள். குருநாதர் கருத்தை அறிந்திருப்பின் யாக்கோபும் யோவானும் களிகொண்டிரார்; மற்றச் சீடரும் எலும்பையு

முருக்கும் எரிச்சலென்னும் நெருப்பைத் தம் உள்ளங்களில் வளர்த்திரார். குருநாதர் பருகவிருந்த பானம் எட்டியினும் கசப்பான துன்பமெனும் பானம். உண்மையாய் அவரைப் பின்பற்ற விரும்பும் எவரும் மாமிச சிந்தைகொண்ட உலகமாக்களின் பகையென்னும் பிச்சைப் பருகநேரிடும். ஆதலால் கிறிஸ்துபிரானின் ஆதிச்சீடருக்குத் துன்பமே பெருகுமென்பது அவர் கருத்து. பெருமை பொறுமையாகிய மலினங்களால் கறையுண்டு நலிந்த தம் சீடரைக் குருதேசிகரழைத்து பின்வருமாறு அவர்களுக்குப் புத்திவரச்செய்தனர். "குடிகளை அதிபதிகள் கொடுமைப்படுத்துவதும், வலியோர் எளியோரை அவமதிப்பதும் அறிவற்ற உலகமாந்தரின் போக்கென்பது நீங்கள் அறியக்கிடந்த சத்தியம். அது உங்கள் போங்காவது ஞாயமன்று. உங்களில் பெரியவனாக விரும்புபவன் உங்கள் பண்ணையாள்போலும், முதன்மையடைய விரும்புபவன் எவருக்கும் அடிமைபோலும் ஒழுகுவானாக மனுஷகுமாரனும்கூட ஊழியங்கொள்ளவராமல் ஊழியஞ்செய்யவும், மனுவோர் பிணையாகத் தமது பிராணனைத் தியாகம்பண்ணவுமே வந்தார்."

பஸ்கா பண்டிகை

இப்பொழுது பஸ்கா பண்டிகை நாட்கள் நெருங்கின. இஸ்ரவேலராகிய யூதர் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்து சிறுமைப்பட்ட காலத்தில், எகோவா மோசே முனிவர் மூலமாக அவர்களை அடிமைகொண்ட எகிப்தியரைக் கலங்கச்செய்து அவர்களை மீட்டு இரட்சித்தார். அவர்கள் பார்வோனின் உத்தரவைப்பெற்று சுயாதீனராகக் கானான் தேசத்திற்குப் புறப்படுவதற்கு முந்தின இரவில் வீட்டிற்கு ஓர் மாசற்ற வெள்ளாட்டுக்குட்டியை அடித்துச் சமைத்துப் புசித்துக் களிகொண்டு கர்த்தனைப் போற்றினார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு யேகோவா அன்று அருளிய மீட்பை நினைவுகூர்ந்து மகிழ்வதற்கென்றே பஸ்கா பண்டிகையைப் பெரியோர் ஏற்படுத்தினர். திருவிழா நாட்கள் சமீபித்ததால், எருசலேம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்திற்குச் செல்லும் ரஸ்தாக்களிலும் பாதைகளிலும், அத்திரு நகரத்திற்கு யாத்திரைசெய்யும் மாதர், ஆடவர், சிறுவர், சிறுமியர் கும்பல் கும்பலாகச் சென்று கொண்டிருந்தார்கள். குருநாதரும் சீடரும் அவ்வழிகளிலொன்றில் சென்றபொழுது, யாத்திரிகர் பெருங்குழா

மொன்று அவர்பின் சென்றது. அவர்செய்த அற்புதக்கிரியைகளும், அவர் உவந்து மொழிந்த அருள் உபதேசச் சுலோகங்களுமே யாத்திரிகர் பன்னிப் பன்னிப் பகர்ந்து உரையாடி உவகைகொண்ட பொருட்களாயின. இன்னும் அவர் என்ன அரிய நற்செயல் செய்வார், என்ன தீர்க்கவசனம் மொழிவாரென்றும் அவர்கள் தர்க்கிக்கலாயினர். இவ்வாறு பேசிக்கொண்டு எரிகோவென்னும் பட்டணத்தை அவர்கள் நெருங்கியபொழுது, வழியருகே யாசித்துக்கொண்டிருந்த அந்தகன் ஒருவன், ஜனத்திரளின் இரைச்சலைக்கேட்டு, என்ன சந்தடியென்று விசாரித்தான். நசரேயராகிய இயேசுபிரான் போகின்றாரென்று அவனுக்குச் சொன்னார்கள். இதைக் கேட்டவுடன் தாய் முகம் பாராது தயங்கிய பாலன் அவள் குரல் கேட்டுக் குதூகலிப்பது போல, அந்தகன் களிப்படைந்தான். "தாவீதின் குமாரரே! என்னைக் கடாட்சியும்" என்று கதறினான். அவனருகிற் சென்றவர்கள் கூச்சலிடாதே என்று அவனை அதட்டினார்கள். அவனோ முன்னிலும் உரமாய் கத்தி அபயமிட்டான். அந்தகனின் பரிதாபக்குரல் குருநாதரின் செவிகளிற்பட்டது. அவர் நின்று, அவனை யழைத்து "நான் உனக்கு என்னசெய்யவேண்டுமப்பா?" என்றார். "ஆண்டவரே! நான் பார்வையடையவேண்டும்" என்று அந்தகன் இரந்து கெஞ்சினான். "பார்வையடைவாயாக. உன் விசுவாச பக்தி உன்னைக் காத்தது" என்று குருநாதர் அவனுக்குச் சுபமொழி அருளினார். அச்சணமே அவன் பார்வையடைந்தான்; அதிகுணனை அஞ்சலி செய்துகொண்டே இயேசு தேசிகர் பின்னே சென்றான். யாத்திரிகர் அவ்வருஞ்செயலை எண்ணி ஏகோபித்து எம்பிரானைப் போற்றினர்.

"இன்றே இவ்வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது"

தம்மைப் பாராட்டிப்புகழ்ந்த மாந்தர் புடைசூழ குருநாதர் எரிகோப் பட்டணத்திற்குட்பிரவேசித்தார். அப்பட்டணம் எருசலை நகரைக் காக்கும் அரண்களிலொன்று. அங்கு சகேயுவென்ற பெயர் புனைந்த ஆயக்காரரின் தலைவனொருவனிருந்தான். அவன் தனக்கு ஏற்பட்ட சம்பளத்திலும், கைக்கூலி, அநீதவரி முதலிய சீர்கெட்ட முறையால் அபகரித்தபணத்திலுமிருந்துதிரண்ட சம்பத்து சேமித்துவைத்துக்கொண்டிருந்தான். பொன்னாசை குடிகொண்டிருந்த அன்னவன் உள்ளத்தில்

நூதன ஆசையொன்று பிறந்தது. அவன் இயேசுவென்னும் சுகுணக் களஞ்சியத்தைக் காண விரும்பினான். ஜனத்திரள் அவரை மறைத்துக்கொண்டது. அவனோ குள்ளன். என்றாலும் அவனுக்கு சமயோசித யுக்தியொன்று தோன்றிற்று. கும்பலுக்குமுன் ஓடி, வழியிலிருந்த ஓர் மரத்தின்மேல் ஏறிக்கொண்டான். சிறிது நேரத்தில் இயேசு மகிபர் பரிவாரத்துடன் அம்மரத்தை யடைந்தார். மரத்தடியில் நின்று மரத்தை நோக்கினார். மாந்தர் யாவரும் என்ன விசேஷமென்றறிய மரத்தைப் பார்த்தார்கள். இதோ மரத்தில், ஓர் விடலையல்ல, கனவானொருவன் ஏறியிருந்தான். குருநாதர் அவனை நோக்கி "சகேயுவே, உடனே இறங்கிவா. நான் இன்று உன் வீட்டில் தங்க வேண்டும்" என்றார். கன்னியக் குறைச்சலான தன் நிலையை ஜனங்கள் கண்டுகொண்டதால் அவன் சிறிது வெட்கமுற்றபோதிலும், ஓர் பார்வை கிடைத்தாலும் போதுமென்றிருந்தவனுக்கு குருநாதரைத் தன் அதிதியாக உபசரிக்கும் பாக்கியம் கிடைத்ததால் அவன் மகிழ்கொண்டு வெகு துரிதமாக மரத்தினின்றிழிந்து குருநாதரைப் பணிந்துகொண்டான். குருநாதர் சகேயுவின் வீட்டிற்குச் சென்றார். மாயபக்தரான பரிசேயர் தாங்கள் பாவியென்று தீர்த்துத் தள்ளிவைத்த ஆயக்காரனைக் குருநாதர் இவ்வாறு கௌரவப்படுத்தியதை யெண்ணி முறுமுறுத்தார்கள். அவர்கள் பேய்த்தனத்தை யெண்ணி வெறுப்புறாது, சகேயுவினுள்ளத்திலுதித்த ஞானவெளிச்சத்தைக்கண்டு தெளிவடைவோமாக. சகேயு அநியாய வரும்படி சம்பாதித்த பாவியாயிருந்தது உண்மையே. பரிசேயரின் கண்டனம் அவனைச் சீர்ப்படுத்தவில்லை. ஆதவனின் இளஞ்சுடர் இருளைப் பறக்கடிப்பதுபோல், நீதிப் பகலவனென்ற புகழ் படைத்த எம்பெருமானின் இணையடிகள் சகேயுவின் வீட்டு வாசற்படியில் பட்ட அந்நிமிஷமே, ஆங்கு ஞான விளக்கு ஏற்றப்பட்டது. சகேயு குற்றமுணர்ந்து மறுகினன். "குருநாதா, என் செல்வத்திற் பாதியை எளியோர்க்கு தானமாகக் கொடுக்கின்றேன். நான் ஏமாற்றிப் பணம் பறித்தவனுக்கு ஒன்றுக்கு நான்காக ஈடுசெலுத்துகின்றேன்" என்று சகேயு குருநாதரை வாசற்படியில் நிறுத்தி பிரமாணம் பண்ணினான். "ஒட்டகமானது ஊசியின்காதில் புகினும் புகும்; பணக்காரன் பரம ராச்சியத்தில் புகுவதோ கடினம்" என்று குருநாதர் முன்னொரு சமயம் பகர்ந்தனர். அத்துணை கடினச்செயலைச் சகேயு செய்துமுடித்தான். அதைக்கண்டு

குருநாதரடைந்த மகிழ்ச்சி பெரிது. தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்து உண்டாகும் சந்தோஷத்தினும் மிக்கூர்ந்த சந்தோஷம் மாற்றிப் பிறக்கும் ஓர் பாவியைக்குறித்து பரலோகத்தில் உண்டாகுமென்று எம்பெருமான் கூறியுள்ளார். ஆதலால் சகேயுவின் ஆன்ம மாறுதலைக்கண்டு எம்பெருமான் விண்ணவருடன் சேர்ந்து மகிழ்வு கொண்டார். "இன்றே இவ்வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. சகேயுவும் ஆபிரகாமின் புத்திரரிலொருவன்" என்று குருநாதர் சகேயுவையும், அவன் மனைவி மக்களையும் ஆசீர்வதித்து சுபமொழி புகன்றார். மனத்திற்கு இனிமையூட்டும் இச்சுபமொழி எமது செவிகளிலும் தொனித்திடின் நாம் பொன்னினும் அரிய பெரும்பொருளைப் பெறுபவராவோம். இரட்சிப்பென்னும் முத்தி எமதகங்களிலும் தித்திக்கச் செய்வாய் குருநாதா வென்றிறைஞ்சி இக்காண்டத்தை முடிப்போம்.

வெற்றிகாண்டம்

அத்தியாயம் 9.

கடைசிவாரம்

கி. பி. 30, ஏப்ரில் 1—6

குருநாதர் ஸ்தூல ஜடம் பொதிந்து முப்பத்து மூன்று வருடம் இத்தராதலத்தில் சஞ்சரித்தார். அதனால் மானிட ஜென்மம் ஜென்மங்கள் யாவற்றினும் விழுப்பமெய்தியது. தகைமிகுந்த தேசிக பெருமான் மனிதனாகப் புவியில் சில காலங்கழித்து மாந்தருக்குச் சிறந்த முன்மாதிரி வைத்துச்சென்றதன் காரணத்தால், அப்புருஷோத்தமரின் அடிச்சுவடுகளில் நடக்க முயலுவதினும் பெரிதொரு நோக்கம் இங்கு பிறிதொன்றில்லை யென்பதமைந்தது. அவர் ஜீவிய சரிதையை எமக்கெழுதிவைத்த தொண்டர், பாலிய பருவத்தின் சம்பவங்களை வெகு சுருக்கமாகவும், அவர் உபதேசித்து வந்த மூன்றரை வருடங்களில் நடந்த சம்பவங்களை வெகு விரிவாகவும் கூறியிருக்கின்றார்கள். குன்றெனக் குவிந்தெழுந்து மோதும் திரைகள் பொங்குங்கடலில் கலத்தை யோட்டும் மாலுமியைப் போல், குருநாதர் பகைவரின் கடுங்கோபம் பொங்கிய கடைசி நாட்களில் காட்டிய புத்தியையும், மனோதிடனையும், சரித்திர முரைத்தோர் மிகவும் விரிவாக வரைந்துள்ளார். நான்கு சுவிசேஷங்களுள் சுமார் 3780 சுலோகங்க ளிருக்கின்றன. அவற்றில் கடைசிவார சம்பவங்களை அறிவிக்கும் சுலோகங்கள் 1260 ஆகின்றன. சரித்திர நிருபர் அச்சம்பவங்கள் மிக்க விசேஷ சம்பவங்களெனக் கணித்தது இதனால் தெளிவாகின்றது. அந்தக் கடைசி நாட்களில் குருநாதர் யூத மாபினரை மெய்வழியி லுய்ப்பதற்கு பரம் நின்று புவியில்வந்த சற்குரு தாமேவென்று நிருபணப்படுத்த இன்னும் ஓர் முறை முயன்றார். பஸ்காப்பண்டிகை கொண்டாட யூதரனைவரும் எருசலே என்னும் திருப்பதிக்கு வந்திருந்ததால் அந்த நாட்களில் அம்முயற்சியைச் செய்யத் தீர்மானித்தார். சில தினங்களுக்குமுன் அவர் எருசலேமிலிருந்து துரத்தப்பட்டு எப்பிராயீம் பட்டணத்திற்குச் சென்றார் எனக் கண்

டோம். ஆதலால் சிலகாலம் சமாதானமாயிருக்கலாமென்று பரிசேயர், சதுசேயர் முதலான பகைவர் எண்ணினார்கள். குருநாதரோ தம்மை ஒழித்துக்கொள்ளாது, பண்டிகைக்கு வந்த யாத்திரிகரோடு சேர்ந்து எரிகோவரைக்கும் வந்துவிட்டார். மாந்தர் அவரை வெகுவாய்ப் புகழ்ந்து அவர் உபதேசத்தை ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தனர். இப்பொழுது மீண்டும் எருசலேமிற்குவந்து ஆங்கு ஜனங்களைத் தம் வசப்படுத்தி கலக மெழுப்பிவிடுவாரோ என்று பயந்து "அம்மதப் புரட்டன், கலகக்காரன், இங்கு வருகிறானோ? வருகிறானோ?" என்று பரிசேயர் ஒருவரையொருவர் கேட்டுக் கவலையுற்றனர். திங்கட்கிழமையன்று குருநாதர் அரசகோலமாகத் திருநகருக்குட் சென்றார். கலங்கிய நெஞ்சத்தினர் கீரியைக்கண்ட பாம்புபோல் திடுக்கிட்டு நடுங்கினார்கள். வெள்ளிக்கிழமை காலையில் முள்முடி யணிந்து பாரச்சுமையைச் சுமந்துகொண்டு அந்நகரின் வீதிவழியே குருநாதர் சென்றார். தம்மைப்பற்றி வருத்திய சனியன் தொலைந்ததென்றெண்ணி பகைவர் தேறுதலடைந்தார்கள். அன்பர் அங்கலாய்த்துக் கண்ணீர் சொரிந்தனர். ஞாயிற்றுக்கிழமை ஓர் அதிர்ச்சி உண்டாயிற்று. குருநாதர் உயிர்த்தெழுந்தார், உயிர்த்தெழுந்தார் என்ற வதந்தி பிறந்தது. அவரைக் கொன்ற பரிசேயர் கலங்கித் திகைத்தனர். இந்த ஆறுதினங்களுக்குள் எருசலேமிற் கூடிய யூதமாந்தருள்ளங்களில் துணிவும், பயமும், களிப்பும், நடுக்கமும் மாறி மாறித் தோன்றின. அந்த வாரம் முழுவதும் சீடருக்குக் கலக்கமே பெருகிற்று. குருநாதரோ உலையிலிட்டிருக்கும் கனகம்போல், துன்பமென்னும் உலையில் புடமிடப்பட்டார். ஆதலால் அந்தவாரத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மிகப் பெரிய சம்பவங்களே.

பாதாபிஷேகம்

ஞாயிறு:—குருநாதர் சகேயுவின் வீட்டினின்று பெயர்ந்து பெத்தானிக்கு வந்தார். லாசரு, மார்த்தாள், மரியாளாகிய நேயர் அவரை வரவேற்றுபசரித்தார்கள். குஷ்டரோகியாயிருந்த சீமோனென்பவன் அன்றிரவு குருநாதருக்கு விருந்தளித்ததாகவும், மார்த்தாள் உண்டி பரிமாறியதாகவும், பந்தியமர்ந்திருந்தவர்களிலொருவன் லாசருவென்றும், மரியாள் பரிமள தைலத்தால் எம்பெருமானின் திருவடிகளை அபிஷேகித்ததாகவும் சுவிசேஷ நூலாசிரியர் கூறுகின்றார்.

எந்த நல்ல கருமத்திலும் குறைகண்டு சாற்றும் சமர்த்தர் மேதினியில் எங்கும் எந்நாளும் சிலருளரன்றோ? அன்று அவ்வருந்தொழிலைச் செய்யும் உத்தரவாதத்தை எற்றுக்கொள்ளத் துணிந்தவன் குருநாதரின் சீடரிலொருவன், யூதாஸ் இஸ்காரியாத்தென்ற மேதாவி. "நூற்றைம்பது ரூபாய் பெறுமான இத்தைலத்தை ஒருவர் பாதத்திலூற்றி விரயஞ்செய்வது நீதியாகுமோ? அதை விற்று தரித்திரருக்கு அன்னதானம் செய்திருக்கலாமே" என அவன் கழன்றான். மரித்தவருடலை கழுவி பரிமளதைலத்தால் அபிஷேகம் பண்ணுவது யூதருக்கு வழக்கம். அன்று மரியாள் அவர் பாதங்களைக் கழுவி நளதத் தைலத்தால் அபிஷேகஞ் செய்த அழகிய செயலைத் தமது மரணத்தின் முன் அடையாளமாகக் குருநாதர் பாவித்து, அவள் செய்தது ஞாயமென்றும், குப்பியில் மிகுந்திருந்த தைலம் தாம் மரித்தபின் தமதுடலுக்குப் பூச உதவுமென்றும் சொன்னார். மேலும் "தரித்திரர் உங்களோடே எப்பொழுதும் இருக்கின்றார்கள். நானோ வெகு சீக்கிரம் உங்களை விட்டுப் பிரிவேன்" என்றார். யூதாஸ் கிளப்பிய குதர்க்கம் யாழினினிய நாதத்தைக் கேட்டு இன்புற்றிருந்தோர் செவியில் நாராசம் பட்டதுபோலிருந்தது. குருநாதர் மரிப்பது நிச்சயமென்றுணர்ந்த நண்பர் விசனமுற்றனர். தங்கள் சந்தோஷத்தைக் கெடுத்த யூதாவின் மீது சினங்கொண்டனர். குருநாதரோ சாந்தமாயிருந்தார்.

அரச பவனி

திங்கள்:—குருநாதர் பெத்தானியிலிருப்பதும், மறுநாள் எருசலை நகருக்கு வர எண்ணியதும் பெத்தானியிலிருந்து வந்த யாத்திரிகர் மூலமாக நகரமாந்தர் கேட்டறிந்தனர். பரிசேயர் கலக்கமும் வெகுளியும் கொண்டார்கள். குருநாதரைமட்டுமல்ல, அவருக்குப் பெரும்புகழ் பிறப்பதற்குக் காரணமாகவிருந்த லாசருவையும் பொன்றுவித்தாலொழிய தாம் சமாதானமாயிருப்ப தரிதென்றெண்ணி அவ்விருவரையும் கொல்லுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். மற்ற மாந்தரோ பெருமானை எதிர்கொண்டழைத்துவரத் தீர்மானித்தனர். இது குருநாதர் கொண்டிருந்த கருத்திற்கு ஒவ்வியதாயிற்று. தாமே யூதர் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த மேசியாவென்பதின் ருஜுவை அவர்கள் கண்முன் படம்போல் தோற்றுவிக்க விரும்பினார். சகரியா தீர்க்கதரிசியார் மேசியாவின் தோற்றத்தை பின்வருமாறு கூறியிருந்தார்.

"சீயோன் குமாரியே, களிகொள்! எருசலேம் என்னும் நங்காய் ஆர்ப்பரி! இதோ, உன் வேந்தன் வருகின்றார். அவர் நீதிபரர்; வெற்றி வேந்தர். கர்வமற்றவராக கழுதையின்மீதும், கழுதைக்குட்டியாகிய மறியின்மீதும் எறிவருகின்றார்." இந்த வசனங்களை யூத ரபிமார் பன்முறை படித்து வியாக்கியானப்படுத்தியிருந்தார்கள். இவை யூதர் யாவருக்கும் தெரிந்த வசனங்களாம். குருநாதர் கழுதையின்மீது பவனி செல்லும் வேந்தனாக எருசலேம் நகரத்திற்குள் சென்றிடின், சகரியாத் தீர்க்கருரைத்த வாக்கு பூர்த்தியாயினதென்பது யூத சமுதாயத்திற்குத் தெற்றெனத் தோன்றும். ஆதலால் குருநாதர் அவ்வாறு செய்ய நிர்ணயங்கொண்டார். திங்கட் காலையில் பெத்தானியாவை விட்டுப் புறப்பட்டபொழுது, சீடரிருவரை அருகிலிருந்த கிராமத்திற் கனுப்பி அங்கு கட்டியிருக்கும் கழுதையையும் அதன் குட்டியையும் அவிழ்த்துவரக் கற்பித்தார். குருநாதர் ஏற்கனவே ஒழுங்கு செய்திருந்ததால், சீடரைக் கண்டவுடன் கழுதைக்குச் சொந்தக்காரன் கழுதையையும் குட்டியையும் அவிழ்த்துக்கொடுத்தான். கழுதையின்மீது சீடர் தங்கள் மேல்வஸ்திரங்களைச் சேணமாக விரித்தார்கள். குருநாதர் கழுதையின்மீது எறினார். இதற்குள்ளாக எருசலேமிலிருந்து அவரை அழைத்துச்செல்ல வந்த மாந்தர் கூடினர். குருத்தோலைகளையும் இளந்துளிர் கிளைகளையும் ஒடித்து தம் கரங்களில் பிடித்து வீசினர். சிலர் தம் வஸ்திரங்களை வழியில் விரித்தனர். சிலர் மலர்களையும் தளைகளையும் பரப்பினர். குருநாதர் அரச விமரிசையோடு பவனிசென்றார். ஒலிவமலையின் மேற்குச் சரிவி விறங்குகையில் யாவரும் குருத்தோலைகளை வீசிக்கொண்டு ஏகோபித்துப் பாடினார்கள். "தாவீதின் குமாரன் வாழ்க! வாழ்க! கர்த்தன் தெரிந்தனுப்பிய இரட்சகன் வாழ்க! பரமன் துணையால் எமை மீட்டுக் காக்கும் பார்வேந்தன் வாழ்க! வாழ்க!" வென்பதே அவர்கள் பாடின பாட்டு. அந்தக் கீர்த்தனை தேசபக்தரிலொருவர் பாடிய தேசியப்பாட்டு. மலைச் சரிவில் கூடாரங்களில் தங்கியிருந்த யாத்திரிகர் ஊர்கோலத்தைக் கண்டு அதைச் சேர்ந்தனர். ஜனக்கூட்டம் இருகரையும் புரண்டோடும் வெள்ளம்போல் சாலையை நிறப்பிற்று. அவர்கள் அவ்வாறு திரண்டு ஆர்ப்பரித்ததின் காரணம் யாதெனில், இயேசுநாதர் நகரத்தைச் சேர்ந்தவுடன் ரோமக் காவற்சேனையைத் தாக்கி மேற்கொண்டு, பிலாத்துவை சிம்மாசத்தினின்று தள்ளி, தம்மை யூதருக்கு இராஜா

வாக ஏற்படுத்திக்கொள்ளுவாரென்ற நம்பிக்கையே. லாசருவை, மரித்த நான்கு தினங்களுக்குப்பின் உயிர்தந்து எழுப்பியவருக்கு ரோமச் சைனியம் எம்மாத்திரம், பிலாத்துவின் அதிகாரம் எம்மாத்திரம்? எம்மை அடிமைகொண்ட ரோமத் துரைத்தனத்தார் இயேசு இரட்சகர்முன் காற்றிற் பறக்கும் பஞ்சைப்போல் ஓடி மறைவதைப் பார்க்கலாம் வாருமென்று அந்த ஜனங்கள் ஒருவரையொருவர் தேற்றிக்கொண்டு வெகு உற்சாகமாக ஆரவாரம்செய்து சென்றார்கள். குருநாதரோ அப்படியொன்றும் செய்ய நினைக்கவில்லை. குருநாதரின் உத்தம குடிகளாகவிருந்து வாழ யூதர் விரும்பிடின், முன்னர் அவர் கலிலேயாக் கடற்கரையில் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும். லௌகீக சுகங்களை வெறுத்து, வறுமை, சாந்தம், சன்மார்க்க நாட்டம், சமாதானப் பிரியம் முதலிய நற்குணங்களை தம் உள்ளங்களில் ஆபரணமாக அணிந்துகொள்ளவேண்டும். குருநாதர் ஒருவரே இப்படிச் சிந்தித்துக்கொண்டிருந்தார். ஆர்ப்பரித்துக் களிகொண்டு வந்த மாந்தரேனும், குருநாதரின் சீடரேனும் அவ்வாறு நினைக்கவில்லை. அவர்கள் சென்றுகொண்டிருந்த சாலை மேற்குநோக்கியிருந்தது. இப்பொழுது நேற்வடக்கேதிரும்பிற்று. இதுவரை பாறைகளால் மறைக்கப்பட்டிருந்த பரிசுத்த தேவாலயம் கண்ணுக்குத் தோன்றிற்று. அது சாலைக்கு மேற்கில் குன்றின் சிகரத்திலிருந்தது. பொற்றகடுகளால் மூடியிருந்த ஆலயக் கோபுரங்களின்மேல் ஆரோகணக் கதிரவனின் சுடர் பாய்ந்து பிரதி பிம்பித்து பார்ப்பவர் கண்ணைப் பறித்தது. பக்தரான யூதருக்கோ அக்காட்சி கண்களைமட்டுமல்ல மனத்தையும் பறிப்பதாயிற்று. "எருசலேமே, மேதினியனைத்தையும் மகிழ்விக்கும் திருநகரே" என்று அவர்கள் கோபுரங்களைக் கண்டவுடன் நகரைப் போற்றுவது வழக்கம். அப்படி இன்று முன்னிலும் அதிக ஊக்கமாகப் போற்றினார்கள். ஆனால் குருநாதர் உள்ளத்தில் களிப்பல்ல கவலையே குடிகொண்டிருந்தது. அடுத்தது காட்டும் பளிங்குபோன்ற முகத்தில் குருநாதரின் உள்ளக் கவலை தோன்றியதால் சீடரிலொருவன் அவரை உற்சாகப் படுத்த நினைத்தான். "குருநாதா! கோபுரங்களைப் பார்க்கவில்லையோ? என்ன அழகாய் ஜொலிக்கின்றன" என்று அவன் சொன்னான். தண்ணீர்ப் பெருக்கு மதகுகளை உடைத்துக்கொண்டு பாய்வதுபோல, குருநாதர் இதுவரை அகத்தில் அடக்கி வைத்துக்கொண்டிருந்த

விசனம் பதிலுரைக்க வாய் திறந்தவுடன் பாய்ந்து புறப்பட்டது. விழிகள் புனலைப்பெருக்க, குருநாதர் பின்வருமாறு பிரலாபித்தார். "எருசலேமே! எருசலேமே! தீர்க்கதரிசிகளைக் கொன்று உன்னை நல்வழியிலுய்க்க வந்த தேசிகரைக் கல்லாலடிப்பவளே! கோழி தன் குஞ்சுகளை இறக்கைகளால் அணைத்துக் காக்குமாப்போல், உன்னைக் காக்க பன்முறை முயன்றேன். நீயோ என்னிடம் அடைக்கலம் புக மறுத்தாய். உன் சமாதானத்துக்கானவை எவையென நீ இன்னும் கண்டுணர்ந்தாயில்லை. உனக்குத் தெய்வகடாட்சம் பெருகவிருக்கும் இந்நாளிலும் நீ உணர்வற்றிருப்பதால், கெடும்நாள் கிட்டிவருகிறது. உன் சத்துரு உன்னைச் சூழ்ந்துகொள்ளுவான். உன் அரண்களைத் தகர்த்து, கல்லின்மேல் கல் நில்லாதபடி தள்ளுவான். உன் அலங்கத்துக்குள்ளேயே உன் மக்களை நசுக்கியழிப்பான். இத்தனை கொடிய சஞ்சலம் இந்தச் சந்ததி மறையுமுன் நேரிடப்போகிறதே. ஐயோ பரிதாபம்!" பாசமிக்க மாதா புதல்வனுக்குத் தீங்கு நேர்ந்ததெனக் கனவுகண்டு கதறுவாள். வரும்பொருளுரைக்கும் அமைச்சன் தன் தேசத்திற்கு நேரிடவிருக்கும் விபத்தை ஊகித்தறிந்து வருந்துவான். அரசகோலமாய் பவனிசென்ற எம்குரு தேசிகரோ நாற்பது வருஷத்திற்குப்பின் தீத்துவென்னும் ரோமப்பிரபு எருசலை நகரை அழிக்கவிருந்ததை ஞான திருஷ்டியால் அன்று தம் கண்முன் நடந்த கொடுங்காட்சிபோற் கண்டார். அவர் உள்ளமுடைந்தது. அவர் ஓலமிட்டுக் கூறிய பிரலாபம் ஓர் தேசபத்தரின் பிரலாபமேயாகும். தன் நாட்டையும் நகரையும் பகைவர் கைப்பற்றிச் சுட்டெரித் தழிப்பதைக் கண்டு துயருறும் வேந்தனின் பிரலாபத்திற் கொத்ததாகும். ஜனங்களின் ஆரவாரத்தில், குருநாதரின் புலம்பல் வெகுதூரம் கேட்கவில்லை. என்றுலும் அவரருகிலிருந்த சிலர் அதைக் கேட்டார்கள்; நீர் ததும்பிய அவர் திருவிழிகளைக் கண்டு திகிலடைந்தார்கள். அவர்கள் உற்சாகமும் களிப்பும் பறந்தன. குருநாதரின் கருத்து இன்னதெனத் தெரிந்திலார். ஆதலால் இன்று குருநாதரைத் தம் வேந்தனென்று ஏற்றுத் துதித்த நாவுகளே "இவனைச் சிலுவையிலறையும், சிலுவையிலறையும்" என்று பிலாத்து துரையின் நியாயசபையில் கூறவும் எழுந்தன. குருநாதர் இப்படியும் நடக்குமென்றறிவார்.

குருநாதரை இவ்வாறு யூதமரபினர் அப்பண்டிகைத் தினத்தில் கௌரவப்படுத்தி, அரசனென்று போற்றித் துதித்துக் கொண்டாடி

ய்து ராஜ துரோகமான செயலே. ரோம கவர்னராகிய பிலாத்து அக்கும்பலைக் கண்டால் சட்ட விரோதமான கூட்டமெனத் தீர்த்து அதைப் பிரித்துக் குலைக்க ராணுவத்தை ஏவினலும் ஏவுவான். அல்லது ஜனங்கள் மதியீன தேசாபிமான வைராக்கியங்கொண்டு கலகஞ்செய்தாலும் செய்யலாம். ஆதலால் பண்டிகைத் தினங்களில் கலகம் நேர்ந்தால் குருக்கள்மீது பழி சுமருமென்று பயந்ததாலோ; அல்லவென்றல் தம்மோடு எதிர்வாதஞ்செய்து தம் அதிகாரத்தை அவமதித்த நாசரேத்தூர்த் தச்சனுக்கு இத்தனை பெருமையோவென் றெண்ணி எரிச்சலடைந்ததாலோ, சில பரிசேயர் எம்பெருமானைப் பார்த்து, "கலகமேற்படும்போல் தோன்றவில்லையோ? ஆர்ப்பரிக்கும் இக்கூட்டத்தை அடக்கும் ஐயா, போதகரே" என்றார்கள். "அப்படி யல்ல. இந்த ஜனங்களின் ஆரவாரத்தை நான் அமர்த்துவேனகில், இக் குன்றிற் கிடக்கும் கற்களே குதூகலித்து ஆர்ப்பரிக்கத் துவங்கிவிடும்" என்று குருநாதர் பதஷ்டமின்றிப் பதிலுரைத்தார். அக்கூட்டம் நகர வாசலுக்குள் நுழைந்தபொழுது, நகரம் பூகம்பத்தால் அதிர்வது போல் அதிர்ந்தது. நான்கு திக்குகளிலுமிருந்து ஜனங்கள் கூச்சலைக் கேட்டு ஓடிவந்து "விசேஷம் யாது? வேந்தருக்குரிய விமரிசையுடன் நீங்கள் அழைத்துவரும் பெரியோர் யாவர்?" என்று வெகு ஆத்திரத் துடன் விசாரித்தார்கள். "அப்பெரியோர் திருநாமம் இயேசுவென்ப தாம். அவர் கலிலேய நாட்டின் நாசரேத்தூரில் தோன்றிய தீர்க்க தரிசனர். லாசருவிற்கு உயிர் தந்து எழுப்பியவர்" என்று ஜனங்கள் விடை பகர்ந்தார்கள். பரிசேயக் கட்சியார் இதையெல்லாம் கண்டு கலக்கமுற்றனர். குருநாதரின் ஜனமோதத்தை குறைக்கத் தமக்குத் திராணியில்லாதிருந்ததை யறிந்து தம்மில் ஒருவரையொருவர் நொந்து கொண்டார்கள். "நாம் யாதும் செய்யக்கூடாதிருப்பதைக் காண வில்லையோ? காசினியடங்கலும் அவன் பட்சமல்லோ சேர்ந்துவிட் டது" என்றறைந்து தம் கோபத்தை ஆற்றமுயன்றார்கள்.

குருநாதர், தம் முன்னும்பின்னும் துதித்துச்சென்ற பரிவாரம் குலைந்துபோயினபின், கோவிலுக்குட் சென்றார். அவரை யூத குல வேந்தனக வரவேற்று ஆரவாரம்பண்ணிவந்த மாந்தர்கள், குருநாதர் ரோம சிம்மாசனத்தை அபகரிக்க யாதொரு முயற்சியும் செய்யாது தம்மை வந்தவ்வழியே திரும்பிப்போகச் சொன்னபொழுது, ஏமாந்து விசனமும் கோபமும் கொண்டார்களோ, அல்லது சீக்கிரம்

தக்க சமயம்பார்த்து அவர் இராச்சியத்தைக் கைப்பற்றுவாரென் றெண்ணி காத்திருக்கத் தீர்மானித்தார்களோ; தோன்றவில்லை. குருநாதர் வழக்கம்போல் உபதேசித்தார். அவர் உண்டிப்பெட்டி யருகில் நின்றுகொண்டிருக்கையில் ஓர் எளிய கைம்பெண் காணிக்கை கொணர்ந்தாள். அவள் உண்டியில் போட்ட காசு இரண்டே. தன வான்கள் பை பையாகப் பணம் கொண்டுவந்து கலேரென வொலிக்கக் கொட்டினார்கள். குருநாதர் அந்த விதவையின் நிலைமையை அறிவார். அவள் தன் வறுமையையும் எண்ணாது கையிலிருந்த பணத்தையெல் லாம் தெய்வத்திற்கு நன்றியறிவிக்கும் காணிக்கையாகக் கொடுத்து விட்டாள். புறத்தோற்றத்தைப் பாராது அகப்பற்றை ஓர்ந்தறியும் சர்வஞ்யனுக்கு, அவ்விதவையின் இரண்டு செப்புக்காசு தனிக ரிறைத்த பொன்னிலும் அரியதாயிற்று. குருநாதர் அவ்வரிவையின் பக்தியைப் புகழ்ந்தார்; அவள் செலுத்திய காணிக்கையையே பெரிய காணிக்கை என்று தீர்த்தார்.

கிறிஸ்துவினடியார்பெரிய வாரமென்றழைக்கும்வாரத்தின் இரண் டாம் நாள் கழிந்தது. ஆதித்தன் மேற்றிசை சென்று மறைந்தான். பண்டிகை கொண்டாடிய ஜனங்கள் வீடுகளுக்கும், சத்திரங்களுக் கும், கூடாரங்களுக்கும் திரும்பினார்கள். குருநாதர் பட்டணத்தின் கிழக்கு வாசலுக்குப் புறம்பேயிருக்கும் ஒலிவமலை யென்ற குன் றிற்குச் சென்றார். அங்கிருந்த ஒலிவத்தோப்பில் இராத்தங்கினார். கவலைக்கிடமான சம்பவங்கள் நிகழ்ந்தபோதெல்லாம் எம்பெருமான் இராக்காலத்தை வனாந்தரவெளியில் கழிப்பது வழக்கம். திங்கள்முதல் வியாழன்வரை குருநாதர் இரவில் அத்தோப்பிலேயே தங்கினார். அவர் அமரிக்கையாகத் தியானித்து ஜெபிக்க விரும்பியதே அதன் காரணம்.

பாலகர் துத்தியம்

செவ்வாய்:—பெரிய வாரத்தின் மீதியான நாட்களில் குருநாதர் ஒலிவத்தோப்பில் இராத்தங்கியிருந்து பகலில் தேவாலயத்திற்குச் சென்று உபதேசித்துப் பிணியாளிகளைக் குணமாக்கிவந்தார். செவ் வாய்க்கிழமை குருநாதர் தேவாலயத்திற்குச் சென்றபொழுது, குரு டர், செவிடர், ஊமையர் முதலான பல பிணியாளிகள் அவரிடம் வந்து கிருபைபெற்றுச் சென்றார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த

சிறுவர் மகிழ்கொண்டு, நேற்றுத் தம்மூத்தோர் திருதேசிகரைப் பாடி வாழ்த்தியதுபோல், "தாவீதின் மைந்தன் வாழ்க!" என்று ஆர்ப் பரித்தனர். பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் குழந்தைகள் பாடிக் களிகொண்டாடியதைக் கேட்டு, குருநாதரை நோக்கி "இவர் கள் கோவிலில் கூச்சலிடுவது உமது காதில் படவில்லையோ? இவர் கள் என்ன சொல்லுகிறார்கள். கேட்டீரோ?" என்று வினவ, "ஆம், கேட்டேன். பாலகரும், அன்னையின் அமுதுண்ணும் சிசுக்களும் வாய்திறந்து கூறும் மதலை மொழியின் இனிமைததும்பும் சங்கீர்த் தனத்தால் என் புகழைப் பூர்த்திசெய்தீர் என்ற அருள் வசனத்தை நீங்கள் படித்ததில்லையோ?" என்று குருநாதர் பதிலுரைத்தார்.

கெடுநினைவுக் குன்று

அன்று சாயங்காலம் குருநாதர் ஒலிவமலைக்குச் சென்றார். அவர் மலையின் வடமுடிக்குச் செல்ல, அவர் பகைவரான குருக்கள் தென் முடிக்குச் சென்றார்கள். எம்பெருமான் தமது பரமபிதாவான தெய் வத்தின் ஆலோசனையைக் கேட்டு நின்றார். குருக்களோ, குருநாதர் மீது பொங்கிய வர்மத்தில் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வற்ற தம் தீயமனங்களின் ஆலோசனையைப் பூரணப்படுத்தச் சென்றார்கள். ஆதலால் அவர்கள் ஆலோசிக்கக் குழுவிய குன்றிற்கு கெடுநினைவுக் குன்றென்ற வசைப்பெயர் பிறந்தது. மேற்கூறியவாறு, குருநாதரின் பெருங்கருத்து எவருக்கும் தெளிவாகத் தோன்றவில்லை. அவர் செய்கைகளைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால், ஒருவழி அவர் யூதரின் அரசாங்க சுயாதீனத்தை நாடினவராகக் காணப்பட்டார். இது ஒன்றே குருநாதர் கொண்டிருந்த நோக்கென்பது பரிசேயர், குருக்கள் முத லானோர்க்கு ஐயமறத் தோன்றியிருப்பின், அவர்களும் தேசபக்தராக் விருந்ததால், குருநாதரை எதிர்க்காது அவருக்குத் துணைபுரிய முயன் றிருப்பார்கள். குருநாதர் அக்காலத்தின் அந்நிய அரசியலுடன் முரண்பட்டது ஒரு பக்கமிருக்க, அவர் மார்க்க அனுட்டானங்களை யும், குருக்களின் நடபடிக்கைகளையும் தயை தாட்சணியமின்றிக் கண் டனம் பண்ணினர். இதுவே குருக்களைக் கோபப்படுத்திற்று. தமது பாரம்பரிய மதச் சம்பிரதாயத்தைக் குற்றப்படுத்தி, தமது கௌரவத் தைக் குலைக்கத் தலைபட்ட கோடரியை மனம்போலாடவிடுவது அவர் களுக்கு மிகுந்த மானக்கேடான காரியமாகத் தோன்றிற்று. என்று

லும் ஜனங்கள் அப்பொழுது குருநாதரிடம் கொண்டிருந்த பட்சத்தையும் மதிப்பையும் காணக்காண, அவரை மேற்கொள்ளுவது கூடாதென்றே உணர்ந்து வருந்தினர். யூதமாந்தர் அவரிடம் வெறுப்பு கொள்ளுவரேல், அவர் வீயும் நாள் வந்துவிடுமென்றெண்ணினர்கள். வில்லுக்கு பாணம் ஒன்றேயன்றி இரண்டிருப்பது உசிதமென்றெண்ணி, குருநாதர் அரசதுரோகியென்றும் நிலைநிறுத்த முயன்றார்கள். மதவிரோதம், ராஜதுரோகம் ஆகிய இருபெருங் குற்றங்களையும் குருநாதர் இழைத்ததாகத் தம்சொந்த வாய்மொழியால் தெளிவுறத் தோற்றுவிப்பாராயின் தங்கள் வஞ்சக விருப்பம் நிறைவேற வேறு சாதனம் அவசியமிராதெனவுணர்ந்து, குருநாதரைப் பேச்சில் அழுத்த சொல்வன்மையுளார் சிலரை ஏவத் தீர்மானித்தார்கள்.

தீய மனத்தினர்தம் நாவு சவரகன் கத்தியினும் கூர்மையானதென்றும், "தீயினுற் சுட்டபுண் ணுள்ஆறும் ஆருதே, நாவினுற் சுட்ட வடு" என்றும் பெரியோர் புகன்ற கூற்றிற்கொவ்வ, பரிசேயர் குருநாதர்மீது கபடமொழியாகிய பாணம் தொடுத்தனர். மறுநாள், புதனன்று எருசலேம் தேவாலயத்தில் பலத்தவோர் சொற்போர் நடந்தது. அதில் சத்தியவாசகரான இயேசுமகிபரே வெற்றிசிறந்தார்.

வாக்குவாதங்கள்

இராயனுக்குரியது, ஈசனுக்குரியது

புதன்:—ஒரு பூஜைக்கும் அதற்கு அடுத்த பூஜைக்கும் இடைப்பட்ட வேளையில் இயேசுநாதர் உபதேசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது பரிசேயர், தாமே கேள்விகேட்கச் சென்ருல், அவர்கள் உள்ளக்கருத்து வஞ்சகக் கருத்தென்பது எளிதில் புலப்படுமென்றஞ்சி, தமது சீடரை ஏவினுர்கள். அவர்களோடு பரிசேயரின் எதிர்வாதக்காரரான ஏரோதியர் சிலரையும் அனுப்பினுர்கள். அதனுல் அவ்விருதிறத்தாரும் உண்மையையறிந்து கடைபிடிக்க வேண்டுமென்ற சுத்த விருப்புற்று தர்க்கித்ததாகவும், தெளிவுருது திகைத்ததால், அரிய போதகரென்ற புகழ்படைத்த இயேசுநாதரிடம் ஆலோசிக்க விரும்பியதாகவும் குருநாதர் நம்பி ஏமாந்துபோவாரென்று பரிசேயர் நினைத்தார்கள். அந்த வாலிபர் மிகுந்த பணிவுடன் குருநாதரை நோக்கி "குருதேசிகரே, நீர் சத்தியவான். ஈசனின் அருட்யே வழியை நேர்மையாய்ப் போதிக்கின்றீர். இது நிசம். நீர் பெரியவன் சிறியவ

னென்று பார்ப்பதில்லை; அஞ்சாத யதார்த்தவாதி; ஆதலால், எங்கள் சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும். ரோமராயனுக்கு வரிப்பணம் செலுத்துவது நியாயமாமோ, அல்லவோ? உமது அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டும்" என்றூர்கள். கேள்வியைக் கேட்டபின், சரியான கண்ணி வைத்துவிட்டோமென்றும், இயேசுநாதர் தப்புவதற்கு வழியில்லையென்றும் எண்ணி, உள்ளுக்குள்ளே எக்களித்தார்கள். இராயனுக்கு வரிகொடுப்பது ஞாயமென்ருல், ஜனங்கள் அவரைத் தேசாபிமானமற்றவரென்று தீர்த்துவிடுவார்கள்; ஞாயமல்லவென்ருல், அது இராஜத்துரோகமாகிவிடும். ஆம் என்பதோ, அல்லவென்பதோ? குருநாதர் சொல்வதைக் கேட்போம். "மாயக்காரரே, என் என்னைச் சோதிக்கின்றீர்கள். ஒரு நாணயம் இருந்தால் எடுங்கள். (குருநாதரிடம் அன்று ஒரு செம்புக்காசும் இல்லாதிருந்ததுபோலும். காசைக்கொடுக்க அதை உள்ளங்கையில் வைத்துக்கொண்டு) இதிலிருக்கும் சொரூபமும் எழுத்தும் யாருடையது?" என்று வினவினர். இது தெரியாதாவென்றெண்ணினூற்போல், வெகு துரிதமாக குருநாதர் அவர்களுக்கு வைத்த கண்ணிக்குட் பாய்ந்தார்கள்: "ராயனுடையது" என்றுரைத்தார்கள். "அப்படியென்ருல், ராயனுக்குரியதை ராயனுக்கும், தெய்வத்திற்குரியதை தெய்வத்திற்கும் செலுத்துங்கள்" என்று குருநாதர் பகர்ந்தார். கண்ணி தெரித்தது. ஆனல் பட்டது குருநாதரல்ல, அந்த வாலிபரே. அவர்கள் குருநாதரின் சொல்வன்மையைக் கண்டு வியப்பும் வெட்கமுமுற்றுத் தாம் வந்தவழியே மீண்டும் ஏகினர்.

ஈசன் மரித்தோரின் நாயனல்லன்

சிறிது நேரத்திற்குப்பின் செல்வப் பலமுள்ள சதுசேயர் குருநாதரைத் தாக்கினூர்கள். உடைந்துபோன சங்கிலேசை, விரிந்த பூ, உதிர்ந்த காய் முதலியன தமது உற்பத்திஸ்தானத்திற்குத் திரும்பாது ஒழிந்துபோவதுபோல், இறந்தவர் பிறப்பதில்லையென்று சாதிப்பவர் சதுசேயர். மறுபிறப்புண்டென்பது மதவிஷயத்திற் தலைமை வகித்திருந்த பரிசேயரின் எதிர்வாதமா யிருந்தபடியால், மறுபிறப்பைக் குறித்து இருதிறத்தாரும் ஓயாத வாக்குவாதம் செய்வது வழக்கம். இயேசுபிரான் பரிசேயரைச் சார்வரேல், சதுசேயர் சினங்கொள்ளுவார்கள்; சதுசேயரைச் சார்வரேல் பரிசேயர் சினங்கொள்ளுவார்கள். நாட்டில் செல்வாக்குடைய பெரியோராய் விளங்கிய

யாவரும் குருநாதரை வெகுண்டு நசித்தழிக்க கச்சைகட்டிநின்ற அச் சமயத்தில் குருநாதர் எவர்பட்சம் சார்ந்திடினும் துன்பமே விளையும். ஆதலால், சதுசேயர் சிக்கறுக்கக்கூடாத நொடியொன்றை குருநாத ருக்குரைத்தார்கள். அது யாதெனின்: புத்திரபாக்கியம் பெறாது காலஞ்சென்ற மூத்தோனின் இல்லக்கிழத்தியை இளையோன்மணந்து, தன் சகோதரனுக்குப் புத்திரதானமளிப்பது கடனென மோசே முனி வரின் நீதிநூல் சாற்றுகின்றது. சந்தானமற்றிறந்த ஒருவன் மனைவி தன் கணவனுக்கு நேர்ந்த குறையைத் தீர்க்க அவன் இளையசகோதரர் ஆறுபேரை ஒருவன்பின் ஒருவனை மணக்கவேண்டியதாயிற்று. மறு பிறப்பில், அவள் அந்த ஏழு சகோதரருள் எவனுக்கு மனைவியாக விருப்பது என்ற கேள்வியே. குருநாதர் அந்த நொடியைக் கைநொடிப் பொழுதில் விடுவித்தார். "அப்படியல்ல. அறிவின்மையால் நீங் கள் இப்படிக் கேட்கின்றீர்கள். நீவிர் வேதத்தின் உட்பொருளை அறிந்திலீர்; தெய்வ மகத்துவத்தையும் ஓர்ந்திலீர். மாந்தர் மறுபிறப் பெய்துங்கால், மணப்பதுமில்லை, வாழ்க்கைப்படுவதுமில்லை. அவர் கள் தெய்வதூதர்களைப்போல், ஆண்பெண் பாகுபாடின்றிப் பிழைப் பார்கள். 'நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக் கோபின் தேவனுமாகவிருக்கின்றேன்' என்று தெய்வம் உமக்கருளிய வாக்கை அறியீரோ? இவ்வாக்கொன்றே மறுபிறப்புண்டென்பதற்குப் போதிய சான்றாக நின்றது. ஏனெனில் ஈசன் மரித்து இல்லாமற் போன பொருட்களின் நாயனன்று, அவர் அநாதி நித்திய வஸ்துவாத லால், அவரது கருணைக்கிடமாகும் மானிடரும் நித்திய வஸ்துக்க ளாகின்றனர்" என்று குருதேசிகர் போதித்தார். ஆலயத்தில் கூடி யிருந்த மாந்தரனைவரும் அவ்வரும் போதகத்தைக் கேட்டு அளவற்ற வியப்புற்றனர்.

சிறந்த பிரமாணம்

சதுசேயரை வாயடைத்து வெட்கப்படுத்தியதை பரிசேயர் கேட்டு, இயேசு பெருமானைத் தாக்கவந்தனர். அவர்களிலொருவன் வக்கீல்; பெரிய வாயாடி. அவன் குருநாதரை நோக்கி "போதகரே, நீதிப் பிரமாணங்களிற் சிறந்த பிரமாணம் எது? சொல்லும்" என்றான். குருநாதர் பிரதியுத்தரமாக "உன் கர்த்தனும் கடவுளிடம் முழு இரு தயத்தாலும், முழு மனத்தாலும், முழு ஆத்துமனாலும் அன்புகொண்

டொழுகுவாய் என்பதே பிரமாணங்களனைத்திலும் பெரியதாகும். அதற்கு அடுத்த முக்கிய பிரமாணம், நீ உன்னைச் சிநேகிப்பது போல் உன் அயலானையும் சிநேகிப்பாய் என்பதாம். நீதி நூலும், தீர்க்கதரிசன உபதேசங்களும் இவ்விரு பிரமாணங்களுக்குள் அடங்கி விட்டன" என்றார்.

மேசியா தாவீதின் குமாரனோ?

அதன்பின் குருநாதர் பரிசேயரிடம் ஓர் கேள்விகேட்டார். "மேசியாவாகிய கிறிஸ்துவைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? அவர் எவருடைய குமாரர்? சொல்லுங்கள்" என்றார். "அவர் தாவீதின் குமாரர்" என்று பரிசேயர் பகர்ந்தனர். "அது நிசமென்றால், தாவீதரசன் கிறிஸ்துநாதரைத் தன் கர்த்தரென்று பாவசநிலையில் கண்டுணர்ந்து கூறியது சரியோ? கிறிஸ்து மேசியா தாவீதின் கர்த்தனாயிருப்பின், அவர் தாவீதின் குமாரனாகவிருப்பது எங்ஙனம்?" என்று குருநாதர் பரிசேயரைக் கேட்க, அவர்கள் சமாதானங்கூறத் திராணியற்று நின்றனர். அதன்பின் அவரிடம் கேள்விகேட்க எவரும் துணிந்திலர்.

குருடருக்கு வழிகாட்ட முயலும் குருடர்

கூடியிருந்த ஜனங்களுக்கும், விசேஷமாகத் தம் சீடருக்கும் குருநாதர் எச்சரிப்புக்கூறினார். மெய்மதத்தைப் போதிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட தம் சீடர் பரிசேயரான போலிக் குருக்களைப்போல் நெறி தவறிச் செல்லாவண்ணம் குருநாதர் அவர்களை எச்சரித்தார். "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயின் பிரதிநிதிகளா யிருக்கின்றார்கள். அவர்கள் போதனையைக் கேளுங்கள்; அவர்கள் சாதனையைப் பின்பற்றாதிருங்கள். அவர்கள் சுமக்கவொண்ணாத பாரத்தை பிறர்மேற் சுமத்துகின்றார்கள்; தாமோ அதை விரலாலும் தீண்டார்கள். அவர்கள் செய்யும் ஜெப தப அனுட்டானங்களைப் பிறர் காணச் செய்கின்றார்கள். அவர்களிடம் உள்ளான பக்தியைக் காண்பதரிது. மனிதர் தம்மை ரபீ, ரபீ என்றழைக்க வேண்டுமென்ற அபீஷ்டங்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் அவர்களைப்போல் வெளிவேஷதாரிகளா யிருக்கவேண்டாம். ரபீ என்றாவது, பிதாவென்றாவது அழைக்கப்பட விரும்பாதீர்கள். உங்கள் ரபியும், பிதாவும் ஒருவரே. அவர்

கிறிஸ்து. நீங்கள் யாவரும் சகோதரர்" என்று இவ்வாறு சீடருக்குப் புத்தி புகட்டியபொழுது, பரிசேயர் தம் உன்னத சிலாக்கியங்களை இழந்து நெறிவழுவிச் சென்று, தம் தொண்டரையும் பொய்வழியுய்த்த பரிதாபத்தை நினைத்து துக்கித்தார். அவர் அழாததொன்றுதான் குறை. யூதமதம் க்ஷீணித்துப்போனதற்கு பரிசேயரின் மதியீனமே காரணமாயிருந்தமையால், அவர்களையும் பின்வருமாறு எச்சரித்தார். "குருடருக்கு வழிகாட்ட முயலும் குருடரே, மாயபக்தி காட்டுபவரே, உங்கள்நிலைமை பரிதாபம். நீங்கள் அற்பசொற்பப் பொருட்களிலுங் கூட பத்திலொன்றை தெய்வத்திற்குக் காணிக்கையாகக் கொடுக்கின்றீர்கள். அது நல்லதே. ஆனால் நீதிப்பிரமாணங்களில் இவற்றிலும் முக்கியமான அம்சங்களையோ கைக்கொள்ளாதிருக்கின்றீர்கள். நீதி, இரக்கம், உண்மைத்தன்மையாகிய விஷேஷ நற்குணங்கள் உங்களிடத்தில் காணப்படவில்லை. ஆதலால் நீங்கள் கொசுகை வடிகட்டி விலக்கிவிட்டு ஒட்டகத்தைக் கூசாமல் விழுங்கும் குருடரைப்போலிருக்கின்றீர்களன்றோ? சமையற்பாண்டங்களை வெகு கவலையோடு துலக்குன்றீர்கள். அவற்றினுள்ளிட்டுச் சமைக்கும் பொருட்களோ எளியோரை ஏமாற்றிக் கொள்ளையாடிய பொருட்களா யிருக்கின்றன. ஊருமுடல் பல நதியாடினும் உள்ளத்திற்கொண்ட மலம் நீங்காதென்றறியாத பேதையர்போல், உங்கள் உடல், உடை முதலியவற்றைச் சுத்தப்படுத்தி, உள்ளத்தை மண்ணாதியாசைகளால் நிரப்பியிருக்கின்றீர்கள். வெளியே தூய்மையாகத் தோன்றிடினும், உள்ளே துர்க்கந்த முள்ள எலும்புகளை அடக்கியிருக்கும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு உங்களை ஒப்பிடுவது ஞாயமன்றோ? உங்கள் கதி அதோகதியாகப் போகின்றது. மாயக்காரரே, பரிசேயரே, உங்கள் நிலைமை பரிதாபம், பரிதாபம்!"

கிரேக்கர் குருநாதரைக்காண விரும்பினர்

எருசலேம் தேவாலயத்தில் பூசைசெய்ய வந்திருந்த கிரேக்கர் சிலர் இயேசுநாதரைக் கண்டுபேச விரும்பினார்கள். சீடர்கள் அவர்களை குருநாதரிடம் அழைத்துச் சென்றபொழுது, குருநாதர் சொன்னார்: "மனிதகுமாரன் மகிமையடையுங்காலம் வந்துவிட்டது. கோதுமை வித்தானது நிலத்திற்புதைந்து அழிந்தாலன்றி அது கதிர்தரும் பயிராகாதென்பது திண்ணம். அவ்வாறே என் மரணத்தால் பெருவிளைவுண்

டாகும். தன் பிராணனைக் காக்க விரும்புவன் அதை இழந்துபோவான். என்னிமித்தம், அதாவது தெய்வத்தின் திருநாமப்புகழைப் பெருக்க தன் உயிரையும் பாராட்டாதுய்பவன், நித்திய ஜீவனைப் பெறுவான்." தாம் போதித்த உபதேசத்தை கிரேக்கரும் கேட்க விரும்பியதால், பலஸ்தீன நாட்டில் நடக்கும் மார்க்க சீர்திருத்தம் படிப் படியே உலகமெங்கும் பரவுமென்றெண்ணியே, மனிதசுதன் மகிமையடையுங்காலம் வந்துவிட்டதென்று குருநாதர் சொன்னார்போலும். புதன் கழிந்தது. குருநாதருக்கும் அவரது எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் நடந்த வாக்குவாதத்தில், குருநாதர் ஜயமடைந்தனர். தோல்வியடைந்ததை எண்ணிச் சீற்றங்கொண்ட ஒன்னார் அன்றிரவு குருநாதரைப் பிடித்துக் கொல்வதற்கான முயற்சி பிறிதொன்றெடுத்தனர். பன்னிரண்டு சீடரிலொருவன், இஸ்காரியோத்தென்னும் யூதாஸ், அதிருப்தியுற்றிருந்ததை பரிசேயர் அறியலானார். குருநாதர் இரவில் தங்கியிருக்குமிடத்தை யூதாஸ் காட்டுவானாகில் அவனுக்குக் கைக்கூலி கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினார்கள். யூதாவின் நெஞ்சத்தில் சாத்தான் புகுந்தான். முப்பது வெள்ளிப்பணத்தை நிறுத்து வாங்கிக் கொண்டு, குருநாதரைக் காட்டிக்கொடுக்க அவன் சம்மதித்தான்.

கடைசி விருந்து

வியாழன்:—எம்பெருமான் சுயாதீனராகக் களித்த கடைநாள் இதுவே. மறுநாள் பிறவாமுன் அவர் பகைவர் கையிற் சிக்கிக்கொள்ளப் போகின்றார். அதைக் குருநாதர் அறிவார். என்றாலும் அவரில் அமரிக்கையின்மை தோன்றவில்லை. பிராணபாயத்திற் குள்ளாகாதவர் போல், அன்றும் ஞானரசம் ததும்பிய அரிய வசனங்களைப் பிரசங்கித்தார். பஸ்கா பண்டிகையின் விசேஷ விருந்தும் கொண்டாடினார். பேதுரு, யோவான் ஆகிய இரண்டு சீடரை பட்டணத்திற்குட் சென்று அங்கு தண்ணீர் மொண்டுசெல்லும் ஒருவன் பின்னாகப்போய் அவன் புகும் வீட்டின் தலைவனிடம் விருந்துண்ண இடங்கேட்கக் கற்பித்தார். அவன் குருநாதரின் அந்தரங்க நண்பரிலொருவன். அவன் அப்போஸ்தலனாகிய மார்க்கு என்பவரின் தந்தையென்பது ஓர் ஐதீகம். குருநாதர் பகைவர் கண்களுக்கு மறைந்திருப்பது அவசியமாயிருந்தது. "என் துன்பகாலங்களிலெல்லாம் என்னோடிருந்து ஆறுதலளித்த என் பிராண நண்பராகிய உங்களோடு இந்தக் கடைசி பஸ்கா பண்டிகை

யைக் கொண்டாட நான் மிகுந்த வாஞ்சைகொண்டேன்" என்று இயேசுநாதர் சீடருக்குரைத்தார். ஆதலால் அன்பின் விருந்துண்ண விரும்பிய அன்றிரவில் பகைவர் தமக்கிடைஞ்ச லிழைக்காவண்ணம், குருநாதர் இந்த நிவாரண உபாயம் எடுப்பதவசியமாயிற்று.

சீடர் கலக்கமுற்றிருந்ததைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதலளிக்க வென்று பின்வரும் தைரிய வார்த்தைகளைக் கூறினர். "உங்கள் உள்ளம் துளக்கமுறாதிருப்பதாக. ஈசனில் நம்பிக்கைவையுங்கள். என்னிடமும் விசுவாசங்கொள்ளுங்கள். என் பிதாவின் வீட்டில் எண்ணிறந்த விடுதிகளிருக்கின்றன. நீங்கள் வசிப்பதற்கான விடுதிகளைத் திட்டம் பண்ணப்போகின்றேன். பின்னர் திரும்பிவந்து உங்களை அழைத்துச் செல்வேன். நான் எங்கே யிருப்பேனே அங்கே என் பக்தரான நீங்களும் இருப்பீர்கள். இதற்கிடைப்பட்ட காலத்தில், உங்களுக்கோர் தேற்றரவாளனை அனுப்ப என் பரம தந்தையை வேண்டிக் கொள்வேன். சத்திய ஆவியானவரே அத்தேற்றரவாளன்." பிராண ஆபத்து நெருங்கியிருந்த அவ்வேளையிலும், குருநாதர் இத்தனை ஊக்கத்தோடும் நம்பிக்கையோடும் தமது பரம தந்தையின் இடையறாக் காருண்யத்தைக் குறித்துப் பேசியதைக் கண்ட சீடர், குருநாதரின் பக்தி விசேஷத்தை மெச்சிக்கொண்டனர். அவர்களிலொருவனாகிய பிலிப்பு, "நாதா, எங்களுக்குப் பரமபிதாவின் தரிசனம் கிடைக்கச் செய்வீர்" என்றிறைஞ்சினன். அப்பொழுது குருநாதர், இருதயத்தில் சுத்தமுள்ளோர் தெய்வத்தைக் காண்பாரென்றாவது, அரூபியான மெய்ப்பொருள் ஸ்தூல விழிகளுக்கு மறைந்தே நிற்குமென்றாவது பதிலுரைக்காது, எவரும் எதிர்பாராததும் வியப்புக்குரியதுமான மாறுத்தரமளித்தார். "நான் இவ்வளவு காலம் உங்களோடிருந்து உங்களுக்கு உபதேசித்துவந்தேன். பிலிப்புவே, நீ இன்னும் என்னை அறிந்துகொள்ளவில்லையோ? என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான்" எனக் குருநாதர் சாற்றினர். அதன் கருத்தோவெனில், அரூபியாகிய மெய்ப்பொருளே பாமரராம் எமக்குத் தமது திவ்விய காட்சியளிக்கச் சித்தங்கொண்டு, இயேசுகிறிஸ்துவென்னும் புண்ணிய புருஷனாகத் தோன்றினரென்பதே. பின்னும் குருநாதர் கூறுவார், "உங்களுக்குச் சமாதானத்தை வைத்துப்போகின்றேன். அந்தச் சமாதானம் என் இருதயத்தை நிரப்பியிருக்கும் சமாதானம்; உலகந் தரக் கூடாத சமாதானம்; புத்திக்கெட்டாத சமாதானம். என்னைத்தேற்றும்

உன்னத சந்தோஷத்தையும் உங்களுக்குக் கொடுக்கின்றேன். அதனால் என்னிதயத்திலிருக்கும் ஆனந்தம் உங்களிதயத்திற் புகுந்து உங்கள் ஆனந்தத்தைப் பூரணப்படுத்தும். என் அன்பையும் உங்களுக்குத் தந்தேன். அன்பு கண்டவிடம் அன்புகொள்ளுவது உலகப் போங்கு. அன்பற்றோரிடத்தும் பாய்ந்து செல்லுவது தெய்வீக அன்பு. தெய்வீக அன்பையும் உங்களுக்கு நிதியாக வைத்து செல்லுகின்றேன்." அஷ்ட தரித்திராகத் தோன்றிய எம்பெருமான் குபேரனும் கொடுக்கக்கூடாத சாஸ்வத நிதிகளைக் கொடையளித்தார். அன்பு, ஆனந்தம், சமாதானம் இவைகள் இயேசுகிறிஸ்து தம் தொண்டருக்கு இன்றும் அளிக்கும் கொடைகளாம். இத்திரிநிதிகளைப் பெற்றோர், சங்கநிதி பதுமநிதி கிடைக்கப் பெற்றவரினும் பாக்கியரென்பது நிசமன்றோ? இந்த அழியாத பரமநிதிகளைத் தேடாதிருப்பது நியாயமோ?

ஊழியங்கோள்ளவல்ல, ஊழியஞ் செய்ய

ஓர் அந்தரங்கச்சீடன் வீட்டில், மேல்மாடியில், ஆயத்தம் பண்ணியிருந்த உணவைக் குருநாதர் தம் சீடருடனருந்தி தம் நட்பைக் காட்டச் சென்றனர். அந்த கடைசி விருந்தின் முகாமைக்காரராக நியமிக்கப்பட்ட பேதுரு, யோவான் முதலான சீடர், விருந்தினருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களிற் சிலவற்றைச் செய்யாதொழித்தனர். விருந்துண்ணவரும் அதிதிகளின் கால்களைக் கழுவுவது விருந்தளிப்போர் செய்யும் உபசாரங்களிலொன்றென்பது யூதர் கோட்பாடு. அன்றிரவு அதைச் செய்வதற்கு ஒருவரும் முன்வரவில்லை. பெரியவாரத்தில் ஒருநாள் குருநாதர் தமக்கு வரவிருக்கும் துன்பங்களை நினைத்துக்கொண்டே சீடருக்கு முன்நடந்தார். பின்பு அவர் திரும்பிப் பார்த்தபொழுது சீடர் ஒருவரோடொருவர் வெகு மும்முரமாக வாதாடிக்கொண்டு வந்ததைக் கண்டார். வாக்குவாதம் எதற்கென்று குருநாதர் விசாரித்தபொழுது, பரலோக இராச்சியத்தில் தம்மில் எவன் முதன்மை வகிக்க யோக்கியனென்றே சீடர் சச்சரவு செய்ததை அவர் அறிந்து துக்கித்தார். அன்று சீடருக்குள் தோன்றிய பொறாமை, அவர்களின் ஐக்கியத்தைச் சிதைத்தது. ஆதலால் அவர்கள் கள்ளமுற்ற மனத்தினராகி, ஒருவரையொருவர் உபசரித்துச் சிநேகிக்க கூடாதிருந்தனர். உணவு மேசையின்மேல் பரிமாறப்பட்டிருந்தது. நேர்ந்த குறைச்சலைக்கண்டும்காணாதவர்போல் சீடர் ஆசனங்

களிலமர்ந்தனர். குருநாதரோ சீடரின் அன்பற்ற செயலைக் கண்டனம் பண்ணுதிருப்பது குற்றமாகுமென்றெண்ணினர். அவர்களுக்கு அன்பின் சிறப்பை விளங்கக் காட்ட ஓர் பிரசங்கம் பண்ணவில்லை. மறப்பதற்கரிய அழகியவோர் திருவினை புரிந்தார். வெண் துண்டை அரைக்கிசைத்துக்கொண்டு, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி தம் திருக்கரங்களால் சீடர் கால்களைக் கழுவத் தொடங்கினர். சீடர் வியப்பும் வெட்கமுமுற்றனர். குருநாதர் செய்த இவ்வருஞ்செயலால் சீடரிதயங்களைக் கறைப்படுத்திய மமதையும் அன்புத் தாழ்ச்சியும் தீப்பட்ட பஞ்சுபோல் மறைந்தன. என்றாலும் குருத்துரோகியாகிய யூதாவின் பாதங்களை எம்பெருமான் கழுவித் துடைத்தபொழுதோ, அவன் கடந்த இரவில் தன் குருநாதரைக் காட்டிக்கொடுக்கப் பரிசேயரிடம் சென்றபொழுது படிந்த தூசிபோனதே ஒழிய அவன் இருதயத்திற்குள் புகுந்த துரோகம் ஒழுயவில்லை. சீடர் பாதங்களைக் கழுவி முடிந்தபின், ஊழியங்கொள்ளவல்ல, ஊழியஞ்செய்யவே மனித சுதனுர் மேதினியில் அவதரித்தாரெனத் தம்மைக்குறித்து முன்னொரு முறை கூறின சாந்தப்பிரபு யாது பகர்ந்தாரெனில், "உங்கள் போதகனும் கர்த்தனுமாயிருக்கும் நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன். ஆதலால், நீங்களும் ஒருவர் பாதங்களை ஒருவர் கழுவுவது நல்லது. நீங்கள் இப்பொழுது சுத்தமாயிருக்கின்றீர்கள். ஆனால் நீங்களனைவரும் சுத்தரல்ல. அந்தோ, பரிதாபம்!" என்பதே.

குருத்துரோகி

இப்படிப் பேசிக்கொண்டே யூதாஸை உற்றுப்பார்த்தார். அவன் தீங்கு நினையாத நிரபராதியைப்போல் நகைத்தான். குருநாதரின் எச்சரிப்பு அவமாயிற்று. அவர் மிகுந்த துக்கத்தோடு உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுக்கப் போகின்றான் என்றார். அதைக் கேட்டபொழுது சீடர் திடுக்கிட்டுக் கலங்கினர். தம் பெருமையால் குருநாதரைத் துக்கப்படுத்தி, ஓர் அடிமையைப்போல் அவர் தம் திருக்கரங்களால் தங்கள் பாதங்களை கழுவவைத்தவர்கள், அவரைக் காட்டிக்கொடுக்கவும் துணிந்தார்களோ? பாமரருள்ளத்தில் விளையாத் தீவினை யாது தானுளது? ஆதலால் சீடர் ஒவ்வொருவராக, "ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கப்போகுந் துரோகி நானோ, நானோ?" வென்று மிகுந்த ஆத்திரத்தோடு கேட்டனர். மாய வஞ்சகனை

யூதாஸூம் அப்படியே கேட்டான். குருநாதர் பதிலுரைக்கவில்லை. அப்பொழுது பேதுரு, குருநாதரின் வலபாரிசத்தி லுட்கார்ந்துகொண் டிருந்த யோவானை குருநாதரிடம் இரகசியமாகக் கேட்கக் கற்பித்தான். யோவான் கேட்டபொழுது, "அப்பத்துணிக்கையை நான் எவனுக்குக் கொடுக்கின்றேனே அவனே அத்துரோகி" யென்று சொல்லி, குருநாதர் அப்பத்தைப் பிட்டு ரசத்திற்றோய்த்து தம் இடபாரிசமிருந்த யூதாஸூக்கு கொடுத்தார். அதன் பின் மற்றவர்களுக்கும் அப்பத் துணிக்கைகளைக் கொடுத்தார். பிரதான அதிதி அப்பத்துண்டுகளை மற்ற அதிதிகளுக்குக் கொடுப்பது யூதருக்குள் வழக்கம். முதல் முதல் துணிக்கையைப் பெற்றவன் பெரியவனென் றெண்ணப்படுவான். குருநாதர் யூதாஸூக்கே அக் கனத்தைக் கொடுத்தார். அதையும்பெற்றுக் கொண்டு யூதாஸ் மனதுருகாது, தான் நினைத்த கொடுஞ்செயலைச் செய்துமுடிக்க கருதினன். அவன் மனம் கல்லினும் கடினமாயிருந் தது கண்டு, குருநாதர் ஆழ்த் துயரமுற்றனர். அவனது வஞ்சக நெஞ்சத்தினின்று கருமுகிற்போ லெழுந்த குற்றம் சீடருடன் தாம் அருந்த விரும்பிய கடைசி விருந்தின் அருமையைக் குலைத்ததாலும், சீடருக்குத் தாம் உரைக்க விரும்பிய ஆசிடைமொழிகளை அந்த வஞ்ச கனை வைத்துக்கொண்டுசொல்லவிரும்பாததாலும், குருநாதர் அவனைப் பார்த்து "நீ செய்யவேண்டியதைச் சீக்கிரம்செய்" என்றார். யூதாஸ் அந்த வார்த்தைகளைக் கேட்டபொழுது அவற்றின் கருத்தை அறிந் தான். மூன்றரை வருஷமாய் குருநாதருக்கும் அவனுக்கும் இருந்த சம்பந்தம் அந்த நிமிஷம் அறுபட்டதென் றறிந்தான். அது அவனுக் குக் கசப்பாயிருந்தது. என்றாலும் பண ஆசையும், குருநாதர் மூலமாக லௌகீக மேன்மை அடையலாமென் றிருந்து ஏமாந்துபோனதால் உண்டான வெறுப்பும், அத்துரோகச் செயலைச் செய்ய அவனை ஈர்த்துச் சென்றன. ஆதலால் அவன் எழுந்து வெளியே போனான். வெளியே இருளாயிருந்தது; அவன் நெஞ்சில் காரிருள் படர்ந்தது. குருநாதர் அவன் போவதைப் பார்த்துக்கொண்டிருந்தார். வாசற்படி யைக் கடக்குமுன்னரேனும், அவன் மனந்திரும்பித் தம்மிடம் வந்து தன் குற்றத்தை அறிக்கை செய்து அபயமிடானோவென்று எம் கருணைவள்ளல் எதிர்பார்த்தார். அவனோ மீட்புக்கும் அழிவுக் கும் இடைபட்ட எல்லையைத் தாண்டிவிட்டான். மேலறையின் வெளிச்சத்தினின்று இருளுக்குட் சென்றான்.

"எறிந்தவேல் மெய்நுழைந் திருக்க வாண்டையென்
றறிந்து வால் குழைத்து வந்தணுகுங் குக்கலுஞ்
சிறந்தபே ரருளோடுஞ் செய்த நன்றியை
அறிந்திடா தகன்றனன் யார்கொலா மிவன்."

தன் குஞ்சைப் பருந்தடித்துப்போக பார்த்துப் பதறும் பெட்டைக் கோழியைப்போல், குருநாதர் பதறி வருந்தினர். அவன் போன வழியே சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருவரும் பேசத் துணிந்தாரில்லை. சிறிதுநேரம் குருநாதர் வாய்திறவாது சிந்தையி லாழ்ந்திருந்தார்.

குருநாதர் செய்த வோர் ஜெபம்

அதன்பின் தம் பரம தந்தையை நோக்கி ஊக்கமாய் ஜெபித்தார். அவர் செய்த பிரார்த்தனையாதெனில், "தந்தாய், என் வேளை வந்தது. உம் குமாரனாகிய என்னை மேன்மைப்படுத்தும். நான் உம்மை உலகத்தார் முன் மேன்மைப்படுத்தினேன். நீர் எனக்குத் தந்த சீடருக்கு உமது திருநாம மகிமையை விளக்கிக் காட்டினேன். நான் உலகத்தினின்று நீங்கி உம்மைச் சேருவேன். என் சீடரோ இன்னும் சிறிது காலம் உலகின்கண் சஞ்சரிப்பார்கள். அவர்களை இப்பிரபஞ்சத்தினின்று விலக்கவேண்டுமென்றல்ல, தீமையினின்று தற்காத்து இரட்சை செய்யவேண்டுமென்றே இறைஞ்சுகின்றேன். சத்தியத்தால் அவர்களைத் தூய்மையாக்கும். உமது வசனமே சத்தியம். உமது புகழைப் பிரஸ்தாபிக்க நீர் என்னை அனுப்பியதுபோல், நானும் என் சீடராகிய இவர்களை அனுப்புகின்றேன். மேதினியைப் புரக்க என்னை அனுப்பியவர் நீரே யென்றும், நீர் என்னை நேசிப்பதுபோல் என் தொண்டரையும் நேசிக்கிறீரென்று உலகம் அறிந்துகொள்ளுவதாக. நான் இருக்குமிடத்தில் என் சீடருமிருக்கவேண்டுமென்பது என் வாஞ்சை. நீர் என்மீதுகொண்ட பேரன்பு இவர்களிலும் காணப் படுவதாக. நானும் அவர்களிதயங்களில் தோன்றுவேனாக."

"கர்த்தரைத் துதியுங்கள். அவர் நல்லவர். அவர் கிருபை என்றும் நிலையானது" என்ற கீர்த்தனையைப் பாடியபின் சீடரும் குருநாதரும் பந்தியை விட்டெழுந்தார்கள். அப்பொழுது நடுச்சாமமாகிவிட்டது. வெகு ஜாக்கிரதையாக அவர்கள் நிச்சப்தமாயிருந்த பட்டண வீதிகளைக் கடந்து கோட்டைக்கு வெளியே சென்றார்கள். சென்றுகொண்

டிருக்கையில், குருநாதர் சீடரைப்பார்த்து, "நீங்கள் எனக்கு நேரிட விருக்கும் துன்பத்தைக் கண்டு பேதலித்துவிடுவீர்கள்" என்றார். ஏற்கெனவே யூதாஸ் குருநாதருக்கு இரண்டகம் பண்ணிவிட்டான். அது போதாததுபோல் நாமும் அவரை கைவிடுவது நீதியாகுமோ வென்று தனக்குள்ளே எண்ணின பேதுரு, மிகுந்த ஆத்திரத்துடன், "ஆண்டவரே, உம் நண்பரனைவரும் உம்மைக் கைவிட்டாலும் நான் உம்மைக் கைவிடேன்" என்று பகர்ந்தான். குருநாதர் அதைக் கேட்டு சந்தோஷப்பட்டார். என்றாலும் பேதுருவிற்கு வரப்போகும் சோதனையை அவர் அறிந்ததால் அவனுக்கு எச்சரிப்பாக, அவன் அன்று சேவல் கூவுமுன் தம்மை மூன்றுதரம் மறுதலிப்பானென்று பகர்ந்தார். பேதுரு திடுக்கிட்டு முன்னிலும் அதிக வைராக்கியத்துடன், குருநாதருடன் தான் மரிக்கவுந் துணிந்து நிற்பதாகக் கூறினான். குருநாதர் அதற்கொன்றும் பதிலுரைக்கவில்லை. முன்னொருக்காலும் அடையாத கலக்கமும், விசாரமும் அவர் மனத்தை நொறுக்கிப் பிழிந்தது. பேச நா எழும்பவில்லை. யாவரும் மௌனமாகக் கெத்சேமனேத் தோட்டத்தை அடைந்தனர்.

அத்தியாயம் 10.

தோட்டத்திலிருந்து கபால ஸ்தலம்வரை

கெத்சேமனே

சீடர் மூவரைத் தம்மோடழைத்துக்கொண்டு தோட்டத்திற்குட் சென்றார் இயேசுமகிபர். அவர்களை நின்று ஜெபித்துக்கொண்டிருக்கச் சொல்லிவிட்டு, கல்லெறி தூரம் கடந்து சென்று முழங்காலூன்றி தமது பரம தந்தையுடன் வாதாடினார். "பொறுக்கமுடியா தினி இத் துன்பம். பிதாவே, துன்பமெனும் இப்பான பாத்திரத்தை என்னிடமிருந்து அகற்றுவீராக" என்றோலமிட்டுக் கெஞ்சினார். ஜெபித்தும் ஆறுதல் பெறாது, சீடர் துணையால் தேறுதலடையக் கருதி அவர்களிடம் வந்தபோது, விழித்திருந்து ஜெபிப்போமென்று வாக்களித்த மூன்று சீடரும் அயர்ந்து நித்திரையில் மூழ்கியிருக்கக் கண்டார். "இந்தத் துன்பவேளை, நீங்கள் ஒருமணி நேரமாவது என்னுடன் விழித்திருக்கக்கூடாதோ? பாவசோதனைக்குட் சிக்காதபடி விழித்திருந்து ஜெபியுங்கள்" என்று சொல்லிவிட்டு குருநாதர் மறுபடியும் தனியே சென்று ஜெபித்தார். மூன்றாந்தரம் ஜெபிக்குமுன், அவர் இதயத்திற் படிந்த கருமுகிலனைய கலக்கம் நீங்கிற்று. ஆதலால் குருநாதர் "இந்தப் பாத்திரத்தை நான் பருகுவது அத்தியந்த அவசியமாயின், உமது சித்தமே நிறைவேறக்கடவது" என்று சொல்லித் தந்தையின் கருத்திற்குத் தம்மை மனப்பூர்வமாகக் கையளித்துவிட்டார். தெய்வ சித்தத்திற்கு ஈடுபடுமுன், அவர் அடைந்த ஆத்தும வருத்தத்தின் அகோரத்தால், அவரது நெற்றியிலிருந்து வியர்வை இரத்தத்துளிகளாக விழுந்தது. அதன் காரணம் யாது? பாத்திரமென்று உருவகப்படுத்திக் கூறியது யாது? அடுத்த நாள் அவர் அடைந்த சரீர வேதனைக்கும் மரணத்திற்கும் அஞ்சியதால் அத்துணை துயருற்றுக் கலங்கினார் என்று சொல்லத் துணியலாமோ? எவ்விதப் பிணியையும் தீர்த்து பிணியாளர் கொண்டிருந்த பயத்தை நீக்கிய பரம பண்டிதர் தாமே மரணத்திற் கஞ்சிக் கலங்கினரென்பது விபரீதமன்றோ? சரீர வேதனைக்கஞ்சி அதினின்று தப்பிக்கொள்ள விரும்பினாரில்லை. வேறெதற்கஞ்சினார்?

நானென்னும் ஆணுவங்கொண்ட குருக்களும், தம் சீடரிலொருவ னுகிய யூதாஸ் ஈம் செய்யவிருக்கும் இரண்டகம் எம்பெருமானின் அன்பார்ந்த உள்ளத்தை பழுக்கக் காய்ச்சிய இரும்பைப்போற் சுட்ட தாலோ அவர் கலக்கமுற்ருர்? புண்ணிய புருஷனுகிய எம் குரு நாதரை முழுப்பகையாய்ப் பகைக்க மனிதரது பாவம் அவர்களை ஏவியதே பாவத்தின் அகோரத்தைக் காட்டுவதாயிற்று. தவிர உலகப் பிரகாரமான சுயாதீனத்தைத் தருவதைத் தவிர்த்து ஆன்மீக பரம ராட் சிய மொன்றையே நிலைநாட்ட முயன்ற எம்பெருமானின் பெருநோக் கின் சிறப்பைக் காணுவண்ணம் மானிடர் கண்களைக் குருடாக்கின லௌகீக சிந்தையின் வலிமையை எம்பெருமான் உணர்ந்ததால் அத்துணை பெருந்துயருற்ருர். உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்க வந்த தெய்வ மறியின்மீது அப்பாவச்சுமை அப்பொழுது விழுந்ததால் எம்பெருமான் கலக்கமுற்ருர். இவையனைத்தும் உத்தேசங்களே யாகும். பரமாத்துமனேடு இடையரு ஒற்றுமையாக சாயுச்சிய நிலையில் நின்ற இயேசு எம்பிரானின் ஜீவாத்மன் கலங்கியதின் கார ணத்தை யாருணர்ந்துரைக்க வல்லவராவர்? அவ்வரிய ஆத்மன் பிரிவுணர்ந்து இருளுக்குட் சென்றதென்றுமட்டுமே நாம் சொல்ல லாம். தெய்வம் தம்மையுய்க்கும் வழிச் செல்லுங்கால், எம் குருநாதரும் தடுமாற்றமடைந்ததை நினைக்கும் நாம் அவர் எமது பலவீனத்தைத் தாங்கத்தக்க அனுதாபம் கொண்டுள்ளாரென்றிருந்து தேறுதலடை வோராவோம். அதுவே பாமரராமெம்மக்கும், எம் இரட்சக பெருமா னுக்கும் உள்ள பாந்துவத்திற்கு அஸ்திபாரமாயிற்று.

"முத்தமிட்டா காட்டிக்கொடுக்க நினைத்தாய்?"

கடைசியாக சித்தம் நிலைபெறவடைந்து எம்பெருமான் சீடரிடம் வந்தபொழுது, அந்த ஏழை மனிதர் தூங்கிக்கொண்டிருந்தார்கள். குருநாதர் சிறிதுங் கோபங்கொள்ளாது, அவர்கள் கவலைத்தாழ்ச்சியா லல்ல, மிகுந்த சோர்வினுல் தூங்கிவிட்டார்களென்றுணர்ந்து, அவர் களை யெழுப்பி "ஆத்துமாவில் உற்சாகமிருப்பினும், சரீரம் தளர்ந்து சோர்ந்துவிடுவது இயல்பே" என்று சொன்னுர். "இனித் தூங்கச் சமயமில்லை. எழுந்திருங்கள். இதோ என்னைப் பிடித்துச் சிறை யாக்க சேவகர்கள் வந்துவிட்டார்கள்" என்ருர். அப்பொழுது சீடர் துடித்தெழுந்து கண்களைக் கசக்கி முன்பின் பார்த்தபொழுது, அத்

தோட்டத்தின் வேலியருகே பல தீவட்டிகளைக் கண்டு மிகுந்த கலக்கமடைந்தார்கள். குருநாதருடன் அவர்கள் சிலமணி நேரத்திற்குமுன் தோட்டத்திற்குட் சென்றபொழுது, இவ்வித விபத்து நேரிடுமெனக் கனவிலும் எண்ணினரல்லர். இதோ ஒன்னார் தம்மைச் சூழ்ந்து கொண்டனர். குருநாதரின் திருவுடலில் கை வைப்பவரைச் சின்னாபின்னமாகக் கிழித்தெறியத்தக்க வைராக்கியங்கொண்ட அவரது நண்பரனைவரும் இப்பொழுது எருசலேம் பட்டணத்தில் அயர்ந்து துயில்கொண்டிருக்கின்றார்கள். குருநாதருடன் அத்தோட்டத்தில் நின்றவர்கள் பதினொருவரே. அவர்கள் நிராயுதபாணிகள். அவர்களுக்கெதிரில் நின்ற கும்பலோ பெரிது. ஒவ்வொரு சேவகனும் தடியும் கையுமாய் நின்றனன். எதிர்த்துச் சமர்புரிய பெலனில்லை; தப்பி ஓடவும் வழியில்லை. ஆதலால் சீடர் நடுக்கங்கொண்டார்கள். குருநாதரோ சிறிதும் கலங்காது நின்றனர். அப்பொழுது யூதாஸ், சிலமணி நேரத்திற்குமுன் குருநாதருடன் பந்தியிருந்து அவர் திருக்கரத்தினின்று உணவுபெற்றருந்தியவன், முன்வந்தான். சற்றும் தாமதியாது, "குருநாதரே வாழ்க!" என்று சொல்லி எம்பெருமானை முத்தமிட்டான். அன்னை மரியம்மாள் கொடுத்த முத்தத்திற்குப்பின் இத்துரோகியின் முத்தமொன்றே அத்திருக்கன்னங்களில் படிந்த முத்தம். அப்பொழுதும் குருநாதர் அவன்மீது கோபங்கொள்ளாது, வெகு கனிவுடன் "நண்பா, முத்தமிட்டா என்னைக் காட்டிக்கொடுக்க நினைத்தாய்?" என்று கேட்டார். அக்கேள்வி யூதாவின் செவிகளில் பட்டு அவன் குற்றம்நிறைந்த நெஞ்சை உருவக் குத்தியிருக்கவேண்டும். அவன் அதன்பின் அங்கு குருநாதரின் சத்துருக்களின் கூட்டத்தில் நின்றதாகத் தோன்றவில்லை. சேவகர் குருநாதரைக் கண்டுகொண்டார்கள். என்றாலும் அவர்மீது கைவைக்க ஒருவனும் துணிந்தானில்லை. அவர்கள் ஆக்கமிழந்து நிற்பதைக்கண்டு, குருநாதர் அவர்களைப் பார்த்து "நீங்கள் யாரைத் தேடி இங்கு வந்தீர்கள். நசரேயனாகிய இயேசுவையோ? அப்படியென்றால் நீங்கள் தேடிவந்த ஆள் நான்தான்" என்று சொல்லிக்கொண்டே முன்வந்தார். அப்பொழுது பாணுத்தடிகளைச் சுழற்றிக்கொண்டுவந்த வீரர் பயந்து முகங்குப்புற விழுந்தனர். முன்னொருநாள் நாசரேத்தூரில் குருநாதர்மீது சீற்றங்கொண்டெழுந்த கூட்டத்தை அவர் ஊடுருவிச்செல்லச் செய்த ஆன்மசக்தி இப்பொழுதும் குருநாதரிடம்தோன்றிற்று. பலனற்றுப்படிசாய்ந்த

சேவகர் சிந்தை தெளிந்து எழுந்தபொழுது குருநாதர் அவர்களைப் பார்த்து "நீங்கள் என்னைப் பிடித்துக்கொள்ளலாம், என் சீடரையோ போகவிடுங்கள்" என்று சொன்னார். அப்பொழுது சேவகர் குருநாதரைப் பிடித்துக்கட்ட முயன்றார்கள். அவர்களில் முன்னின்ற ஒருவனைப் பேதுரு தன் கோபத்தைப் பொறுக்கக்கூடாது பட்டயத்தால் வெட்டினான். பேதுருவின் பதஷ்டத்தால் அப்பட்டயம் பிரதான ஆசாரியனின் வேலைக்காரனான மல்கூஸ் என்பவன் காதை மட்டும் சிதைத்தது. குருநாதர் அக்காயத்தை உடனே ஆற்றிவிட்டு, பேதுருவைப் பார்த்து "உன் பட்டயத்தை உறையிற்போடு. பட்டயத்தைக் கையாடுபவன் பட்டயத்திற்கே இரையாவான்" என்று சொன்னார். பின் தேவாலயக் காவற்சேவகர், எருசலேம் தேவாலயத்தினும் பெரியவரென்று தம்மைக்குறித்து கூறியிருந்த, இயேசு எம்பிரானைப் பிடித்து அவர் கரங்களைப் பின்கட்டாகக் கட்டி சிறிது காலத்திற்குமுன் பிரதான ஆசாரியனாகவிருந்த அன்னாவின் வீட்டிற்குக் கொண்டுபோனார்கள்.

அன்னாவின் விசாரணை

அன்னா என்பவன் பிரதான ஆசாரியப்பதவி யெய்தியிருந்தபொழுது தேவாலயத்தைக் கொள்ளையடித்துத் திரண்ட பொருள் சேர்த்துக்கொண்டான். ஜெபவீடென் றழைக்கப்படும் பரிசுத்த ஆலயத்தைக் கள்ளர் குகையாக்கின பாதகரே என்று குருநாதர் யூத ஆசாரியரைக் கண்டித்தார். அதை அன்னா மறப்பானோ? அன்னா தன் வர்மத்தைத் தீர்க்க ஏற்றசமயம் கிடைத்ததை யெண்ணி பேய்க்கணத்தின் களிப்புக்கொத்த களிப்புக்கொண்டு, குருநாதரிடம் குற்றம் கண்டுபிடிக்க முயன்றான். இவன் வீட்டில் சனகரீம் சங்கம் கூடவில்லை. என்றாலும் அச்சங்கம் தேவாலயத்தில் கூடுமுன், சங்கத்தின்முன் குருநாதர்மீது சாற்றக்கூடிய குற்றங்களை ஏற்படுத்தும்படி, குருநாதரின் உபதேசத்தைப்பற்றியும் அவர் சீடரின் நடபடிக்கையைப்பற்றியும் சில கேள்விகளை அன்னா கேட்டான். "இப்படி இரகசியமாக விசாரிப்பதற்கு யாதொரு நிமித்தமுமில்லை. ஏனெனில் நான் யாவரும் கேட்க என் போதனைகளைக் கூறியிருக்கிறேன். சகல ஆசாரியர்களுக்கும், சனகரீம் சங்கத்தின் அங்கத்தினருக்கும் அவை நன்றாய்த் தெரியும். நீர் அவர்களைக் கேட்டறிந்துகொள்ளலாம்" என்று சொல்லி, குரு

நாதர் பதிலுரைக்க மறுத்தார். தன்னை அணுவும் மதியாது தைரியமாகக் குருநாதர் பேசினதைக் கேட்டு அன்னு கோபங்கொண்டான். அப்பொழுது ஆலய உத்தியோகஸ்தரிலொருவன், அன்னுவின் தயவைப் பெற சமயம்வாய்த்ததைக் கண்டு, குருநாதரின் கன்னத்தில் ஓங்கி அறைந்து, "பிரதான ஆசாரியர் (இப்பொழுது அன்னு பிரதான ஆசாரிய உத்தியோகத்தை இழந்துநின்றதை மறந்துவிட்டான்போலும்) கேட்க நீ இப்படியா பதிலுரைப்பாய்?" என்றான். அப்பொழுது குருநாதர் சாந்தமாக "நான் அவதூறு பேசியிருப்பின் நீ அதற்குச் சாட்சியாகலாம். அல்லவென்றால் நீ என் என்னை அடிக்கின்றாய்?" என்றார். அன்னு எத்தனைதான் அதட்டியும் குருநாதரிடம் குற்றங் காணக்கூடாது வெறுப்புற்று, தன் மருமகனும், பிரதான ஆசாரியனுமான காய்பாவும், சனகரீம் சங்கமும் குருநாதரைவிசாரித்துக் குற்றஞ்சாட்டும்படி அவரைத் தேவாலயத்திற்குக் கொண்டுபோகக் கட்டளையிட்டான்.

சீமோன் மறுதலித்தல்

குருநாதரைச் சேவகர் அன்னுவின் மாளிகையிலிருந்து தேவாலயத்திற்குக் கொண்டுபோயினர். மாளிகையின் முற்றத்தில் வேடிக்கை பார்க்கவந்த ஜனங்கள் சிலர் நின்றுகொண்டும், சிலர் உட்கார்ந்து நெருப்புவளர்த்துக் குளிர்காய்ந்துகொண்டு மிருந்தார்கள். கெத்சேமனேத் தோட்டத்தில் தம் குருவைக் கைவிட்டுப் பிராணன் தப்ப ஓடிப்போன சீடரிலிருவர், யோவான், பேதுரு என்போர், குருநாதருக்கு என்ன கொடுமை நடக்குமோ வென்றறிய அங்கு வந்திருந்தனர். அப்பொழுது அன்னுவின் வேலைக்காரிகளி லொருத்தி பேதுருவை உற்றுப்பார்த்து "நீ அந்தப் பயலின் சீடரிலொருவனல்லவா?" என்றாள். அதற்குப் பேதுரு "அல்ல, அல்ல" என்றான். பின்னர் கூட்டத்தில் மறைந்துகொள்ள நினைத்து, குளிர்காய்ந்துகொண் டிருந்தவர்களோடு சேர்ந்து, தானும் கவலையற்றுக் குளிர்காய்பவன்போல் நடித்தான். அந்த வேலைக்காரி அங்கும் அவனைக்கண்டு "இவன் இயேசுவின் சீடரிலொருவனைப்போ லிருக்கிறான்" என்று சொல்லவே, அதைக் கேட்டவர் அநேகர் "ஆம், ஆம். இவன் இயேசுவின் சீடனே" என்றார்கள். பேதுரு மறுபடியும் "நான் அல்ல, நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை" என்று மறுத்தான். அப்பொழுது ஜனங்கள் "உன் பேச்சு கலிலேயர் பேச்சைப்போ லிருக்கின்றதன்றோ? நீ இயேசு

வின் சீடரிலொருவன்தான்" என்றார்கள். அவர்களுக்குத் தப்பி இன்னொரு மூலைக்குப் போனபொழுது, பாம்புக்குத் தப்பி கருடன் வாயில் பாய்ந்த பட்சியைப்போல், பேதுரு கொடிய சத்துரு ஒருவன் கண்முன் அகப்பட்டான். அந்த சத்துரு கெத்சேமனேத் தோட்டத்தில் பேதுருவால் காயப்படுத்தப்பட்ட மல்கூஸ் என்பவனின் இனத்தான். அவன் பேதுருவைக் கண்டவுடன் "நீ சிறிதுநேரத்திற்குமுன் இயேசுவோடு தோட்டத்தி லிருந்தாயன்றோ? நான் உன்னை அங்கு கண்டேன்" என்றான். பேதுரு செய்வதின்னதென் றறியாது நடு நடுங்கி "அப்படி அல்லவே அல்ல" என்று மறுத்து, இயேசுநாதரின் பகைவரிலொருவனைப்போல், அவரைத் தூஷணித்துச் சபிக்கத் துவங்கினான். அந்தட்சணம் குருநாதரை அன்னாவின் வீட்டிற்குள்ளிருந்து முற்றத்திற்குச் சேவகர் இழுத்துக்கொண்டு வந்தார்கள். சேவல் கூவிற்று. பேதுரு சிந்தை தடுமாறிப் பிதற்றியதைக் குருநாதர் கேட்டார். அவர் முன் எச்சரித்தபடி அவன் நெறி தவறிவிட்டதை அறிந்து அவனை உற்றுப் பார்த்தார். பேதுருவின் கண்கள் குருநாதரின் குளிர்ந்த பார்வையைக் கண்டன; அவர் திருவதனத்தில் விளங்கிய துக்கத்தையும், அன்பையும் ஓர்ந்தன. உடனே பேதுரு வெளியே ஓடிப்போய் மனங்கசிந்து கண்ணீராறு பெருக்கினான். அதன்பின் அவன் குருநாதரைப் பார்க்கவில்லை. "யூதாசின் துரோகச்செயலைக் கண்டு கோபங்கொண்ட நானே என் குருநாதரைச் சபித்தேன். அன்பின் கடலை, ஆரமுதை, என் இன்பப்பெருக்கை, இறையவனைச் சபித்த என் வாய் என்ன கதிதானடையுமோ?" என்று பலவாறாக எண்ணிப் பிதற்றிக்கொண்டு பேதுரு சென்றான். அப்படிப் பித்தங் கொண்டவனைப்போல் போய்க்கொண்டிருக்கையில், ஒரு மரத்தில் ஒருவன் நான்றுக்கொண்டு தொங்குவதைக் கண்டிருக்கலாம். அவன் யூதாஸ் என்றும் அறிந்திருக்கலாம். அந்த அகோரக்காட்சியைக் கண்டபொழுது, தானும் அவ்வாறு சாவதே ஞாயமென்றெண்ணி கும்பி குழைய நடுக்கங்கொண்டனன். என்றாலும் குருநாதரின் குளிர்ந்த பார்வையை நினைத்தான். அவர் அவனுக்கு சில நாழிகைக்குமுன் கூறிய எச்சரிப்பையும், "சாத்தான் உன்னைச் சோதிக்கப்போகிறான். என்றாலும் நீ அதோகதி யடையாதபடி உன்னைத் தற்காக்க ஈசனிடம் மன்றாடியிருக்கின்றேன்" என்று அவர் அளித்த தேற்றரவையும் நினைத்தான். அப்பொழுது, அவனிழைத்த பேரபராதத்தையும் குரு-

நாதர் பொறுத்துக்கொண்டு அவனைத் தள்ளிவிடாது திரும்பவும் அரவணைப்பாரென்ற நம்பிக்கைகொண்டான். என்றாலும் தன் குருதேசிகருக்கு அவன் அன்றிரவுசெய்த குற்றத்தை எண்ணி கண்ணீர் சொரியாத நாளில்லை. அவன் ஒவ்வோரிரவும் சேவல் கூவும்போதெழுந்து மனங்கசிந்து அழுவானாம்.

"இனைய தன்மையனாகி யீட்டிய பிழையெண்ணித்
தனைவெறுத் துரையிடற் கருமெய் மனத்தாபம்
நினைவி லோங்கவு திருமலனருட்டிற நினைந்து
மனையினோர் சிறை வறிதுபோய் மனங்கசந் தழுதான்."

சனகரீம் சங்க விசாரணை

பொழுதுவிடியுமுன் சனகரீம் சங்கத்தார் தேவாலயத்தில் கூடினர். அவர்களுக்குச் சிரசாக்கினை விதிக்க ரோம துரைத்தனத்தார் அதிகாரங் கொடுக்கவில்லை. குருநாதரின் பிராணனை வாங்கினாலொழிய பரிசேயக் குருக்களின் கோபந்தீராது. ஆதலால், அவர்கள் அத்தனை அவசரமாக அந்நேரத்தில் கூடினதின் நோக்கம் யாதெனில், பகலோன் உதித்தவுடன் பிலாத்துவின் நியாயசபையில் குருநாதர்மீது சாற்றக்கூடிய குற்றங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றை நிலைநிறுத்தக்கூடிய சாட்சிகளைத் தயார்செய்வதேயாகும். ஆதலால் குருநாதரை சனகரீம் சங்கத்தார் தம்முன் நிறுத்தி அவர்செய்த குற்றங்கள் எவற்றையேனும் அங்குக் கூடியிருந்தவர்கள் அறிந்திருப்பின் அறிவிக்கும்படி கேட்டனர். மாசிலா வெண்மணியாகிய எம்பெருமான் என்ன குற்றம் செய்திருந்தார்? ஓய்வுநாளைக்குறித்த கட்டளைகளை மீறினாரென்றேனும், பேய்களைத் துரத்தினாரென்றேனும் பிலாத்துவின்முன் சொல்லிடின், அவன் அவற்றைக் குற்றமாகப் பாவியான் என்றும், அவர்களை மத உன்மத்தரென்று சொல்லிப் பரிகசிப்பானென்றும் அவர்கள் அறிவார்கள். இவற்றைக் குற்றங்களாகச் சிலர் கூறியபொழுது, சங்கத்தார் குற்றஞ் சுமத்தியவரின் யூகமின்மையைக் கண்டு வெகுளிகொண்டனர். ஆதலால் பெருங் குற்றமொன்று சாற்றலாமென்றெண்ணிய ஒருவன், குருநாதர் எருசலேம் தேவாலயத்தை இடித்துப்போடுவேனென்று சொன்னதாகப் பொய்சாட்சி புனைந்தான். குருநாதரை ஒருக்கால் யூதர் அடையாளம் காட்டவேண்டுமென்று கேட்க, அவர் தம் உடலை சுட்டிக்காட்டி, இந்த ஆலயத்தை

இடித்துப்போடுவீர்களானால் நான் அதை மூன்று நாட்களில் திரும்பக் கட்டிவிடுவேனென்று சொன்னாரேயன்றி, எருசலேம் தேவாலயத்தை தாம் இடித்துப்போடுவதாகக் கூறினாரல்லர். இதுவும் பிலாத்துவின் பார்வையில் பெருங்குற்றமாகாதென் றுணர்ந்து, குருநாதர் வாக்குமூலமாக ஏதேனும் குற்றம் ஏற்படுத்த விரும்பி, பிரதான ஆசாரியனும் சனகரீம் சங்கத்தலைவனுமான காய்பா குருநாதரைப் பார்த்து, "ஜனங்கள் உமது பேரில் சாற்றுங் குற்றங்களைக் கேட்டீர். என் பதிலுரையாது மௌனம் சாதிக்கின்றீர்?" என்றனன். இயேசுநாதர் பின்பும் மௌனியாக வாய்திறவாது நின்றார். அருந்தவத்தோர் தம் வாக்கினும் பலத்தது மற்றொன்றுளது. அது அவர்கள் ஏற்றசமயத்தில் சாதிக்கும் மௌனமேயாம். எம்பெருமான் பதிலுரையாது நின்றபொழுது காய்பாவின் நெஞ்சமே அவன் செய்வது அநியாயமென வற்புறுத்திற்று. என்றாலும் அவன் "நீர் தெய்வ குமாரராகிய கிறிஸ்து தானோ?" என்று உரத்த சத்தமாய்க் கூவிக்கேட்டான். அதற்கு எம்பெருமான் சொன்னதாவது: "நான் மேசியாதான். மனித குமாரன் சர்வவல்லவரின் வலதுபாரிசத்தில் மகிமை பொருந்தினவராக வீற்றிருப்பதையும் நீங்கள் இதன்பின் காண்பீர்கள்" என்பதே. உடனே காய்பா நிசமாகவே தெய்வதூஷணமான வார்த்தைகளைக் கேட்கவும் பொறாதவன்போல், தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, "இதனிலும் பெரிய தெய்வ தூஷணத்தை நீங்கள் கேட்டதுண்டோ? இனி வேறு சாட்சிகளும் வேண்டுமோ? உங்கள் தீர்ப்பு யாது?" என்று கேட்டான். குருநாதருக்கு மரணதண்டனை விதிப்பதே நீதியென்று ஜனங்கள் தீர்ப்புச் சொன்னார்கள். அதன்பின் ஞாயசபை கலையுமுன் அவர்கள் வெறிகொண்டவர்கள்போற் சீறிப்பாய்ந்து குருநாதரைப் புடைத்து அங்குமிங்கும் தள்ளி கன்னத்தில் அறைந்தும், முகத்தில் உமிழ்நீரைத் துப்பியும், கண்களைக் கட்டிவிட்டு தலையில் குட்டியும் பண்ணாத கோரணியெல்லாம் பண்ணினார்கள். அதைச் சனகரீம் சங்கத்தாரும் பார்த்துக்கொண்டிருந்தனர். அங்கு மற்றொருவனும் குருநாதரைப்படுத்திய இம்சைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் அவரை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த துரோகியாகிய யூதாஸென்பவனே. அவன் தானிழைத்த துரோகச்செயலை யுள்ளுள்ளே உள்ளிப் பாழினீத்தனன். பரிசேய குருக்களிடஞ் சென்று நிரபராதியாகிய தன் குருதேசிகரைக்

காட்டிக்கொடுத்தது பெரும்பாதகமென்றும், அந்நீசத்தொழிலுக்கு அவன் அவர்களிடம் பெற்ற கைக்கூலியை அவர்கள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் கெஞ்சினன். குருக்களோ பணத்தை வாங்க மாட்டோமென்று மறுத்துவிட்டனர். அவன் உன்மத்தனைப்போல் பணத்தை அவர்கள்முன் எறிந்துவிட்டு தலைவிரிகோலமாக அலறிக் கொண்டு அங்குமிங்கும் சாடினன். "ஐயோ! தீங்குநினையாத தூய நெஞ்சனைக் காட்டிக்கொடுத்தேனே. முத்தமிட்டுக் காட்டிக்கொடுத் தேனே. ஜனங்கள் அவர்பட்சம் நின்று அவரைக் காப்பார்களென் றெண்ணி மதிமோசமானேன். இனி என்செய்வேன்? என்னை நய வஞ்சகத்தால் தம் வசப்படுத்திய குருக்கள் உன் குற்றம் உன் தலைமேல் சுமரட்டும்; எமக்குக் கவையில்லையென்று சொல்லிவிட்டார்களே. குரு நாதர் ஒருவரே என் உத்தம நண்பராயிருந்தவர். அவரையும் விரோ தித்தேன்" என்று பலவாருகக் கதறி ஓலமிட்டான். சேவகர் அவ னைப் பிடித்து ஆலயத்திற்குப் புறம்பே தள்ளினர்கள். அவன் அல றிக்கொண்டே ஓடினன். பொழுதுவிடியுமுன் நான்றுகொண்டு செத் தான்.

பிலாத்துவின் நியாய சபைமுன்

மாசிலாமணியாகிய இயேசுகிறிஸ்துநாதர்மீது சாற்றவேண்டிய குற்றங்களையும், அவற்றை நிரூபணப்படுத்த சாட்சிகளையும் சனகரீம் சங்கத்தார் தயார்செய்துகொண்டார்கள். ரோமக் கவர்னராகிய பிலாத் துவின்முன் அவரைக் குற்றப்படுத்தி மரணதண்டனைக்குள்ளாக்குவ தொன்றே குறை. அதையும் முடித்து தங்கள் சத்துருவை அழிக்க குருக்கள் புறப்பட்டார்கள். பிலாத்துவிற்கு எற்கெனவே செய்தி யனுப்பியிருந்ததால், அவன் விடியற்காலம் ஏழுமணிக்கு நியாயசபைக்கு வந்து ஆசனம் வகித்தான். சபை பிலாத்துவின் அரண்மனை முற் றத்தில் கூடிற்று. ரோமப்போர்வீரர் ஆயுதமணிந்து நின்றனர். குரு நாதர் நியாயசபைமுன் குற்றவாளியைப்போல் நின்ருர். சனகரீம் சங்கப் பிரதிநிதிகள் அவர்மீது குற்றஞ்சுமத்தக் காத்து நின்ருர்கள். பிலாத்து வழக்கம்போல், விசாரணையின் ஆரம்பமாக "இந்த மனித னிழைத்த தீங்கு யாது?" என்றனன். சங்கப் பிரதிநிதிகள் சற்றுத் துடுக்காக "குற்றமற்றவனை இங்கு கொண்டுவருவோமோ?" என்ற னர். பிலாத்து சற்று கோபத்துடன் "கைதியின்மீது சாற்றக்கூடிய

பெரிய குற்றமொன்றுமில்லைப்போல் தோன்றுகிறது. அவன் உங்கள் மதக்கோட்பாடுகளை மீறியிருந்தால், நீங்களே விசாரித்துத் தண்டனை விதிக்கலாம், போங்கள்" என்றான். "கொலைத்தீர்ப்பு விதிக்க ரோமத் துரைத்தனத்தார் எங்களுக்கு அதிகாரம் கொடாததால், கைதியை நாங்கள் இங்கு கொண்டுவரவேண்டியதாயிற்று" என்று சங்கத்தார் பதிலுரைத்தார்கள். அவர்கள் கைதியின்மீது சாட்ட விரும்பிய குற்றம் பெரிதாயிருந்தமை கண்டு, அவற்றைத் திட்டமாகக் குறிக்கவேண்டுமென்று பிலாத்து ஆக்ஞாபித்தான். ஆதலால் சங்கத்தார், மூன்று குற்றங்களைச் சுமத்தினார்கள். (1) யூத ஜாதியாரின் மதியை மயக்கினது; (2) ரோமராயருக்கு வரிப்பணம் கட்டக்கூடாதென்று கற்பித்தது; (3) தான் மேசியாவாகிய அரசனென்று பகிரங்கமாகப் பகர்ந்தது. இவற்றில் முதற் குற்றம் தெளிவான குற்றமல்ல. இரண்டாவது குற்றம் வீண்பொய்க் குற்றம். ஏனெனில் குருநாதர் இந்த விஷயத்தைப்பற்றி பேசியபொழுது, தெய்வத்துக்குரியதை தெய்வத்திற்கும், ராயனுக்குரியதை ராயனுக்கும் செலுத்துங்களென்று சொன்னார். ஆனால் மூன்றாவது குற்றம் பெரிய குற்றமே. அது அரசதுரோகமாகும். தவிர தம்மை மேசியாவென்று சொல்லி ஜனங்களை வசப்படுத்தி அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலகஞ்செய்யத் தூண்டிவிட்ட கலகக்காரர் இதன்முன் தோன்றி அதிகாரிகளுக்கு மிகுந்த சங்கடமுண்டாக்கி யிருக்கின்றார்கள். ஆதலால், பிலாத்து இயேசுநாதரும் அரசதுரோகியான கலகக்காரரோவென்று தீர்க்க விசாரிக்கக் கடமைப்பட்டிருந்தான். அவன் குருநாதரைப் பார்த்து, "நீர் யூதரின் அரசனென்பது நிசமோ?" என்றான். பிலாத்துவின் கேள்வி இருபொருட் படத்தக்க கருகலான கேள்வியாயிருந்ததால், குருநாதர் நியாயாதிபதியைப் பார்த்து "உமது கருத்து தெளியத் தோன்றவில்லை. யூதவேந்தனென்னும் பெயரால் சாதாரண அரசனையோ அல்லது யூத பாரம்பரியத்தில் சொல்லியிருக்கும் மேசியாவையோ நீர் குறிக்கின்றீர்?" என்றார். "யூத பாரம்பரியத்தைப்பற்றி எனக்கென்ன கவையா? நான் யூதனன்று. உன் சொந்த ஜாதியாரன்றோ உன்மீது இங்கு குற்றஞ்சாட்டுகின்றனர்? நீ செய்த பிழை யாது? நீ அரசனென்பது உண்மையோ?" என்று பிலாத்து கேட்க குருநாதர் மாறுத்தரமாகச் சொன்னதாவது:—"ஆம், நான் வேந்தனென்பது நிசமே. ஆனால் என் இராச்சியம் இவ்

வுலகுக்குரிய இராச்சியமன்று. அது உலகப்பிரகாரமான இராச்சியமாயிருப்பின், என் குடிகள் இப்பொழுது என்னை காக்கப் போருக்கெழும்பிவிடுவார்களல்லவோ?" என்பதே. "உலகப்பிரகாரமான இராச்சியமல்லவென்றால், பின் அது என்ன இராச்சியம்?" என்று பிலாத்து கேட்க, குருநாதர் சொல்லுகின்றார்:—"நான் மெய்யாகவே அரசன்தான். சத்தியத்தைத் தேடும் யாவருக்கும் நான் அரசன். எவ்வெவருள்ளத்தில் சத்தியம் குடிகொண்டிருக்கிறதோ, அவ்வவர் என் சொல்லுக்கமையும் பிரஜைகளாகின்றார்." "ஓ சத்தியமா? சத்தியமென்றால் என்ன? அதை அறிந்தவர் யாவர்?" என்று பிலாத்து பரிகாசம் பண்ணினான். என்றாலும் குருநாதர் ரோம அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலகம் எழுப்பக்கூடிய மனிதனென்பதற்கு யாதொரு காரணமுமில்லை என்று பிலாத்து அறிந்து, "அரசதுரோகமான காரியம் இவர் செய்ததாகத் தோன்றவில்லை. ஆதலால் உங்கள் பிராதை ரத்துப்பண்ணிவிடுங்கள்" என்று வாதிகளைக் கேட்டான். ஆனால் அவர்கள் சம்மதிக்கவில்லை. பிலாத்துதானே அந்த பிராதைத் தள்ளிவிடக்கூடாத நிலைமையிலிருந்தான். ஏனென்றால் ரோமச் சக்கரவர்த்தியாகிய திபேரியு ராயனுக்கு பிலாத்துவைப்பற்றி நல்ல அபிப்பிராயமில்லை. தவிர, தங்களை மேசியாவென்று சொல்லிக்கொண்ட பலர் இதன்முன் குடிக்கலகங்களை எழுப்பி ரோம அரசாங்கத்திற்கு பெருத்த சங்கடங்களை உண்டுபண்ணியிருந்தார்கள். ஆதலால் இப்பொழுது பிலாத்து இயேசுகிறிஸ்துவை நிரபராதியென்று தீர்த்து விடுதலை செய்திடில், உடனே யூத குருக்கள் திபேரியு ராயனிடம் பிலாத்துவைக் குறித்து முறையிடுவார்களென்றும், திபேரியு ராயன் பிலாத்துவினிடம் துவேஷங்கொண்டிருந்ததால், அந்த முறைப்பாட்டைக் கேட்டவுடன் கடின தண்டனை விதிப்பானென்றும் பிலாத்து பயந்தான். குருநாதரை மரண ஆக்கினைக்குள்ளாக்க பிலாத்துவிற்கு சிறிதும் விருப்பமில்லை. இருதலைக்கொள்ளி எறும்புபோல் திகைத்து நின்ற பிலாத்துவிற்கு, அவன் இல்லக்கிழத்தி அவசரமான செய்தியொன்றனுப்பினாள். "நிரபராதியாகிய அந்த உத்தமருக்குத் தீங்கு செய்யாதே. அவர்மீது தண்டனை விதித்தால் நமக்கு பெரிய ஆபத்து வருமென்று நான் சிறிது நேரத்திற்குமுன் சொப்பனங்கண்டு திடுக்கிட்டெழுந்தேன்" என்பதே பிலாத்துவின் மனைவியனுப்பிய செய்தி. பிலாத்து குருநாதரை குற்றவாளியென்று தீர்க்க தாமதித்தது கண்டு,

ஜனங்கள், "இவன் யூதரைக் கலகத்திற்கு ஆயத்தஞ் செய்துகொண்டு வருகிறான். கலிலேயாவில் இவன் கட்சி பலத்துவிட்டது" என்று கூக்குரலிட்டார்கள்.

கலிலேயா என்ற சொல் காதில்பட்டவுடன், பிலாத்து சற்றுத் தெளிந்து இயேசுவை நியாயம் விசாரித்து தண்டிக்கும் கொடிய உத்தரவாதத்தை கலிலேய மாகாண அதிபதியாகிய ஏரோது அந்திப்பாவின்மீது சாட்டிவிட்டால் தான் தப்பிக்கொள்ளலாமென்றெண்ணி, குருநாதரை ஏரோதுவின் முன் கொண்டுபோய் நிறுத்தக் கட்டளையிட்டான். ஏரோது வெகு கெட்டிககாரன். அவனைக் குருநாதர் ஓர் முறை நரியென்று சொன்னது நியாயமே. அரசதுரோகமான குற்றத்தை விசாரிக்கத் தலைப்படல் ரோமனாகிய பிலாத்துவிற்கு அபாயமான காரியமாயிருக்குங்கால், ரோமனல்லாத தனக்கு அது பதின்மடங்கு அபாயமான காரியமாகுமென்று ஏரோதுணர்ந்தான். என்றாலும் முன் குருநாதரைக் காணவிரும்பி ஆள்விட்டனுப்பியபொழுது வரமாட்டேனென்று சொல்லியவர், இப்பொழுது கைதியாகத் தன் முன் நிற்கக்கண்டு ஏரோது சந்தோஷப்பட்டு, அவரைச் சில கேள்விகள் கேட்டு அலட்ட முயன்றான். குருநாதரோ, தன் பிராண நண்பனும் முன்தூதனுமாக விருந்த யோவான்ஸ்நானகரைக் கொன்ற கொலைபாதகனுக்கு யாதும் பதிலுரைக்க விரும்பாது மௌனஞ்சாதித்தார். ஆதலால் அவன் குருநாதரைக் கேவலப்படுத்த நினைத்து அவருக்கு கிழிந்த சிவப்பு அங்கியைத் தரிக்கக் கட்டளையிட்டான். அது அரசர் அணியும் சிவப்புநூலங்கி. இயேசுகிறிஸ்து தம்மை யூதவேந்தனென்று சொல்லிக்கொண்டதால், கிழிந்த அங்கியை அவருக்கு உடுத்துவித்து யூதவேந்தே வாழ்கவென்று சொல்லி பரிகாசம்பண்ணினார்கள். அதன்பின் ஏரோது தன் வந்தனத்தோடு கைதியைத் திரும்ப பிலாத்துவிடம் அனுப்பிவிட்டான்.

இதற்கிடையில் யூத குருக்கள், பிலாத்து இயேசுவைக் குற்றவாளியாகத் தீர்க்க மனமற்றவனாயிருக்கிறானென்றும், தாங்கள் பெருங்கூக்குரலிட்டாலொழிய அவன் இயேசுநாதர்மீது மரண தண்டனை விதிக்கமாட்டானென்றும் ஜனங்களுக்குச் சொல்லி அவர்களைக் கலகத்திற்குத் தூண்டினார்கள். பிலாத்துவும் தைரியமிழந்து, ஜனங்களுடைய தயவைத் தேட விரும்பினான். பஸ்கா பண்டிகை காலத்தில், யூதரைச் சந்தோஷப்படுத்த ரோம துரைத்தனத்தார் சிறையிலிருக்கும் யூதரி

லொருவனை விடுதலைசெய்வது வழக்கம். ஆதலால் குருநாதரை அந்த முகாந்தரத்தால் விடுதலை செய்துவிடலாமென் றெண்ணி, பிலாத்து ஜனங்களைப் பார்த்து "இம்முறை நான் எந்தக் கைதியை விடுதலை செய்யவேண்டுமென்று நீங்கள் விரும்புகின்றீர்கள்? நாசரேத்தூரா னாகிய இயேசுவை விடுதலை செய்யட்டுமா?" என்று கேட்டான். அவர்கள் உரத்த சத்தமாய், பரபாஸை விடுதலையாக்கவேண்டுமென் றும், இயேசுவையோ சிலுவையில் அறைந்து கொல்லவேண்டுமென் றும் கூவினார்கள். பரபாஸ் என்பவன் அரசாங்கத்திற்கு விரோத மாகக் கலகமெழுப்பிய குற்றத்தால் சிறையிலடைக்கப்பட்டிருந்தவன். ஆதலால் யூதஜாதியார் அவனைத் தேசபக்தனென்று பாராட்டினர். இயேசு எம்பெருமான், கலிலேயர் தம்மை அரசனுக்க விரும்பிய தற்கிணங்கி, ரோம துரைத்தனத்திற்கு விரோதமாக எழும்பியிருப் பின், பரபாஸைப்போல் தேசபக்தனென்ற பிரக்யாதி பெற்றிருப்பார். இதைப் பிலாத்துவும் உணர்ந்தான். ஆதலால் பரபாஸையல்ல, இயேசு வையே விடுதலைசெய்வது ஞாயமும், ரோம அரசாங்கத்திற்கு அனு கூலமாகவு மிருக்குமென்றெண்ணி, இயேசுவை விடுதலைபண்ண முயன்றான். ஜனங்கள் குருநாதர்மீது கொண்ட கோபத்தைச் சாந்தி பண்ண, அவருக்கு வேறொரு தண்டனைவிதித்தான். குருநாதரை வாரால் அடிக்கச் சேவகருக்குக் கட்டளையிட்டான். கொலுமண்ட பத்திற் கருகிலிருந்த காவற்கூடத்திற்குள் குருநாதரை நடத்திச்சென்று முதுகை வளைத்து கழுகம்பத்தில் கட்டினார்கள். எம்பெருமான் மயிர் கத்தரிக்கும்போது சத்தமிடாதிருக்கும் மறியைப்போலவும், வெட்டப் படும் ஆட்டைப்போலவும் அமரிக்கையாயிருந்தார். சென்ற நிசியெல் லாம் நித்திரையில்லாமல், களைத்துத் தொய்ந்த குருநாதர்தம் திருமேனி நையும்படி புஜபராக்கிரமனான ஓர் சேவகன் சவுக்கால் அவர் முது கில் பலமாய் இருப்பத்துமூன்று முறை மாறிமாறி யடித்தான். சவுக் கில் முடிப்புள்ள ஒன்பது வார்களிருந்தன. ஒவ்வோரடியும் ஒன்பது காயங்களுண்டாக்கிற்று. குருநாதரின் முதுகோ உழுதுவிட்ட நிலம் போல் பாளம்பாளமாகப் பிளந்துபோயிற்று. உதிரம் பீறிட்டுப்பாய்ந் தது. ஏரோதரசனின் துஷ்டச் சேவகர் பரிகாசமாக குருநாதருக் கணிந்த இரத்தாம்பர அங்கியை மறுபடியும் அவருக்கணிந்து, முட் கொடியால் பின்னிய கிரீடமொன்றை அவர் சிரசில்வைத் தழுத்தி, அவர் கரத்தில் மூங்கிற்கோலொன்றைக் கொடுத்து அவரை உட்

காரவைத்து, "யூதவேந்தே, வாழ்க!" என்று சேவகர் பரிகாசம் பண்ணினார்கள். ஒருவன் அவர் கரத்திலிருந்த கோலைப்பிடுங்கி முண்முடியணிந்திருந்த சிரசிலடித்தான். முட்கள் சலவைக் கற்போல் வெளுத்த அவர் நெற்றியைக் கிழித்தன. ஒருவன் அவர் முகத்தில் துப்பினான். இப்படிக் குருநாதரை சித்திரவதை செய்தபின்னர், மண்டபத்திற்குக் கொண்டுவந்தார்கள். அவர் நிற்கவும் சக்தியற்றவராகத் தோன்றினார். அவர் நின்ற கோலத்தைக் கண்டேனும் யூதர் மனதுருகி பரிதாபங்கொண்டு அவரை விடுதலைசெய்யச் சம்மதிப்பார்களென்று பிலாத்து நினைத்து அவர்களைப் பார்த்து "இதோ இந்த மனிதனைப் பாருங்கள்" என்றான். ஒன்றுரிதயம் சிறிதும் இளகவில்லை. சாந்த வடிவை சிலுவையிலறைய வேண்டுமென்றே கூக்குரலிட்டார்கள். அவர் தம்மைத் தெய்வசுதனென்றழைத்தது குற்றமென்றும் அதற்குச் சிரசாக்கினையொன்றே நியாயமான தண்டனையென்றும் பரிசேயரிற் சிலர் பகர்ந்தனர். பிலாத்துவோ செய்வதின்னதென்றறியக்கூடாது கலங்கினான். இயேசுகிறிஸ்து நிரபராதி யென்பது அவனுக்குத் தெளிவாகத் தோன்றிற்று. தவிர தன் மனையாள் அவருக்குத் தீங்கு செய்வதால் தனக்கே ஆபத்தைத் தேடிக்கொள்ளுவானென்றும் எச்சரித்திருந்தாள். குருநாதர் தாம் தெய்வசுதனென்று சொன்னாரெனக் கேள்வியுற்றபொழுது, பிலாத்து முன்னிலும் பதின்மடங்கு துளக்கமுற்று, குருநாதரைத் தன்னிடமழைத்து, அவர் எங்கிருந்து தோன்றினாரென விசாரித்தான். குருநாதரோ, பேசுவதில் பயனொன்று மிராதென்றோர்ந்து, விடைபகராதிருந்தனர். பிலாத்து கோபங்கொண்டு, "உமதுபேரில் கொலைத்தீர்ப்பு விதிக்கவும், உம்மை விடுதலையாக்கவும் எனக்கு அதிகாரமுண்டென்பதை மறந்தீரோ? நான் கேட்க நீர் பதிலுரையாதிருப்பதென்ன?" என்றான். அப்பொழுது குருநாதர், "எல்லாம்வல்ல இறைவன் உமக்கு அதிகாரங் கொடாவிடின் உமக்கு என்மீது யாதொரு அதிகாரமும் கிடைக்காது. என்றாலும் என் விஷயத்தில் என்னைக் குற்றவாளியாக உம்முன் கொணர்ந்த யூதர் உம்மைப்பார்க்கிலும் கொடிய வஞ்சகராயிருக்கின்றனர்" என்றார். பிராண ஆபத்திலிருக்கும்பொழுதும் இத்துணை தைரியமாகப்பேசும் திடநெஞ்சனைக் கொலைக்களத்திற்கு அனுப்புவதெங்ஙனம்? பிலாத்து தீர்ப்புச்சொல்ல தாமதிக்கின்றான். அதைக் கண்டு யூதர் அவனைப் பயமுறுத்தத்தக்க பலமான காரணமொன்றைக்

கூறுகின்றார்கள். "நீர் இவனை விடுதலைசெய்விப்பீராகில் திபேரியு ராயனுக்கு துரோகஞ்செய்பவராவீர்" என்று சொல்லி, அவர்களுடைய கடைசித் தந்திரத்தைக் கையாடினார்கள். பிலாத்து வலையிற்சிக்கிய மிரு கேந்திரன்போல் தவித்தான். தப்ப வழிதோன்றாது, "சரி, இயேசு கிறிஸ்துவை சிலுவையிலறையுங்கள். ஆனால் இந்தப் புண்ணிய புரு ஷனின் இரத்தப்பழி என்மேலல்ல, உங்கள்மேல் சுமரவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே பாத்திரத்தில் ஜலத்தையூற்றி தன் கைகளைக் கழுவினான். "அதற்கென்ன, பரவாயில்லை. அந்தப்பழி எங்கள் மீதும் எங்கள் புத்திரர் பௌத்திரர் மீதும் சுமரட்டும்" என்று, தாம் சொல்லுவது இன்னதெனத்தேராது பகர்ந்தனர். வெகுளி யென்னும் மதுவுண்ட பித்தராகி, பழிக்கஞ்சாது அகங்கரித்தெழுந்த அந்த மாந்தர் வெகு சீக்கிரம் தீத்துவென்னும் ரோமப் போர்வீர னுடைய பட்டயத்திற்கு இரையாகினர். அன்று தங்கள் சுயதே சத்தையும், திவ்விய க்ஷேத்திரத்தையும் இழந்து எண்திக்குக்கும் சித றுண்டவர்கள், இன்னும் தம் சுயதேசத்தையடையாது வருந்து கின்றனர்.

கபாலஸ்தலம்

பிலாத்துவின் மனதிற்குக் கிறிஸ்துவைக் கொல்விப்பது கசப்பா யிருந்தது. குருநாதரின் சொந்த ஜாதியாரும் மதத்தினருமான யூது ருக்கோ அது குரூரவின்பந் தந்தது. "தம் இனத்தவரிடம் வந்தார். இனத்தவரோ அவரை ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்தார்" என ஏசாயாத் தீர்க்கதரிசன ருரைத்த வாக்கு இதனால் நிறைவுபெற்றது. பலன் குன்றித் தொய்ந்துபோயிருந்த எம் தேசிகரை, கொல்கதா வென்ற சிறு குன்றிற்கு நடத்திச் சென்றனர். வாரடியால் பிளந்து இரணமாயிருந்த அவர் முதுகின்மேல் சிலுவையின் பாரமழுத்த, உதி ரம் மறுபடியும் சொரிந்தது. எம் கருணாகரன் வாய்திறவாது மௌன மாய்ச் சிலுவையைச் சுமந்து வீதிவழியே செல்லுகையில், அவர் கோலத்தைக்கண்ட யூதமாதர் ஓலமிட்டழுதனர்.

"மாதருக்குளாசி பெற்ற மங்கையா மன்னைமரி
காதலனுக்கோ விக்கதி நேர்ந்ததென்று மன
வேதனை பட்டாற்றாது மெல்லியலார் தாங்குழுமி
வீதியிருமருங்கு மொய்த்தார் வாய் விட்டழுது."

அப்பொழுது குருநாதர் அவர்களை நோக்கி, "மாதராரே, எனக்காக அழாமல், உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். கடிதினில் கொடிய துன்பம் உங்களை சூழ்ந்துகொள்ளும்" என்றார். பின்னர் நடக்கத் திராணியற்று குருநாதர் தள்ளாடித்தள்ளாடி நடப்பதைக்கண்ட ரோமப் போர்வீரர், சிமியோனென்ற வோர் வாலிபனை சிலுவையின் ஓரத்தைத் தாங்கிவரக் கற்பித்தனர். இவ்வாறு எம்பெருமான் கபாலஸ்தலமென்றழைக்கப்படும் கொல்கதா மேட்டை யடைந்தார். அவரைச் சிலுவையின்மீது கிடத்தி நீண்ட இருப்பாணிகளால் குருடர், குஷ்டரோகர் முதலான பிணிகொண்டோரைத் தொட்டு ஆரோக்கியமளித்த அருமருந்தன்ன கரங்களையும், நன்மை செய்ய விரைந்துசென்ற திருப்பாதங்களையும் மரத்தோடுசேர்த்துக் கடாவிய கொடுமையை என்னவென்றுரைப்போம்! சிலுவையைத் தூக்கி நிறுத்தியபொழுது, உடலின் பாரமெல்லாம் அவர் கைகளின் தசை நரம்புகளை இழுத்துப் பிழிந்தது. சகிக்கவொண்ணாத வேதனையொருபக்கம், மத்தியான வெயிலினுஷ்ண மொருபக்கம் குருநாதரின் உடலை உறுத்த, அவர் பட்டபாடுகளைக் கண்டும் இரங்காத வன்னெஞ்சரான மாற்றலரின் பரிகாசமும் வசைச்சொல்லும் எம்பிரான் இதயத்தை உறுத்தின. இவையெல்லாம் பொறுத்துக்கொண்டு, குருநாதர் தம்மைத் துன்புறுத்திய மாந்தருக்கு வரவிருக்கும் தெய்வ கோபாக்கினையை நினைத்து, ஈசனை நோக்கி, "பிதாவே, இவர்களைப் பொறுத்தருளும். அறியாமையினால் இப்பெரும் பாதகத்தைச் செய்கின்றார்கள்" என்று உள்ளக் கனிவுடன் பரிந்து மன்றாடினார். குருநாதரைச் சிலுவையி லேற்றியபொழுது அவரோடு கள்வரிருவரையும் சிலுவையிலேற்றினார்கள். அக்கள்வரும் குருநாதரைத் தூஷித்தார்கள். ஆனால் அவர்களிலொருவன் குருநாதரின் ஒப்பற்ற சாந்தத்தையும் அன்பையும் கண்டு பிரமித்தான். தான் அவரைத் தூஷிப்பதற்கு யாதொரு காரணமுமில்லை யென்றுணர்ந்தான். சாந்தமிலங்கிய அவரது மதிமுகத்தைக் கூர்ந்து நோக்கியபொழுது அவர் தெய்வ சுதனென்று தம்மைக்குறித்துப் புகன்றது மெய்யென்றறிந்தான். ஆதலால் அவன் குருநாதரைப் பார்த்து "ஆண்டவா! நீர் உமது பரம ராச்சியத்தைக் கைப்பற்றும்பொழுது அடியேனைக் கடைக்கணித்துக் காக்கவேண்டும்" என்றிறைஞ்சினான். மூச்சொடுங்கும் கடைப்போழ்தில் தம்மைத் தஞ்சமென்றடைந்த கள்வனை கருணாம்பரவள்ளல் கடாட்சித்தார்.

"இன்றைத்தினமே நீ என்னுடன் தெய்வலோகத்தை யடைவாய்" என்று அக்கள்வனுக்கு இரட்சண்ய வாக்குத்தந்தார்.

கொல்கதாமேட்டில் அன்று நடந்த கோரக்காட்சியைப் பார்க்கவந்தவர்கள் குருநாதரின் பகைஞர்மட்டுமல்ல, அவர்மீது அனுதாபங்கொண்டவரும் சிலர் வந்திருந்தனர். அவரைப் பெற்றுவளர்த்துப் பாராட்டிய அன்னை மரியம்மாளும் அங்கு நின்றுகொண்டு தன் செல்வப் புதல்வர், வானோர் பூதலத்தோர் போற்றப்பிறந்தவர், தீர்க்கதரிசன ருரைத்தபடி யூதரின் மேசியாவாகத் தோன்றிய திருஅவதாரப் புருஷன், சித்திரவதையுற்று மரிப்பதைக்கண்டு, உடல்சிலிர்த்து, மனம் பதைத்து, ஆருத்துயருற்றூர்கள். சென்ற இரவு குருநாதர் மார்பில் சார்ந்துகொண்டு போஜனமருந்திய அன்புள்ள சீடன் யோவான் மரியம்மாளருகே நின்று மனங்குழைந்து மறுவினன். குருநாதர் தம் மாதாவைப் பார்த்து "அம்மா! அதோ உன் மகன்" என்றும் சீடனைப் பார்த்து "அதோ உன் தாய்" என்றும் சொல்லி, மரியம்மாளை காக்கும் கடனை யோவான்மீது சாற்றினர். அவ்வாறு உலகில் தமக்கிருந்த ஏகபற்றையும் அறுத்துக் களைந்துவிட்டார்.

அதன்பின் திடீரென கார்மேகங்கள் வானத்தில் தோன்றின. நாடெங்கும் மூன்று மணிநேரம் அந்தகாரம் அடர்ந்தது. நீதியின் சூரியனென்றழைக்கப்படும் எம்பெருமானின் சரீரவேதனையையும் மனச்சோர்பையும் பார்க்க மனமற்று கதிரவனும் தன் கண்களை மூடிக்கொண்டனன்போலும். குருநாதர் அந்த மூன்று மணிநேரம் மௌனமாகச் சிலுவையிற் ஜெருங்கிக்கொண்டிருந்தார். அவர் தசை நரம்புகள் யாவும் கடுகடுத்து விதிர்த்தன. கொடிய தாகவிடாயும் அவரை வதைத்தது. அவர் மனதில் என்னென்ன எண்ணங்க ளுதித்தனவோ நாமறியோம். ஈசனது அருட்சகவாசத்தை இடையறாது பெற்று பரமானந்தங்கொண்டிருந்தவருக்கு இக்கொடிய வேதனையைத் தாங்குவது கடினமாகவேயிருந்தது. ஓர் சொல்லா லெத்தகைய நோயையும் ஒழித்த பரம யோகிக்கு திராணியிருந்தது. என்றாலும் அச்சமயம் தமக்கு நேர்ந்த பீடனைத்தையும் உத்தரித்துத் தீர்ப்பதே தெய்வசித்தமாயிருந்ததால், அவர் அச்சித்தத்திற்கு தம்மைச் சர்வ சமூலமாகக் கீழ்ப்படுத்தினர். தவிர மானிடரின் வர்மம் தெய்வத்தின் கரத்தையும் பிணித்துவிட்டதாகத் தோன்றிற்று. சர்வ வல்லவரான ஈசன் தன் திருக்குமாரன் தாங்கவொண்ணுத வேதனைப்பட பார்த்துக்

கொண்டு வாளாவிருந்துவிட்டதின் மர்மந்தான் யாதெனத் தோன்ற வில்லை. பாவம் புண்ணியத்தினும் பலத்ததோ? குருநாதர் போதித்த போதனையும், சாதித்த பக்திநெறியும் அபத்தமாயினவோ? அவர் செய்த அரும்பணியின் பலன்தானென்ன? அல்லவென்றால், ஏசாயாத் தீர்க்கதரிசனர் சாற்றியவாறு, பாவமற்ற பூரண பரிசுத்தராகிய இயேசு கிறிஸ்துவை மன்பதைகளின் வினைப்பயனை யொழிப்பதற்கென்று ஈசன் பாவியாக்கினாரோ? நமது வரம்புகடந்த நடக்கையினிமித்தம் அவரைக் காயப்படுத்தி, நமது அக்கிரமங்களினிமித்தம் அவரை நொறுக்கி, நமக்குச் சமாதான மளித்தற்பொருட்டு ஆக்கினையை அவர்மேற் சுமத்தினாரோ? கெத்சேமனேத் தோட்டத்தில் உள்ள முடைந்து, சிந்தை கலங்கி "பிதாவே இந்தப் பாத்திரத்தை நான் குடிக்கமுடியாது. அதை அப்புறப்படுத்தும்" என்று குருநாதர் மும் முறை மன்றாடினாரெனக் கண்டோம். பலன்குன்றி, மனோதிட னழிந்து வருந்தும் துன்ப வேளையில் குருநாதர் மிகுந்த கலக்கமுற்றது வியக்கத்தக்கதன்று. நாடெங்கும் இருள் கம்மியதுபோல், குருநாதர் உள்ளத்திலும் ஆன்மக் காரிருள் படர்ந்தது. என்றாலும் மூன்று மணிநேரம் அவர் அமைதியாக ஈசனைச் சிந்தையிலிருத்தி வந்தித்தார். அவர் அதன்முன் பன்முறை படித்துச் சிந்தித்த சங்கீதமொன்று அவர் ஞாபகத்திற்கு வந்தது. அச்சங்கீதத்தின் ஆரம்ப சரணத்தையே அவர் அமைதியின் முடிவில் உரத்து உச்சரித்தாராதலால், அவர் அச்சங்கீதத்தை வசனம் வசனமாக ஞாபகப்படுத்தி சிந்தித்துக்கொண் டிருந்தாரெனக் கொள்ளலாம். அவ்வசனங்களிற் சிலவற்றை இங்கு எடுத்து வரைவோம்: "என் தெய்வமே, என் தெய்வமே, ஏன் எனைக் கைவிட்டாய்? என் என் பெருமூச்சின் அகோரத்தைக் கண்டும் உதவிபுரிய அணுகாது தூரமாய் விலகிநின்றனை? எம் மூதா தையர் உனக் கபயமிட அவர்களை புரந்தருளினை. நானோ மனித னல்லன்; புழுத்தலைக்கடையன், மாந்தரால் அவமதித்துத் தள்ளப்பட்ட நீசன். என்னைப் பார்ப்போர் நகைக்கின்றனர். தம் தலையைத் துலுக்கி உதட்டைப் பிதுக்கி, 'இவன் ஈசனில் பக்திகொண்டிருந்தவ னாமே. ஈசன் இவனை இரட்சிப்பாரோ? பார்ப்போம்' என்று பரிகாசம்பண்ணுகின்றார்கள். என்னைக் கருப்பையினின்று வெளிப் படுத்தியது நீயே! நான் தாயின் முலையமுதுண்ணும் சிசுவாயிருந்த பொழுதே என் அகத்தில் நம்பிக்கையைப் புகுத்தியதும் நீயே! இப்

பொழுதும் என்னைவிட்டு விலகி நிற்கவேண்டாம். என்னைத் துன்பம் சூழ்ந்துகொண்டது; துணைசெய்வா ரொருவருமில்லை. என் பலன் வறையோட்டைப்போல் வறண்டுபோயிற்று; என் நாவு மேல்வாயோடு ஒட்டிக்கொள்ளுகின்றது. என்னைப் மரணப்புழுதியில் வீழ்த்திவிட்டாய். ஆனாலும், ஆண்டவனே, என்னைக் கைவிட்டு விலகிநின்றிடேல்; என் பலனே, எனக்குத் துணைபுரிய விரைந்துவா!" இவ்வாறு நெடுநேரம் பரமதந்தையை நோக்கி அபயமிட்டார். அவர் கலக்க மொழிந்தது. தன் தோள்களிலழுத்திய பாரச்சுமையை இறக்கி வைக்கையில் ஒருவன் அப்பாவென்று சுமை நீங்கிய சந்தோஷத்தை வெளியிடுவதுபோல், குருநாதர் உரத்த சத்தமாய் "என் தேவனே, என் தேவனே, ஏன் இதுவரை என்னைக் கைவிட்டிருந்தீர்" என்று கூவி தன் மனத்தை அழுத்திய பாரத்தை யொழித்தார். மனம் தேர்ச்சியடைந்தது; சரீரமோ தளர்ச்சியுற்றது. தாகத்தைத் தாங்கவொண்ணாது, தாகம் என்னை வருத்துகின்றதென்று நதிகளையும், தடாகங்களையும், புனல்களையும், சுனைகளையும், ஜீவப்பிராணிகளுக்கு வந்தளித்த தெய்வத்தின் ஏக திருச்செல்வன் கூறினார். அவர்மீது பரிதாபங்கொண்ட ஒருவன் மருந்து கலந்த காடியில் பஞ்சைத் தோய்த்து ஒரு கோலின் நுனியிற்றொடுத்து குருநாதர் வாயில் வைத்தான். சிறிதுநேரத்திற்கெல்லாம் தன் மூச்சொடுங்கிவருவதை யுணர்ந்து "முடிந்தது" என்றார். அதன்பின் "தந்தாய், என் ஆவியை உம் திருக்கரத்திற் சமர்ப்பிக்கின்றேன்" என்று சொல்லி தலை தோள்மேற் சாய ஜீவனைவிட்டார்.

குருநாதர் பட்டு உத்தரிக்கவேண்டியிருந்த கொடிய சரீர வேதனையும், ஒன்னார் சீற்றமும், கருணாகரக் கடவுள் தம்முகத்தைச் சற்றே மறைத்ததால் குருநாதருக்கு நேர்ந்த ஆன்மக்கலக்கமும் இவ்வாறு முடிவடைந்தன.

வெள்ளிக்கிழமை பிற்பகல் சுமார் மூன்று மணிக்கு இயேசு கிறிஸ்துவென்னும் பரம புருஷனனவரின் தூய வான்மன் மாசற்ற திருவுடலைப்விட்டுப் பிரிந்தது. தெய்வசுதன் துன்பமல்கிய பூதலத்தின்கண் மானிட கோலங்கொண்டு அறமனைத்தையுந் தாங்கி மறத்தைத் தகர்த்து வாழ்ந்துவந்த காலம் முற்றிற்று. அருட்களஞ்சியமாகிய தற்பரன், தீவினையென்னும் உழையிற் புதைந்து வருந்தும் பாமரராம் நம்மை மீட்க தமது ஏக புதல்வரைப் புவிக்கனுப்பி அவ்வரை சிலுவை

யின் மரணபரியந்தம் தாழ்த்தி இவ்வளவாய் எம்பால் அன்பு கொண்டாரென்ற அரிய சத்தியத்தை இயேசுபெருமான் அன்று பூரணமாய் வெளிப்படுத்தினர். அவர் மனுவோர் பிணையாக மரித்து இரட்சண்ய கிரியை முடித்தார். ஆனல் அவர் ஜீவிய ஓட்டம் முடிவடையவில்லை.

குருநாதரை யேற்றிய சிலுவையின்மேல் "யூத சிம்மாசனன்" என்று அவரைக் குறிப்பிட்டு வரையப்பட்டிருந்தது. பிலாத்து வசைக் கிடமாக வரைந்த வெறும்பேரை, குருநாதர் நிசமான பெரும்பேராக மாற்றிவிட்டார். அச்சிலுவை மரத்தினின்று பிறந்த வாக்குகள் அரச வாக்குகளாகவிருந்தன. ஆங்கு தொங்கிக்கொண்டிருக்கையில், எம் பெருமான் தம்மைக் கொல்லும் பாதகருக்காகப் பரிந்து மன்ருடினர். அபயமிட்ட கள்வனுக்கு ஆசிடை வாக்களித்தார். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ரோமச்சேனதிபதி, மிகுந்த வியப்புற்று, "இவர் ஓர் தெய்வ சுதன்" என்றறைந்தான். அவர் மரித்தது உண்மை யோவென்று பார்க்கக் காவலுக்கு வந்திருந்த போர்வீரனெருவன் தன் ஈட்டியால் குருநாதரின் விலாவிற் குத்தினன். காயத்தினின்று நீர் கலந்த இரத்தம் சொரிந்தது. அதனல் குருநாதரின் பிராணனெடுங் கியது நிச்சயமாயிற்று. தவிர, குருநாதர் அவ்வளவு சீக்கிரம் மரண மடைந்தவிதமும் அதனல் விளங்கிற்று. சிலுவையிலறையுண்டு மரிப் பது அதிக இழுபறியான மரணம். சிறிது சிறிதாகத்தான் உயிர் பிரியும். சாதாரணமாக ஒருவன் ஒருநாள் முழுதும் தொங்கினலும் மரிக்கமாட்டான். ஆனல் குருநாதரோ நீண்ட வாதையடையாது, அவர் சிந்தையையும் மனத்தையும் பீடித்த துக்கத்தினல் சூலை வெடித்து இறந்தாரென்பது, நீர் கலந்த உதிரம் அவர் விலாவின் காயத்தினின்று வந்ததால் விளங்குகின்றது. அதன்பின் மேவிய அந்த காரத்திற்கும் பூகம்பத்திற்கும் அஞ்சி வேடிக்கை பார்க்கவந்த யாவ ரும் தத்தம் வீடுகளுக்கேகினர். மரியம்மாளும் வேறு சில பூவையர் மட்டும் சிலுவை மரத்தடியில் அமர்ந்து கண்ணீராறு பெருக்கிக்கொண் டிருந்தனர். மரியம்மாள் தன் இதயத்தைப் பிளந்த கட்கத்தின் கொடுமையைத் தாங்கவொண்ணது நெருப்பில் விழுந்த புழுப்போல் துடித்து பின்வருமாறு பிரலாபித்தனர்:—

"கவிவாண ஞானி மாரஞ் சவிக்கக்
கண்டே மகிழ்ந்த னெருநாள்;

திவியால யத்தில் முதியோர்கள் போற்றத்
திகைத்தே யிருந்த னொருநாள்;
நவமாய் வினவப் பெரியோர் வியக்க
நன்ருய் மகிழ்ந்த னொருநாள்;
அவியா நெருப்பை வைத்தாயென் னெஞ்சில்,
ஐயய்யோ இன்று மகனே!"

"மழையால் நனைந்து, பனியாலே தொய்ந்து
மணல் வாரி மோது மரியால்
குழைவாகி நொந்து, வெயிலாலே வெந்து,
கொடுநோ யடைந்து குறுகி,
தழைபோ லுதிர்ந்தென் மடிமேல் விழுந்து
தலை சாய்த்தை யில்லை மகனே;
பிழைகார யூதர் கொலையா லிறந்து
பிணமான தென்ன செயலோ!"

"சடமாவி யான்மா கவல்கொண்டு வாடி
சவிப்போ டிருக்கும வரை,
உடனின்று தாங்கி விழிமாரி பொங்க
உரைகூறி யாற்று மருளாய்!
அடமான யூதர் கொலைகண்டு நொந்து
அணுவாற வின்றி யழுமுன்
உடனன்னை தேற ஒருவார்த்தை யின்றி
உறங்கின்றை யென்ன மகனே!"

சனகரீம் சங்கத்தினங்கத்தினரும், குருநாதர்மீது அபிமானங் கொண்டிருந்தவருமான அரிமத்தியா ஊர் யோசேப்பு, நிக்கோதேம் என்பவர் உதவியால், குருநாதரின் உடலை அன்று சாயந்திரமே சிலுவையினின் றிறக்கிச் சேமிக்க உத்தரவுபெற்ருர். குருநாதரின் சீடரும் நண்பரும் அவருடலை, மெல்லிய வெண் வஸ்திரத்திற் சுற்றி, அதற்கு வெள்ளைப்போளம் முதலிய வாசனை திரவியங்களிட்டு புதிதாக வெட்டப்பட்டிருந்த கல்லறையில் வைத்தார்கள். யூதத் தலைவர் பிலாத்துவிடஞ் சென்று, குருநாதர் தாம் மரித்தபின் உயிரோ டெழும்புவேனென்று சொன்னதாகவும், சீடர் அவர் பிரேதத்தை எடுத்தொழித்துவிட்டு வெறுங் கல்லறையைக் காட்டி குருநாதர் உயிரோடெழுந்துவிட்டாரென்ற வதந்தியெழுப்பி, மாந்தரை ஏமாற்றி

விடுவாரென்றும், பிந்தின எத்து குருநாதரின் முந்தின எத்தினும் பெரிய எத்தாகிவிடுமென்றும், அதைத் தடுக்க கல்லறைக்கு முத்திரையிட்டு ஜாக்கிரதையாகக் காவல்செய்யக் கட்டளையிடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். அப்படியே கல்லறை வெகு ஜாக்கிரதையாக இராப்பகலாய்க் காக்கப்பட்டு வந்தது.

மனுவோர் பிணையாக மரித்தார்

இயேசு எம்பிரானின் மரணம் அகால மரணமட்டுமேயன்று. அஃதோ ரற்புத மரணம். சர்வஞ்ஞன் மாந்தரைப் பாவச்சேற்றிலிருந்து தூக்கி இரட்சிக்கத் தீர்மானித்தபொழுதே இயேசுவென்னும் புனித புருஷரின் மரணம் இரட்சண்யமுறைக்கு அஸ்திபாரமாக வேண்டுமென்றும் சித்தங்கொண்டதாகத் தோன்றுகின்றது. மாசிலா மனத்தினராகிய தெய்வ சுதனைப் பாவம் படுத்திய பாடுகளால், பாவத்தின் அகோரக்கொடுமையும், ஈசன் அதை எவ்வளவாய் அரோசிக்கின்றாரென்பதும் நமது மனச்சாட்சிக்குத் தெளிவுறத் தோன்றுகின்றது. தவிர ஈசனும் அவர் குமாரரான இயேசு எம்பெருமானும் நம்மை மீட்கும்பொருளாய் இத்துன்பக் கடலில் மூழ்கச் சித்தங்கொண்டதால் அவர்கள் நமதுபேரில் கொண்டிருக்கும் எல்லையற்ற அன்பும் வெளியாகின்றது.

> **"அன்பைப்** பெருக்கி யெனதாருயிரைக் காக்க வந்த
> **இன்பப்** பெருக்கே யிறையே பராபரமே"

என்று தாயுமான சுவாமிகள் கூறினாரன்றோ? ஈசனது பரந்த நெஞ்சத்தினின்று உற்பத்தியாகும் அன்பென்னும் கங்கைப்பிரவாகமொன்றே வினைப்பயனனைத்தையும் அடித்துக்கொண்டுபோய் இன்மையென்னும் ஆழியிலாழ்த்திவிடும் ஆற்றல் படைத்ததென்று தாயுமான சுவாமிகள் எண்ணினார். அக்கங்கை எது?

> **"கல்வாரி மலைச்சிகர மீதுற்றுக் கண்கள் ஐந்துதிறந்து—இதோ**
> **மல்கிச் சிலுவையடியில் வீழ்ந்து வழிந்தோடுது பாராய்."**

அப்பாவம்போக்கும் ஜீவநதியென்று கிறிஸ்தவ பக்தரொருவர் பாடினார். ஆதலால் ஈராயிர மாண்டுகளுக்குமுன் கல்வாரியென்ற சிறு குன்றிற்பட்டு மடிந்த இயேசுகிறிஸ்துவின் மாசற்ற இரத்தமே பாமரரெமது பாவச்சேற்றைக் கழுவத்தக்க அற்புத வலிமை படைத்த கங்கை

யென்பது கிறிஸ்தவர் கோட்பாடு. அது மற்றவருக்கு கருகலாகவே தோன்றும். சிறந்த பண்டிதராகிய பவுல் அப்போஸ்தலர் சிலுவையின் உபதேசம் கிரேக்க ஞானிகளுக்கு பரிகாசமாகவும், யூத சாஸ்திரிக ளுக்கு இடறலாகவும் இருந்ததென்று கண்டார். எனினும் அஃ தொன்றே பாமரரைப் புனிதராக்கத்தக்க உபதேசமென்று புந்தியார வுணர்ந்ததால், அவர் கற்றுக் கேட்டறிந்த கலைகளையும் தத்துவ ஞானங் களையும் குப்பையென்று தள்ளி, சிலுவை யுபதேசமொன்றையே நிலை நாட்டுவதில் தன் நாட்களைக் கழித்தார். கிறிஸ்துவிற்குப்பின் முதலாம் நூற்றாண்டில் இத்தொண்டன் பலஸ்தீனாவிலும் மத்தியதரைக்கடலைச் சார்ந்த மற்றச் சகல நாடுகளிலும் சிலுவை யுபதேசத்தையே பறைசாற்றி வந்தார். அத்திருக்கருமத்தைச் செய்யுங்கால் பற்பல கொடிய துன்பங் களைச் சலியாது தாங்கி இறுதியில் தன் பிராணனையும் அத்திருவினை யாக்கத்தால் தியாகஞ்செய்தார். அக்கடின உபதேசம் இப்பொழுது ஆயிரக்கணக்கான மாந்தருக்கு இரட்சிப்பைத் தரும் தெய்வ சக்தியா கத் தோன்றியிருக்கின்றது. ஆதலால் அதன் உட்கருத்து யாதென நமது சிற்றறிவிற்கு எட்டியவரை விசாரித்தறிவது உசிதமாகும்.

1. இரவி, மதி, தாரகைக் கணங்கள் தெய்வம் தத்தமக்கு வரை யறுத்த வழிவிட்டு எட்டுணையும் பெயராதொழுகுகின்றன. மதக்கரி முதற்கொண்டு ஜீவராசிகளனைத்தும் ஈசன் விதித்த விதியைத் தவிர்த் துய்யத் திறனற்று அமைகின்றன. மனிதனொருவனே நீதிப்பிரமா ணத்தை மீறி வரம்புகடந்து செல்லும் தன்மை படைத்துள்ளான். எல்லாமறிந்த இறையோன் ஞானமாயமைத்துள்ள சத்தியநெறிவிட்டு விலகுவது துன்பத்தையே தரும். ஏனெனில் பிரமாணமே சுகத் திற்கு ஊன்றுகோல். என்றாலும் துன்பத்திற் கஞ்சியதால் ஒருவன் நீதிநெறியிற் செல்ல எண்ணங்கொள்ளான்; அவ்வாறு எண்ணங் கொண்டாலும் அவன் நன்மையைக் கடைப்பிடித்தொழுகுதல், தானாய் பழுக்காது தடிகொண்டடிக்கப் பழுத்த கனிபோல் சுவையற்ற வொழுக்கமேயாகும். ஆதலால் அன்பொன்றே அறநெறியிலுய்க்கும் உச்சித தாற்றுக்கோலாகும்.

2. தவிர, பாவச்செயலால் விளையும் துன்பம் மும்முனையுள்ள சூலத்தைப்போல், பாவஞ் செய்தோனையும், அவனை அடுத்தோரையும் அவனைப் படைத்துக்காக்கும் தேவனையும் புண்படுத்துகின்றது. தீவினைமூட்டிய தீ இவ்வாறு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும்

ஒருங்கே பற்றியெரிக்குங்கால் ஈசன் பார்த்துக்கொண்டு வாளாவிருந் திடின் எம் கதி என்னவாகும்? கொடிய பிணியைத் தீர்க்க மிகச் சிறந்த மருந்து தேவையன்ருே? குற்றமுள்ள நெஞ்சிற் பிறக்கும் கிலேசமும், பாவத்திற்கஞ்சும் புண்ணியரின் அங்கலாய்ப்பும், பாவத்தின் கொடு மையை ஒருவாறு தோற்றுவிக்கின்றன. என்ருலும் அவை மாந்தருள் ளத்தில் பாவத்தின்மீது நிலையான வெறுப்பைப் புகுத்துவிடும் ஆற்றல் பொருந்தினவை யல்லவென்பது உலகச் சரித்திரத்தில் அகங்கைக் கனிபோல் தெளிவாகக் காணக் கிடக்கின்றது. யாவும் அவன் செய லென்றும், நன்றென்றும் தீதென்றும் பேதப்படுத்திக் கூறுவது அஞ் ஞானமென்றும், பரமாத்துமனின் அம்சமாகிய ஜீவாத்துமனை மனமலி னங்கள் கறைப்படுத்துவ தில்லையென்றும், மாந்தர் பலவாருகக் கலைக் கியானம் பேசிப் பாவத்தின் கொடுமையை மறைத்துவிட முயன்றிருக் கின்றனர். ஆதலால் பாவம் பிரபஞ்சத்தின் மாயத்தோற்ற மல்லவென் றும், தெய்வ சக்திக்கு நேர்விரோதமானவோர் கொடிய சக்தியென் றும், மாந்தரைத் துன்பக்கடலி லாழ்த்துவதால் அவர் துயருற்று வருந் துவதைச் சகிக்கவொண்ணுது கருணுகரக்கடவுள் தாமே துன்புறு கின்ருரென்றும், வினைப்பயனை மாயமாய் மறைத்தொழிக்காது அதன் கொடுமையைத் தாமே தாங்கிக்கொள்ள எமது பரம தந்தை சித்தங் கொண்டாரென்றும் காட்டுவதே சிலுவை யுபதேசமாம்.

அதெங்ஙன மெனின் தேவன் தமது அனுதித் தீர்மானப்படி ஏற்ற காலம் வந்தவுடன் தமது திருப்புதல்வனைப் புவிக்கனுப்பி, மாசிலாப் புனிதராகிய அவர்மீது மாந்தரின் வினைப்பயனைச் சுமத்தினுர். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார். ஆனுல் அன்று நீசச்சிலுவையிற் ருெங்கி உடல் நலிந்து மனந்தளர்ந்துபோன வேளையில், தாம் பாவிகளை இரட் சிப்பதுபோய், பாவிகள் தம்மைப் பட்சித்துவிட்டதாகக் குருநாதர் தாமே நினைக்கநேர்ந்தது. பரமபிதா அச்சணம் தம்மை முற்றும் கைவிட் டாரென்று உணர்ந்து அவர் தவித்தார். கேவலம் சிட்டுக்குருவியின் உயிரையும் ஓம்பிவரும் ஈசன், தாம் விசேஷித்த அன்புகொண்டு பாராட்டிய திருக்குமாரன் பட்டபாடுகளைக் கண்டு துயருருதிருப் பரோ? மேலும் கிறிஸ்துநாதர் தாமும் பிதாவாகிய தேவனும் ஏகவஸ் துவானவர்களென்று பன்முறை இடித்துரைத்ததால், சிலுவையின் பாடு கள் தேவனுடைய பாடுகளாகின்றன. சிலுவை தெய்வத்தின் ஓர் பிர தான லட்சணத்தை வெளிப்படுத்துகின்றது. பாவக் கடுஞ்சிறையி

விருந்து தவிக்கும் மாந்தரைப் புரக்க ஈசன் தாமே துன்புறச் சம்மதித்து அத்துணை வாஞ்சையாக மாந்தரைச் சிநேகித்த சிநேகமே அந்த லட்சணம்.

3. பாவத்தை வெறுக்கத்தக்க ஞானமட்டும் மனிதனை இரட்சிக்கப் போகிறதில்லை. பாவரோகமானது புத்தியை மட்டுமல்ல சித்தத்தையும் பலவீனப்படுத்துகின்றது. ஆதலால் ஒருவன் பாவத்தினின்று இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவன் புத்தி தெளிவடைவதோடு சித்தமும் திடனடையவேண்டும். அவனுக்குள் நவசக்தியொன்று செல்லவேண்டும். அந் நவசக்தியைக் கிறிஸ்துநாதர் பக்தருக்களிப்பதாக வாக்குக் கொடுத்தார்.* அச்சக்தியை அளிக்குஞ் சிலாக்கியம் அவர்பெற்ற தெங்ஙனமெனின், அவர் மனிதப்பிரகாரமாகப் பார்க்குங்கால், மனுக்குலமென்னும் விருட்சத்தின் கனியாகத் தோன்றிய புருஷ சிகாமணியானவர். அவரில் மனுஷீகம் கரைதிரையற்ற பூரண மனுஷீகமாய் விளங்குகின்றது. ஜீவாத்துமன் தன் தற்சொரூபத்தில் பரமாத்துமனுகத் தோன்றுவது உண்மையெனின், அவர் ஒருவரில்தான் ஜீவாத்துமன் பரமாத்துமனில் கலந்துபோகத்தக்க களங்கமற்ற தூய்மையாய் நின்றது. ஆதலால் அவர் உலகிற் றோன்றினபொழுது, மானிடவர்க்க மனைத்தும் தன் நிலையினின்று ஓர் படி உயர்வடைந்தது. மற்றொருவகையில், கிறிஸ்து விண்ணின்றிழிந்த தெய்வ அவதாரமானவர். ஆதலால் அவர் பாவப்பிணியைத் தீர்க்கத்தக்க நவசக்தியைக் கொணர்ந்தவர். இஃதனைத்தும் அவர் தெய்வத்தினிடம் கொண்டிருந்த பக்தியிலும், மாந்தரை நேசித்த நேசத்திலும் தோன்றுகிறது. ஆயினும், கிறிஸ்து எம்பெருமான் தாம் தொடங்கிய இரட்சண்யக் கிரியை நிறைவேற்றுவதற்குச் சிலுவையின் மரணம் அவசியமென் றுணர்ந்தவுடன் அதையும் மனங்கோணது பட்டு உத்தரிக்க நிர்ணயித்த வீரச்செயலில் அது வெகு துலாம்பரமாகத் தோன்றுகின்றது.

இது காரணங்கள்பற்றியே கிறிஸ்துவினடியார்கள் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஈராயிரம் வருஷங்களுக்குமுன் தோன்றிய புண்ணியரின் ஜீவியப்பாங்கும், அன்னோர் மரணமும், மங்காத நவசக்தியொன்றை உலகில் புகுத்திவிட்டனவென்றும், அச்சக்தியே பரம்பொ

*நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். பிதாவாகிய தேவன் குமாரனுக்கு உகந்த தொண்டரை தேடிக் கொடுப்பதுடன், அத்தொண்டருக்கு குமாரன் நித்தியஜீவனை அளிக்கவும் அவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கின்றார்.

ருள் தமதன்பைப் பெருக்கி எமதாருயிரைக் காக்கவென்று மாநிலத்தில் தோற்றுவித்த சக்தியென்றும் சாதிக்கின்றனர். குருநாதர் மனுவோர் பிணையாய்த் தமதின்னுயிரை நீத்த பெருஞ்செயலை நினைப்பூட்டி, அதனால் ஆத்துமனுக்கு சுகத்தையும் பலத்தையும் ஈட்டிக்கொள்ளுமாறு கொண்டாடும் திருவிருந்தென்னும் சம்ஸ்காரத்தில் ஓதும் மந்திரமொன்றுளது. அது மேற்கூறிய உண்மைகளை பரிபாஷா நடையில் கூறுகின்றது. கிறிஸ்தரசரின் மரணத்தை நினைப்பூட்டும் சின்னங்களாகிய அப்பத்துணிக்கையையும் திராட்சரசத்தையும் குருவானவர் பக்தருக்களிக்குங்கால் கூறும் அம்மந்திரமாவது:—

"உனக்காகத் தியாகமான இயேசுகிறிஸ்துநாதரின் சரீரம், உனக்காகச் சிந்தப்பட்ட இயேசுகிறிஸ்துநாதரின் உதிரம், உன் சரீரத்திற்கும் உன் ஆத்துமத்திற்கும் நித்திய ஜீவனையளித்துக் காப்பதாக. கிறிஸ்து உனக்காக மரித்தாரென்பதை நினைவுகூர இவற்றை யருந்தி, விசுவாசத்தின் மூலமாக அவரையே உன் இருதயத்தின் உணவாக உட்கொண்டு நன்றியறிதலுள்ளவனாய் இருப்பாயாக!" என்பதாம்.

ஆன்ம அனுபவங்களைச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் எளிதல்ல. ஆதலால் இம்மந்திரம் பரிபாஷையில் எழுதப்பட்டுள்ளது. எம் குருநாதரும், தமக்கும் பக்தருக்கும் இருக்கவேண்டிய அந்நியோந்ய சவகாசத்தைக்குறித்து உபதேசித்தபொழுது, "நான் திராட்சச்செடி. நீங்கள் கொடி. நீவிர் என்னிலும், நான் உம்மிலும் ஊன்றியிருப்பின் உமது வாழ்வினால் ஆத்மபலன்களாய கனிகள் ஏராளமாக விளையும்" என்றும் கூறினார். கிறிஸ்து மகிபரின் சுகுணச்செல்வமும், சீரிய பாடும், அரிய மரணமும், அவற்றில் விளங்கிய எல்லையற்ற அன்பும் அவரைச் சிந்தையிலிருத்தித் தியானிக்கும் பக்தரின் ஆன்மாவிற்குச் சிறந்த ஞான உணவாகின்றன. ஆதலால் பாவ நசல்கொண்டு வீயும் தறுவாயிலிருக்கும் ஆன்மாவை நவஜீவனளித்துக் காப்பது கிறிஸ்துவின் மரணமாம்.

அத்தியாயம் 11.

கிறிஸ்துவுக்கு ஜெயம்! ஜெயம்!!

பிரதான ஆசாரியரின் கலக்கம்

வெள்ளிக்கிழமை குருநாதர் உயிர்துறந்தார். அன்று சாயங்காலம் அவர் திருவுடலைக் கல்லறையில் அடக்கம்செய்து, அறையை மூடிய கல்லில் முத்திரையிட்டு, காவலுக்குச் சேவகரும் திட்டம்பண்ணப்பட்டார்களென்று கூறினோம். வெள்ளி சென்றது, சனியுங்கழிந்தது. ஞாயிறு உதிக்குமுன், காவலாளர் ஓர் அற்புதக் காட்சிகண்டு திடுக்கிட்டு ஓடிப்போய் ஆசாரியரிடம் நேர்ந்த சம்பவத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது யாதெனில்: "ஐயா, நாங்கள் காவல் காத்துக்கொண்டிருக்கையில், கிழக்கு வெளுக்குமுன் திடீரென்று பிரகாசரூபி ஒருவன் எங்கள் கண்முன் தோன்றினான். நாங்கள் என்னவென்று பார்த்தபொழுது இதோ கல்லறையின் வாயிலை அடைத்திருந்த கல் புரண்டு விலகிக்கிடந்தது. கல்லறையில் கிறிஸ்துவின் உடலில்லை" என்பதே. இதைக் கேட்டவுடன் அன்னா, காய்பாவென்னும் ஆசாரியர் இடிவிழுந்த நாகம்போல் கலக்கமுற்றார்கள். கிறிஸ்துநாதரே வெற்றியடைந்தாரென்று அவர்கள் கண்டுகொண்டார்கள். யூதகுலத்தாரனைவரும் பேரவாவுடன் எதிர்நோக்கி யிருந்த மேசியா கிறிஸ்துதான் என்பதும் இப்பொழுது துலாம்பரமாகத் தோன்றிற்று. என்றாலும் தமது சம்பிரதாயம் அவமாகக்கூடாதென்ற கருவத்தால் இன்னும் குருநாதருக்கு எதிர்த்துநிற்கவே தீர்மானித்தார்கள். ஆதலால் சேவகரைப் பார்த்து "அடே! நீங்கள் என்னமோ கனவுகண்டெழுந்தவர்கள்போல் புத்தியில்லாமல் பேசுகின்றீர்களே. எங்களிடம் சொன்னபிரகாரம் வேறெவரிடமும் சொல்லற்க. நாங்கள் சற்று தூங்கிவிட்டோம். அப்பொழுது கிறிஸ்துவின் சீடர் கல்லைப் புரட்டிவிட்டு அவர் உடலைக் களவாடிச்சென்றனர் என்று சொல்லுங்கள்" என ஆசாரியர் கற்பித்தார்கள்.

கந்தவர்க்கமிடச் சென்ற நங்கையர் சாட்சி

கிறிஸ்துவின் சீடரும் நண்பரும் துன்பசாகரத்திலாழ்ந்து சிந்தை கலங்கி நின்றனர். கிறிஸ்துவைக் கொன்ற சத்துருக்களோ அவர் சீடரைத் தலைகாட்டவிடாது வேட்டையாடுவார்களென்பது திண்ணம். தவிர மூன்று வருஷகாலமாய் அவர்கள் குருநாதரைப் பின்பற்றி ஊதியத்தையும் இழந்து, இப்பொழுது இலவுகாத்த கிளிபோல் ஏமாந்து போனார்கள். தெய்வ ராஜ்ஜியம் நிலைபெறவில்லை. யூதரின் மேசியாவாக வந்தவர் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதற்குப்பதிலாக சவமாகக் கல்லறைக்குள் கிடக்கின்றார். அவர் சீடர் தம் பிராணனைக் கையிலேந்திக்கொண்டு ஒளிந்துகொண்டிருக்கின்றார்கள். என்றாலும் மகதலேனா மரியாளாகிய மடந்தை தன் ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளக்கூடாதவளாய், சலோமி, யோவன்னாள் என்னும் பாவையரை யழைத்துக்கொண்டு கல்லறைத்தோட்டத்திற்குச் சென்றாள். குருநாதருடைய திருச்சடலத்திற்குக் கந்தவர்க்க மிடவும், அதை மறுபடியும் பார்த்துத் தம் உள்ளத்தை உருக்கிய துயரத்தணலை, விழி பெய்யும் மாரியால் தணித்துக்கொள்ளவும், தையலர் பொழுது விடியுமுன் ஆங்குச் சென்றனர். செல்லும் வழியில் குருநாதரின் மாண்பையும், அவர் அடைந்த கொடும் மரணத்தையும் உன்னி உன்னியுரைத்து மனம் வாடினர். கல்லறையைக் காத்து நிற்கும் போர்வீரர் தம்மைத் துரத்திவிட்டால் என்ன செய்வதென்றும், கல்லறையின் வாயிலை மூடியிருக்கும் கல்லை புரட்டித் தள்ளுவது கூடுமோவென்றும் அவர்கள் இடைவழியில் நினைத்துக்கொண்டு கவலையுற்றார்கள். என்றாலும் போய்ப் பார்ப்போமென்று துணிந்து சென்றார்கள். அவர்கள் கல்லறையை யடைந்தபொழுது காவலாள ரொருவரையும் காணவில்லை. கல்லும் புரண்டுகிடந்தது. உடனே மகதலேனாள் கல்லறைக்குள் எட்டிக் கூர்ந்து பார்த்தாள். அங்கு பிரேதமுமில்லை. காவற்சேவகர் எங்கு சென்றனர்? கல்லைப் புரட்டினவர் யாவர்? தாம் பார்க்கவந்த பிரேதம் மறைந்த மாயமென்ன? என்று நினைத்து ஒன்றுந் தோன்றாது பிரமித்தனர். அப்பொழுது ஒரு தூதன் அவர்கள் முன் தோன்றினன். "உயிரோடிருப்பவரை மரித்தோர் கும்பலில் காணக் கூடுமோ? கிறிஸ்துநாதர் தாம் உரைத்த பிரகாரம் உயிரோடெழுந்து விட்டார். இந்நற்செய்தியை அவர் சீடருக்கு அறிவியுங்கள்" என்று

தூதன் சொன்னான். அரிவையர் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தோராய் சீடரிடம் தாம் கண்டதையும் கேட்டதையும் சொல்லத்திரும்பினர்.

"மரியாளே" "ரபூனி"

தோட்டத்தைக் கடக்குமுன் மகதலேனாள் ஏது காரணத்தாலோ திரும்பிப்பார்த்தாள். பார்த்தபொழுது கல்லறையினருகில் ஒரு மனிதனைக் கண்டாள். அவரிடம் விசாரித்து தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்பினாள். "ஐயா! என் குருநாதரின் சடலம் மறைந்தவழி தெரியாது திகைக்கின்றேன். நீர் அதை எடுத்து வேறோரிடத்தில் புதைத்திருந்தால் சொல்லும். நான் அதை எடுத்துக்கொள்ளுகின்றேன்" என்று வாய்குழறிச் சொன்னாள். அப்பொழுது ஓர் இன்பத் தொனியவள் செவியுற ஆனந்த பாக்கியமடைந்தாள். "மரியாளே!" என்று அவர் அவளைக் கூப்பிட்டார். அவர் தொனி அவள் செவியில் இதன்முன் பன்முறைப்பட்டிருந்தது. அவளைப் பிடித்திருந்த எழு பேய்களைத் துரத்தியதும் இத்தொனியே. அவளுக்குப் பாவவிமோசனம் கூறியதும் இத்தொனியே. அவளுக்கு ஞான உபதேசம் புகட்டியதும் இத்தொனியே. ஆதலால் அவர் குரலைக் கேட்டபொழுது மகதலேனாள் தன் முன்னிற்பவர் தோட்டக்காரனல்ல, மற்றொருவருமல்ல, தன்னைத் தடுத்தாட்கொண்டு இரட்சித்த கருணாம்பரனும் கிறிஸ்துவே யெனத் தேர்ந்து "ரபூனி" என்றபயமிட்டு அவர் திருக்கழல்களில் வீழ்ந்து அவற்றைப் பற்றிக்கொண்டு நமஸ்கரித்தாள். "என்னைப் பற்றிக்கொண்டு காலதாமதம் செய்யாதே. என் பிதாவிடம் நான் விரைந்து செல்லவேண்டும், எழுந்திரு. நீ தீவிரமாய்ச் சென்று என் சீடருக்கும், பேதுருவுக்கும் நான் உயிர்த்தெழுந்த நற்செய்தியை அறிவி. உங்கள் யாவரையும் நான் சீக்கிரம் சந்திப்பேன்" என்று பகர்ந்து அவர் மறைந்தார். மரியாளுக்கு இச்சம்பவம் அருங் கனவுபோலிருந்தது. தூதன் உரைத்ததும், குருநாதர் அவளுக்குக் காட்சியளித்ததும் ஒன்றையொன்று ஊர்ஜிதப்படுத்தின. ஆதலால் அவள் சொல்லிலடங்காத ஆனந்தங்கொண்டவளாய் சீடரைத் தேடிச் சென்றாள். இதற்குள் சலோமியும் யோவன்னாளும் தோட்டத்தைவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் சீடர் ஒளித்துக்கொண்டிருந்த வீட்டிற்குச் சென்று, தாம் கண்ட அதிசயக் காட்சியை வெகு தீவிரத்தோடு திக்கித் திக்கிச் சொல்லிக்கொண்

டிருந்தார்கள். சீடரோ அவர்கள் பேச்சைச் சிறிதும் நம்பாது, அவர் களைப் பற்பல கேள்விகள் கேட்டு அலட்டினார்கள். கிறிஸ்து உயிரோ டெழும்புவாரென்று அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை. பேதைய ராகிய இப்பெண்பாலார், மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல் லாம் பேயென்பதுபோல், என்னத்தையோ கண்டு இப்படிப் பிதற்று கின்றார்கள் எனச் சீடர் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார் கள். யோவன்னாளும் சலோமியும், வெட்கமும் துக்கமுமுற்று நாம் ஏதோ சத்தத்தைக் கேட்டு ஏமாந்துபோனோமோ? நம்மோடு பேசின வன் தூதன்தானோ? அல்லது நம்மை ஏமாற்றக்கருதிய ஓர் மனிதனோ? என்று கலக்கமுற்றார்கள். அப்பொழுது "குருநாதர் உயிர்த்தெழுந் தார், உயிர்த்தெழுந்தார்" என்ற சத்தங்கேட்டது. இதோ மகதலேனா மரியாள் அவர்கள் முன்நின்றாள். அவள் தோற்றமும் நிலையும் எதிர் பாராத அதிசயத்தைக் கண்டவர் தோற்றம்போலிருந்தது. பரபரப்பை அடக்கிச் சாவதானமாய் நடந்த சம்பவத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று சீடர் அவளைக் கேட்க அவள் நடந்த யாவற்றையும் விவரமாய் ஒன்றும் விடாது விளம்பினாள்.

பேதுருவும் யோவானும் கல்லறையைப் பார்த்தல்

மகதலேனாள் வரலாற்றைச் சொல்லி முடிக்கவும், பேதுருவும் யோவானும் எழுந்து தோட்டத்திற்கு ஓடினார்கள். வாலிபனான யோவான் கல்லறையை முந்தியடைந்து, வாயிலில் நின்றுகொண்டு கெபிக்குள் உற்றுப்பார்த்தான். வயதிற் சற்று முதிர்ந்த பேதுரு பிந்தி வந்தபோதிலும், உடனே கல்லறைக்குள் நுழைந்தான். மரியாள் சொன்னபிரகாரம் கல்லறை வெறுமையாயிருந்தது. ஆனால் முற்றும் வெறுமையாயில்லை. பிரேதத்தைப் பொதிந்திருந்த வெண்வஸ்திர மும் அதன் தலையில் கட்டியிருந்த சவுக்கமும், பிரேதம் இருந்த பொழுது எவ்வெந்த விடங்களிலிருந்தனவோ, அதே இடங்களிலேயே நலுங்காமல் கிடந்தன. உடலை எவரும் எடுத்து அப்புறப்படுத்தி யிருந்தால் அதைப் பொதிந்திருந்த வஸ்திரத்தோடல்லவோ எடுத் திருக்கவேண்டும். அல்லவென்றால் வஸ்திரத்தை உரிந்து களைந்து விட்டுப் பிரேதத்தை எடுத்திருக்கவேண்டும். அப்படியென்றால் வஸ் திரம் கலைந்து, அதனுள் வைக்கப்பட்டிருந்த நூறு பவுண் நிறையுள்ள வெள்ளைப்போளம் முதலிய கந்தவர்க்கம் சிதறிக்கிடக்கவேண்டுமே.

அப்படி ஒன்றுமில்லை. தோலிருக்கச் சுளையை உரிந்ததுபோல், கிறிஸ்துவினுடல் தன்னை இறுகப் பொதிந்திருந்த வஸ்திரத்தினின்றும் காற்ருய்க் கரைந்து வெளிப்பட்டதுபோலிருந்தது. பேதுரு இதைக் கண்டு அளவற்ற வியப்படைந்தான். யோவானை அழைத்து "இதென்ன அதிசயம்! பார், வஸ்திரம் நலுங்காமலிருக்க உடல்மட்டும் மறைந்து போய்விட்டது" என்ருன். யோவானும் உட்சென்று பார்த்து வாயிற் கையை வைத்துக்கொண்டு திக்பிரமைகொண்டவன் போல் நின்ருன். குருநாதர் தமது மரணத்தைப்பற்றிச் சொன்ன வார்த்தைகளை இருவரும் நினைத்தனர். அவர் சொன்னபடி உயிரோ டெழுந்தாரென்று கொள்வதொன்றே தாம் கண்ட காட்சிகளுக்குப் பொருந்தும் காரணமாகுமெனத் தேர்ந்தனர். யோவானும் பேதுரு வும் தத்தம் மனத்தில் இப்பெருஞ் சம்பவத்தை நினைத்து நினைத்து ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டோராய்த் தம் வீட்டிற்குத் திரும்பி ஞர்கள். உயிர்த்தெழுந்த நாதனை மறுதலித்துச் சபித்தவனுகிய பேதுரு எவ்வண்ணம் காண்பான். என்ருலும் வெட்கமும் துக்கமும் நிறைந்த அவனுள்ளத்திற்கு மரியாள் கூறிய ஓர் வார்த்தை வெந்த இரணத்தின்மேல் வார்த்த குளிர்ந்த தைலம்போலிருந்தது. "சீடருக் கும் பேதுருவுக்கும் சொல்" என்று நாதனுரைத்தாராம். ஆதலால் அவரது நிகரற்ற அன்பைப்பெற சிறிதும் பாத்திரனல்லாத என்னையும் குருநாதர் மறவாதிருக்கின்ருரே! என்ன ஆச்சரியம்! என்ன காருண் யம்! என்று பேதுரு நினைத்து நினைத்துத் தன்னைத்தானே தேற்றிக் கொண்டிருந்தான்.

பேதுருவுக்கும் சொல்லென்று குருநாதர் அச்சீடனைப் பிரத்தி யேகப்படுத்தி கூறியதின் காரணமென்ன? சீடர் பன்னிருவரிருந்தனர். ஒருவன் குருநாதரைக் காட்டிக்கொடுத்த துரோகி. அவன் மாண் டான். மற்ருெருவன் அவரை மறுதலித்து சபித்த பேதை. அவன் பேதுரு. கிறிஸ்து உயிரோடெழுந்தது அவனுக்கு ஒரு பக்கம் சந்தோஷத்தை யூட்டியதெனினும், மறுபக்கம் வெட்கத்தையும் பயத் தையும் எழுப்பிற்று. குருநாதரைச் சபித்தவன் அவர் முகத்தில் இனி விழிப்பதெங்ஙனம்? அவர் அவனை ஏற்றுக்கொள்ளுவாரோ? தள்ளி விடுவாரோ? என்ற திகில் பேதுருவின் மனதை வதைக்குமென்று குருநாதர் அறிந்து, அவனைத் தேற்ற பேதுருவுக்கும் தாம் உயிரோ டெழுந்த நற்செய்தியை அறிவிக்க மரியாளுக்குக் கற்பித்தார். அத

ஞல் அவனையும் தம் சீடரிலொருவனுகவே குருநாதர் பாவித்திருக்கின்ருரென்பதை அவனுக்கு அறிவித்தார். பேதுரு மரியாளைப் பார்த்து "எனக்கும் இந்த நற்செய்தியை அறிவிக்கச் சொன்ஞரோ? அது உண்மையோ?" என்று பன்முறை வினவித் தன் மனதைத் தேற்றிக்கொண்டானென்பதற்கு ஐயமில்லை. "குருநாதா! உம் அன்பிற்கு முற்றும் அபாத்திரனுன என்னையும் கடைக்கணிக்கச் சித்தங்கொண்டனையே! உமது அன்பு எத்தனை பெரிது!" என்று பேதுரு தனக்குள்ளே சொல்லிக்கொண்டு உள்ளங்கனியக் கண்ணீர் சொரிந்தானென்பதும் திண்ணம். இவ்வாறு பேதுரு தனியேயிருந்து சிந்தித்துக்கொண்டிருக்கையில் குருநாதர் தாமே அவனுக்குத் தரிசனமளித்தார்.

எம்மாவுக்குப் போகும்வழி

அன்று அந்திப்பொழுதில், எருசலேம் நகருக்கு எழெட்டு மைல் தூரத்திலிருந்த எம்மாவு என்ற ஊருக்கு குருநாதரின் அடியாரிலிருவர் போய்க்கொண்டிருந்தனர். ஒருவன் பெயர் கிலியோப்பா. அவர்களிருவரும் வெகு தாபந்தத்தோடும் விசனத்தோடும் ஏதேதோ பேசிக்கொண்டு போனுர்கள். அப்பொழுது மூன்ருவது மனிதரொருவர் அவர்களைச் சேர்ந்து, அவர்கள் பேசிக்கொண்டு போகும் சமாசாரம் யாதென வினவ, ஒருவன் சற்று வியப்புடன் "என்ன ஐயா! சமாசாரமா? சமாசாரம் தெரியாதோ? நீர் எங்கிருந்து வருகின்றீர்? நாடெங்கும் பேசப்படும் பெரிய சமாசாரம் ஒன்றுதானே. அதை நீர் அறியாதிருப்பது விந்தையினும் விந்தையே!" என்ருன். பின்பு இருவரும் "நசரேயனுகிய இயேசுவின் சமாசாரம்தான். அவர் வாக்கிலும் கிரியையிலும் பலத்தவரான தீர்க்கதரிசியாக தேவனுக்கும் மனிதருக்கும் தோன்றினுர். என்ருலும் எங்கள் குருக்களும் அதிகாரிகளும் அவரைச் சிலுவையிலறைந்து கொன்றுவிட்டார்கள்" என்றுரைத்தனர். "அவர்தான் இஸ்ரவேலரை இரட்சிக்கவந்த மேசியாவென்றெண்ணினேம். ஐயோ! அவர் மரித்து இன்று மூன்று நாளாகிவிட்டதே" என்று சொல்லி கிலியோப்பா பெருமூச்சு விட்டான். மேசியா இத்தனைபாடுகளையும் பட்டபின்னரே மகிமையடைவாரென்றும், அவர் மரித்தபின் உயிரோடெழுவாரென்றும் வேதவாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு அந்த வழிப்போக்கர் அவர்

களுக்குப் போதித்தார். அவர்கள் அவையனைத்தையும் கேட்டும் நம்பிக்கையற்றவர்களாகவே இருந்தார்கள். அப்படிப் பேசிக்கொண்டே எம்மாவூருக்கு வந்துசேர்ந்தார்கள். அப்பொழுது கிலியோப்பாவும் அவன் தோழனும் தம்மோடு பேசிக்கொண்டுவந்த அந்நியரைப் பார்த்து "ஐயா, பொழுதமர்ந்துவிட்டது. நீர் இன்று எங்கள் வீட்டில் இராத்தங்கவேண்டும்" என்று மிகவும் கனிவோடு உபசரித்தனர். அவர் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கினர். போஜனம் பரிமாறப் பட்டபொழுது அவர் கடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்தும் கடமையைத் தமதாக்கிக்கொண்டார். அதிதியல்ல, விருந்தளிப்பவனே இக்கடமையைச் செய்வது வழக்கம். இவர் வழக்கத்திற்கு மாறாக நடந்துகொண்டது ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. மேலும், ஜெபிக்கையில் அவர் அப்பத்தை யெடுத்து அதை ஆசீர்வதித்து, பின்பு பிட்டு தமக்கு விருந்தளித்தவர்களுக்கே கொடுத்தார். இப்படி குருநாதர் ஐயாயிரம்பேருக்கதிகமான கூட்டத்திற்கு வனாந்தரத்தில் உணவளித்துதவியபோதும் செய்திருந்ததைக் கண்ட இவர்கள் உடனே தம்மோடிருக்கும் அந்நியர் இயேசுகிறிஸ்துதான் என்று கண்டுகொண்டார்கள். அவர்கள் பிரமிப்புத்தெளிந்து அவரை வினவுமுன் அவர் மறைந்து விட்டார். "ஆகா! குருநாதர் உயிர்த்தெழுந்துவிட்டாரென்று மகதலேனாள் சொன்னது உண்மையே. அவர் திருமறை வாக்கியங்களை நமக்கு விளக்கிக்கொண்டு வரும்பொழுதே நமது நெஞ்சம் கரைந்து பொங்கவில்லையா?" என்று ஒருவருக்கொருவர் தம் வியப்பையும் உள்ளக்கிளர்ச்சியையும் சொல்லிக்கொண்டார்கள். உடனே அவர்கள் எருசலேமிலிருந்த மற்றச் சீடருக்குத் தாம் கண்ட காட்சியைச் சொல்ல கடிதினிற் சென்றார்கள்.

சீடர் குழாம்முன் தோன்றல்

எருசலேமில் சில சீடர் ஒரு வீட்டில் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். கிலியோப்பாவும் அவன் தோழனும் அவர்களைச் சேர்ந்தபொழுது, அவர்கள் குருநாதர் உயிர்த்தெழுந்தது உண்மையென்றும், அவர் மகதலேனாளுக்கும் பேதுருவுக்கும் தரிசனமளித்தாரென்றும் ஒரே கிளர்ச்சியாக ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். கிலியோப்பா தான் கொண்டுவந்த நற்செய்தியைச் சொல்லவும் சமயங் கண்டானில்லை. சீடரின் கிளர்ச்சி சற்று தணிந்தவுடன், கிலியோப்பா

தான் கொணர்ந்த நற்செய்தியையும் கூறினன். அவர்கள் முன்னிலும் அதிகமாகக் களிப்பெய்தி யாவரும் ஏககாலத்தில் பேசினர்கள். அப்பொழுது குருநாதர் அவர்கள் நடுவிலெழுந்தருளி, "உங்களுக்குச் சமாதான முண்டாவதாக!" என்று அவர்களை ஆசீர்வதித்தார். அவர்கள் அத்தோற்றத்தைக் கண்டவுடன் சிந்தை கலங்கி திகிலடைந்தார்கள். அது ஆவேசந்தானேவென்றும் அஞ்சினர்கள். அப்பொழுது அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தக் கருதி குருநாதர் பின்வருமாறு மொழிந்தார். "என் பிதா என்னை அனுப்பியதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன். எவ்வெவர் பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவ்வவர் பாவவிமோசனமடைவார். எவ்வெவர் பாவங்களை நீங்கள் மன்னியாதிருப்பீர்களோ அவ்வவர் பாவவிமோசனமடையார். ஆதலால் பரிசுத்த ஆன்மனை உங்கள் உள்ளங்களில் ஏந்திக்கொள்ளுங்கள்," என்றார். இச்சிறந்த வாக்கைக் கூறி அவர்கள்மேல் ஊதினர். மீன் பிடித்துக்கொண்டிருந்த வலையர்களாகிய இச்சீடரை குருநாதர் மனிதரைப் பிடிக்கின்றவர்களாக்குவதாக வாக்களித்து அழைத்தாரன்றோ? அப்பொழுது அவர்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றவே குருநாதர் அவர்களோடு இவ்வாறு பேசினர்.

சந்தேகங்கொண்ட தோமா

எட்டு நாட்களுக்குப்பின் சீடர் பதினொருவர் எருசலேமில் கூடியிருந்தபொழுது இயேசுகிறிஸ்துநாதர் மீண்டும் அவர்களுக்குக் காட்சியளித்தார். முன்பு குருநாதர் சீடர்முன் தோன்றியபொழுது, தோமாவென்ற பெயர்கொண்ட சீடன் எருசலேமிலில்லை. அன்று தன் உடன் சீடர் குருநாதரைக் கண்டதாகச் சாதித்தபொழுது, தோமா அவர்கள் வாக்குமூலத்தை நம்ப மறுத்தான். "நீங்கள் ஏதோ ஆவேசத்தைக் கண்டு, அது குருநாதரென்றெண்ணி ஏமாந்துபோனீர்கள். நான் குருநாதரைப் பார்த்து, அவரைத்தொட்டு, அவர் காயங்களில் கைவைத்தாலொழிய அவர் உயிர்த்தெழுந்தாரென்பதை நம்பமாட்டேன்" என்றான். இவ்வாறு அவனும் மற்ற சீடரும் வாதாடிக்கொண்டிருந்தபொழுது, ஓர் உருவம் அவர்கள் கண்முன் நின்றது. "இதோ, குருநாதர் வந்திருக்கின்றார்" என்று சிலர் குதூகலித்தனர். குருநாதர் அவர்கள் பேச்சை யமர்த்தி, தோமாவை யழைத்து "என் கரங்களில் ஆணிகள் படுத்திய காயங்களைப் பார். உன் விரலால் என் விலாவைத்

தொட்டுப்பார்" என்றார். அவன் காயத் தழும்புகளைக் கண்டான். அவன் சந்தேகம் பறந்தது. "என் கர்த்தாவே! என் தெய்வமே!" என்று ஆச்சரியத்துடன் தன்முன் நிற்பவர் உயிர்த்தெழுந்த தேசிகப் பெருமானேயென்று அறிக்கை செய்தான். அப்பொழுது குருநாதர் அவனை நோக்கி "நீ என்னைக் கண்டபின் உயிரோடெழுந்தேன் என்று நம்புகின்றாய். ஸ்தூலவிழிகள் காணுமுன் விசுவாசித்தவர்களே பாக்கியவான்கள்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

கலிலேயாக் கடற்கரை

சீடருடன் கடைசி விருந்துண்டு முடிந்தபின் குருநாதர் தம் மரணத்தையும் அம்மரணத்தின்மீது தாம் அடையவிருந்த வெற்றியையும் குறித்துப் பேசினார். அப்பொழுது அவர் தாம் உயிர்த்தெழுந்தபின் கலிலேயாவிற் சீடரைச் சந்திப்பதாக வாக்களித்திருந்தார். இப்பொழுதும் எருசலேமில் சீடரைச் சந்தித்தபொழுது குருநாதர் அவ்வாக்கை சீடருக்கு நினைப்பூட்டி, அவர்களைக் கலிலேயாவுக்குச் சென்று காத்திருக்கக் கற்பித்தார். சீடர்கள் பகைவர் மல்கிய எருசலேமைவிட்டு தம் சொந்த நாடாகிய கலிலேயாவுக்குச் சென்றனர். குருநாதர் அவர்களைச் சந்திக்க தாமதித்ததால், யூதா, நாத்தான்வேல், யாக்கோபு, யோவானாகிய உடன் சீடரை அழைத்துக்கொண்டு பேதுரு கலிலேயாக் கடலில் மீன் பிடிக்கச் சென்றான். ஓர் இரவெல்லாம் அவர்கள் வலை வீசினார்கள். மீன் அதிகம் அகப்படவில்லை. அருணோதயவேளையில் கடற்கரையில் யாரோ ஒருவர் நிற்பதை மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் கண்டார்கள். அவர், "பிள்ளைகாள், மீன் ஏதும் பிடித்தீர்களா?" என்றார். அவர்கள் தங்கள் அபசித்தியை அறிவித்தபொழுது, "வலையைப் படகின் வலபக்கம் வீசுங்கள்" என அவர் சூழ்ச்சி சொன்னார். அவர்கள் அப்படியே செய்ய, வலைநிறைய மீன் அகப்பட்டது. அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, அங்குநிற்பவர் யாவரென உற்றுப் பார்த்தார்கள். மூன்று வருடங்களுக்குமுன் குருநாதர் இவ்விதமாய் அவர்களுக்கு மீன் அகப்படச் செய்ததை நினைத்த யோவான், "அவர் நம் கர்த்தர்!" என்றான். உடனே பேதுரு மீன் எக்கேடுகெட்டாலும் கெட்டுமென்று அதை அலட்சியம் பண்ணிவிட்டு ஜலத்தில் குதித்து ஆண்டவரிடம் விரைந்து சென்றான். அவன் பின்னே மற்ற மூவரும் வந்தார்கள். குருநாதர் அவர்களைப்பார்த்து, "பிள்ளைகாள், இதோ கொஞ்

சம் அப்பமும் பொரித்த மீனும் இருக்கிறது. சாப்பிடுங்கள்" என்றார் குருநாதர் தம் வழக்கம்போல் உணவு பதார்த்தங்களை ஆசீர்வதித்து அவற்றைப் பரிமாறினார்.

"சீமோனே, என்னை நேசிக்கின்றாயா?"

அவர்கள் புசித்து திருப்தியடைந்தவுடன், எம்பெருமான் பேதுருவைப் பார்த்து "யோனாவின் குமாரனான சீமோனே, (சீமோன் என்பது பேதுருவின் மற்றொரு பெயர்) நீ என்னை நேசிக்கின்றாயா?" என்றார். அதற்கு பேதுரு "ஆம் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கின்றேன்" என்று விடைகூறினான். குருநாதர், "அப்படியானால், என் சீடராகிய ஆட்டுக்குட்டிகளுக்கு மேய்ச்சலளிப்பாயாக" என்றார். குருநாதர் மறுமுறையும் அதே கேள்வியைக் கேட்டார். பேதுருவும் தான் முன்பகர்ந்த மறுமொழியே பகர்ந்தான். மூன்றாம் முறையும் குருநாதர் அக்கேள்வியைக் கேட்டபொழுது, பேதுரு கலக்கமுற்றான். மற்ற சீடரைத் தவிர்த்து தன்னொருவனையே இக்கேள்வி கேட்டதினிமித்தம் குருநாதர் அவனிடம் இன்னும் நம்பிக்கை கொள்ளவில்லையென்றும், அவரைச் சபித்து மறுதலித்த குற்றத்தை மனதில் வைத்துக் கொண்டே இப்படிக் கேட்கலாயினாரென்றும் பேதுரு நினைத்து வெட்கமும் துக்கமுமடைந்தான். ஆதலால் மிகுந்த மனத்தாழ்மையாக, "ஆண்டவரே, உமக்கு மறைவான தொன்றுமில்லை. நான் உம்மை நேசிக்கிறதையும் நீரே அறிவீர்" என்று சொன்னான்.

"உள்ள மறிவா யுழைப்பறிவாய் நானேழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே"

என்றும்,

"பாவியே னுளபான்மையைக் கண்டு நீ
கூவியாளெனை ஆட்கொண்ட கோலமே"

என்றும், அபயமிட்டுக்கொண்ட சீடனைப் பார்த்து குருநாதர் மறுபடியும் தமது தொண்டரைக் காத்து நடத்தும் உத்தரவாதத்தை அவன் மேற் சுமத்தி அவனை அவ்வளவாய் நம்பினார். பேதலித்து வருந்திய பேதுருவின் உள்ளத்திற்கு இது வானமிர்தம்போ லிருந்தது. தவிர, பெரும் உத்தரவாதத்தை அவன் மேற்கொண்டு உய்யுமிடை பல துன்பங்களடைவானென்றும், ஓர் பெண்ணுக்குப் பயந்து சற்குருவை மறந்த கோழை, அக்குருவின் திருத்தொண்டின் அபிவிர்த்திக்காக தன்

பிராணனையும் அர்ப்பணஞ் செய்யத்தக்க மதாபிமானியாவானென்றும் குறிப்பிட்டுக் காட்டினர். அதன்பிரகாரம் பேதுருவின் மதவைராக்கியத்தைத் தணிக்கமுயன்ற மாற்றலர் அவனைச் சிலுவையிலறைந்தார்கள். அப்பொழுது பேதுரு தன் குருநாதரைப்போல் மரிப்பதற்குத் தான் சிறிதும் பாத்திரனல்லனெனக் கருதி, சிலுவை மரத்தில் தலை கீழும் கால் மேலுமாகத் தொங்கி மரித்தானென்று புராணம் கூறுகின்றது.

மேகவாகனன்

இவ்வாறு இயேசுகிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்தபின் ஏழெட்டுத்தரம் தம் தொண்டருக்குக் காட்சியளித்தார். நாற்பதுநாள் வரையில் சீடரைத் தனித்தனியாகவும் சிறு கூட்டங்களாகவும் சந்தித்து, அவர்களை தைரியப்படுத்தினர். அதனால் அவர்கள் தம் குருநாதர் போதித்த நூதன உபதேசத்தை உலகமெங்கும் பறைசாற்றவும், அவர் நிலைநாட்டிய ஆன்மீக ராச்சியமாகிய தெய்வ ராச்சியத்திற்கு அநேகரைப் பிரஜைகளாக்கவும் தகுந்த பரிபக்குவமடைந்தார்கள். இறுதியில், பதினொரு சீடருடன் குருநாதர் எருசலேம் நகருக்குச் சென்று அங்கிருந்து புறப்பட்டு ஒலிவமலையை யடைந்தார். அம்மலையில் ஓர் தோட்டத்திற்றுன் குருநாதர் ஸ்தூலசரீரத்தைத் தாங்கிய வாழ்நாட்களின் கடைசி இரவைக் கழித்தார். ஆங்கவர் ஆத்தும வியாகுலமடைந்து உதிர வேர்வை சொரிந்தார். ஆங்கு தம் நிர்ணயத்தைத் தகர்க்கவந்த சோதனையை மேற்கொண்டு வீரபுருஷனக விளங்கினர். அவர் அடைந்த கஸ்தியும் அங்கே ஆரம்பித்தது. ஆதலால் அவர் மரணத்தின் கூரையொடித்து வெற்றிசிறந்த தெய்வ புருஷராக மாந்தருக்குத் தம்மைக் கடைசியாகத் தோற்றுவிக்கவும், மேகவாகனமேறித் தம் ஆதிப்பதவிக்குச் செல்லவும், ஒலிவமலையையே தகுந்த இடமாகத் தெரிந்துகொண்டார். சீடருடன் குருநாதர் சம்பாஷிக்குங்கால், "நாதா, வீழ்ந்து மறைந்த யூத ராச்சியத்தை நீர் நிலைநாட்டுங்காலம் இதுதானே?" என்று சீடர் கேட்டார்கள். அதனல் தெய்வ ராச்சியத்தின் நிசமான தன்மை யின்னதெனச் சீடர் ஓர்ந்தறிந்தா ரில்லையென்பதை குருநாதர் கண்டார். என்றாலும் அவர் மனதைப் பற்றியிருந்த இருளை அகற்ற அது காலமல்லவென்றெண்ணி, அவர்கள் சிந்தையை அவ்வீண் நம்பிக்கையினின்று திருப்பி, அவர்கள் செய்யவேண்டிய அரும்பணியில்

ஊன்றினர். குருநாதர் அவர்களுக்கு அளித்த மாறுத்தரம் யாதெனில், “தெய்வத்தின் அனுதித் தீர்மானப்படி நிகழும் சம்பவங்கள் எங்கே, எப்பொழுது என்று விசாரித்தறிவது புல்லறிவினராகிய உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆன்மன் உங்களில் குடிகொள்ளுவார். அப்பொழுது நீங்கள் ஞானமும் வல்லமையும் அடைவீர்கள். அதன் பின் நீங்கள் எருசலேம் நகரிலும், யூதேயா, சமாரியா நாடுகளிலும், மேதினியின் கடைமுனைகள்மட்டும் எனது அரிய நவ உபதேசத்தைப் பறைசாற்றும் தூதுவராவீர்கள். இந்த மேன்மையான கருமமொன்றையே கண்ணும் கருத்துமாய்ச் செய்யக் கருதுங்கள்” என்பதே. பின்னும் தாம் அதரிசனராக அவர்கள் பக்கத்தில் நிலைபெயராது உலக முடிவுபரியந்தம் நின்று அவர்களுக்குத் துணைபுரிவாரென்றும் உறுதிவாக்களித்தார். இப்படிப் பேசிக்கொண்டே கண்ணிமைப் பொழுதில் குருநாதர் மறைந்துபோனர்.

சீடர் அவர் எத்திசையில் மறைந்தாரெனத் தோன்றாது வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் அடைந்த வியப்பு ஒழிந்தபின், மிகுந்த பக்திவினயமாகச் சிறிதுநேரம் நின்றநிலையில் குருநாதரைச் சிந்தைசெய்து போற்றினார்கள். அப்பொழுதே அவர்களுக்குப் புதிய நிர்ணயமும், உற்சாகமும், தைரியமும் வந்தது. சில நாட்களுக்குமுன் எருசலேம் பட்டணத்தில் தலைகாட்டத் துணியாது பயந்துகொண்டிருந்தவர்கள், நேரே எருசலேம் தேவாலயத்திற்குச் சென்று பகிரங்கமாக ஜெபித்தார்கள். பின்பு நாற்பது நாளளவும் பிரதிதினமும் ஓர் வீட்டின் மேல்மாடியிற்கூடி கிறிஸ்து இரட்சகரின் திரு உபதேசத்தைச் சிந்தைசெய்து, அவரை வந்தித்து, அவர் வாக்களித்த பரிசுத்த ஆன்மனின் ஞானத்தையும் வல்லமையையும் பெறக் காத்துநின்றார்கள். அவற்றைப் பெற்றபின் இரக்கமும் நேர்மையுமற்ற பகைவர் நிறைந்த எருசலேம் பட்டணத்திலேயே, சிலுவையிற்றொங்கி மரித்த இயேசுகிறிஸ்துவே, தெய்வத்தின் அனுதித் தீர்மானப்படி உலகத்தை இரட்சிக்கவந்த மேசியாவென்றும், அவர் மரணத்தை மேற்கொண்டு உயிர்த்தெழுந்ததே அதற்குச் சிறந்த சான்றெனவும் வெகு துணிவோடும் ஊக்கத்தோடும் உபதேசித்தார்கள். அதனல் எழுந்த கொடிய உபத்திரவத்திற்குச் சிறிதும் அஞ்சாது கல்வி, செல்வம், செல்வாக்குடைய உலகமாந்தரை தமது சாத்வீக சாந்தத்தால் மேற்கொண்டு வெட்கமடையச் செய்தார்கள். அவர்கள் அடைந்த கஸ்தி

யும், சிந்திய இரத்தமுமே திருச்சபையின் வித்தாக விளங்கிற்று. எருச லேமில் அவர்கள் முயற்சியால் பக்தர்குழாமொன்று முளைத்து வளர்ந்து வந்தது. அதை நசுக்கி வேரோடு அழிக்கமுயன்ற மதோன்மத்தரில் ஒரு வனுகிய சவுல் என்ற கல்விமான், தமஸ்குவிற்குத் தப்பியோடிய கிறிஸ் துவின் தொண்டரைப் பிடிக்கச்செல்லும் வழியில் எம்பெருமானுல் தடுத்தாளப்பட்டு, அவரைக் கண்ணுல் கண்டதால் கண்ணொளியிழந்து, பின் அவர் கிருபையால் பார்வையடைந்து, அவருக்கே தொண்டுபுரியத் தன்னைத் தத்தம்பண்ணி, பவுல் என்ற புதுப்பெயருடன் நவஜீவனை யும் பெற்ருன். அவன் கிறிஸ்துவின் ஆதிச்சீடர் புரிந்த அரும்பணி யைச் சீர்தூக்கிப்பார்த்துக் கூறியது யாதெனில், "கற்ருேரை வெட் கப்படுத்த கல்லாதவரையும், பலந்துன்னியவரை வெட்கப்படுத்த பல ஹீனரையும், பாரில் நிலையானவையென் றெண்ணப்படுவவைகளை நிலைகுலைத்தொழிக்க, தாழ்ந்ததும் புறக்கணித்துத் தள்ளப்பட்டதுமான வற்றையும், பொருளல்லாதவையென் றெண்ணப்படுபவற்றையும் தெய் வம் தெரிந்துகொண்டார். அதேனென்ருல் தெய்வத்தில் மதியீன மென்றெண்ணத்தக்க தொன்றுளதேல், அஃது மானிடரின் ஞானத்தி னும், பெலன்குன்றிய தொன்றுளதேல், அஃது மாந்தரின் பெலத்தி லும் சிறந்ததென்று காட்டவே!" என்பதாம். கிறிஸ்துமார்க்கம் ஸ்தா பகமானதும், இருநூறு வருஷங்களுக்குள் அது அடைந்த விர்த்தியும் தெய்வச்செயலே. பத்துப் பன்னிரண்டு கல்லாத செம்படவரைப் பிடித்து, அவர்கள் மூலமாக, கிரேக்க, ரோம தத்துவசாஸ்திரங்களை யும், நாகரிகத்தையும், மார்க்கங்களையும் கவிழ்த்துவிட்டதே கிறிஸ்து நதார் செய்த அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதம். அது ஒன்றே அவர் உயிரோடெழுந்தாரென்பதற்கும், அவர் அன்றுதொட் டின்று மட்டும் அதரிசனராய் அன்பர் அகத்திலிருந்து கிரியைசெய்து வரு கின்ருரென்பதற்கும் போதிய அத்தாட்சியாகின்றது.

"சரீரத்திற்கு சரீரம் வித்தியாசப்படுகின்றது. மனிதசரீரம், மிருக சரீரம், மண்ணுக்குரிய சரீரம், விண்ணுக்குரிய சரீரமென்ற வெவ் வேறு சரீரங்களிருக்கின்றன. ஸ்தூலசரீர மிருக்கின்றதன்ருே? அது போல சூக்குமசரீரமுமொன் றிருக்கின்றது. மனுக்குலத்தின் வித்தாய் நின்ற ஆதிமனுடன் மண்ணின்று தோன்றிய ஜடப்பொருள், விண் ணின்றுதித்த மனிதகுமாரனுகிய கிறிஸ்து ஆன்மப்பொருள். அவர் மூலமாய் புனர்ஜென்மமடைந்தோர் அழிந்துபோகும் உடலைக் களைந்த

பின் நித்திய சூக்கும சடலம் பொதிந்திலங்குவார். அப்பொழுது, 'மரணம் விழுங்கப்பட்டது. மரணமே உன் ஜெயமெங்கே! மரணமே உன் நச்சுமுள் எங்கே!' என்ற வெற்றித்தொனி தொனிக்கும். அந்த வெற்றியை நாமடைவோம். எங்ஙனமெனின், நமது நாதர் இயேசு கிறிஸ்துவின் தவப்பயனாக, ஈசன் அதை நமக்குத் தரச் சித்தங்கொண்டார்."

வேதமந்திரனுக்கு, தெய்வ தற்சொரூபனுக்கு நமோ, நம!

"ஆதிமெய்த் திருவாக்காய வகில காரணனே போற்றி
கோதிலாக் குணங்கள் பூத்த குவலயத் தொளியே போற்றி
மாதுவித் தாகி யிந்த மாநிலம் புரப்பலென்று
தாதைபாற் பரிந்து நின்ற தற்பரா போற்றி போற்றி."

உபதேசகாண்டம்

அத்தியாயம் 12.

உபதேச வாக்கியங்களும், உவமைகளும்

இயேசு எம்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய அரிய உபதேச வாக்கியங்கள் இரண்டாம் மூன்றும் பிரிவுகளில் சந்தர்ப்பம் நேர்ந்த வாறு கூறப்பட்டுள்ளன. ஆங்கு கூறப்படாது நின்ற வாக்கியங் களிற் சிலவற்றையும், குருநாதர் சொன்ன நீதிக்கதைகளாகிய உவமை களையும், தொகுத்தும், பொருளுக்கேற்ப வகுத்தும் கூறுவது அவசிய மெனத் தோன்றுகின்றது. குருநாதர் உலகத்திற்குச் செய்த உபகாரங் களிலொன்று, அவர் சொல்லிய கதைகளேயாகும். ஈசோப்பின் கதைகளும் பஞ்சதந்திரக் கதைகளும், ஒற்றுமை, அன்பு, பரோபகார சிந்தை முதலிய நற்குணங்களின் அருமையை இனிதும் எளிதில் மறக்கப்படக்கூடாததுமான நடையிற் கூறுகின்றன. அக்கதைகளின் தொன்மை அவற்றின் உபயோகத்தை மட்டுப்படுத்துகின்றதில்லை. சன்மார்க்க நெறியைமட்டுமல்ல, அதனிலும் உயர்ந்த தெய்வ ஆன்ம மர்மங்களையும் துலாம்பரப்படுத்தத்தக்க பல அருங்கதைகளைக் கிறிஸ்து நாதர் சொல்லியிருக்கின்றூர். அக்கதைகள் ஆன்ம மர்மங்களை கல்விப் பெருமைகொண்ட ஞானிகளுக்கு மறைத்து, பாலகர்போல் களங்க மற்ற மனத்தினரான பேதையருக்கு விளங்கக்காட்டும் சிறப்புப் பொருந்திய கதைகளாம். நீங்கள் பாலகரைப்போலாகாவிடின் பரம ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று குருநாதர் தாமே ஓர் முறை தம் சீடருக்கு எச்சரிப்புக்கூறினர். ஆதலால் கல்லாதவரும், சுத்த மனத்தினராயிருப்பின், அறிவுக் கெட்டாத ஆன்ம இரகசியங் களைக் கற்று மறவாதிருக்கும்படி குருநாதர் சொன்ன கதைகளையும், அவற்றிற்கு ஒத்த உபதேச வாக்கியங்களையும் இங்கு கூறுவோம்.

1. கடவுள்

சுகுண சம்பன்னன்:—

"உங்கள் பரமபிதா பூரண சற்குணராயிருப்பதுபோல நீங்களும் பூரண சற்குணரா யிருங்கள்."

துரும்பையும் காக்கும் காருண்யன்; மனக்கவலையை மார் மருந்து:—

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. கடவுளையும், பொன்னாசையாகிய மம்மோனையும் ஏககாலத்தில் சேவிக்க உங்களாலாகாது. ஆதலால், என்னத்தைப் புசிப்போம், என்னத்தைக் குடிப்போமென உம் பிராணனைக்குறித்தேனும், என்னத்தை உடுப்போமென உடலைக்குறித்தேனும் கவலைகொள்ளாதிரும். உடையைப்பார்க்கிலும் உடல் முக்கியமானதன்றோ? காட்டில் வசிக்கும் பறவைகளைப் பாருங்கள். அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, களஞ்சியங்களில் தானியத்தைச் சேர்ப்பதுமில்லை. என்றாலும் உமது பரம தந்தை அவைகளுக்கும் உணவளித்துக் காப்பாற்றுகின்றார். கவலைப்படுவதினால் தன் வளர்த்தியில் ஒரு முழத்தைக் கூட்டிக்கொள்ள எவனாலாகும்? வயல் வெளியில் பூக்கும் மலர்களைப் பாருங்கள். அவை உழைப்பதுமில்லை, நூல் நூற்பதுமில்லை. என்றாலும் கம்பீரமிகுந்த சாலொமோனரசனும் அம்மலர்களிலொன்றைப்போலேனும் அவ்வளவு அழகாய் உடுத்தியிருந்ததில்லையென்று நான் சொல்லுவேன். இன்றைக்கிருந்து நாளைக்கு உலர்ந்து அடுப்பிலிட்டு எரிக்கப்படும் புல்லை அத்தனை அழகாய் உடுத்துவிக்கும் ஈசன் உங்களுக்கு ஆடையளித்துதவானோ? மாந்தர்காள், நீங்கள் கடவுளைக் கொஞ்சமேனும் நம்புகிறதில்லையே! என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போமென கவலைகொண்டு கலங்காதிருமின். ஏனெனில் உணவும் உடையும் உங்களுக்கு மிக்க அவசியமானவையென்று உங்கள் பரம தந்தை அறிவார். அன்னம் ஆடையைக்குறித்த விசாரங்களை யொழித்துவிட்டு, முந்தமுந்த தெய்வ ராச்சியத்தையும் அதன் நீதியையும் நாடுங்கள், அப்பொழுது அவை யாவும் தெய்வ ராச்சியத்தோடு கூட்டிக்கொடுக்கப்படும். நாளைத்தினத்தைக் குறித்த கவலைவேண்டாம். அதை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். அந்தந்த நாளுக்கு அதனதன் விசாரமே போதும்."

"உங்களுக்கென்று இவ்வுலகின்கண் பொருள் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டாம். இங்கு பூச்சியும், துருவும், பொருளை அரித்துவிடும்; திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். உங்களுக்கென்று பரத்தில் பொருள் சேகரித்து வையுங்கள். அங்கு பூச்சியாவது, துருவாவது பொருளை அரிப்பதில்லை; திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. உங்கள் பொருள் எங்கேயிருக்கின்றதோ அங்குதான் உங்கள் மனமுமிருக்கும்."

"கேளுங்கள், பெற்றுக்கொள்ளுவீர்கள்; தேடுங்கள், கண்டடைவீர்கள்; தட்டுங்கள், கதவு திறக்கப்படும். ஏனெனில் கேட்கிறவன் பெற்றுக்கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகின்றான். தட்டுகிற எவனுக்கும் கதவு திறக்கப்படுகிறது. எந்தத் தகப்பனேனும் தன் மகன் புசிப்பதற்கு அப்பத்தைக் கேட்க கல்லையும், முட்டையைக் கேட்க தேளையும், மீனைக்கேட்க பாம்பையும் கொடுப்பானோ? பாவ ஜென்மிகளாகிய மானிடர் தம் மக்களுக்கு நல்ல பொருட்களையே கொடுக்க அறிந்திருக்குங்கால், உங்கள் பரமபிதா தம்மைக் கேட்போருக்குச் சிறந்த ஈவுகளைக் கொடுப்பாரென்பது அதிக நிச்சயமன்றோ?"

"உடலைமட்டும் அழிக்கும் சக்தியையுடைய மனிதருக்கு அஞ்சாமல், உடலையும் ஆன்மாவையும் தீநரகிலிட்டு நசிக்கும் ஆற்றலுடைய தெய்வமொன்றிற்கே பயப்படுங்கள்."

"ஒற்றைக்காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள் விற்கப்படுகின்றன. என்றாலும், அவற்றில் ஒன்றேனும் உமது தந்தையின் சித்தமில்லாது தரையில் வீழ்ந்து மாளுவதில்லை."

வழிவிலகிய மாந்தரைத் தேடிக்காக்கும் அன்பன்:—

"கடவுள் அன்பாகவே இருக்கின்றார்."

"ஒருவனுக்கு நூறு ஆடுகள் இருந்தன. அவற்றில் ஒன்று காணமற்போயிற்று. அவன் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டுவிட்டு, காணமற்போன ஒரு ஆட்டை விசாரத்தோடு தேடியலைந்தான். அதைக் கண்டபோது, தூக்கித் தன் தோளின்மீது வைத்துக்கொண்டு அதிக சந்தோஷமாக வீடுவந்தான். வீட்டை அடைந்தவுடன் நண்பரை அழைத்து 'நான் இழந்துவிட்ட ஆட்டை கண்டுகொண்டேன். என்னுடன் நீங்களும் கூடி களிகொள்ளுங்கள்' என்று சொன்னான். மனந்திரும்ப நிமித்தமற்ற தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்து உண்டாகும் மகிழ்வைக்காட்டிலும், மனமாறி நல்வழிப்படும் ஓர் பாவியைக்குறித்து விண்ணுலகில் மிகுந்த மகிழ்வு உண்டாகுமென்று நான் கூறுகின்றேன்."

"ஓர் நங்கை பத்து தங்கநாணயங்கள் வைத்திருந்தாள். அவ களிலொன்று காணமற்போயிற்று. அவள் விளக்கைக் கொளு வீட்டின் மூலை முடுக்குகளையெல்லாம் பெருக்கி அந்நாணயத் கண்டுபிடிக்குமட்டும் சலியாது தேடினள். அதைக் கண்டு

வுடன், தன் சிநேகிதரான அயல்வீட்டு நங்கையரை அழைத்து 'நான் இழந்துவிட்ட கனகக் காசைக் கண்டுபிடித்துக்கொண்டேன். என்னுடன் நீங்களும் மகிழ்கொள்ளுங்கள்' என்றாள். மனந்திரும்பும் ஓர் பாவியைக்குறித்து, தூதர்சேனையில் மிகுந்த சந்தோஷம் உண்டாகின்றதென நான் கூறுகின்றேன்."

2. கிறிஸ்து

"என் சுயசித்தத்தை நிறைவேற்றவல்ல, என்னை அனுபிய தெய்வத்தின் சித்தத்தை நிறைவேற்றவே நான் விண்ணுலகினின்று மண்ணுலகிற்கு வந்தேன்."

"நான் என்னிஷ்டமாய் ஒன்றும் போதிக்கிறதில்லை. நான் உரைப்பதும் ஓதுவதும் யாதென என்னை யனுப்பிய பிதா திட்டஞ் செய்திருக்கின்றார். பிதாவின் ஏற்பாடுகள் நித்திய ஜீவனைத் தரத்தக்க ஏற்பாடுகளாயிருக்கின்றனவென்று நான் அறிவேன்." "பாவங்களை மன்னித்து பரிகரிக்கும் அதிகாரம் மனிதகுமாரனுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது." "இகத்திலும் பரத்திலும் உள்ள சகல அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது."

"இழந்துபோனதைத் தேடி இரட்சிக்கவே மனிதகுமாரன் புவியிலுதித்தார்." "நீதிமான்களையல்ல, பாவிகளையே பரம ராஜ்ஜியத்திற்கு அழைக்கவந்தேன்." "நானே வழி. நானே சத்தியம். நானே ஜீவன்." "நானே நல்ல மேய்ப்பன். என் ஆடுகளைக் காக்க என் பிராணனையும் தத்தம்பண்ணுகின்றேன்."

"வருத்தப்படுவோரே, கவலையென்னும் பாரத்தைச் சுமப்போரே, நீங்கள் யாவரும் என்னிடம் வாருங்கள். நான் இளைப்பாற்றித் தேற்றுவேன். என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளோன். உங்கள் ஆன்மா தேற்றப்படுவதைக் காண்பீர்கள். என் நுகம் மிருதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கும்." "தன் ஜீவனைக் காக்க முயலு[illegible]வன் அதை இழந்துவிடுவான். எனக்காக தன் ஜீவனை இழந்துவிடு[illegible]றவன் அதைக் காத்துக்கொள்வான்."

3. தேய்வ இராச்சியம்

[illegible]தெய்வ இராச்சியத்தின் குடிகள் தரித்திரராகவும் நீதியின்மீது [illegible]ம் கொண்டோராயும், சாந்த புருஷராயும், சமாதானத்தை

நாடுகிறவராயும், ஆன்ம சுத்தமுள்ளோராயும் இருப்பாரெனக் குருநாதர் மலைப்பிரசங்கத்தில் கூறியதைக் கண்டுள்ளோம். பரம ராச்சியத்தின் குடிகளின் வேறு இலட்சணங்களையும் அந்த ராச்சியத்தின் சிறப்பையும் குறித்து குருநாதர் கூறிய வேறு சில வசனங்களையும் உவமானக் கதைகளையும் அடியிற் காண்க.

"நீங்கள் (தெய்வ இராச்சியத்தின் குடிகள்) உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள். விளக்கை யேற்றி மரக்காலால் மூடிவையாமல் விளக்குத் தண்டின்மேல் வைக்கிறார்கள். விளக்கின் வெளிச்சம் வீடெங்கும் பிரகாசிக்கின்றது. அதுபோல உங்கள் வெளிச்சம் மாந்தர் முன் பிரகாசிக்கவேண்டும். அதன் சுடர்களாகிய நற்குண நற்செய்கைகளைக் கண்டு அவனியோர் உமது பரம பிதாவைப் போற்றவேண்டும். நீங்கள் உலகத்திற்கு உப்பாயிருக்கின்றீர்கள். உப்பே சாரமற்றுப் போனால் அதற்கு சாரம் ஊட்டுவது எங்ஙனம்? சாரமற்ற உப்பு ஒன்றுக்கும் பயன்படாது. அதை எறிந்துவிடத்தான் வேண்டும். எறிந்துவிட்ட உப்பு காலால் மிதிபட்டு மண்ணோடு மண்ணாய்ப் போய்விடும்."

பரலோக இராச்சியத்தின் அருமை

பரலோக இராச்சியம் நிலத்தில் புதைந்துகிடக்கும் திரண்ட திரவியத்தைப்போலிருக்கின்றது. நிலத்தில் புதையவிருப்பதை அறிந்த ஒருவன் மிகுந்த சந்தோஷமாய் தனக்குள்ள பொருளையெல்லாம் விற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்ளுகின்றான். பரலோக இராச்சியம் விலையுயர்ந்த வெண்முத்தைப்போலிருக்கின்றது. நல்ல முத்துக்களைத் தேடிக்கொண்டிருந்த வியாபாரி அதைக் கண்டவுடன் தன்னிடமிருந்த முத்துக்களையும் மற்ற பொருட்களையும் விற்று அந்த ஒரு முத்தை வாங்கத் துரிதப்படுகின்றான்.

பரலோக இராச்சியத்தில் சோம்பேறிக்கு இடமில்லை

"இடுக்கமான வாசல்வழியே உட்பிரவேசியுங்கள். ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அவ்வழிச் செல்லுவோரனேகர். நித்திய வாழ்விற்குச் செல்லும் வழியோ ஒடுக்கமும் நெருக்கமுமாயிருக்கின்றது. அவ்வழி செல்லுவோர் வெகு சிலர்."

தேசயாத்திரை செய்ய வுன்னிய சீமானொருவன் தன் உக்கிராணக்காரர் மூவருக்குத் தன் திரவியத்தைப் பகிர்ந்துகொடுத்து அதை விர்த்திபண்ணக் கட்டளையிட்டான். உக்கிராணக்காரரின் திறமைக்கு ஏற்க, ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், மற்றவனுக்கு இரண்டு தாலந்தும், மூன்றாமவனுக்கு ஒருதாலந்தும்* முதலாகக் கொடுத்தான். பின்பு சீமான் பிரயாணம் சென்றான். முதலாம் உக்கிராணக்காரன் சுறுசுறுப்பாகவும் ஜாக்கிரதையாகவும் வியாபாரம்பண்ணி தன் முதலை இரட்டிப்பாகப் பெருகச்செய்தான். இரண்டாவது உக்கிராணக்காரனும் அப்படியே செய்து தன் முதலை அதிகரித்தான். கடைசி உக்கிராணக்காரனோ தன் முதலை முடிப்புகட்டி வீட்டுமூலையில் பத்திரமாகப் புதைத்துவைத்துவிட்டு தன் பாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். சீமான் வெகுகாலம் பொறுத்துத் திரும்பிவந்து உக்கிராணக்காரரை யழைத்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முதலை என்ன செய்தார்கள் என்று விசாரித்தான். "ஐயா, தாங்கள் முதலாகக் கொடுத்த நிதி ஐந்து தாலந்து. அதைக்கொண்டு வியாபாரம் செய்து இதோ லாபமும் முதலுமாக பத்துத் தாலந்து கொண்டுவந்திருக்கிறேன்" என்று முதலாம் உக்கிராணக்காரன் சொன்னான். அப்பொழுது சீமான் மிகுந்த சந்தோஷமடைந்து "சபாஷ்! உண்மையுள்ள உத்தம உக்கிராணக்காரனே! உனக்குச் கொடுத்த சொற்ப திரவியத்தை நீ நன்றாய் உபயோகித்தாய். சீக்கிரம் திரண்ட சொத்தை உன்வசம் ஒப்புவிப்பேன். இப்பொழுது என்னுடன் விருந்துண்டு களித்திருப்பாய், வா!" என்றழைத்தான். இரண்டாம் உக்கிராணக்காரன் முன்வந்து "ஐயா, தாங்கள் கொடுத்த முதல் இரண்டு தாலந்து. அதைக்கொண்டு வியாபாரம்செய்து இதோ முதலும் வட்டியுமாக நான்கு தாலந்து கொண்டுவந்திருக்கின்றேன்" என்றனன். அப்பொழுது சீமான் வெகு சந்தோஷத்தோடு "சபாஷ்! உண்மையுள்ள உத்தம உக்கிராணக்காரனே! உனக்குக் கொடுத்த சொற்ப திரவியத்தை நீ விவேகமாய் உபயோகித்தாய். சீக்கிரம் திரண்ட சொத்தை உன்வசம் ஒப்புவிப்பேன். இப்போது, என்னுடன் விருந்துண்டு களித்திருப்பாய், வா!" என்றழைத்தான். பணத்தைப் புதைத்துவைத்த கேடுகெட்ட மானிடனோ முன்வந்து நீண்ட

* ஒரு தாலந்து ஏறக்குறைய 240 பவுண் விலையுள்ள நாணயம்.

கதை சொல்லத் துவங்கினன். "ஐயா, நீர் மிகக் கண்டிப்புக்கார ரென்றறிவேன். மற்றவர் விதைத்த நிலத்தை அறுத்துக்கொள்ளுவதும், மற்றவன் தூற்றுங்களத்தில் தானியத்தைச் சேர்த்துக்கொள்ளுவதுமே உமது தன்மை. ஆதலால் நான் மிகவும் பயந்து, கொடுத்த பணத்தை அப்படியே கொண்டுபோய் வெகு பத்திரமாகப் புதைத்துவைத்திருந் தேன். இதோ உமது பணம்; பெற்றுக்கொள்ளும்" என்றறைந்தனன். அதைக் கேட்டபொழுது சீமான் கடுஞ்சினமுற்று "திருட்டுப் பயலே! சோம்பேறி! நான் மற்றவன் விதைக்க அறுத்துக்கொள்ளுகிறவனென் றும், மற்றவன் களத்தில் தூற்றிய தானியத்தைச் சேர்த்துக்கொள்ளு கிறவனென்றும் நீ அறிவாய், அல்லவா? நீ ஒரு சவுக்காரிடம் என் பணத்தைக் கொடுத்திருப்பின், உனக்குச் சிறிதும் சிரமம்கொடாமல் நானே கண்டிப்பாக வட்டியையும் முதலையும் வாங்கிக்கொண்டிருப் பேனல்லவோ?" எனக் கடிந்துரைத்தான். தன் சேவகரை நோக்கி "இந்த முழுச்சோம்பேறி கையிலிருக்கும் பணத்தைப் பிடுங்கி முதலாம் உக்கிராணக்காரனிடம் கொடுங்கள். ஒன்றுக்கு முதவாத இப்பயலைக் கட்டி இருண்ட அறையிலடைத்துவிடுங்கள். அவன் அங்கே அழுது பல்லைக் கடித்துக்கொண்டு வருந்தட்டும்" என்று கற்பித்தான்.

இலௌகீக சிந்தையுள்ளோருக்கும் சுயநீதிப் பெருமை கொண்டோருக்கும் அங்கு இடமில்லை

பரம இராச்சியத்தை, தனயனின் விவாக வைபவத்தைக் கொண்டாட விருந்தளித்த ஓர் வேந்தனுக்கு ஒப்பிடலாம். வேந்தன் பல பிரபுக்களை அவ்விருந்திற்கு அழைத்திருந்தான். அழைக்கப்பட்ட விருந்தினரைக் கூப்பிட அரசன் தன் ஏவலாட்களை அனுப்பிய பொழுது, அவர்களிலொருவரேனும் வரவில்லை. "விருந்துணவு தயாராகிவிட்டது. சுவைமிகும் கறிபதார்த்தங்களும் சமைத்தாகி விட்டது. யாவும் திட்டமாயிருக்கின்றது. கல்யாண விருந்திற்கு வருக, வருக" என்று அழைக்கப்பட்ட அதிதிகளுக்குரைத்து அவர் களைக் கையோடு கூட்டிக்கொண்டுவர, வேந்தன் வேறுசில சேவகரை யும் ஏவினன். அதிதிகளோ சேவகரின் அழைப்பைச் சிறிது இலட்சியம் செய்யாது ஒருவன் தன் காணியையும், மற்றொருவ தன் வியாபாரத்தையும் கவனிக்கச் சென்றுவிட்டான். சிலர் அரச

சேவகரை அடித்து அவமதித்துக் கொன்றுவிட்டனர். அரசன் கடுங் கோபமடைந்தான். தன் சைனியத்தை யனுப்பி அந்தக் கொலைப் பாதகரைக் கொன்று அவர்கள் நகரைச் சுட்டெரித்தான். பின்னர் தன் வேலைக்காரரை நோக்கி "கல்யாண விருந்து தயாராகியிருக்கின்றது. அழைக்கப்பட்ட அதிதிகளோ அதை அருந்திக் களிக்கும் சிலாக்கியத்தை இழந்துவிட்டார்கள். நீங்கள் பட்டணத்தின் வீதிகளில் காணும் யாவரையும் விருந்திற்கு அழைத்து வாருங்கள்" என்றான். சேவகர் தெருவிலிருந்த நல்லோர் தீயோர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவரையும் ஒருங்கே அழைத்துவந்து, அவர்கள் குளித்தபின் அரசனளித்த புதிய வஸ்திரங்களை அணிந்துகொண்டு விருந்து பரிமாறப் பட்டிருந்த மண்டபத்திற்குப் போகும்படி ஏற்பாடு செய்தார்கள். யாவரும் மனமுவக்கப் பந்தியிலமர்ந்து புசிக்கையில், அரசன் விருந்தினரைப் பார்க்கவந்தான். ஆங்கு ஓர் அதிதி அரசனளித்த உடையை அணியாது, தன் சொந்த உடையையே தரித்துக்கொண்டு உணவாடக் கண்டு, "அப்பா! நீ கல்யாண வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளாது மண்டபத்திற்குள் என் வந்தாய்?" என்று மன்னவன் கேட்க, அதிதியோ நியாயமான முகாந்தரம் யாதும் சொல்லக்கூடாதவனாய் வாய்த்திறவாதிருந்தான். அரசன் சேவகரைப் பார்த்து, "இவனைப் பிடித்து வெளியே துரத்திவிடுங்கள்" என்றான்.

பெரியோர், சிறியோர், பாலரினருமை

இயேசுவின் சீடர், பரலோக இராச்சியத்தில் மிக்கப் பெரியோர் யாவரென குருநாதரைக் கேட்க, அவர் ஓர் குழந்தையைக் கூப்பிட்டு, அவர்கள் நடுவில் நிறுத்தி பின்வருமாறு உபதேசித்தார்: "நீங்கள் மனம் மாறி பாலகரைப்போலாகாவிடின், பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பதில்லை. இது திண்ணம். இந்தக் குழந்தைக்குச் சமானமாக எவன் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுகிறானோ அவனே பரலோக இராச்சியத்தில் மிக்கப் பெரியோனாவன். என் நிமித்தம் இப்பாலகனைப்போன்ற வோர் பாலகனை எவன் உவந்தரவணைக்கின்றானோ அவன் என்னை உவந்தரவணைக்கின்றான். ஆனால் எந்தக் குழந்தையையேனும், என்னிடம் பக்திகொண்டிருக்கும் எந்தச் சிறுவனையேனும், [illegible]ப் படுகுழியில் இடறிவிழச் செய்பவன் பெரும்பாதகனாவன். [illegible]ர் பிறவாதிருப்பின் நலமாயிருந்திருக்கும். அவன் கழுத்தில்

இயந்திரக் கல்லைக் கட்டித் திரைகடலின் ஆழத்தில் ஆழ்த்திவிடுவதே வாசி. இவ்வித இடையூறுகளால் உலகில் விளையும் தீங்கு அதிகம். இடறல்கள் ஏற்படாதிருப்பது அரிதேயெனினும், எவனால் இடறல்கள் ஏற்படுகின்றனவோ அவன் அதோகதியடைவான்.

"உன் கையாவது காலாவது இடறலுண்டாக்கிடின், அதைத் தறித்தெறிந்துவிடு. இருகரங்களும் இருகால்களு முள்ளோனாக நித்திய அக்கினியில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், அங்கவீனனாக நித்திய வாழ்வைப் பெறுவதே நன்று. உன் கண் இடறலுண்டாக்கிடின் அதைப் பிடுங்கி எறிந்துவிடு; இரண்டு கண்ணுள்ளோனாக நரகத் தீயில் வீழ்வதைக் காட்டினும் ஒற்றைக் கண்ணனாக நித்திய ஜீவனுக்குட் செல்லுவதே நன்று.

"இச்சிறுவரி லொருவரையேனும் அலட்சியம் பண்ணாதீர்கள். ஏனெனில் அவர்களுடைய காவலாளராகிய தேவதூதர் பரத்தில் என் தந்தையின் திருமுகப் பிரகாசத்தை இடையறாது நோக்கிக் கொண்டிருக்கின்றனர்."

குருநாதர் அதிக அலுவலாக விருந்தபொழுது, தம் பாலரை அவர் தம் திவ்விய மார்போடணைத்து அவர் கரங்களைத் தலைமேல் வைத்து ஆசீர்வதிக்கும்படி அன்னையர் கொணர்ந்தனர். சீடர் அப்பெண்களைத் துரத்தினதைக் குருநாதர் கண்டு, "குழந்தைகள் என்னிடம் வரட்டும், தடை செய்யவேண்டாம். பரலோக இராச்சியம் இப்படிப்பட்டவர்களுக்கே உரியது" என்று சொன்னார். அதன்பின் தாய்மார் குழந்தைகளைக் கொண்டுவரவே, குருநாதர் பாலகர் சிரமீது தம் கரங்களை வைத்து ஆசிடையளித்தார்.

தன் குற்றம் பாராது பிறர் குற்றம் பார்த்தல்

உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தைப் பாராது உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பைப் பார்ப்பது நீதியாமோ? உன் கண்ணில் உத்திரம் இருப்பதை உணராது, உன் சகோதரனைப் பார்த்து "சகோதரனே, உன் கண்ணிலோர் துரும்பு கிடக்கின்றது, பொறு, நான் அதை எடுத்துவிடுகிறேன்" என்று எங்ஙனம் சொல்லத்துணிவாய், மாய பக்திக்காரனே, முன்பு உன் கண்ணை உறுத்தும் உத்திரத்தை எடுத்துவிட வகைதேடு. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துவிட உன் கண் போதிய தெளிவு பெறும்.

மரமும், கனியும்

நல்ல மரம் நறுங்கனிகளைத் தரும். கெட்ட மரம் நறுங்கனி கொடாது. மரத்தின் தன்மை கனியில் விளங்கும். முட்செடியில் அத்திப்பழமும், முட்கொடியில் திராட்சைப்பழமும் கிடைக்குமோ? நல்லோர் நன்மைக்களஞ்சியமாகிய தம் மனத்திலிருந்து எடுத்துப் பாவிப்பதெல்லாம் நன்மையானவையாகவே யிருக்கும்; தீயோர் தம் துர்ச்சிந்தையாகிய களஞ்சியத்திலிருந்து எடுத்துப் பாவிப்பதெல்லாம் தீதாகவே யிருக்கும். மனதில் ததும்பி கிடப்பதையே வாய் பேசும்.

என்னை நோக்கி "கர்த்தாவே! கர்த்தாவே!" என முகமன் இயம்பி, என் சொல்லுக்கமையாதிருப்பதால் யாது பயன்? என்னை அண்டி, என்னுரையைக் கேட்டு அதன்படி ஒழுகுபவன் எத்தகையோனெனக் கூறுகின்றேன், கேளும். அவன் ஆழமாகத் தோண்டி, பாறையின் மேல் அஸ்திபாரம்போட்டுத் தன் வீட்டைக் கட்டின புத்திமானைப்போ லிருக்கின்றான். புயல் காற்றடித்தது; மழை சோவெனச் சொரிந்தது; ஆற்றில் வெள்ளம் பெருக்கு எடுத்து பாய்ந்தது. என்றாலும் அந்த வீடு சற்றேனும் அசையாது நின்றது. ஏனெனில் அதன் அஸ்திபாரம் பலமா யிருந்ததாலன்றோ? என் போதகத்தைக் கேட்டு அதன்படி ஒழுகாதவனோ, மணலின்மேல் வீட்டைக் கட்டிய மதியீனனைப்போ லிருக்கின்றான். ஆற்றின் வெள்ளம் வீட்டின்மேல் மோதியவுடன் அது விழுந்து இருந்த இடமும் தெரியாமல் மண்மேடாகிவிட்டது.

புதியதும், பழையதும்

பழைய வஸ்திரத்தோடு கோடித்துணியை ஒருவனும் இணைத்துத் தைக்கமாட்டான். கோடித்துணி பழைய வஸ்திரத்தோடு பொருந்தாது அதைக் கிழித்துவிடும். நவமான திராட்சரசத்தை ஒருவனும் பழைய துருத்தியில் வார்த்து வைக்கமாட்டான். அப்படிச் செய்தால் திராட்சரசம் துருத்தியைக் கிழித்துவிடும். இரசமும் சிந்திப்போகும், துருத்தியும் நாசமாகும்.

புறக்கோலம் வீண்

நீங்கள் தானமிடும்பொழுது வேஷதாரிகளைப்போல், ஜெப யங்களிலும் தெருக்களிலும் தாரை ஊதுவியாதிருங்கள். மாய ான வேஷதாரிகள், தங்கள் தர்மசிந்தையை யாவரும் அறிந்து

கொண்டாட அவ்வாறு செய்கின்றார்கள். அவர்கள் நாடும் பிரதி பலன் கீர்த்தி. அதை அவர்கள் பெற்றுக்கொள்ளுகின்றார்கள். நீங்களோ, உங்கள் வலதுகை செய்வதை இடதுகை அறியாதபடி இரகசியமாகப் பிச்சையிடுங்கள். அப்பொழுது சகல இரகசியங்களையும் அறியும் உங்கள் பரம தந்தை உங்களுக்குப் பகிரங்கமாகப் பிரதியுபகாரமளிப்பார்.

அப்படியே, ஜெபிக்கும்பொழுதும், அறைக்குட்சென்று கதவை அடைத்துக்கொண்டு அந்தரியாமியாக விருக்கும் உங்கள் தந்தையை நோக்கி ஜெபியுங்கள். சகல இரகசியங்களை அறியும் உங்கள் தந்தை உங்களுக்குப் பலனளிப்பார்.

நீங்கள் உபவாசிக்கும்பொழுது மாய பக்தரைப்போல் முக வாட்டம் கொள்ளாதீர்கள். பிறர் தாம் உபவாசிப்பதைக் கண்டு மெச்சிக்கொள்ளவேண்டுமென்று, மாயபக்தர் சஞ்சலம் மிகுத்தோர் போல விழிக்கின்றார்கள். ஆனால் நீங்கள் உபவாசிக்கும்பொழுது, தலைக்கு எண்ணெய் பூசி, முகத்தைக் கழுவி, மலர்ந்த வதனத்தோராகத் தோன்றுங்கள். உங்கள் உபவாசத்தை மனிதரல்ல, எங்கும் வியாபித்திருக்கும் உங்கள் தந்தை கண்டு பலனளிப்பார்.

சகோதரத்துவம்

கொல்லாதே என்றும், கொலைசெய்தவன் தீர்ப்படைய வரவேண்டுமென்றும், தன் சகோதரனைப்பற்றி அவதூறு பேசுகிறவன் சனகரீம் சங்கத்திற்குமுன் வரவேண்டுமென்றும், தன் சகோதரனைச் சபிப்பவன் எரிநரகில் வீழ்வானென்றும் பூர்வத்தார் கற்பிக்கப்பட்டாரென நீங்கள் கேள்வியுற்றிருக்கின்றீர்கள். நான் கற்பிப்பது யாதெனில், காரணமில்லாது தன் சகோதரனோடு கோபித்துக்கொள்பவனைக் கடவுள் தீர்ப்புச்செய்து தண்டிப்பார். ஆதலால், பலிபீடத்தில் உன் காணிக்கையைப் படைத்து ஈசனைத் துதிசெய்ய வந்து நிற்குஞ் சமயத்தில், உன் சகோதரன் உன்மீது குற்றஞ் சாட்டியிருப்பது நினைவில் தோன்றிடின், உன் காணிக்கையை பலிபீடத்தருகே வைத்துவிட்டு திரும்பிப்போ. முன்பு உன் சகோதரனோடு ஒப்ப வாகு, பின்பு திரும்பிவந்து உன் காணிக்கையைப் படைத்து ஈச வந்திப்பாயாக. உனக்குத் தீங்கிழைத்த ஒருவன் குற்ற முண வர்மஞ்சாதித்தால், இரண்டொரு பெரியோரைக்கொண்டு சமா

துக்கான வழிதேடு. பெரியோருக்கும் இணங்காவிடின், அவனை அந்நியனாகப் பாவித்துத் தள்ளிவிடு.

"ஆண்டவரே! எனக்குத் தீங்கிழைக்கும் சகோதரனை நான் எத்தனைதரம் பொறுத்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்? ஏழு தரமோ?" என்று பேதுரு குருநாதரை வினவ, அவர் கூறுவார்: "ஏழு தரமா? ஏழெழுபதுதரம் என்று நான் சொல்லுகின்றேன்! பிறர் ஈட்டிய குற்றத்தைப் பாராட்டாது பொறுத்துக்கொள்ளுவது பரலோக இராச்சிய வாசிகளின் பிரதான கடமையாயிருக்கின்றது. ஆதலால் பரலோக இராச்சியத்தைத் தன் ஊழியரோடு கணக்குத் தீர்க்கத் தீர்மானித்தவோர் அதிகாரிக்கு ஒப்பிடலாம். ஊழியரிலொருவன் முப்பது லட்சம் பவுண் கடன் வாங்கியிருந்தான். கடனைத் தீர்க்க அவனுக்குத் திராணியில்லை. அவனையும், அவன் மனைவி மக்களோடு வீடுவாசல், அவனுக்குள்ள மற்ற யாவற்றையும், விற்றுவிட அதிகாரி கட்டளையிட்டான். கடன்பட்டோன் கலங்கிக் கண்ணீருகுத்து, அதிகாரியின் காலில் வீழ்ந்து, 'ஐயா, சிறிது பொறுக்கவேண்டும்; நான் பட்ட கடனைக் கூடியசீக்கிரம் கட்டித் தீர்த்துவிடுகின்றேன்' என்று கெஞ்சினான். அதிகாரி இரக்கங்கொண்டு, ஊழியக்காரனின் கடனை மன்னித்துவிட்டான். அவன் எழுந்து தன் வீட்டிற்குப் போகுங்கால், தன்னிடம் இருபது பவுண் கடன் வாங்கியிருந்த உடன் ஊழியனைச் சந்தித்தான். சில வினாடிகளுக்கு முன் தானிருந்த நிலையையும், அதிகாரி தனக்குச் செய்த பேருபகாரத்தையும் முழுவதும் மறந்துவிட்டு, தன் உடன் ஊழியனைப் பிடித்து, அவன் கழுத்தை நெரித்து, 'பட்ட கடனைக் கொடு' என்று கேட்டான். கடன்பட்டவனோ அவனடிமேல் வீழ்ந்து 'ஐயா, சிறிது பொறுக்கவேண்டும். நான் பட்ட கடனைக் கூடியசீக்கிரம் கட்டித் தீர்த்துவிடுகிறேன்' என்று கெஞ்சினான். அவ்வன்கண்ணனோ, சிறிதும் இரங்காது, உடன் ஊழியனைச் சிறையிலடைத்தான். இக்கொடுஞ்செயலைக் கேட்டவர்கள் மிகவும் துக்கித்தார்கள்; அதிகாரி டஞ்சென்று நடந்ததனைத்தையும் இயம்பினார்கள். அதிகாரி இரக்க ற ஊழியனைப் பிடித்து வரச்சொன்னான். அவன் வந்தவுடன் னைப் பார்த்து 'அடா, சண்டாளா! நீ பட்ட பெருங்கடனை உன் ட்டுக்கிணங்கி நான் மன்னித்துவிட்டேனே. நான் உனக்கு பாராட்டியதுபோல், நீயும் உன் உடன் ஊழியனுக்கு

இரக்கம் பாராட்டவேண்டாமோ?'' எ ன். கடுங்கோபத்துடன்
அதிகாரி அந்நன்றிகேடனை சித்திரவதை யக் கட்டளையிட்டான்.
பிறர் இழைக்கும் குற்றத்தை நீங்கள் வத்துக்கொள்ளாவிடின்,
நீங்கள் பிணைக்குந் தீவினையை என் பரம பொறுத்தருளார்.''

நியாயசாஸ்திரி யொருவன் குரு ா புத்திகூர்மையையும்
ஞான தீட்சணியத்தையும் பரீட்சிக்கக் , குருநாதரை நோக்கி,
''போதகரே, நித்திய ஜீவனைப் பெற செய்யத்தக்கது யாது?''
என்று வினவினன். ''நியாயசாஸ்தி நீ தர்மசாஸ்திரத்தில்
படித்தது என்ன? சாஸ்திரம் விதிக்கு ாணம் யாது?'' என்று
குருநாதர் அவனைக் கேட்க, ''உன் இத த்துமன், சிந்தையனைத்
தையும் தெய்வமாகிய நாதன்பாற் செலு அவரிடம் பலத்த அன்பு
கொண்டொழுகுவாய் என்றும், உனதக ன்புகொள்ளுமாப்போல்
உனதயலானிடமும் அன்புகொண்டுய ாறும் சாஸ்திரம் இயம்பு
கின்றது'' என்று நியாயசாஸ்திரி ப ா. ''ஏற்ற மறுமொழி
பகர்ந்தாய். சாஸ்திர விதியைக் கை தொழுகுவாயாக. அப்
பொழுது வாழ்வடைவாய்'' என்று தர் கூறினர். அதற்கு
சாஸ்திரி, தர்மசாஸ்திரம் குறிப்பிடு லான் யாவன் என்று
கேட்க, குருநாதர் பின்வரும் கதையை ன்னர்.

எருசலேமிலிருந்து அவசரமாக பிற்குப் பயணஞ்சென்ற
ஒருவன், கள்ளர்கையி லகப்பட்டா ளர் அவனுடையையும்
உரிந்துகொண்டு, அவனை அடித்துக் த்தி குற்றுயிராக விட்டுச்
சென்றார்கள். இதன்பின் ஆசாரிய ன் அவ்வழிச் செல்லு
கையில், காயப்பட்டுக்கிடந்த பிர பப் பார்த்தும் அவன்
கிட்டப்போகாமல் தன் வழியே யே பின்னர் லேவியனொரு
வன் அப்படியே செய்தான். கடை மாரியன் (சமாரியர் யூத
ரால் அவபக்தரென்றெண்ணப்பட்ட ஒருவன் அவ்வழியே ஓர்
வாகனத்தில் ஏறிச்சென்றான். அ சையாகிக் கிடந்த பிர
யாணியைக் கண்டவுடன், தன் வா ன்று குதித்து, அவனை
யண்மி, அவன் காயங்களில் எண்ணெ , திராட்ச இரசத்தையும்
ஊற்றி, காயங்களை அதிபதனமாகக் ா வாகனத்தின்மீதேற்றி
மெதுவாக நடத்திச் சென்றான். ரத்தைச் சேர்ந்தவுடன்,
அவனை அங்கு வைத்துப் பராமரித் ஓர் நாள் முழுவதும் அவ
னோடு தங்கியிருந்து அவனுக்கு உத ன். மறுநாள் சமாரியன்

பயணப்பட்டபொழுது, […]திரக்காரனிடம் கொஞ்சம் பணம் கொடுத்து, காயப்பட்ட[…]குவேண்டிய சவரட்சணை செய்யவும், ஆகும் சிலவை தான் […]பி வரும்பொழுது கொடுப்பதாகவும் சொல்லிச் சென்றான்.

இக்கதையைச் சொ[…]ருநாதர் நியாய சாஸ்திரியைப் பார்த்து, "ஆசாரியன், லேவியன், […]யன் ஆகிய அம்மூன்று பிரயாணிகளில், கள்ளர்கையிலகப்பட்டு […] பிரயாணியைத் தன் அயலானாகப் பாவித்து அன்புகொண்[…] யாவன்?" என்றார். அயலானிடம் அன்புகொண்டொழுகிய […]ள்ளர்கையிற் சிக்கிய பிரயாணியைப் பராமரித்த சமாரியனெ[…]னயென்று நியாயசாஸ்திரி விடை பகர்ந்தான். நித்திய ஜீ[…]சுந்தரிக்கும் வழி யாதென்றறிய விரும்பிய சாஸ்திரியைப் பார்த்[…]நாதர் யாதுசொன்னாரெனில், "நீயும் போய் அந்த உத்தம சமா[…]போல் பரோபகார சிந்தைகொண்டுய்வாயாக" என்பதே.

ெ[…]ைபத்தீர்ப்பு

மனிதகுமாரன், தட[…]தரனைவரும் புடைசூழ மகிமைச் சொரூபியாய்த் தோன்று[…]ல், தமது சீரிலங்கும் சிம்மாசனத்திலமருவார். சகல தேசத்[…]அவர்முன் நிற்பர். செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் […] தன் வல இடப்பாரிசம் நிறுத்தும் ஆயனைப்போல், மனிதகு[…]தம்முன் நிற்கும் மாந்தரைப் பிரித்து நிறுத்துவார். பின் வலப[…]ற்போரை நோக்கி, "என் பிதாவின் ஆசிடை பெற்ற பக்தர்க[…]க, வருக. உலகத்தோற்றத்திற்கு முன்னரே திட்டமாகியிரு[…]ரம இராச்சியத்தில், உங்களுக்குரிய பிதிராச்சியத்தைச் சுதந்[…]கொள்ளுங்கள். ஏனெனில், நான் பசியால் வருந்தினேன், […] உணவளித்தீர்கள். தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் த[…]. அந்நியனாகத் தோன்றினேன், என்னை உவந்து உபசரித்[…] நிர்வாணியாயிருந்தேன், எனக்கு உடையளித்தீர்கள். பிண[…] குறுகினேன், என்னைப் பராமரித்தீர்கள். காவற்கூட[…]து நலிந்தேன், என்னைப் பார்த்துத் தேற்றினீர்கள்" என்ப[…]பொழுது அவ்வுத்தமர் மனிதசுதனை நோக்கி "நாதா, […]யாயிருக்கக்கண்டு நாங்கள் உணவளித்துதவியது எப்போ[…]கங்கொண்டு வருந்த, தண்ணீர்

கொடுத்தது எப்போது? உம்மை அந்நிய கண்டு உபசரித்தது
தான் எப்போது? உடுக்கையிழந்தோனாகச் உடையளித்தது எப்
போது? பிணியுற்றுக் குறுகவேனும், க றையில் நலியவேனும்
கண்டுதேற்றியது எப்போது?'' என்று ல்லுக்கடங்கா வியப்
போடு கேட்பார்கள். "என் சகோதரரா ந்தரிலொருவனுக்கு,
மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்தவனுக்கு, நீ என்னென்ன நன்மை
செய்தீர்களோ, அதையெல்லாம் எனக்கே ய்தீர்கள் என்று நான்
உறுதியாய்ச் சொல்லுகின்றேன்'' என் ளிதகுமாரர் பிரதியுத்
தார முரைப்பார்.

இடது பாரிசம்நிற்கும் மாந்தரை நே 'சபிக்கப்பட்ட மாந்தர்
காள்! என் சமுகத்தில் நில்லாதேயுங்கள். னுக்கும் அவன் கணங்
களுக்கும் உறைவிடமாக அமைக்கப்பட் அவியாத அக்கினியில்
போய்விழுந்து தவியுங்கள். நான் பசியால் னேன், நீங்கள் எனக்கு
உணவளித்தீரில்லை; தாகமாயிருந்தேன், கத்தைத் தீர்த்தீரில்லை;
அந்நியனாகத்தோன்றினேன், என்னை உ பசரித்தீரில்லை; நிர்வா
ணியாயிருந்தேன், உடையளித்தீரில்லை கொண்டு குறுகினேன்,
காவல் கூடத்திலிருந்து நலிந்தேன், பார்த்துத் தேற்றினீ
ரில்லை'' என்று மனிதசுதனார் உ ந்த நிர்ப்பந்த மாந்தர்
அவரைப் பார்த்து, "நாதா! எப்போது யால் வருந்தவேனும்,
தாகங்கொண்டு தவிக்கவேனும், கவேனும், உடுக்கை
யிழந்தோனாகவேனும், பிணியுற்றோனா ம், சிறையிலடைபட்ட
கைதியாகவேனும் இருக்கக்கண்டு உதவிபுரியாதொழிந்
தோம்?'' எனக் கேட்பர். மனித பிரதியுத்தரமாக, "என்
சகோதரராகிய மாந்தரிலொருவனுக் தாழ்ந்த நிலையிலிருந்த
வனுக்கு, நீங்கள் என்னென்ன உத செய்ய மறுத்தீர்களோ,
அதையெல்லாம் எனக்கே செய்ய மறு என நான் உறுதியாகச்
சொல்லுகின்றேன்'' என்பார்.

"சபைகளில் இவைகளை அறிவ சுநாதராகிய நான் என்
தூதனை அனுப்பினேன். நான் த வம்சத்திலுதித்த புருஷ
சிகாமணியும், ஜொலித்திலங்கும் உ கயுமாயிருக்கின்றேன்.''

"பரிசுத்த ஆத்துமனானவரும், மகிபரின் ஞான மண
வாட்டியாகிய திருச்சபையும் வா ரையும் அழைக்கின்றார்

கள். அவ்வழைப்பை கேட்பவனும் பிறரை அழைப்பானாக. ஆன்ப தாகங்கொண்டுள்ளோ வரக்கடவன். ஜீவ தண்ணீரைப் பருக விரும்புபவன் அதை இலவசமாகக் கேட்டுப் பெற்றுக்கொள்ளக் கடவன்."

"இவைகளைப் பி கக் கற்பித்திருக்கும் கர்த்தன் 'நான் துரித மாக வருகிறேன்; அ சயம்' என்றறைகின்றார்."

"ஆமென்! இயே தரே, வருக! வருகவே!!"

"அருள்பழுத்த க மண் டலத்தினானை
யளிநிறை லலோசனத் தெம்மானைத்
தெருள்பழுத்த ழி கனிவாயானை
ஜென்மவி ணித்தருள்சீர் பாதத்தானை
மருள்பழுத்த ம னத் தெருட்டினானை
வான்கதிக் சிறந்த வலத்தினானை
இருள்பழுத்த ந க வெம்பிரானை
யென்றுமெ கண்குளிரக் காணுநாளே."

DIOCESAN DRAS—1933. B. 9711

மென்ற அவா அவர்க்குப் பெரிதும் உண்டு. தமிழ்மொழியில் பல நூல்கள் உற்பத்தியாகவேண்டுமென்றும் ஆங்கிலேயம் கற்காதவர்களும் கற்றவர்களும் தமிழிலே எழுதப்படும் புது நூல்களைப்படித்து, அறிவு விருத்தியாகி அகக்கண் திறந்து, எல்லாம் வல்ல இறைவனை உண்மையாய் வழிபடவேண்டுமென்றும் அதிக விருப்பங்கொண்டவர். தமக்குள்ள பிரதம ஆசிரியர் வேலையோடு எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்த நூலை எழுதி இதை அச்சிலேற்றுவதற்கு வேண்டிய முயற்சியும் செய்தது அவர் தமிழ் மொழியின்மேல் கொண்டுள்ள அபிமானத்திற்குப் போதிய சான்றாகும்.

கிறிஸ்து பகவானுடைய திருச்செயல்களும் திவ்ய உபதேசங்களும் கிறிஸ்தவ வேதமென்ற விவிலிய நூலில் காணப்படுகின்றன. யார் யார் அவரைப்பற்றி உண்மையாய் அறிந்து அவருடைய தொண்டர்களாக விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் இந்த நான்கு சுவிசேஷங்களையும் ஜெபதப தியானத்தோடு படிக்கவேண்டியது. ஆனால் இந்தச் சுவிசேஷங்களில் கிறிஸ்து பகவான் இருந்த காலத்தைப்பற்றித் தெளிவாகக் கூறப்படவில்லை. ஒரே சரித்திரத்தை நான்கு ஆசிரியர்கள் யெழுதுவதால் சில சுவிசேஷங்களில் சில சம்பவங்களும் வேறு சுவிசேஷங்களில் வேறு சம்பவங்களும் விரிக்கப்பட்டிருக்கின்றன. எவை முன் எவைபின், எந்தெந்தக் காலங்களில் எந்தெந்தச் சம்பவங்கள் நடைபெற்றன, எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் எந்தெந்த உபதேசங்கள் செய்யப்பட்டன என்பன தெளிவாயில்லை. ஆகையால் இந்த நூலில் அந்தச் சம்பவங்களை யெல்லாம் மக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் படி எம்பெருமானின் சரிதைக் காலக்கிரமமாக எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டவர்க்கு எளிதில் புலப்படாத விஷயங்களின் உண்மை நுக்கமாக விளக்கப்பட்டிருக்கின்றது. இனிமை தரும்படியாக தெளிவாயும் அழகாயும் இந்நூலை அதன் ஆக்கியோன் எழுதியிருக்கிறார்.

தமிழுலகில் உள்ள அநேகர் இந்நூலைப் படித்து கிறிஸ்து பகவானை வழிபட்டு உய்யவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

A. J. அப்பாசாமி

முன்னுரை

இரண்டு மூன்று ஆ[ண்]டுகளுக்குமுன் நேஷனல் கிறிஸ்டியன் கவுன்சில் (National Christian Council) என்ற சங்கத்தார் கிறிஸ்துபகவானின் சரித்[திரத்தைத்] தமிழில் பலபேரும் யெழுதி யனுப்பவேண்டுமென்றும், அவ்வாறு எழுதியனுப்பும் சரித்திரங்களில் சிறந்த சரித்திரம் எதுவோ அதன் ஆக்கியோனுக்கு வெகுமதி யளிப் போமென்றும் விளம்பரம் பண்ணியிருந்தனர். அந்த வெகுமதி பின்ட்லே பிரைஸ் (Findlay Prize) என்ற நாமம் சூட்டப்பெற்றிருந்தது. விளம்பரத்தைப் படித்த அநேகர் எம்பிரானின் சரித்திரத்தைத் தமிழில் எழுதியனுப்பியிருந்தனர் அவ்வாறு வந்த நூல்களின் தொகை பன்னிரண்டு. அவ[ற்]றுள் திருவாளர் ஜி. வி. ஜோப் எழுதிய நூலே முதன்மையானதென்[று]ம் அவருக்கே பரிசளிக்கவேண்டுமென் றும் தீர்மானம் செய்யப்பட்[ட]து. அவர் எழுதிய கிறிஸ்து பகவானின் சரித்திரம் தமிழுலகில் யா[வ]ர்க்கும் நன்மை பயக்குமாறு புஸ்தக ரூபமாய் அச்சடிக்கப்பட்டு இ[ங்]ங்கு வெளிவந்திருக்கிறது.

தற்காலத்தில் இந்தியா முழுவதிலும் கிறிஸ்து பகவானைப்பற்றி அறியவேண்டுமென்கிற ஆசை பெருகிக்கொண்டு வருகிறது. அவரது உன்னத ஜீவியம் அநேகருடைய மனதைக் கவர்ந்து வருகிறது. அவர் செய்த சிறந்த தியாகம் யாவர்க்கும் உத்தம மாதிரியாக விளங்கி வருகிறது. அவர் திருவாய்மலர்ந்தருளிய உபதேசங்களைப் படித்து படித்து பலரும் ஆநந்தமடை[கி]றார்கள். ஆநந்தமடைவதும் தவிர தங்களால் இயன்றவரையிலும் தங்கள் ஜீவியத்திலும் அவைகளை அனுஷ்டித்துவர பெரும்பிர[]யாசைப் படுகிறார்கள். தமிழுலகிலும் இவ்வாறே கிறிஸ்து பகவானுடைய உத்தம ஜீவியத்தையும் உபதேசத்தையும் அறிய ஆவலுடையோர் பலருளர். அவர்களது பிரயோஜனத்திற்காகவே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

திருவாளர் ஜி. வி. ஜோப் ஆங்கிலேயர் கல்வியில் தேர்ந்தவர். தாம் ஆங்கிலத்தில் கற்கும் நூல்களிலுள்ள சிறந்த கருத்துக்களைத் தமிழ் நாட்டவர்க்கு இனிய தமிழ் நடையில் எழுதித் தரவேண்டு

S. தமிழ் புத்தகங்கள்

	Rs.	A.	P.
The Christ of the Mount. y Jones. Translated by	0	10	0
The Best Friend. The Story of Jesus the Messiah	0	3	0
வருடைய ஊழியமும். **The d Work of Christ.** By	1	0	0
விய சரித்திரம். **Studies in Christ.** By J. J. Banninga.	0	10	0
su Nathar Sarithai. By dhanandha Bharati	0	6	0
va Yath- I ...	2	8	0
II ...	2	8	0
Christ ...	0	4	0
By	0	2	6
		0	0